www.padippakam.com

# காலச்சுவடு

மார்ச் 2005 மாத இதழ் ரூ.15 இதழ் 63



## உ.வே.சா. 150

### கவிதைகள்

- கோகுலக் கண்ணன்
- சிபிச்செல்வன்
- முகுந்த் நாகராஜன்

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் இணையற்ற சீட்டு நிதிச் சிகரம் ஸ்ரீராம் சிட்ஸ்

3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானது சீட்டு சேமிப்பு திட்டம். சமுதாய மக்கள் ஒருங்கிணைந்து, சிறுகச் சிறுகச் சேமிக்கவும், தேவைப் படும்போது அச்சேமிப்பில் இருந்தே கடன் பெறவும் உதவி செய்வதே சீட்டுச் சேமிப்பு திட்டத்தின் சிறப்பு அம்சம்.




### இருவழிப் பயன்:

குடும்ப வளமைக்காகத் தொடர்ந்து சேமிக்கவும், அவசரத் தேவைகளையும், திட்டமிட்ட செலவுகளையும் எதிர் கொள்ளவும் உதவும் இருவழிச் சாதனம் சீட்டு சேமிப்பு திட்டம்.

### வளரும் வளமை:

சீட்டு சேமிப்பு திட்டத்தில், சேமிக்கும் தொகை, சேமிக்கும் காலம், கடன் பெறும் தொகை, வட்டி விகிதம், யாவும் உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப் படுகிறது. மேலும், மாதந்தோறும் வருவாய் உயரும் வாய்ப்பு, உறுப்பினர் அனைவரும் சமமாக லாபம் பெறும் வாய்ப்பு ஆகியவை இதன் தனிச்சிறப்பு அம்சங்கள்.

### உயரும் வருவாய்:

வங்கிச் சேமிப்பு, அஞ்சலகச் சேமிப்பு, சிறுசேமிப்பு, ஆகிய முதலீடுகள் மீதான வருவாய் சரிந்து விட்டது. ஆனால் சீட்டுத் திட்டங்களில் ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்த்தப் பட்டுள்ளதால், உறுப்பினர்களின் கசறுத்தொகை (Dividend) கணிசமாக உயரும். ஏலத்தில் போட்டியின் கடுமை குறைந்து, உடனடியாக ஏலம் எடுக்கும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.

### நிகரற்ற ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் 29 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சீட்டுத் தொகையாக ரூ.10,500 கோடிக்கு மேல் பட்டுவாடா செய்துள்ளது.

உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். நலமும் வளமும் வளரத் தேவையான திட்டங்களில் சேர்ந்து சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.



**ஸ்ரீராம் சிட்ஸ்**

தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 52011833. www.shriramchits.com

WORDCRAFTS

படிப்பகம்

www.padippakam.com

22–49
# உ.வே.சா. 150



காலச்சுவடு
மார்ச் 2005 இதழ் 63

18 அவுஷ்விட்ஸின் அறுபது ஆண்டுகள்
திவாகர் ரங்கநாதன்

54 பின்கட்டிலிருந்த சொற்கள்
குவளைக் கண்ணன்

57 அங்கீகாரத்தின் தொலைவு
சுகுமாரன்

69 மா. கிருஷ்ணன் கடிதங்கள்

50 சிறுகதை
அரவிந்தன்

பதிவுகள்
59 அசோகமித்திரன்–50
60 சுசி தாரு உரை

9 கவிதைகள்

பத்திகள்
64 வெ. ஸ்ரீராம்
56 பாவண்ணன்

6 கடிதங்கள்
66 விவாதம்

71











படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்க் காதல்

ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 14ஆம் தேதி உலகெங்கிலும் கொண்டாடப்படும் காதலர் தினம் இந்தியாவில் அரசியலாக்கப்பட்டிருக்கிறது. வடக்கில் சிவசேனையும் தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியும் காதலர் தினக் கொண்டாட்டங்களுக்கு எதிராக ஆர்பாட்டங்களை நடத்தியுள்ளன. இது போன்ற பண்பாட்டுக் கண்காணிப்பு நடவடிக்கைகள் சிவசேனை போன்ற அடிப்படைவாத அமைப்புகளுக்குப் புதிதல்ல. பெரியாரியம் பேசும், மத அடிப்படைவாதத்தை எதிர்க்கும் பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலத் தலைப்பு வைப்பதை எதிர்த்துப் போராடிவரும் இந்தக் கட்சி, இப்போது காதலர் தினத்தைக் குறிவைத்திருக்கிறது.

ஒரு ஜனநாயக அமைப்பில் எந்தவொரு கோட்பாட்டை முன்வைத்துப் போராடுவதற்கும் வாதங்களை முன்வைப்பதற்கும் யாருக்கும் உரிமை உள்ளது. அதே சமயம் அந்த உரிமை அதிகாரமாகவும் அத்துமீறலாகவும் வெளிப்படும்போது அது பாசிசமாக உருவெடுக்கக்கூடும் என்பதை மறந்து விடக் கூடாது.

தி.மு. கழகத்தோடு ஒரு மறைமுகமான போட்டியில் இறங்கியிருக்கும் டாக்டர் ராமதாஸ், அரசியல் ரீதியாகக் கடைபிடித்துவரும் போர்த் தந்திர நடவடிக்கைகளில் ஒன்றாகவே 'காதலர் தின' எதிர்ப்பையும் 'ஆங்கிலத் தலைப்பு' எதிர்ப்பையும் புரிந்துகொள்ள முடிகிறது. சாதிய அரசியலின் மூலம் தமக்குப் பின்னால் திரண்டிருக்கும் மக்கள் சக்தியைக் கொண்டு, தமிழக அரசியல் பண்பாட்டுச் சூழலைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி இது.

ராமதாஸின் மொழி சார்ந்த போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொள்ளும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், காதலர் தின எதிர்ப்பில் இணைந்துகொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. சாதியக் கட்டுமானங்களைத் தகர்ப்பதில் காதலர் தினம் போன்ற நிகழ்வுகள் உருவாக்கும் மனநிலைக்கும் ஒரு பங்கு இருக்கிறது. எனவே இது குறித்த ஒடுக்கப்படும் சாதியினரின் பார்வை அடிப்படையிலேயே வேறுபட்டதாக இருக்கும். என்றாலும் மொழியின், பண்பாட்டின் பெயரால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கும் மதம், இனம் ஆகியவற்றின் பெயரால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கும் அடிப்படையில் அதிக வேறுபாடு இல்லை என்பதைத் திருமாவளவன் கவனத்தில் கொள்வது நல்லது.

சிவசேனையும் சங்கப் பரிவார அமைப்புகளும் இந்துத்துவத்தின் பெயரால் மேற்கொண்டுவரும் சில செயல்பாடுகளைப் பா.ம.க. தமிழ் - தமிழர் கலாச்சாரம் என்னும் பெயரில் மேற்கொள்கிறது. பால் தாக்கரேயின் (மராத்தி) மொழி முழக்கங்களும் போராட்டங்களும் தமிழ் - தமிழர் போராட்டங்களோடு ஒப்பிட்டு நோக்கப்பட வேண்டியவை.

நமது சமூகத் தளத்தில் காதலின் இருப்புக்கான இடம் மிகவும் சிக்கலானது. காதல் ஒழுக்கக் கேடானதாகக் கருதப்படுவதுடன், மதம், சாதி, பொருளாதாரம் ஆகியவை சார்ந்த ஒடுக்குமுறைகளும் காதலின் மீது செலுத்தப்படுகின்றன. இந்நிலையில் காதலர் தினம் மரபின் கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் காதலுக்கான வெளியை உருவாக்குகிறது.

உலகமயமாக்கலின் விளைவாகக் காதல், தாய்மை போன்றவைகூடச் சந்தைப் பொருள்களாகி வருவதை மறுக்க முடியாது. காதலர் தினம், அன்னையர் தினம், தந்தையர் தினம் என்பவையெல்லாம் வணிகச் சக்திகளுக்குப் பெரும் கொண்டாட்டங்களாக மாறியுள்ளதன் பின்னணியில் உள்ள இலாப வேட்கை அலட்சியப்படுத்தத் தக்கதல்ல. சுற்றுலா விடுதிகளும் ஆடம்பர ஹோட்டல்களும் காதலர் தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் தமது வருவாயைக் கணிசமான

ஆசிரியர் குழு
ஆதவன்
அரவிந்தன்
நஞ்சுண்டன்

உதவி ஆசிரியர்
திவாகர் ரங்கநாதன்

ஆலோசனைக் குழு
தமிழ்நாடு:
ஆ. இரா. வேங்கடாசலபதி
ப்ரஸன்னா ராமஸ்வாமி
களந்தை பீர் முகம்மது
இலங்கை: எம்.ஏ. நுஃமான்
இங்கிலாந்து: பத்மநாப அய்யர்

அமெரிக்கா: கோகுலக் கண்ணன்
சிங்கப்பூர்: கனகலதா, மு. ந. மூர்த்தி
மலேசியா: சை. பீர் முகமது

கலை
சந்தோஷ்

பதிப்பாளர் – ஆசிரியர்
எஸ். ஆர். சுந்தரம்
(கண்ணன்)

தலைமை அலுவலகம்: 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி: 04652 278525 / தொலைநகல்: 04652 231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in ■ சென்னை அலுவலகம்: பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 600 005, தொலைபேசி: 28481662, மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com

www.padippakam.com



அளவில் உயர்த்திக்கொள்கின்றன. அழகிப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளைப் போலவே காதலர் தினமும் வணிகப் பெருக்கத்திற்குத் துணை புரிகிறது. இது போன்ற விஷயங்களை விவாதத் திற்கு உட்படுத்துவது வேறு, பண்பாட்டைக் காரணம் காட்டி ஒடுக்க முனைவது வேறு.

தாக்கரேயின் சமூகத் தாக்கம் என்பது மிரட்டிப் பணியச்செய்வதுதான். தாக்கரேயின் அனுமதி யோடும் ஆசீர்வாதத்தோடும் எத்தகைய 'சீரழிவு' நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். மும்பை இரவு விடுதிகளில் நடைபெற்றுவரும் ஆபாச நடனங் களைச் சிவசேனையின் அனுமதியின்றி நடத்தினால் விடுதிகள் அடித்து நொறுக்கப்படுவதும் தாக்கரே அனுமதித்துவிட்டால் அத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிவசேனையே பாதுகாப்புக் கொடுப்பதும் கவனிக்கப்பட வேண்டியவை. சிவசேனை போன்ற அமைப்பினரைப் பண்பாட்டுக் காவலர்கள் என்பதைவிடவும் தாதாக்கள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். தாக்கரேயுடன் நடக்கும் பேரங்களில் பலவும் பணத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பது வெளிப் படையானது. சிவசேனையின் அரசியல் அதன் பாசிசப் பண்புகளால் தீர்மானிக்கப்படும் ஒன்று. மொத்தச் சமூகத்தையுமே மிரட்டித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்வதும் எதிர்ப்புகளை வன்முறையால் நசுக்குவதும் பாசிஸ்டுகளுக்கும் தாதாக்களுக்குமுள்ள பொதுப் பண்பு. இலட்சியம், தத்துவம், சமூகப் பொறுப்பு போன்ற கருத்தாடல்களால் தமது நடவடிக்கை களுக்கு அங்கீகாரம் கோருவது பாசிஸ்டுகளுக்கு உரித்தான ஒரு செயல்பாடு.

டாக்டர் ராமதாஸ் பால் தாக்கரேயை அடியொற்றி நடைபோடுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ●

---

கோணங்கள்

# புலம்பலுக்கு முடிவு கட்டுவோம்



இந்திய மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட படைப்புகளில் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருது இவ்வாண்டு பாவண்ணனுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ் இலக்கியத்திற்கு சாகித்திய அகாதெமி அளிக்கும் விருதுகளில் நாம் உடன்படக் கூடியவை குறைவு. இருப்பினும் இப்பரிசு பெறப் பாவண்ணன் தகுதியானவர் என்பதால் சாகித்திய அகாதெமியின் இம்முடிவை திறந்த மனத்துடன் வரவேற்கலாம்.

எழுத்தாளர் பைரப்பாவின் கன்னட நாவலான 'பர்வா'வை மொழிபெயர்த்தமைக்காக இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது தவிர நான்கு நாடகங்கள், இரண்டு நாவல்கள், ஒரு சிறுகதைத் தொகுப்பு, இரண்டு தலித் சுயசரிதைகள், நான்கு தொகை நூல்கள், ஒரு நாட்டுப்புறக் கதைத் தொகுப்பு ஆகியவற்றை கன்னடத்தி லிருந்து பாவண்ணன் தமிழுக்கு மொழிபெயர்த்திருக்கிறார். கன்னடத்தின் மிக முக்கியமான படைப்பாளிகளான கிரீஷ் கர்னாட், எச்.எஸ். சிவப்பிரகாஷ், எம்.எஸ். புட்டண்ணா, லங்கேஷ் ஆகியோருடைய படைப்புகள் இவருடைய முயற்சியால் தமிழ் வாசகருக்குக் கிடைத்துள்ளன. தேவனூரு மகாதேவா, சித்தலிங்கையா, அரவிந்த மாளகத்தி ஆகியோரும் பாவண்ணனால் தமிழ்ப்படுத்தப் பட்ட கன்னட எழுத்தாளர்கள்.

இதே காலகட்டத்தில் படைப்பாளியாகவும் பாவண்ணன் தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறார். சுமார் பத்துச் சிறு கதைத் தொகுதிகள், பற்பல நாவல்கள் மற்றும் குறுநாவல் கள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றையும் எழுதி யிருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது அவரது கடின உழைப்பைப் புரிந்துகொள்ளலாம்.

பணி நிமித்தமாகப் பெங்களூரில் குடியேறிய பாவண்ணன், பிற மொழிப் பண்பாட்டுச் சூழல்களில் வாழ நேரும் தமிழர்களில் பெரும்பான்மையினர் போல அந்நியப்பட்டு நிற்காமல், கன்னடத்தைக் கற்கவும் கன்னட இலக்கியப் பண்பாட்டுச் சூழலோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் விழைந்தது மிக முக்கியமான ஒரு முடிவு. கன்னட இலக்கி யப் படைப்புகளை தமிழில் மொழிபெயர்ப்பது என்பது இலக்கியத்தின்பால் அவர் கொண்டிருக்கும் அக்கறையின் வெளிப்பாடு. கன்னட–தமிழ் உறவு இருபக்க மொழி அடிப்படைவாத அரசியலால் சீரழிந்து வந்த அதே கால கட்டத்தில் கன்னட பண்பாட்டின் செழுமையான ஒரு பகுதி பாவண்ணனின் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்பாட்டின் மூலம் நமக்குக் கிடைத்தது அவரது மிக முக்கியமான சமூகப் பணி.

தமிழர்களும் தமிழ் எழுத்தாளர்களும் இன்று உலகெங்கும் பல்வேறு மொழிப் பண்பாடுகளில் வாழும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவர்கள் வழி உலக இலக்கியத்தின் செழுமையான பகுதி தமிழுக்கு வருவதற் கான சாத்தியம் உள்ளது. இந்த சாத்தியப்பாடு செயல் பாடாக மாறித் தமிழ் மேலும் வளம்பெற வேண்டும். முந்தய தலைமுறையில் த.நா. குமாரசாமி, சரஸ்வதி ராம்நாத், தி.சு. சதாசிவம், ஜி. கிருஷ்ணமூர்த்தி, சுந்தர ராமசாமி, வெ. ஸ்ரீராம் போன்ற பலர் பிற மொழி இலக்கியங்களை நேரடியாகத் தமிழுக்குத் தந்துள்ளனர். இப்பணியை இத்தலைமுறையில் தொடர்பவர்களில் பாவண்ணன் முதன்மையானவர். இப்பாதையில் நாம் நடைபோட வேண்டிய தூரம் மிக அதிகம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மூலம் சீன, மலாய, ஐரோப்பிய மொழி இலக்கியங்களைத் தமிழுக்கு நேரடியாக மொழிபெயர்க்கக் கூடிய காலம் விரைவில் வரும் என்று நம்புவோம். பாரதியை மேற்கோள்காட்டிப் புலம்பும் காலம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிக அவசியம்.

கண்ணன்

படிப்பகம்

# காலச்சுவடு பதிப்பக மார்ச் 2005 வெளியீடுகள்

669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629 001

தொலைபேசி: 91-4652-278525, 278159 தொலைநகல்: 91-4652-231160

மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in


## அடிமை முறையும் தமிழகமும்

[ஆய்வு நூல்]

ஆ. சிவசுப்பிரமணியன்

மன்னர்களை மையமாகக் கொண்டு எழுதப்படும் மரபுவழி வரலாற்றுக்கு மாற்றாக உருவாகியுள்ள விளிம்புநிலை வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்கள் படிக்க வேண்டிய நூல். சங்க காலம் தொடங்கி வெள்ளையர் ஆட்சிக் காலம் முடிய, தமிழ்நாட்டில் நிலவிய அடிமை முறையை, கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காகித ஆவணங்கள், இலக்கியம் ஆகியனவற்றின் துணையுடன் இந்நூல் ஆராய்கிறது.

## அழிவற்றது

[புதிய சிறுகதைகள்]

அசோகமித்திரன்

ஐம்பது ஆண்டுகளாக எழுதிக்கொண்டிருக்கும் அசோகமித்திரனின் அண்மைக் காலச் சிறுகதைகளின் தொகுப்பு. அசோகமித்திரனின் ஆகிவந்த களங்களான செகிந்திராபாத், சென்னை நகரங்களில் நடைபெறும் கதைகளும் அயோவாவைக் களமாகக் கொண்ட ஒரு கதையும் இதில் இடம்பெற்றுள்ளன. ஒருவித விலகலுடன் வாழ்க்கையைப் பார்க்கும் அசோகமித்திரன், துல்லியமும் தீவிரமும் குன்றாமல் வாழ்வைப் பதிவுசெய்கிறார். இதுவரை எந்தத் தொகுப்பிலும் இடம்பெறாத இந்தக் கதைகள் அசோகமித்திரன் கதையுலகின் பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றன.

## பாரதியின் கடிதங்கள்

ரா. அ. பத்மநாபன்

கல்வி கற்பதற்கு எட்டயபுரம் அரண்மனையின் பொருளுதவி வேண்டி, பதினைந்து வயதுச் சிறுவனாக எழுதிய கவிதைக் கடிதம் முதல், இறப்பதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பு குத்தி கேசவப் பிள்ளைக்கு எழுதிய கடிதம் வரை, பாரதி எழுதிய இருபத்துமூன்று கடிதங்களின் அரிய தொகுப்பு இந்நூல்.

'புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத் தமிழ் மொழியைப் புகழிலேற்றும் நல் கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லை எனும் வசை என்னால் கழிந்ததன்றே?', 'என் நூல்கள் மண்ணெண்ணெய் தீப்பெட்டிகளைக் காட்டிலும் அதிக ஸாதாரணமாகவும் அதிக விரைவாகவும் விலைப் பட்டுப்போகும்' என்பன போன்ற அரிய தொடர்கள் நிறைந்த பாரதியின் கடிதங்கள் நுட்பமான வாசிப்புக்கு உரியவை.

*பாரதி புதையல்* திரட்டுகள், *சித்திரபாரதி* ஆகிய நூல்களை வழங்கிய பாரதி அறிஞர் ரா. அ. பத்மநாபன் (1917) அவர்களின் முயற்சியில் உருவான நூலின் செப்பமான புதிய பதிப்பு.

## வடு

[சுயசரிதை]

கே. ஏ. குணசேகரன்

கே. ஏ. குணசேகரனின் '*வடு*' அவர் அனுபவங்களின் தொகுப்பாக மட்டுமின்றி அந்தக் காலத்தின் பதிவாகவும் இருக்கிறது. ஆசிரியராக வேலை பார்த்தபோதிலும் தன்னைப் படிக்கவைக்கத் தனது தந்தை பட்ட சிரமங்களைச் சொல்லும்போதும், அந்தக் காலத்திலேயே எட்டாம் வகுப்புவரை படித்திருந்த தனது தாய் சினிமாக் கொட்டகையில் டிக்கெட் கொடுத்து, விறகு வெட்டி விற்று, புல்லறுத்து விற்றுத் தங்களைக் காப்பாற்றியதைச் சொல்லும்போதும், காலை வேளைகளில் ஊறவைத்த புளியங்கொட்டைகளைத் தின்று பசியாறியதைச் சொல்லும்போதும் நம்மிடம் இரக்கத்தைக் கோராத, ஆனால் நம் நெஞ்சின் ஆழத்தைத் தொடுகிற ஆற்றலைக் குணசேகரனின் மொழி பெற்றுள்ளது.

இரட்டைமலை சீனிவாசனின் 'ஜீவிய சரித்திர சுருக்கம்' (1939) வெளிவந்த பிறகு தமிழில் எழுதப்பட்ட முதல் தலித் சுயசரிதை நூல் இது.

ரவிக்குமார் (முன்னுரையிலிருந்து)

## பசித்த மானிடம்

[நாவல்]

கரிச்சான் குஞ்சு

தமிழில் அதிகம் பேசப்பட்ட நாவல்களில் ஒன்றான 'பசித்த மானிடம்' காமம், பணம், அதிகாரம் என மனிதனின் பல்வேறு பசிகள் பற்றிப் பேசுகிறது. எவ்வளவு தீனி போட்டாலும் அடங்காத இந்தப் பசிகள் ஒரு கட்டத்திற்குப் பின் வேகமடங்கி வெறுமையை நோக்கிச் செல்லும் பயணத்தையும் கரிச்சான் குஞ்சு காட்டுகிறார். நவீனத் தமிழ் இலக்கியத்தில் ஓரினப் புணர்ச்சியைக் கையாண்ட முதல் பிரதியான இந்நாவல் நுட்பமான பல விஷயங்களை லாவகமாகக் கையாள்கிறது. முட்டி மோதி வாழ்க்கையில் மேலே வரும் மனிதர்கள், பல்வேறு இன்பங்களையும் துய்த்த பின் கடைசியில் அடைவது என்ன என்னும் கேள்வியை வலுவாக எழுப்புகிறது. தமிழின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான கரிச்சான் குஞ்சுவின் இந்த நாவல் பல ஆண்டுகள் கழித்து மறுபிரசுரம் காண்கிறது. சி.சு. செல்லப்பாவின் 'வாடிவாச'லைச் சிறப்பாக மறுபிரசுரம் செய்த *காலச்சுவடு*, அந்த வரிசையில் கரிச்சான் குஞ்சுவின் இந்நாவலைச் செம்மையான பதிப்பாக வெளியிடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## 2005 பிப்ரவரி மறுபதிப்புகள்

**காலச்சுவடு நேர்காணல்கள் (1995 – 1997)**
(தொ-ர்) : கண்ணன்
ரூ.140 (வி.பி.பி.யில் ரூ.140)

**தலித்திய விமர்சனக் கட்டுரைகள்**
ராஜ் கௌதமன்
ரூ.90 (வி.பி.பி.யில் ரூ.95)

**இதம் தந்த வரிகள்**
கு. அழகிரிசாமி - சுந்தர ராமசாமி கடிதங்கள்
ரூ.45 (வி.பி.பி.யில் ரூ.55)

**க. நா. சு.** (நினைவோடை)
சுந்தர ராமசாமி
ரூ.50 (வி.பி.பி.யில் ரூ.60)

**சி.சு. செல்லப்பா** (நினைவோடை)
சுந்தர ராமசாமி
ரூ.40 (வி.பி.பி.யில் ரூ.50)

## காலச்சுவடு மாத இதழ் விளம்பரக் கட்டணம்

| | | ரூ. |
|---|---|---|
| பின் அட்டை (multi colour) | : | 10000 |
| உள் அட்டை (multi colour) | : | 5000 |
| முழுப் பக்கம் | : | 2500 |
| அரைப் பக்கம் | : | 1250 |
| ஒரு பத்தி (1/3 பக்கம்) | : | 750 |
| கால் பக்கம் | : | 650 |

புத்தக விளம்பரங்களுக்கு 25% தள்ளுபடி.

ஒரு வருடம் (12 இதழ்கள்) தொடர்ந்து வரும் விளம்பரங்களுக்கு 50% தள்ளுபடி.

### புத்தக (சிறு) விளம்பரம்

நூலின் முக்கிய விவரங்கள் தவிர சிறு குறிப்பும் (25 வார்த்தைக்குள்) இடம்பெறும். விளம்பரக் கட்டணம் ஒரு நூலுக்கு ரூ.125 மட்டுமே. அதே பதிப்பகத்தின் அதிகப்படியான ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 75.

## வி.பி.பி.யில் சந்தா செலுத்துங்கள்

*காலச்சுவடு* ஓராண்டு, இரண்டாண்டுச் சந்தாவை வி.பி.பி. மூலம் செலுத்தலாம். உங்கள் விருப்பத்தைத் தெரிவித்து எழுதுங்கள். முதல் இதழ் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும். ஓராண்டுக்கு ரூ.150. இரண்டாண்டுக்கு ரூ.260. வி.பி.பி. செலவைக் *காலச்சுவடு* ஏற்றுக்கொள்ளும். பணவிடை கமிஷன் மட்டும் நீங்கள் செலுத்த வேண்டும்.

## காலச்சுவடு சிறப்புத் திட்டங்கள்

- காலச்சுவடு தனி இதழ் ரூ.15. ஆண்டுச் சந்தா ரூ.140. இரண்டாண்டுச் சந்தா ரூ.240. ஐந்தாண்டுச் சந்தா ரூ.600. மாணவர் ஆண்டுச் சந்தா ரூ. 75 (அடையாள அட்டையின் ஒளிநகலை அனுப்புக.)
- வெளிநாட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 600. இரண்டாண்டுச் சந்தா ரூ.1000. ஐந்தாண்டுச் சந்தா $ 75.
- காலச்சுவடு ஆயுள் சந்தா ரூ.2500. அயலில் வாழ்பவர்களுக்கு ஆயுள் சந்தா US$ 250. ஆயுள் சந்தாதாரர்கள் ரூ.500க்கான காலச்சுவடு பதிப்பக நூல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- மூன்று வாசகர்களை சந்தாதாரர்களாகச் சேர்ப்பவர்களுக்கு ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும். இந்தத் திட்டப்படி ஆண்டுச் சந்தா, இரண்டாண்டுச் சந்தா, ஐந்தாண்டுச் சந்தா, மாணவர் சந்தா, ஆயுள் சந்தா ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கும் அதற்கு இணையான ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- ரூ.500க்குக் காலச்சுவடு பதிப்பக நூல்களை எங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களுக்குக் காலச்சுவடு ஓராண்டுச் சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- காலச்சுவடு இரண்டாண்டுச் சந்தாதாரராகச் சேர்பவர்களுக்கு 6 (பழைய) இருமாத இதழ்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். இதை இந்தியாவில் இருக்கும் உங்கள் நண்பர்களுக்கும் காலச்சுவடு மூலமாக அனுப்பலாம். பழைய இதழ்கள் கையிருப்பை அனுசரித்து வழங்கப்படும்.

சந்தாத் தொகையை Kalachuvadu என்ற பெயரில் பணவிடையாகவோ, வரைவோலையாகவோ நாகர்கோவில் / சென்னை வங்கிக் காசோலையாகவோ அனுப்புக. இதரக் காசோலைக்கு ரூ. 40 சேர்த்து அனுப்புக.

**தலைமை அலுவலகம்**
669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001
தொலைபேசி: 04652 278525 /
தொலைநகல்: 04652 231160
மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in

**சென்னை அலுவலகம்**
பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005
தொலைபேசி: 28481662, 55686039
மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com

படிப்பகம்

www.padippakam.com



காலச்சுவடு ஒவ்வொரு இதழும் தனித் தன்மையோடு தொடர்ந்து வெளி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. 'நிலை தடுமாறும் பூமி' என்னும் சு.கி.ஜெயகரனின் விரிவான கட்டுரை ஆழிப் பேரலையின் நிலவியல் குறித்த அறிவைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. முந்தைய ஆழிப் பேரலையின் நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டியிருப்பதும் சிறப்பம்சமாகும். நமது நாடு 75 விழுக்காடு கடல் சூழ்ந்த நாடாக இருந்தும் ஆழிப் பேரலையின் ஆபத்தை முன்கூட்டியே அறிந்து பேரழிவைத் தடுக்காத நமது ஆட்சியாளர்களின் அறிவீனத்தை எண்ணி மனம் வேதனை கொள்கிறது.

பூசீமா
பெரியகுளம்

சுந்தர ராமசாமி அவர்களின் 'பிள்ளை கெடுத்தாள் விளை' சிறுகதையைப் படித்து முடித்தவுடன் என் மன அரங்கத்தில் பற்பல உணர்ச்சிகள் ஏற்பட்டன. சாதாரணச் சிறுகதைகளிலிருந்து மாறுபட்ட இயல்புடைய ஒரு நல்ல சிறுகதையைப் படித்த சந்தோஷம் ஏற்பட்டது.

கே.எஸ். கீழாம்பூர் ராமையா
பாண்டிச்சேரி–8

'பிள்ளை கெடுத்தாள் விளை' கதையைப் படித்து முடித்தபோது, வார்த்தைச் சித்தன் தங்கக்கண் என் மனத்தை முழுவதுமாக ஆக்கிரமித்திருந்தான். இதழ் 53இல் வெளியான சு.ரா.வின் "நண்பர் ஜி.எம்." சிறுகதைக்குப் பிறகு நான் ரசித்துப் படித்த சிறுகதை இது.

எஸ்.வி. அமிர்தகௌரி
தூத்துக்குடி–5

நெடுநாளுக்குப் பின்னர் நான் வாசித்து ரசித்த அபூர்வமான சிறுகதை 'பிள்ளை கெடுத்தாள் விளை'. இதே தரத்தில் அமைந்து என் நினைவிற்கு வருகிற இவரது மற்றொரு சிறுகதை கோலங்கள். முதிய தம்பதிகள் இருவரும் கைகோர்த்த படி கடலில் இறங்கித் தம் இகவாழ்வுக்கு முடிவு தேடிக்கொண்ட சோகச்சித்திரம் அது. புதுமைப்பித்தனின் 'செல்லம்மா'வுக்கு நிகராக உலுக்கியெடுத்த கதை.

ஸ்ரீனிவாச ராஜகோபாலன்
சென்னை–54

"திரைப்படத்தில் இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கு ஓர் இயக்குநருக்குச் சிலகாலம் பிடிக்கும்" என்று கூறியுள்ளார் பிரெஞ்சு இயக்குநர் லூயி மால். ஆனால் 'காதல்' திரைப்பட இயக்குநருக்குத் தன்னுடைய இரண்டாம் படைப்பிலேயே 'இயல்பு நிலை' சாத்தியப்பட்டிருக்கிறது.



பாலுணர்வை வியாபாரமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இளம் இயக்குநர்களிடமிருந்து சற்று விலகி நல்லதொரு திரைப்படத்தைத் தந்திருக்கும் பாலாஜி சக்திவேல் பாராட்டுக்குரியவர். இப்படத்தின் வெற்றிக்கு இரண்டு விஷயங்கள் முக்கியமாகச் செயல்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஒன்று, தமிழ்த் திரைப்படங்களுக்கே உரித்தான சூழலைத் தன் படத்தில் இயக்குநர் உருவாக்கிக் கொள்ளாதது. மற்றொன்று, இவரது முதல் படமான 'சாமுராய்' கொடுத்த தோல்வி.

வே. முத்துக்குமார்
கல்லிடைக்குறிச்சி–16

'காஞ்சியில் கைது: ஒரு மலையாளத் திரைக்கதை' படித்தேன் சக்கரியா கூறிய கருத்துகள், கேரளா பற்றி நான் வைத்திருந்த நன்மதிப்புக்கு எதிராக இருந்தன. ஜெயேந்திரர் கேரளாவிற்கு வந்திருந்தால் கைது செய்திருக்க முடியாது; அமிர்தானந்த மயி ஜெயேந்திரரைப்போல் ஏதாவது வழக்கில் குற்றம்சாட்டப்படுவதாக இருந்தால் முதலமைச்சர் நேரில் சென்று மன்னிப்புக் கேட்டிருப்பார் என்னும் சக்கரியாவின் கருத்து என்னை வியப்பில் ஆழ்த்தியது.

டி.ஆர். தாசன்
வேடசந்தூர்–10

மேலாடையைக் கழற்றுவது குறித்த குறிப்புக்காக அரவிந்தன் தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். அரவிந்தனின் கருத்து அநாகரிகமானது என்னும் பேச்சுக்கே இடமில்லை. மடத்துக்குச் செல்லும் பெண்கள் அனைவரையும் குறிப்பிட்டுச் சொன்னதாக இது ஆகாது. சர்ச்சையை வளர்க்க விரும்பாமல் வருத்தம் தெரிவித்த அரவிந்தனின் பண்பு நாகரிகமானது.

ச. தியாகராஜன்
மயிலாடுதுறை–1

70களின் ஆரம்பத்தில் ஆந்திராவில் ராஜமுந்திரியில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம், ஜாலியாகக் கோதாவரி ஆற்றில் நண்பர்களோடு படகில் சென்று கொண்டிருந்தபோது திடீரென அடித்த காற்றில் சட்டைப்பையிலிருந்த நூறு ரூபாய் நோட்டு காற்றில் பறந்துசென்றபோது அனைத்து மகிழ்ச்சியையும் பல நாள்கள் தூக்கத்தையும் தொலைத்து துயருற்றிருந்த நிகழ்ச்சி இன்னும் மனத்தில் பச்சைப் புண்ணாக வலித்துக் கொண்டிருக்கிறது. மகிழ்ச்சியாகச் சுற்றுலாச் சென்ற இடத்தில் இழப்பு என்பது மிகப் பெரிய சோகம். ரமணியின் நேர்காணல் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது. காலம்தான் அவரது காயங்களை ஆற்ற வேண்டும். சுனாமி சம்பந்தமான அனைத்துக் கட்டுரைகளும் பல்வேறு புதிய தகவல்களைக் கொண்டவையாக இருந்தன.

அகர முதலி தெரியாதவர்களைக் கூடப் பத்திரிகை படிக்கவைத்த பெருமை ஆதித்தனார் அவர்களையே சாரும். ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஒருவர் *தினத்தந்தி* பாமரர்கள் படிக்கும் பத்திரிகை என்று சொன்னபோது இடைமறித்த ராஜாஜி, "ஆம்! பாமரர்கள் *தினத்தந்தி*யை அப்படியே படிப்பார்கள் படித்தவர்கள் *ஹிந்து* நாளிதழுக்குள் மறைத்துவைத்துப் படிப்பார்கள்" என்றார். அந்த அளவுக்கு *தினத்தந்தி*யின் செய்தி வெளியிடும் பாணி படித்தவர்களையும் பாமரர்களையும் கவர்ந்தது.

எஸ்.ஏ. சாகுல் ஹமீது
கடையநல்லூர்–51

கண்ணனின் 'மௌனத்தின் சிறகடிப்பு' படித்தேன். தொ.மு.சி. ரகுநாதன், பேராசிரியர் வானமாமலை போன்றவர்களிடமிருந்து மேலாண்மைப் பொன்னுச்சாமியைப் பிரித்தாலும் கட்டுரையின் தொடக்கமே விஷமத்தனமானது. அவலை நினைத்து உரலை இடிப்பதாக, பொன்னுச்சாமி யைப் பழித்துரைப்பதாக நினைத்து இடது சாரிகள்மீதும் சேற்றை வாரி இறைத்திருக்கிறார்.

ஜெயேந்திரருக்கு ஆதரவாக சீதாராம் யெச்சூரி கருத்துத் தெரிவித்ததாகவும் என். ராம் இயங்குவதாகவும் எழுதியிருப்பது சற்றும் உண்மைக் கலப்பற்ற கற்பனை. இந்த "மாய மானை" வேட்டை

## கடிதம், விவாதம், படைப்பு . . .

- காலச்சுவடு மாத இதழாக வருவதால் வாசகர் கடிதம் அனுப்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் கடிதம் எங்களுக்குக் கிடைக்குமாறு அனுப்புக. மின்னஞ்சலில் கடிதம் அனுப்புவோர் (kalachuvadu @sancharnet.in) TAM, TAB, TSCII, Bamini ஆகிய குறியீடுகள் கொண்ட எழுத்துருக்களைப் பயன்படுத்துக.
- விவாதம் பகுதிக்கு எழுதுவோர் தங்கள் கருத்துகளை 500 சொற்களுக்கு மிகைப்படாமல் எழுதுக.
- படைப்புகள் அனுப்புவோர் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்புக. மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும். படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே தபால் தலைகளை இணைக்க வேண்டாம். பிரசுர விவரம் மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்கப்படும்.

www.padippakam.com



யாட இடதுசாரி எழுத்தாளர்களை அழைத்திருப்பது வியப்பானது.

மதவெறிக் கும்பலோடு கைகோர்க்கும் எத்தகைய கட்சிகளோடும் முரண்படுவதும் அவர்களை முறியடிக்கப் போராடுவதும் இடதுசாரிச் சக்திகளின் மாறாத நிலைப்பாடு. இதனை இயக்கத்தின் மனசாட்சிகளான எழுத்தாளர்கள் என்றைக்கும் மூடி மறைத்ததில்லை. குறிக்கோளற்று எதற்கும் கட்டுப்படாத சு'தந்திர' புருஷர்கள் பேணுவது மட்டும் தான் பொதுநலமா?

"வாய் நுரை தள்ள" எனும் தொடர் கண்டனத்திற்குரியது என்று சொல்லும் கண்ணன், கம்யூனிஸ்ட் கட்சிகள் "உடுக்கடித்தன" என்பது எதில் சேர்த்தி?

**கே. பொன்னுச்சாமி**
திருப்பூர்–2

சவாலோ உழைப்போ அற்ற சில விமரிசக மனங்கள் தமிழ் வாசகப் பரப்பைத் திசை திருப்புவதும் கலங் கடிப்பதுமாக இருக்கின்றன. நிஜமான தமிழ் வாசகத் தளம் அபரிமிதமானது. அதன் பரந்துபட்ட தன்மை பல்வேறு நவீன முயற்சிகளையும் சிரத்தையோடு உள்வாங்கிக்கொள்கிறது. வெவ்வேறு நில, அக, வாழ்வெளியைக் கொண்ட எழுத்தை விரும்பிச் சுவைக்கிறது.

பூர்வீகத்திலிருந்து அறிவை விழைந்து வெளியேறும் கிராமத்து இதயம் அறிவின் ஏதோ ஓர் எல்லையின்மையின் முனையைத் தொட்டுவிட்டு மீண்டும் பூர்வீகத்துக்கே அதனோடு பொருந்த முடியாத் தன்மையும் மைய விலக்குதலும் அவர்களிடம் கடத்த முடியாத அறிவின் அமையும் இருப்பின் ஓலமும் தன்னை மீட்டுக்கொள்ள முனையும் இசையும் கலையும் குத்திக் கிழிப்பதால் ஏற்படும் ரணமும்தான் பிரம்மராஜனின் கவி உலகம்.

சி.சு.செ.யின் பெயர் காலத்திற்கும் நிலைப்பது கவிஞன், பத்திரிகையாசிரியர் என்பதால் மட்டுமல்ல. வாடிவாசல் போன்ற புனைகதையை எழுதியதாலும் தான். அவரோடு பிரம்மராஜனை ஒப்பிடுவது நல்ல தமாஷ்.

நாடோடித் தன்மையைத் தேர்வு செய்யும் இளைஞன் தனது மூர்க்கத்தைக் கபளீகரம் செய்யும் சந்தைத்தன்மை, வாழ்வு, பாலின்பம், சமன் குலைக்கும் தொழில்நுட்பம் உறவுச் சுமை இவற்றோடு மோதும்போது ஏற்படும் தோல்வியை, மீறத் துடிக்கும் குணத்தை, வஸ்துக்களை உயிரினமாக மாற்றும் கனவைப் பேசுபவை லஷ்மி மணிவண்ணனின் கவிதைகள் இவற்றில் மொழிநடையும் உருவமும் இல்லையென்றால் சேர்னோபில் குழந்தை எந்தப் பொது மனித உருவத்தில் பிறக்கிறது? அவர்களை உலகத்திலிருந்து நிராகரித்துவிடலாமா?

மர்மமானதும் தீவினை நிறைந்ததுமாகச் சித்தரிக்கப்படும் மந்திரவாத உலகத்தை அதன் குரூரம், ஏழ்மை, ஏய்ப்பு, சாகசம், ஏமாற்றுத்தனத்தின் தீவிரம், பிராமண மறுப்பு என்று வெளிப்படையாகப் பேசும் உச்சாடன முறையிலான கவிதைகள் என்.டி. ராஜ்குமாரின் கவிதைகள். ஒரு நேர்கோட்டுத் தன்மையோ தெளிவான புகைப்படக் காட்சியோ அனுபவத்தை வெறுமனே சொல்வதோ மட்டும் கவிதையாகாது; வாசகச் கிளர்ச்சிக்கும் போதுமானதல்ல.

மூன்று வேறான வாழ்தல் களங்களை வெளிப்படுத்தும் கவிதைகளை நிராகரிப்பது, அதற்கான சாக்குப்போக்குகளைச் சொல்வது "புதுக்கவிதை வரலாற்றிலோ" பழைய கவிதை வரலாற்றிலோ செய்யக் கூடியதுதான். ஒரு ஆந்தாலஜியில் செய்வது நோய்க்கூறானது. ஒரு வாசகன் என்னும் முறையில் இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**ராயன் நரேந்திரன்**
சின்னையம்பேட்டை

## கருணையின் அவதாரங்கள்

ரவிக்குமாருடைய கட்டுரை கருணையை வித்தியாசமான தளத்தில் ஆய்வு செய்து கருணையின் அதிகாரத்தைப் பற்றி அருமையான முறையில் விளக்கியது. ஆனால் அந்த ஆய்வுத் தளத்திலேயே அவர் நிறுத்திக்கொண்டது தான் சற்று நெருடலாக இருந்தது. கருணையின் அதிகார அவதாரத்தைக் கண்ட ரவிக்குமார் கருணையின் மற்ற அவதாரங்களைக் காணத் தவறியிருந்தார்.

எந்நிலையிலிருப்பவர் (வெளி நாட்டவர், அரசியல்வாதி, தன்னார்வ அமைப்புகளின் தொண்டர்கள், மத அமைப்புகளைச் சார்ந்தவர்கள்) கருணை கொண்டாலும் அதற்குக் காரணம் இருப்பதாகவே அவர் நம்பியது அவர் கட்டுரையில் தெரிந்தது. நிஜமான கருணை உணர்வு இயற்கையாகவே மனிதர்களிடம் உண்டு. அது சுயலாபம் பார்ப்பதும் அதேபோல் அதிகாரத்தை வெளிப்படுத்துவதும் கிடையாது. மாறாக அன்பின் அடிப்படையில் ஊறி வருவது அது. ரவிக்குமார் போலியான கருணையைப் பற்றியே எழுதியிருக்கலாம். அதைத் தெளிவுபடுத்தியிருக்கலாம். இல்லையேல் கருணை கொள்வதே குற்றம் என்பதாக அவருடைய கட்டுரை வாசிக்கப்படலாம்.

**தி. ம. தனராஜ்**
மைசூர்–8

சுனாமி பற்றிய கட்டுரைகளில் ரவிக்குமாரின் கட்டுரையைத் தவிர மற்றவை அறிவு, மனம், உணர்வுகளுக்கு இடமளித்திருந்தன. ரவிக்குமாரின் கட்டுரை குறைபாடுள்ள கட்டுரையைப் போல எமக்குத் தெரிகிறது.

மீனவர்கள் பழைய துணியை வாங்க மறுத்தனர் என்பது உண்மை. ஆனால் அது மாற்றுத் துணிக்கு இப்போது என்ன


**தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம்**

ஆசிரியர்:
**ந. முருகேச பாண்டியன்**

வெளியீடு:
**நிஷா பதிப்பகம்**
ஏ–18, வீட்டுவசதிக் குடியிருப்பு
பொன்னமராவதி 622 407
✆ 9443861238

**பக்கம் 272**
**விலை ரூ. 130**

விளம்பரம்

❖ மொழிபெயர்ப்புப் படைப்புகள் மூலம் தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் போக்குகளையும் ஆராய்ந்திடும் புத்தகம்.

❖ 1018 மொழிபெயர்ப்பு நூற்களின் நூற்தொகை இணைக்கப்பட்டுள்ளது.

❖ அழகிய அச்சமைப்பு, கெட்டி பைண்டிங்.



**விரும்பும் நூலை வீட்டிலிருந்தே பெற**

அடையாளம், காலச்சுவடு, விடியல், உயிர்மை, தமிழினி, அகரம், மருதா, அலைகள் முதலான முக்கியமான பதிப்பகங்களின் அனைத்து நூல்கள்.

சிற்றிதழ்கள், இடைநிலை இதழ்கள், தீவிர அரசியல் இதழ்கள்.

இவற்றைப் பெற விரும்புவர்கள் செய்யவேண்டியதெல்லாம் ஓரே ஒரு தொலைபேசி அழைப்பு மட்டுமே 9382853646.

சிவ. செந்தில்நாதனைத் தொடர்புகொள்ளுங்கள்.

நீங்கள் விரும்பும் நூல் உங்கள் வீடு தேடி வரும்.

விளம்பரம்



*திருச்சியில் விரும்பும் நூல் வாங்க...*

*தான் பிரசுரம்*

15/9, பெரிய சௌராஷ்ட்ரத் தெரு, கடைவீதி நிறுத்தம், உறையூர், திருச்சி – 620 003.
✆ 98942 60844

புதன் விடுமுறை

*தமிழில் நீங்கள் விரும்பும் எந்த ஒரு நூலையும் நேரிலோ அஞ்சலிலோ வாங்க...*

நீங்கள் மாதம் ரூ. 100க்கு குறையாமல் புத்தகம் வாங்குபவராக இருந்தால் உங்களுக்கு ...

11% தள்ளுபடியுடன்

விளம்பரம்

www.padippakam.com



செய்வது என்று யோசித்த டிச. 26 மாலை வேளையில் அல்ல. மேலும் தண்ணீர் புகுந்த பகுதிகளில் மீட்பு வேலைக்குப் பயன்படும் என்று அதற்குப் பழைய துணிகள் அதிகம் வந்து குவிந்த போது அதை நிராகரித்தார்கள். புதுத் துணியும் அதிகம் கொடுக்க முயன்றால் அதுவும் நிராகரிக்கத்தான்படும்.

"கருணையை வெளிப்படுத்துவது ஓர் அதிகாரச் செயல்பாடாகும்" என்கிறார் ரவிக்குமார். இது அமைப்பிற்கோ மத நிறுவனங்களுக்கோ 'எதிர் பார்க்கும்' குணமுடைய சுயநலக் கும்பலுக்கோ பொருந்துமே தவிர மத்தியதர நகரவாசிகளுக்குப் பொருந்தாது. உண்மையில் அவர்களது உதவிகள் உணர்ச்சியின் வெளிப்பாடே.

"மதச்சார்பற்ற நிறுவனங்களால் புறக்கணிக்கப்பட்ட வெற்றிடம்" என்று கூறுவதை அவர் சற்று விளக்கியிருக்க வேண்டும். அரசியல் கட்சிகளும் தொண்டர்களும் மத நிறுவனங்களை வேலை செய்ய விட்டுவிட்டனரே என்று சொல்ல வருகிறார் என நினைக்கிறேன். சன் டி.வி., ஜெயா டி.வி.களின் அரசியல் 'அம்மண' ஆட்டத்தை விட்டுவிட்டுத் தன்னார்வத் தொண்டர்களைக் கட்டுரையாளர் பார்த்த விதம் அவரது இயலாமையைத்தான் காட்டுகிறது. கதாநாயகன், கதாநாயகியாக மாறிக்கொள்வதில் சமூகத்திற்குப் பயன் கிடைக்குமானால் எந்த நட்டமும் இல்லை. மேலும் ரிஷிகேஷ் சாமியாரையும் விவேக் ஓபராயையும் எள்ளி நகையாடும் கட்டுரையாளரின் போக்கு சமூக அக்கறையைப் பிரதிபலிக்கவில்லை. ரவிக்குமார் கொஞ்சம் நல்லதையும் பார்த்துப் பாராட்டத் தெரிந்துகொள்ளட்டும்.

**பா. கார்த்திகேயன்**
புதுச்சேரி–8

ரவிக்குமாரின் கட்டுரை மனித மனத்தின் வக்கிரத்தைச் சிறப்பாகவே வெளிப்படுத்துகிறது; மாற்றிச் சிந்தித்துள்ள ரவிக்குமாரின் அணுகுமுறை அறிவியல் ரீதியான உளவியல் உண்மைகள். அழிவின் நடுவிலும் தன்னை முன்னிலைப்படுத்தும் மனித மனத்தின் சாகசத்தை ரவிக்குமார் தோலுரித்துக் காட்டியுள்ள திறம் பாராட்டத்தக்கது. "நம்மை அரித்துக்கொண்டிருக்கிற அதிகாரம் பற்றிய வேட்கை... ஏற்படுத்துகிற அழிவு இந்தப் பேரழிவைவிட அதிகம்" என்னும் வரிகள் இன்றைய அதிகார வர்க்கங்களுக்கான சாட்டையடி எனலாம். ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறுவார் 'அதிகாரம் ஒரு சாபக்கேடு' என்று. இப்போது நாம் அதைப் பார்க்கவே செய்கிறோம்.

**முனைவர் இரா. சத்தியமூர்த்தி**
பாண்டிச்சேரி–8

ரவிக்குமார் அவர்களின் கட்டுரை படித்த நாளிலிருந்து இக்கடிதம் எழுதும் வரை, ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு வகையில் அக்கட்டுரையின் மீது ஒரு வருத்தம் தொடர்ந்து இருந்துவருகிறது.

மத்திய அரசு பிறநாட்டு உதவியை மறுதலித்ததை அவர் விமர்சித்தது, மத அமைப்புகள் நிவாரணப் பணியில் ஈடுபட்டதைக் கடவுள் கொள்கை, பாவம், புண்ணியம், தண்டனை என்று கூறியது, மேலும் "ஆழமான பின் விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது" என்னும் எள்ளல் தொனி, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேறுதல் தேவையென்பதை "குரூர உணர்ச்சி" எனக் கூறியது எல்லாமே மனவருத்தத்தைத் தந்தன.

இவற்றைக்கூட விவகாரத்தின் பல்வேறு அம்சங்களை விரிவாக அலசுவதற்கும் விவாதப் பக்கங்களை விரிவடைய வைப்பதற்குமான தங்கள் அணுகுமுறை என ஏற்றுக்கொள்ளலாம்.

தன்னார்வத் தொண்டர்கள் வந்து தொண்டாற்றியதையும் ஏளனமாக விமர்சித்துள்ளார். ஆர்.எஸ்.எஸ்., இராம கிருஷ்ண மடம், எண்ணற்ற கல்லூரி மாணவர்கள் என எல்லோருடைய உழைப்பையும் எள்ளி நகையாடியுள்ளார்.

எல்லாவற்றையும் புறந்தள்ளி மனத்தில் கொள்ளாமல் விட்டுவிடத் தோன்றுகிறது. ரிஷிகேஷ் ஆசிரம "இந்து சாமியாரும் விவேக் ஓபராய் எனும் நடிகரும் தேவனாம்பட்டினத்தைப் படப்பிடிப்பு தளமாக மாற்றிவிட்டார்கள்"– இந்த வரிகள்தான் என்னைப் புரட்டிப் போட்டுவிட்டன. விவேக் ஓபராய் இங்கே ஐஸ்வர்யா ராயோடு சேர்ந்து நடனமாடிப் படப்பிடிப்பு நடத்தினாரா? எதைக் கண்டு நண்பர் ரவிக்குமார் இப்படிக் கொதித்துக் கொட்டியுள்ளார்?

அரசு அனுமதிபெற்று, நல்ல அளவில் திட்டமிட்டு, தேவையறிந்து, பகுதி தேர்ந்து பொருள் சேர்த்து, சரியாகக் குடியிருப்பு கழிப்பறை வசதி, மீன்பிடி வலைகள், படகு ரிப்பேர், சரியான உடை, வீட்டுப் பொருள்கள், மருத்துவ வசதி செய்து தந்தது படப்பிடிப்பா? "நடிகன்" பொதுச்சேவைக்கு வரவே கூடாதா? அவர் ஒரு மனிதனாக வந்து இருக்கக்கூடாதா? அவர் பெற்றோரோடு வந்து இங்கு தங்கித்தான் சேவை செய்தார். வேடிக்கை பார்த்துவிட்டுச் செல்லவில்லை.

தொண்டு செய்யும் நல்ல உள்ளங்களைப் பாராட்ட நண்பர் ரவிக்குமார் மறுக்கலாம். ஆனால் ஏளனமாகப் பேச வேண்டாம் என்பதே எனது வேண்டுகோள். சுமார் 100 சீக்கியர்கள் இங்கு வந்து ஒரு மாதம்போல் தங்கியிருந்து மீட்புப் பணியில் சிறு அளவில் உதவி செய்து, ஏராளமாக உணவு தயார்செய்து மக்களுக்குத் தந்தார்கள். பஞ்சாபுக்குத் திரும்பும் வழியில் நமது மாநில கவர்னர் பர்னாலா அவர்களையும் சந்தித்துப் போனதாகச் செய்திவந்தது. இதையும் மதவாதிகள், இறைத் தூதர்கள் என்று ரவிக்குமார் கூறப்போகிறாரா?

**ச. முத்து**
பரமக்குடி–7


## சுடர் ஆய்வுப் பரிசு

2003, 2004இல் தமிழில் வெளியான- மொழி, கலை, இலக்கியம், சமூகம், பண்பாடு, நாட்டுப்புறவியல், புதிய சிந்தனைத் தளங்கள், புதிய முயற்சிகள் தொடர்பான - விமர்சன / ஆய்வு நூல்களில் சிறந்த பத்து நூல்களுக்குச் சுடர் ஆய்வுப் பரிசு ரூபாய் மூவாயிரமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.

தமிழ் ஆய்வு ஒருங்கிணைப்பு முயற்சி இது.

இம்முயற்சியில் பங்கேற்க விரும்புவோர், தங்கள் நூலின் இரு பிரதிகள் 15-4-2005க்குள்

**முனைவர் ச. மாடசாமி**
25, தேவ் அபார்ட்மெண்ட்ஸ்
7, கஸ்தூரிபா நகர் முதல் மெயின் ரோடு
அடையாறு, சென்னை-20
(தொ.பே: 044-24401462)

என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

**அருவி**
**தமிழ் ஆய்வு மையம்**
**மதுரை-3**

விளம்பரம்



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

காலச்சுவடு
மாத இதழ்



இணைந்து நடத்தும்

## தனித்துவம் மிக்க இலக்கிய நிகழ்ச்சி

**கோ**வையில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிறு அன்று மாலை தமிழின் மூத்த எழுத்தாளர்கள் தங்கள் நினைவலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். இந்தக் கூட்டத் தொடர் மார்ச் 20, ஞாயிறு மாலை 6.30 மணிக்குக் கோவை வித்யா பவனில் (582, D.B சாலை, ஆர்.எஸ். புரம்) கி. ராஜநாராயணனின் உரையுடன் துவங்குகிறது.

மூத்த படைப்பாளிகள், தாங்கள் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச் சூழல், தொடக்க காலப் படைப்பு முயற்சிகள், இலக்கிய நட்புகள் எனக் கடந்த கால நிகழ்வுகளை நினைவுகூர்வதாக இவ்வுரைகள் அமையும். மூத்த எழுத்தாளர்களின் படைப்புகள் உருவான சூழலை உணர்ந்துகொள்ள இவ்வுரைகள் ஓர் அரிய வாய்ப்பு.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்


படிப்பகம்

www.padippakam.com




# கோகுலக்கண்ணன்

## நிற்கும் ரயிலில் ஏறிய கிழவி - 1

கிழவி இரவின் இறுதியில் நின்றுவிட்ட ரயிலில் ஏறுகிறாள்
இரவிற்கும் மேலாய்க் கறுத்திருக்கும் நிலையத்தை விட
யாருமற்ற ரயில் அவளுக்குப் பிடித்திருக்கிறது
நிற்கும் ரயில் இரவுக்குள் அவளை அழைத்துச் செல்லும் என்றே நம்புகிறாள்
இரவுக்குள் போக வேண்டிய தூரங்கள் நிறைய என்று அறிவாள்

எறியப்பட்ட வாழைப்பழத்தோல்
வெற்றிலைச் சாறு துப்பல்
படபடக்கும் செய்தித்தாள்
ஈரக் கைக்குட்டை
மிதிக்கப்பட்ட சிகரெட் துண்டுகள்
இவற்றிலிருந்து பெருகும் நரையின் ஒளி
அவள் கண்களுக்குள் சேர்கிறது
அவள் தலை துருவேறும் ஜன்னல் கம்பிகளில்
அப்போது சாய்கிறது


*2*

ரயில் பெட்டிக்குள் காற்று அலைகிறது
கிழவி அடுத்த பெட்டிக்கு நகர்கிறாள்
பெரிய ஓசையை

பெரிய நடுக்கத்தை
கிழவி உணர்கிறாள்
பக்கத்து தண்டவாளத்தில் பெருவேகத்தில் போகிறது ரயில்.
நிற்கும் ரயிலும் நகரத் தொடங்குவது போல தோன்றுகிறது கிழவிக்கு.
இயக்கத்திலிருந்து காற்று பிரித்தெடுக்கும் ஒலி காதைக் கிழிக்கிறது
அவள் இறங்க வேண்டிய இடம் எதுவெனக் குழம்புகிறாள்

*3*

இருளோடு தன் இருப்பும் நகர்வதைப் பயத்துடன் பார்க்கிறாள்
இயக்கத்திலிருந்து இயக்கமற்ற இடத்தைச் சேர வேண்டும்
என்று அவள் அறிகிறாள்



படிப்பகம்

www.padippakam.com

4


தொடர்ந்து நகரும் வெளிச்சச் செவ்வகங்கள்
அவள் முகத்தை
அவள் விசனத்தை
சிறைப் பிடிக்கின்றன
பிளாட்பாரத்தில் இறங்கப் பார்ப்பவளுக்கு
எல்லாம் நகர்வது போல இருக்கிறது

5

இருட்டு ரயிலில் ஏறிய கிழவிக்கு
தன்பெட்டி எதுவென்று தெரியவில்லை
இறங்குமிடமும் தெரியவில்லை
நகரும் இரவுக்கும்
நகரும் ரயிலுக்கும்
நகரும் பிளாட்பாரத்துக்கும்
இடையில் தொங்குகின்றன அவள் பாதங்கள்.

## நிற்கும் ரயிலில் ஏறிய கிழவி - 2

இரவில் காலியான ரயில் இனி நகரப்போவதில்லை
எனும் உத்தரவாதத்தை அவளுக்கு அளிக்கவில்லை
தண்டவாளத்திலிருந்து பிளாட்பாரத்திற்கு விரைந்தேறிய எலிகளும்
நிற்கும் பெட்டிகளுக்குள் நுழையவின்னும் துணியவில்லை
ரயிலின் கடைசி மூச்சை உணர்ந்தவள் போல
நிற்கும் பெட்டிக்குள் கால்வைக்கிறாள் கிழவி
அப்போது நகர்கிறது ரயில் ஓசையற்று
நகர்வது ஒரு கால் வைத்த ரயிலா
மறுகால் தொடும் தரையா
எதுவும் நிச்சயமில்லை அவளுக்கு
பதட்டத்தில் பிளாட்பாரத்தில் விழுந்தவள்
அப்படியே கிடக்கிறாள்
அவளுக்குப் புரியவில்லை
யாருமில்லாத ரயில் எங்கே போகக்கூடுமென்று
யாருமில்லாத ரயில் எப்படி நகரக்கூடுமென்று
முகத்தால் அழுத்தி நிறுத்துகிறாள்
நகரும் பிளாட்பாரத்தை.



படிப்பகம்

www.padippakam.com



## எச்சரிக்கை


இந்த அறைச் சுவரில்
ஒட்டியிருக்கும் எச்சரிக்கை:

"காமிரா இந்த அறையை
கண்காணிக்கிறது"

உடனே டி.வித் திரையில்
என்னை யாரோ கண்காணிக்கிறார்கள்
என்றெண்ணுவதில் தவறு என்ன?

என்னைப் பார்க்கும் யாரோவின்
முகமோ
கண்களோ
இந்த எச்சரிக்கைக்கு பதிலாக
இங்கே இருந்தால்
இந்த குழப்பங்களுக்கு இடமில்லாமல்
செய்திருக்கலாம்

என் முன் தனிமையில் முளைத்த காலம்
என் முகத்தை எப்படியெல்லாம் மாற்றுகிறது!
ஓரத்தில் நிற்கும் பேப்பர் பூச்செடி
நச்சுக்காற்றை உமிழ்வதாக ஏன் நினைக்கிறேன்?
மூடப்பட்டிருக்கும் கதவிடுக்கில்
ஏன் வழிகிறது அலறலின் நாக்கு?
என் கைவிரல்களே
வினோத மிருகங்கள் போல
ஏன் தெரிகிறது?



## விடைபெறுதல்

சதா இலைகளை உதிர்க்கும் மரத்தடியில்
தினசரி சந்திக்கும் இரு முதியவர்கள்
இன்று விடைபெறும் பொழுது
கைகள் குலுக்கி விடைபெறவில்லை
தொடுகையற்றுப் பிரிவுபசார வார்த்தைகளுடன் விடை
பெறவில்லை
தலைத் தொப்பியை உயர்த்தி விடைபெறவில்லை

இருவரும் தழுவிக்கொண்டார்கள்
மௌனமாக,
வெகுநேரம்
எந்தத் தயக்கமுமின்றி
பார்ப்பவர்களைப் பற்றிய பிரக்ஞையற்று.

குளிர்ந்த காற்று இடையில் வீசிய பொழுது
அவர்கள் கைப்பிடி இறுகியது
பிதுங்கி வழியும் காலம் காலடியில் இருளாய்க் குமிந்தது

எதிரெதிர் திசையில் விலகியவர்களை
மூடுகிறது இருள்
முன்னறிவிப்பற்ற மூர்க்கம் முளைக்கும் குளிரில்
கையுறையற்று விதிர்க்கும் கைகள்
பிறிதொரு கணத்தில்
அழைத்துச் செல்லும் இருளின் தோள்களை
அணைத்துக்கொள்கின்றன
தயக்கமின்றி.

படிப்பகம்

www.padippakam.com

# துரோகம்

நிழல்களினூடே வந்து
தோட்டத்தில் இருள் தேங்கிய மரத்தடியில் ஒதுங்கி
அழைத்த கடவுளின் குரல் சற்றே தேம்பியது

மீசை, தாடி, காதோரங்கள், மற்றும் பின்னங்கழுத்து
நரைக்கத் தொடங்கிவிட்டன என்றார்
மார்பிலும் ஒன்றிரண்டு என்றார்


அவரை இத்தனை வருத்தத்தில் நான் இதுவரை பார்த்ததில்லை
அந்தரங்கமும் நரைக்கத் துவங்கிவிட்டதை மட்டும் என்னால்
தாங்க முடியவில்லை என்ற குரல் நடுங்கியது

முதலில் பதட்டப்பட வேண்டாம் என்றேன்
மேலும் இது வயோதிகத்தின் சின்னமல்ல விவேகத்தின் சின்னமல்லவா
என்ற போது
கடவுளின் கண்களில் இகழ்ச்சி ஒளிர்ந்தது

சாயத்தின் சாமர்த்தியத்தை அவருக்கு விளக்கினேன்
இடத்திற்கேற்ப இருக்கும் சாயங்களை எடுத்துரைத்தேன்
சாயம் பூசியது பிறருக்கு தெரிந்து விடுமா என்றவருக்கு
என் கருகரு மீசையையும் மார்பில் புரளும் கருமையையும் காட்டினேன்
கூச்சத்துடன் சிரித்தன கடவுளின் கண்கள்

பிறருக்கு தெரியாது, பிறரின் உதவியும் தேவையில்லை என்ற பிறகே
கடவுள் இருளோரமாக வெளியேறினார் குப்பிகளுடன்

அன்றிரவுதான்
ஆணிகள் அறையப்பட்டன
என் கண்களில்.




www.padippakam.com



# முகுந்த் நாகராஜன்


## எளிதில்

நிற்கிற மரத்தின் மேல்
நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கிறது
மஞ்சள் ஆறு.
மிக உயரத்தில் இருக்கும்
கிளைகளையும் விட்டு விடாமல்
எல்லாக் கிளைகளின் வழியாகவும்
செல்கிறது சீரான வேகத்தில்.
இந்த மரத்தின் எல்லாக் கிளைகளிலும்
இந்த சீரியல் பல்புகளைக்
கட்டி முடித்து விட்டு
இறங்கியவனுடைய முகத்தை
எளிதில் கற்பனை செய்துகொள்ள முடிகிறது;
அவன் உச்சியில் இருந்த போது,
கீழேயிருந்து அவனுக்காக எழுந்த
எச்சரிக்கைக் குரல்களையும்.



'இது என்ன ஸ்டேஷன்?' என்று கேட்டார்,
இரவுப் பயணம் முடிவை நெருங்கிய அதிகாலையில்.
'கிருஷ்ணராஜபுரம்' என்றேன் வெளியே பார்த்து.
'இங்கே என்ன ஃபேமஸ்?'என்று கேட்டார் சகஜமாக.
திடுக்கிட்டேன் நான்.

இன்னொரு முறை கேட்டார்.
என்னவாக இருக்கும்?
மலைக்கோயிலா, அருவியா,
மத்திய அமைச்சரா,
இனிப்புப் பலகாரமா,
நாடி ஜோசியனா. . .
என்னவாக இருக்கும்?
இறங்கி உள்ளே போய்
ஊர்க்காரன் எவனையாவது
பிடித்துக் கேட்கலாம்.
ஆனால், ஒன்றுமே ஃபேமஸ் இல்லாவிட்டால்,
அவமானத்தில் அவன்
மனம் உடைந்து விடக்கூடும்.
இல்லாவிட்டால், சனிக்கிழமைதோறும் கூடும்
சாதாரண சந்தையைப் பற்றி உற்சாகமாக
ஒரு மணி நேரம் பேசவும் கூடும்,
என்னைப் பிடித்து வைத்துக் கொண்டு.
ரயிலோ இரண்டு நிமிஷம்தான் நிற்கும்.
அட, வெட்கம் கெட்ட கிருஷ்ணராஜபுரமே!
உனக்கெல்லாம் ஸ்டேஷன் ஒரு கேடா?




படிப்பகம்

www.padippakam.com



## எண்ணற்ற வழிகள்

எப்படி எல்லாம் ஒரு மனிதனை அடிக்கலாம்
என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.
அவன் முகத்தைக் கிட்டே கொண்டு வந்து
முட்டியை உயர்த்துக் காட்டி,
அவன் கண்களில் தோன்றும்
பயத்தை ரசித்தபடி,
அவன் தாடையில் ஓங்கிக் குத்தலாம்.
வாயில் இருந்து பற்கள் தெறிக்க
எட்டிப் பிடித்து நிமிர்த்தி,
மூக்கில் ஒரு குத்து விடலாம்.
அப்புறம் கண்ணுக்குக் கீழே ஒன்று.
இல்லாவிட்டால், அவன் முகத்தை
அப்படியே சுவரில் மோதலாம்.
கைவிரல் ஒவ்வொன்றையும்
பின்னால் வளைத்து உடைக்கலாம்.
கையையும் புடலங்காய் உடைப்பது போல
கால் மேல் வைத்து உடைக்கலாம்.
நெஞ்சில் ஏறி மிதிக்கலாம்.
இன்னும் ரசனைக்கு ஏற்ப நிறைய செய்யலாம்.
இன்பம் துய்ப்பதற்கு
எண்ணற்ற வழிகளைக்
கொண்டிருக்கிறது வன்முறை,
காமத்தைப் போலவே.



## ஒரு பீரியடு போதுமோ?

அந்தச் சின்னக் கல்லை மெதுவாக,
உதைத்து உதைத்து முன்னேற்றி,
தன்கூடவே பள்ளி வரை
அழைத்துக் கொண்டு போகும் காரியத்தில்
கவனமாக இருந்தவள்,
எதிரே வந்த தெரு நாயைக்
கொஞ்சம் தாமதமாகத்தான்
கண்டு கொண்டாள்.
அமைதியான அந்த நாய்க்குப்
பயந்து விலகிய போது,
சின்னக் கன்றுக்குட்டி ஒன்று
பின்னாலிருந்து ஓடி வந்து,
அவளைச் சற்றே உரசிச் சென்றது
கூட்டிக் கொண்டு வந்த கல்லை
அப்படியே விட்டு விட்டு
விரைந்து நடந்தாள்
முகத்தில் ஆர்வம் பொங்க
இந்தச் சம்பவத்தைத் தன்
தோழிகளுக்கு எல்லாம் எடுத்துச் சொல்ல
அவளுக்கு ஒரு பீரியடு போதுமோ,
இரண்டு பீரியடு ஆகுமோ.

படிப்பகம்

www.padippakam.com



சிபிச்செல்வன்

## சாலை கடத்தல்

இந்தச் சாலையைக் கடத்தல் வேண்டும்
போக்குவரத்து விதிகளை மீறாமல்
இந்தச் சாலை கடத்தல் வேண்டும்.

இந்தச் சாலையிலிருந்து பிரியும் ஆறு சாலைகளில் ஒன்றைத்
தேர்ந்தெடுக்க வேண்டும். பயணம் சரியான திசையை நோக்கி நகர்கிறதாவென
போக்குவரத்துக் காவலரிடம் அவ்வப்போது சோதனை செய்து கொள்ளலாம்.

கொஞ்சம் பொறுமையாகயிருங்கள்
பச்சை விளக்கு இன்னும் எரியத் தொடங்கவில்லை.
சிவப்பு விளக்கு விழும்வரை பதட்டப்பட வேண்டியதில்லை.
நீங்கள் போகும் சாலையின் திறப்பை அறிவிக்கின்றன டிஜிட்டல் நொடிகள்

இந்தச் சாலை கடத்தல் வேண்டும்
வாகனங்கள், பாதசாரிகள்
காத்திருக்கிறார்கள்

ஒருமுறை வாகனத்தில்
மறுமுறை பாதசாரியாகக் கடந்தேன்


எல்லாச் சமயங்களிலும் சிக்னலுக்காகக் காத்திருக்காமல்
சாலை போய்க்கொண்டிருந்தது

போக்குவரத்துக் காவலர் விசிலூதியபடி சாலையை விரட்டிக் கொண்டிருந்தார்.

## தார்ச்சாலையில் படரத் தவிக்கும் கொடி

வாகனங்கள் விரையும் மாநகர பிரதான
தார்ச்சாலையில் பற்றியேறக் கொம்பின்றித்
தவிக்கும் கொடி படர
மின்சார விளக்குத் தூண் என இரு கைகளை விரித்து நிற்கிறேன்

படர்கிறது கொடி என் திருமேனியில்.



www.padippakam.com



# ஒரு துளி சலனமில்லாத மலைகள்

கடந்தமுறை இந்த மலையை ஒரு பகல்நேர பாஸஞ்சரில்
போகும்போது பார்த்திருக்கிறேன்.
அறுவடை முடிந்த வயல்களுக்கிடையே செம்மண் புழுதி பறந்த
கானல் நீரில் ஒற்றையடிப் பாதைகளில் யாரும் நடமாடாத சுவடுகள்
அலைந்தன.

கடந்தமுறை இந்த மலையை அந்திப்பொழுதில் கடக்கும்போது
தீப்பிடித்தெரிவதைக் கண்டேன். கோடை உஷ்ணத்தில் கிளைகளின்
உரசலில் மலை தீப்பிடித்தெரிவதைக் கண்டேன். வேற்று மொழி
பேசும் அவ்வூர் மலை அதன் வலிகளை எனக்குப் புரியவைத்தது.
ரயிலைத் தொடர்ந்து ஓடி வந்துகொண்டிருந்த மலையில் கிளம்பிய புகை
வானில் கரும் திட்டாகப் பறந்து கொண்டிருந்தது.

கடந்தமுறை இந்த மலையைக் கடக்கும்போது பார்த்தேன்
இடைவெளியில்லாமல் பசுமை விரித்திருந்தன மரங்கள்
விதைப்பதற்காக உழவடிக்கப்பட்ட வயல்களில் நேற்றைய
மழை நீர் தேங்கியிருந்தது.

கோடை, வசந்தம், கார்காலம், முன்பனி, பின்பனியென

எல்லாப் பருவங்களிலும் மலைகளைக் கடந்துகொண்டேயிருக்கிறேன்.

ஒரு துளி சலனமில்லாமல் உயர்ந்து நிற்கின்றன மலைகள்

ஒவ்வொரு ரயில் பயணத்திலும் கற்றுக்கொள்கிறேன்
மலையாக இருப்பதற்கு.
மலையாக மாறுவதற்கு

# ஒரு உரையாடல்

தெருவில் தன்னந்தனியாக நடந்தேன். அப்போது மழை
மழை எதிரில் வந்தது.

என்னை நலமா என்றது.
என் குடும்பத்தின் நலத்தை விசாரித்தது.

இருவரும் உரையாடிக்கொண்டே நகர் முழுதும் நடந்தோம்.

சில இடங்களில் உற்சாகமாகப் பேசியது
சில இடங்களில் முணுமுணுத்தது
சில இடங்களில் அமைதியாகயிருந்தது
சில இடங்களில் மழையின் சுவடுகளே காணவில்லை

மழையும் நானும் உற்சாகமாக நகர் உலா தொடர்கிறோம்.

இந்நகர் மீது உன் கோபம் இன்னும் தணியவில்லையா என்கிறேன்

பேராசை மிகுந்தவர்கள் வசிக்கும் நகர் இது
விருந்தோம்பல் மறந்த குலம் இது




நகர் உலாவில் நனைந்தவாறே சாலைகள் கிடக்கின்றன.
அவற்றின் மீது அதற்கிருந்த கோபத்தையறிந்து பதறுகிறேன்
ஆக்ரோஷமாகக் கொட்டித் தாக்குகிறது
அழுது வடிந்து பல்லை இளிக்கிறது சாலை
கையறு நிலையிலிருக்கும் நகரிலிருந்து
விடைபெற்றது மழை.

படிப்பகம்

www.padippakam.com



# வரிக்குதிரைகள் பயணம் செய்கின்றன



வரிக்குதிரை மேய்ந்துகொண்டிருக்கிறது.
புல்வெளியெங்கும் பெருகி
துள்ளி விளையாடியது வரிக்குதிரைக்கூட்டம்
அவற்றின் வண்ணமிகு வரியோட்டங்களில்
லயித்துப் பார்த்தவாறே நிற்கிறான்
பேருந்துப் பயணியொருவன்.

புல்வெளியில் மேய்ந்தவாறே
வரிக்குதிரைகள் அவனுடன் பயணம் செய்கின்றன.
நடத்துநரின் விரட்டல்களுக்கோ
பயணிகளின் பேச்சரவத்திற்கோ
கொஞ்சமும் அஞ்சாமல்
மேய்ந்துகொண்டிருக்கும் வரிக்குதிரைகள்
வாலைச் சுழட்டி உண்ணியை விரட்டும்
மிரட்டும் என் குரலொலிகளுக்குப் பயப்படாமல்
வரிக்குதிரைகள் புல்வெளியில் திரிகின்றன.

நிறுத்தங்களில் பேருந்து நிற்பதையோ அல்லது
புறப்பட்டுச் செல்வதையோ கவனிக்காமல் மேய்கின்றன.
கண்காணித்தபடியே அதன் வரியழகைப் பயணி ரசிக்கும்போது
வால் தூக்கிச் சிறுநீர் பெய்கிறது
வானுக்குப் பல்லைக் காட்டி.பேருந்தின் விளம்பரப் பலகைப் புல்வெளியில் மேய்ச்சல் முடித்து
தாகத்திற்கு நீரருந்த
ஒவ்வொரு வரிக்குதிரையாகப் புறப்பட்டு
ஓடும் பேருந்து
படிக்கட்டுகளில் இறங்கிச் செல்கின்றன.

ஓவியங்கள்: சந்தோஷ்


இப்பொழுது விற்பனையில் . . .



நாம் அறிந்திராத ஒன்றினுள் அடியெடுத்து வைப்பதற்கு முன் சில விஷயங்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியிருக்கிறது...

இன்னோரு வாசல்
இன்னொரு வாழ்க்கை
முதல் பாகம்
ஓஷோ
பக். 320; விலை ரூ. 100

நம்முடைய உள்ளார்ந்த வெகுளித்தனத்தையும் செயல்திட்டமற்ற இருத்தலையும் நமக்கு நினைவூட்டுகிறது ஓஷோவின் புரட்சி

அன்பின் யாததிரை
ஓஷோ
பக். 448; விலை ரூ. 140






இந்த உரைகள் நம்முடைய கனவுகளையும் மாயைகளையும் எரிக்கும் நெருப்புப் போன்றவை. நமது அடிமட்ட உலோகத்தைத் தங்கமாய் மாற்றக்கூடியவை

இன்னோரு வாசல்
இன்னொரு வாழ்க்கை
இரண்டாம் பாகம்
ஓஷோ
பக். 344; விலை ரூ. 100

நோபல் பரிசு பெற்ற தென்னாப்ரிக்க எழுத்தாளர் ஜே.எம். கோட்ஸியின் நாவலைப் பேராசிரியர் நா. தர்மராஜன் தமிழில் தந்துள்ளார்.

மைக்கேல்.கே
ஜே.எம். கோட்ஸி
தமிழாக்கம்
பேராசிரியர் நா. தர்மராஜன் எம்.ஏ
பக். 256; விலை ரூ. 75



விவரங்களுக்கு:

கவிதா பப்ளிகேஷன்

8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
தியாகராய நகர், சென்னை 600 017.
தொலைபேசி: 24364243 / 24322177

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com



யூத அழித்தொழிப்பு முகாம்

# அவுஷ்விட்ஸின் அறுபது ஆண்டுகள்

திவாகர் ரங்கநாதன்

**லட்சக்கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட ஜெர்மானிய அவுஷ்விட்ஸ் முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் சுதந்திரம் அடைந்ததன் 60 ஆண்டு கடந்த ஜனவரியில் கொண்டாடப்பட்டது. இந்தத் தருணத்தையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

கடந்த ஜனவரி மாதம் பிரிட்டிஷ் இளவரசர் ஹாரி தொடர்பாகக் கடும் சர்ச்சை ஒன்று எழுந்தது. டீனேஜ் பருவத்தில் இருக்கும் ஹாரி, மாறுவேட உடையணிந்து கலந்துகொள்ளும் பார்ட்டி ஒன்றில் நாஜி ராணுவச் சீருடையை அணிந்து சென்றார். அவருடைய பாட்டி ராணி எலிசபெத் இரண்டு வாரம் கழித்து யூதப் படுகொலையின் 60ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி ஒன்றில் இங்கிலாந்து சார்பாகப் பங்கேற்று, கொடூரமான சித்திரவதைக்கு ஆளாகி அந்தப் படுகொலையிலிருந்து உயிர் பிழைத்தவர்களை வரவேற்பதாக இருந்தார். நாஜி உடையில் இருந்த இளவரசரின் படங்களைப் பத்திரிகைகளில் பார்த்து உலகெங்கும் பல யூத அமைப்புகளும் நாஜி முகாம்களால் பாதிக்கப்பட்டவர்களும் அதிர்ந்துபோய்க் கண்டனக் குரல் எழுப்பினார்கள். நினைவு நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அமைப்பின் நிறுவனரான ராபை மார்வின் ஹியர், ஹாரி போலந்தில் இருக்கும் அவுஷ்விட்ஸ் முகாம்களுக்குச் சென்று பார்க்க வேண்டும் என்றார். "அவர் மிக முட்டாள்தனமாக அணிந்துகொண்ட சின்னம் என்னவெல்லாம் செய்திருக்கிறது என்று புரிந்து கொள்வார்" என்றார் ராபை. தான் "தவறான ஆடையைத் தேர்ந்தெடுத்து" விட்டதற்காக ஹாரி பிறகு மன்னிப்புக் கேட்டு அறிக்கை வெளியிட்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் நாஜி அரசு பல்வேறு நாடுகளில் திட்டமிட்டு நடத்திய மிகப் பெரிய அளவிலான இன அழிப்பு, யூதர்களை மட்டுமின்றி மேலும் பலரையும் கடுமையாகப் பாதித்து ஆறாத காயங்களை ஏற்படுத்தியது. அவுஷ்விட்ஸ் முகாம்களில் இரண்டாண்டுக் காலம் துன்புறுத்தப்பட்ட இத்தாலிய எழுத்தாளர் ப்ரீமோ லெவி, கற்பனைக்கு மீறிய கொடூரமான சித்திரவதைக்குள்ளானவர்கள், சித்திரவதை செய்த நாஜிகள் என இருவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு தலைப்பில் "இவன் மனிதன் என்றால்"[1] என்று ஒரு புத்தகம் எழுதினார்.

ஹிட்லர் மற்றும் நாஜி உளவுத் துறைத் தலைவர் ஹெர்மான் கெரிங் ஒப்புதலுடன் நாஜி காவல் துறைத் (Schutzstaffel - SS) தலைவர் ஹெயின்ரிக் ஹிம்லர் திட்டப்படி, உயரதிகாரி அடால்ஃப் எய்க்மானின் மேற்பார்வையில் 1941 முதல் 1945 வரை நடந்த அழித்தொழிப்பில் 60 லட்சம்[2] பேர் பலியானதாக மதிப்பிடப்படுகிறது. ஐரோப்பாவிலிருந்த யூதர்களில் 60 சதவீதம் பேர் — உலக யூத மக்கள் தொகையில் 35 சதவீதத்தினர் — அழிக்கப்பட்டார்கள். அதில் பெரும்பாலானவர்கள் யூதர்கள் என்றாலும் கம்யூனிஸ்டுகள், ருஷ்யப் போர்க் கைதிகள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், ஸ்லாவ் இனத்தவர்கள், நாடோடிகள், அரசியல் அதிருப்தியாளர்கள் ஆகியோரும் ஏராளமான எண்ணிக்கையில் இருந்தார்கள். போரில் வேறெந்த நாட்டையும்விட மிக அதிக அளவில் உயிர்ச் சேதம் அடைந்திருந்த போலந்தின் 33 லட்சம் யூதர்களில் 10 சதவீதத்தினர் மட்டுமே பிழைத்தார்கள்.

இந்த அழித்தொழிப்பு வேலை concentration camps எனப்படும் முகாம்களில் காவல் துறையின் நிர்வாகத்தில் நடந்தது. போலந்தின் அவுஷ்விட்ஸ்—பிர்க்கெனாவு, மாய்தானெக், பெல்ஸெக், ஜெர்மனியின் தாச்சாவு, புச்சன்வால்ட் ஆகிய முகாம்களில் பத்தாயிரக்கணக்கில் கைதிகள் கொல்லப்பட்டார்கள். இதில் அவுஷ்விட்ஸின் மூன்று முகாம்களான அவுஷ்விட்ஸ் I, அவுஷ்விட்ஸ் II (பிர்க்கெனாவு முகாம்), அவுஷ்விட்ஸ் III (மோனோவிட்ஸ்) ஆகியவற்றின் பங்கு 10 முதல் 15 லட்சம். அவுஷ்விட்ஸ் I மூன்று முகாம்களுக்குமான




'வேலை செய்தால் விடுதலை' என்னும் வாசகத்துடன் உள்ள அவுஷ்விட்ஸ் I—ன் வாசல்

படிப்பகம்

www.padippakam.com





உழைப்புக்கு அல்லது மரணத்திற்காகக் காத்திருக்கும் யூதக் கைதிகள்; (உள்ளே) காவல் துறைத் தலைவர் ஹெயின்ரிக் ஹிம்லர்

நிர்வாகப் பணியைச் செய்தது. இதன் வாயிலில் "வேலை செய்தால் விடுதலை" என்று எழுதப்பட்ட 'கோஷம்' மறக்க முடியாதது. இங்கு சுமார் 70,000 போலிஷ் அறிவுஜீவிகள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், ருஷ்யப் போர்க் கைதிகள் அழிக்கப்பட்டார்கள். பிர்க்கெனாவு முகாமில் 1,00,000 கைதிகளுக்கு இடம் இருந்தது. இங்கு சுமார் 10 லட்சம் யூதர்கள், 75,000 போலிஷ் மக்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், 19,000 நாடோடிகள் கொல்லப்பட்டார்கள். மோனோவிட்ஸ் முகாம், IG Farben என்னும் நிறுவனத்தின் பணி முகாமாக இயங்கியது. இந்நிறுவனம் உண்மையில் சில பெரிய ஜெர்மானிய வங்கிகள், வேதிப் பொருள் மற்றும் மருந்து நிறுவனங்களின் கூட்டமைப்பு. அன்று நாஜிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்து, இன்று வர்த்தக சாம்ராஜ்யங்களாக விளங்கி இந்தியாவிலும் கடைவிரித்திருக்கும் பல துறை நிறுவனங்களில் இவையும் அடக்கம்.

அவுஷ்விட்ஸின் குரூரங்களை நேரடியாக மேற்பார்வை செய்தவர், முன்பு ஹிட்லரின் செயலாளராக இருந்து, சிறையில் அவரது சுயசரிதையைக் கேட்டு எழுதிய நாஜி காவல் துறை உயர் அதிகாரியும் கண்மூடித்தனமான விசுவாசியுமான ருதோல்ஃப் ஹெஸ். 1943 மத்தியில் அந்த முகாம்களுக்கு ஆர்தர் லீபெஹென்ஷெலும் ரிச்சர்ட் பாயரும் தளபதிகளாக இருந்தார்கள். ஹெஸ் தனது சுயசரிதையிலும் பிறகு நாஜிகளின் போர்க் குற்றங்களின் மீது 1945—49இல் நியூரம்பர்கில் நடந்த விசாரணையிலும் அவுஷ்விட்ஸின் செயல்பாடுகளைப் பற்றி விரிவாகச் சொன்னார்[3]. அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு, 1947இல் அவுஷ்விட்ஸ் சுடுகாட்டின் வெளியே தூக்கிலிடப்பட்டார்.

நாஜி அரசு 1940இல் தொடங்கி அவுஷ்விட்ஸில் பல அழித்தொழிப்பு முகாம்களைக் கட்டியது. பல்வேறு இடங்களிலிருந்து கைதுசெய்து ரயிலிலும் வேறு வாகனங்களிலும் கூட்டம் கூட்டமாக மிகக் கடுமையான நெரிசலில் கொண்டுவரப்பட்ட யூதர்களும் மற்றவர்களும் முதலில் வரிசையில் நீண்ட நேரம் நிற்பார்கள். உழைக்கக்கூடியவர்கள், முடியாதவர்கள், மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பயன்படக்கூடியவர்கள் என்று ஆள் தேர்வு நடக்கும். உழைக்கக்கூடியவர்கள் ஐ.ஜி. ஃபார்பென் நிறுவனத்திற்காகக் கட்டாயப் பணி செய்தார்கள். குழந்தைகள் தாய்களிடமிருந்து பிரிக்கப்பட்டு வயதான பெண்களுடன் சேர்த்து விஷவாயு அறைகளுக்கு அனுப்பப்பட்டார்கள். இங்கு Zyklon-B என்னும் வாயு பயன்படுத்தப்பட்டது.

நாஜிகளிடம் சித்திரவதைப்பட்டவர்களால் மறக்க முடியாத சொற்களில் ஒன்று ஸைக்ளோன்—பி. பூச்சிக் கொல்லியாகப் பயன்பட்டு வந்த இந்த வாயுவை நாஜி காவல் துறை 1941 செப்டம்பரில் அவுஷ்விட்ஸில் பரிசோதனை செய்தது. போலிஷ் மக்களும் ருஷ்யக் கைதிகளுமாக 850 பேர் இதில் பலியானார்கள். பரிசோதனை வெற்றியடைந்ததால் ஒரு விஷவாயு அறையும் பிண எரிப்புக் கிடங்கும் கட்டப்பட்டன.

கைதிகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் குளியலுக்கு அனுப்பப்படுவதாகச் சொல்லப்பட்டது. இந்த நிலத்தடி விஷவாயு அறைகளில் ஷவர்கள்கூடப் பொருத்தப்பட்டிருந்தன. எஸ்.எஸ். காவலர்கள் அவர்களிடம் ஆடைகளை முழுவதுமாக அகற்றி உடைமைகளை ஆடை அவிழ்ப்பதற்கான அறையில் வைக்கச் சொல்வார்கள். காற்றுப் புகாத அந்த விஷவாயு அறைகளில் அவர்களை அனுப்பி அடைத்த பின் கூரையிலுள்ள துளைகள் வழியே ஸைக்ளோன்—பி அறைக்குள் செலுத்தப்படும்.

எஸ்.எஸ்., சில கைதிகளை மற்ற கைதிகளுக்கு மேற்பார்வையாளர்களாக நியமித்தது. இவர்கள் பெரும்பாலும் ஜெர்மானியக் கிரிமினல்கள். 1943இல் இவர்களின் பணிகளுக்குச் சன்மானம் தர ஹிம்லரின் உத்தரவுப்படி விபச்சார விடுதி ஒன்று அமைக்கப்பட்டு, அதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் நியமிக்கப்பட்டார்கள். யூதர்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், அரசியல் கைதிகள், தப்பிக்க முயலக்கூடியவர்கள் என்று கைதிகளுக்குப் பல வகை பேட்ஜ்கள் தரப்பட்டன. எல்லாக் கைதிகளும் உழைக்க வேண்டும். கடும் உழைப்பு, ஊட்டச் சத்து இல்லாத உணவு, சுத்தமின்மை போன்ற காரணங்களாலேயே ஏராளமானவர்கள் இறந்தார்கள். விதிமுறைகளை மீறுபவர்களுக்கு அவுஷ்விட்ஸ் I—இல் பிளாக் 11 "சிறைக்குள் ஒரு சிறை"யாக இருந்தது. பல கைதிகள் உட்காரக்கூட இடமில்லாத மிகக் குறுகிய சந்துகளில் நாள் கணக்கில் இருக்க வேண்டியிருந்தது. பலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், தூக்கிலிடப்பட்டார்கள் அல்லது பட்டினி போட்டுச் சாகடிக்கப்பட்டார்கள். நாஜிகள் சடலங்களை அகற்றுவதற்கும் கைதிகளையே பயன்படுத்தினார்கள்.

முகாம்களைச் சுற்றி மின்சாரம் பாய்ச்சப்பட்ட முள்கம்பி வேலிகள் இருந்ததால் தப்பித்துச் செல்வது மிகக் கடினமாக இருந்தது. முகாம்கள் இயங்கிய காலத்தில் சுமார் 700 கைதிகள் தப்பித்துச் செல்ல முயன்றார்கள். கிட்டத்தட்ட 300 பேர் தப்பிக்க முடிந்தது. முயன்று தோல்வியடைந்தவர்களுக்குக் கிடைத்த பொதுவான தண்டனை, பட்டினிச் சாவு.

படிப்பகம்

www.padippakam.com

1942இல் நாஜிகள் பெரிய அளவில் அழித்தொழிப்பைத் தொடங்கினார்கள். பெரும்பாலான கைதிகள் ரயிலில் கால்நடைகளுக்கான பெட்டிகளில் நாள் கணக்கில் பயணித்துவந்தார்கள். 1943 ஏப்ரல் முதல் 1944 மே வரை பெண் மருத்துவவியல் நிபுணரான பேராசிரியர் டாக்டர் கார்ல் க்ளாவுபர்க், அவுஷ்விட்ஸ் I—இன் பிளாக் 10இல் யூதப் பெண்களிடம் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் பரிசோதனைகளை மேற்கொண்டார். "மரண தேவதை" என்று அழைக்கப்பட்ட டாக்டர் யோசஃப் மெங்கெலெ அதே கட்டிடத்தில் இரட்டையர்களிடம் பரிசோதனை செய்தார். முகாம் மருத்துவமனையில் விரைவில் குணமாகாத கைதிகள் ஃபெனால் ஊசி போட்டுக் கொல்லப்படுவதும் வாடிக்கையாக இருந்தது. 1943 வாக்கில் பிர்க்கெனாவு முகாமில் நான்கு ஸைக்ளோன்-பி விஷவாயு அறைகள் கட்டப்பட்டிருந்தன.

1944இல் ரயில் தண்டவாளங்கள் முகாமுக்குள் நீட்டிக்கப்பட்டன. மார்ச்சில் ஜெர்மனி ஹங்கேரிமீது படையெடுத்ததைத் தொடர்ந்து மே மாதத்திற்கும் ஜூலைக்கும் இடையில் சுமார் 4,38,000 யூதர்கள் அங்கிருந்து அவுஷ்விட்ஸ்—பிர்க்கெனாவு முகாமுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டார்கள். பிண எரிப்புக் கிடங்கில் இடம் போதாததால் சடலங்கள் திறந்த குழிகளில் போட்டு எரிக்கப்பட்டன. ஜூலையில் ஏராளமான நாடோடி மக்கள் விஷவாயு அறைகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அக்டோபரில் 800 நாடோடிக் குழந்தைகள் பலியானார்கள்.



முகாமில் விபரீத மருத்துவச் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள்

அக்டோபர் 7 அன்று சடலங்களை அனுப்பும் பணியைச் செய்துவந்த யூதக் கைதிகள் போராடத் தொடங்கினார்கள். பெண் கைதிகள் கடத்திக் கொண்டு வந்திருந்த வெடிகுண்டுகள் பிண எரிப்புக் கிடங்கு IVஇல் சிறிது சேதம் ஏற்படுத்தின. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட 250 பேரும் கொல்லப்பட்டார்கள்.

நவம்பரில் சோவியத் துருப்புகள் முன்னேறி வந்துகொண்டிருந்தபோது அவர்களிடமிருந்து தங்கள் குற்றங்களை மறைக்க நாஜிகள் பிர்க்கெனாவு விஷவாயு அறைகளைக் குண்டு வைத்துத் தகர்த்தார்கள். 1945 ஜனவரியில் நாஜிகள் அந்த முகாம்களைக் காலிசெய்யத் தொடங்கியிருந்தார்கள். ஜனவரி 27 அன்று சுமார் 7,500 கைதிகளைச் சோவியத் செம்படையினர் மீட்டார்கள். மே 7ஆம் தேதி ஜெர்மனி சரணடைந்தது. நியூரம்பர்க் விசாரணை தொடங்குவதற்கு முன் ஹிட்லர், ஹிம்லர், கெரிங் மூவரும் தற்கொலை செய்துகொண்டார்கள். அவுஷ்விட்ஸ் முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் சுதந்திரம் அடைந்ததன் 60 ஆண்டு நிறைவுதான் இந்த ஜனவரி இறுதியில் கொண்டாடப்பட்டது.

ப்ரீமோ லெவி, எலீ வீசல், ஆன் ஃப்ராங்க் உள்பட எத்தனையோ யூதர்களும் யூதர் அல்லாதவர்களும் இன அழிப்பில் தங்களது அனுபவங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான புகைப்படங்கள், வீடியோக்கள், ஒலிப்பதிவுகள், ஆவணங்கள் ஆகியவை மட்டுமின்றி இன்றுவரை ஜெர்மானிய மக்களைத் துரத்திக்கொண்டிருக்கும் குற்ற உணர்வும், பல லட்சம் பேர் மிக மோசமாக இழிவுபடுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட யூத இன அழிப்பைச் சந்தேகத்திற்கு இடமின்றித் தொடர்ந்து நிரூபித்துவருகின்றன.

ஆனால் இந்தத் தகவல் வெள்ளத்தையும் மீறி இன அழிப்பை மறுப்பதும் நடந்துவருகிறது. Hitler's War என்னும் நூலை எழுதிய டேவிட் இர்விங், Did Six Million Really Die? என்னும் நூலின் ஆசிரியர் எர்ன்ஸ்ட் யுண்டல், நாஜிகள் விஷவாயு அறைகள் எதையும் பயன்படுத்தவில்லை என்று எழுதிய பிரெஞ்சுப் பேராசிரியர் ரொபேர் ஃபோரிசோன்[4] ஆகியோர் அதை மறுப்பவர்களுக்குச் சில பிரபலமான உதாரணங்கள். இன அழிப்பில் பலியானவர்களின் எண்ணிக்கை குறித்த நிச்சயமின்மையும் சில அரசியல் புரட்டுகளும் அது நேச நாடுகளின் அல்லது யூதர்களின் சதி என்று சொல்வதற்கு வசதியாகிவிடுகின்றன. இதில் நாஜிகளை ஜெர்மனியின் ரட்சகர்களாகக் காட்டி வெளிப்படையாக நாஜிப் பிரச்சாரம் செய்பவர்களும் உண்டு. இப்போதும் ஐரோப்பிய நாடுகளில் 'நியோ நாஜி' அமைப்புகள், நாஜிசம் உயிரோடிருப்பதுடன் புதிய ஆதரவாளர்களையும் பெற்றுவருகிறது என்பதை அவ்வப்போது நினைவூட்டுகின்றன. எல்லா நிரூபணங்களையும் மறுப்புகளையும் மீறி இனவெறியையும் அதிகாரத்தையும் குறித்த ஒரு பயங்கர எச்சரிக்கையாக வரலாற்றில் ஒரு பெரும் பரப்பைப் பிடித்துக்கொண்டிருக்கிறது இந்த யூத இன அழிப்பு.

அடிக்குறிப்புகள்

[1] If This is a Man என்னும் இந்தப் புத்தகத்தின் இன்னொரு தலைப்பு Survival in Auschwitz

[2] 60 லட்சம், 40 லட்சம், 15,000 என்று பல்வேறு புள்ளி விவரங்கள் பல வாதங்களுடன் முன்வைக்கப்படுகின்றன. லூசி டேவிடோவிச் (Lucy Davidowicz) என்னும் வரலாற்று ஆய்வாளர் போருக்கு முந்தைய மக்கள் கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களைக் கொண்டு சுமார் 58 லட்சத்து 50 ஆயிரம் யூதர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிட்டார்.

[3] நேச நாடுகளின் சித்திரவதை தாங்காமல் யூத இன அழிப்புப் பற்றி ஹெஸ் விசாரணையில் பல பொய்களைச் சொன்னதாகவும் ஒரு வாதம் உண்டு.

[4] 1978, 79இல் ஃபோரிசோன் பிரெஞ்சு நாளேடான Le Mondeஇல் இதை விளக்கி இரண்டு கடிதங்கள் எழுதியதற்காக யூத மாணவர்களால் தாக்கப்பட்டார். மொழியியலாளர் நாம் சாம்ஸ்கி, ஃபோரிசோன் தனது கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்னும் ஒரு மனுவில் கையொப்பமிட்டதையொட்டிக் கடுமையான கண்டனங்கள் எழுந்தன. சாம்ஸ்கி ஒரு யூதர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு வரலாற்று உண்மையை மறுப்பது வேறு; ஒரு சமூகத்தினமீது வெறுப்பைக்கொண்டிருப்பது வேறு என்றார் சாம்ஸ்கி. பார்க்க: http://www.zmag.org/chomsky/articles/8102-right-to-say.html.

படிப்பகம்

www.padippakam.com





நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க், தி.நகர், சென்னை—17. தொ.பே. : 24344115 / 52604567.

FAME/NALLI/2844

www.padippakam.com



# ஒரு சனாதனியின் நவீனத்துவம்

பொ. வேல்சாமி

உ.வே. சாமிநாதையர் தம் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் போக்கிலிருந்து பெரிதும் வேறுபட்டவராகப் பல்வேறு தருணங்களில் அறியப்படுகிறார். அத்தகைய தருணங்கள் அவருடைய தனிப்பட்ட ஆளுமையைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். உ.வே. சாமிநாதையருக்கு அவர் குடும்பத்தார் இட்ட பெயர் வேங்கடராமன் என்பதாகும். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் உ.வே.சா. மாணவராகச் சேர்ந்தபோது 'வேங்கடராமன்' என்னும் வைணவப் பெயரைச் சொல்லி அழைக்க அவர் மனம் இடம் தரவில்லை. ஆகவே 'சாமிநாதன்' எனப் பெயரை மாற்றினார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. ஒரு சூத்திரப் புலவர் இட்ட பெயரை ஆசாரமான பார்ப்பனக் குடும்பத்தினர் எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டனர். தங்களுடைய ஆசாரத்தைக் காட்டிலும் தங்கள் மகனின் தமிழ்க் கல்வி மேன்மையுடையது என்னும் கருத்தை அவர்கள் ஒத்துக்கொண்டதுதான் இதற்குக் காரணமாக இருக்க முடியும்.



உ.வே.சா. 150

பெயர் மாற்றத்தில் ஆசிரியரின் கருத்தை ஏற்றுக் கொண்ட உ.வே.சா.வும் அவரது குடும்பத்தினரும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மீது பெருமதிப்பு வைத்திருந்தனர். அவருடைய பெருமை குறைவுபடக் கூடாது என்பதில் உ.வே.சா. எப்போதும் கவனமாக இருந்துள்ளார். சேலம் இராமசாமி முதலியாரை உ.வே.சா. முதலில் சந்தித்தபோது, தன் ஆசிரியரின் பெருமை விளங்கும்படி தான் கற்ற ஏராளமான நூற்பெயர்களை அவரிடம் கூறினார். அவற்றைக் கேட்டும் வியப்படையாத இராமசாமி முதலியார் சங்க நூல்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் பெயர் களைக் கூறி, இவற்றைக் கற்றிருக்கிறீர்களா என்று கேட்டார். அந்நூல்களின் பெயர்களைக் கேள்விப் பட்டும் இராத உ.வே.சா., தம் ஆசிரியரின் பெருமை குறைந்துவிடும் என்று கருதித் தெரிந்ததுபோலப் பாவனை எதுவும் செய்யவில்லை.

தமிழ் நூல் பரப்பு கடல் போன்றது; அதில் தன்னுடைய ஆசிரியர் அறியாத பகுதிகளும் ஏராளம் இருக்கக் கூடும் என்னும் உணர்வைப் பெற்றவர் உ.வேசா. அந்த உணர்வாலேயே *சீவக சிந்தாமணியைப்* பற்றியும் அதன் ஏட்டுச் சுவடிகள் குறித்தும் அந்நூல் செம்பதிப்பாக அச்சில் உடனடியாக வரவேண்டிய தேவை பற்றியும் ஓர் ஆய்வாளருக்குரிய கண்ணோட்டத்துடன் 1881ஆம் ஆண்டிலேயே, அதாவது தம் 26ஆம் வயதிலேயே, அவர் புரிந்துகொண்டார். சைவம் தொடர்பான தமிழ் நூல்களைத் தவிர, ஜைனம், பௌத்தம் சார்ந்த தமிழ் நூல்களை உயர்வான நூல்களாகச் சிறிதும் கருதாத சைவப் பற்றுக் கொண்ட ஆசிரியர், சைவ மடத்தின் ஆதீனகர்த்தர் ஆகியோரோடு நெருங்கிப் பழகிய உ.வே.சா.வுக்கு இத்தகைய ஆய்வுச் சிந்தனை இருந்தது என்பதே பிற்காலத்தில் அவர் தமிழ்த் தாத்தா ஆக்கப்பட்டதற்கான காரணம் ஆகும்.

*சீவக சிந்தாமணியை* அச்சிட்டு வெளியிடும் பணியில் அவர் ஈடுபட்டபோது அதிலுள்ள பல பகுதிகளுக்குப் போதுமான விளக்கம் கிடைக்கவில்லை. அப்பகுதிகளைப் புரிந்துகொள்ளத் தனக்கு மாற்றான் மதத்தவரான சமணர்களைத்தான் அணுக வேண்டும் என்னும் நிலை இருந்தது. சமணம் தொடர்பான நுட்பமான பொருள்களை அறிவதற்குச் சமணர்களை



படிப்பகம்

www.padippakam.com

அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்துகொண்டு செயல்பட்டார். உ.வே.சா. கும்பகோணத்தில் சமணர்கள் குடியிருந்த பகுதிக்குச் சென்றும் அவர்களை நண்பர்களாக்கிக்கொண்டும் தமது ஐயங்களைத் தீர்த்துக்கொண்டார். *சீவக சிந்தாமணி* போதுமான தகவல்களோடு பதிப்பிக்கப் பட்டமைக்கு ஐயரின் இந்த அணுகுமுறை உதவியது. அவருக்கு முன்னும் பின்னும் பதிப்பில் ஈடுபட்ட பலர் சைவ மடம், சைவம் சார்ந்த மதக் கண்ணோட்டத்தில் பிற மத நூல்களைப் பதிப்பிக்க முயலவில்லை. *சீவக சிந்தாமணி*யை ஐயர் பதிப்பித்த பின்னர் பரசமய நூல் ஒன்றைப் பதிப்பித்துவிட்டார் என்று பலர் கடுமையாக எதிர்த்தனர்; கண்டனங்களை வெளியிட்டனர். ஆனால் ஐயரின் மனோபாவம் மதம் சார்ந்ததாக அமையவில்லை. எந்த மத நூலாக இருப்பினும் அது தமிழ் நூல் பரப்பில் சிறப்புடைய ஒன்று; அதனைத் தாம் வெளியிட்டிருக்கிறோம் என்னும் பொதுமைத் தன்மை கொண்ட பார்வை அவரிடம் செயல்பட்டது.

பல இடங்களில் தேடியும் கிடைக்காத நூல்களைப் பற்றிய வருத்தம் ஐயருக்கு இருந்தது என்பதை *என் சரித்திரத்தில்* அவர் எழுதியுள்ள பின்வரும் பகுதி உணர்த்தும்: "*சீவக சிந்தாமணி*யோடு சேர்த்து ஐம்பெருங்காப்பியங்களென்று வழங்குபவை *சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி* என்பன. இவற்றுள் *சிலப்பதிகாரம், மணிமேகலை* என்னும் இரண்டு நூல்களின் ஏட்டுப் பிரதிகள் என்னிடம் இருந்தன. *வளையாபதி, குண்டலகேசி* என்னும் இரண்டும் கிடைக்கவில்லை. **பிள்ளையவர்கள் இருந்த காலத்தில் திருவாவடுதுறை மடத்துப் புத்தகச் சாலையில் *வளையாபதி* ஏட்டுச்சுவடியை நான் பார்த்திருக்கிறேன்.** அந்தக் காலத்தில் அத்தகைய பழைய நூல்களில் எனக்குப் பற்று உண்டாகவில்லை. அதனால் அந்நூலை எடுத்துப் படிக்கவோ பாடம் கேட்கவோ சந்தர்ப்பம் நேரவில்லை. பழைய நூல்களை ஆராய வேண்டுமென்ற மனநிலை என்பால் உண்டான பிறகு தேடிப் பார்த்தபோது அந்தச் சுவடி மடத்துப் புஸ்தகசாலையில் கிடைக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் தேடியும் பெற்றிலேன். எவ்வளவோ நூல்கள் அழிந்தொழிந்து போயினவென்று தெரிந்து அவற்றிற்காக வருத்தமடைவது என் இயல்பு. 'கண்ணினால் பார்த்த சுவடி கைக்கெட்டாமற் போயிற்றே!' என்ற துயரமே மிக அதிகமாக வருத்தியது. 'கண்ணிலான் பெற்றிழந்தானெனவுழந்தான் கடுந் துயரம்' என்று கம்பர் குறிக்கும் துயரத்திற்குத்தான் அதனை ஒப்பிட வேண்டும்." (*என் சரித்திரம்* மூன்றாம் பதிப்பு, ப. 626)

அந்தக் காலகட்டத்தில் சைவ மடங்களைச் சார்ந்திருந்த புலவர்களும் அதில் பயின்றவர்களும் மதம் சார்ந்து குறுகிய பார்வை கொண்டவர்களாகவே இருந்தனர். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சுவாமிநாத தேசிகர் *இலக்கணக்கொத்து* என்னும் நூலை இயற்றியுள்ளார். அதில் சைவ நூல்களைத் தவிர பிற நூல்களைப் பயில்வோர் தம் வாழ்நாளை வீணாகக் கழிப்பவர்கள் என்று கூறுகிறார். *சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை* முதலிய நூல்கள் சிறப்பில்லாதவை என்றும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, *பதினெண் கீழ்க்கணக்கு, இராம கதை (கம்ப ராமாயணம்) நளன் கதை (நளவெண்பா நைடதம்), அரிச்சந்திரன் கதை* முதலிய இலக்கியங் களையும் *நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை அலங்காரம்* முதலிய இலக்கணங்களையும் பயில்வோர் பாற்கடலில் பிறந்து வாழ்ந்தாலும் அந்தப் பாலை விரும்பாது அழுக்குகளை விரும்பும் மீன்களைப் போன்றவர்கள் என்றும் கூறுகிறார். *தேவாரம், திருவாசகம், சிவஞான போதம், சிவஞான சித்தியார்* போன்ற நூல்களையே அவர் பால் என்று குறிப்பிடுகின்றார். உ.வே. சாமிநாதையரின் ஆசிரியரான மீனாட்சிசுந்தரம் பிள்ளை தாம் எழுதிய சிறந்த நூலான *குசேலோபாக்கியானம்* என்பதைத் தம் பெயரில் வெளியிட்டுக்கொள்ளாமல் தேவராசப் பிள்ளை பெயரில் வெளியிட்டார். சைவ மடம் சார்ந்து இயங்கும் தாம் வைணவ நூலொன்றை எழுதியதால் சைவப் பற்றுக் கொண்ட பிறரது கேள்விகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதனாலேயே அதை வேறொருவர் பெயரில் வெளியிட்டார் எனலாம்.

இத்தகைய சைவம் சார்ந்த பின்னணியிலிருந்து வந்தவரான உ.வே.சா., 1898இல் *மணிமேகலை*யைப் பதிப்பித்தார். சைவர்களால் புறக்கணிக்கப்பட்டும் கால ஓட்டத்தால் பௌத்த மரபுகள் மறக்கப்பட்டும் விட்ட சூழ்நிலையில் *மணிமேகலை*யை அவர் அச்சிட முயன்றார். அதில் பல சிக்கல்கள் அவருக்கு ஏற்பட்டன. 'சமண நூலாகிய *சிந்தாமணி*யை வெளியிட்டபோது தெரியாத செய்திகளை விளக்கச் சமண சமயத்தைச் சேர்ந்த நண்பர்கள் கிடைத்தார்கள். 'புத்த மதமே இந்தியாவில் இல்லையே, புத்த மதம் தொடர்பான செய்திகளை எங்கே தேடுவது' என்னும் குழப்பம் அவருக்கு ஏற்பட்டது. தமிழ் நூல்களில் புத்த மதம் தொடர்பான விஷயங்கள் வருமிடங்களைத் தேடித் தொகுத்தார். *நீலகேசி*யில் பௌத்த மதம் கண்டனமாக வரும் இடங்களிலிருந்தும் *வீரசோழியத்தி*லிருந்தும் சில செய்திகளை அறிந்துகொண்டார். *சிவஞான சித்தியார் பரபக்கம்* உள்ளிட்ட சைவ நூல்களில் வரும் பௌத்த மதக் கண்டனங்களிலிருந்தும் செய்திகளைத் தொகுத்தார். ஆனால் அவை போதுமானவையாக இல்லை.

மானியர் வில்லியம்ஸ், மாக்ஸ் முல்லர், ஓல்டன்பர்க், ரைஸ் டேவில் முதலியோர் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகங்களை ரங்காச்சாரியார் என்பவர் மூலம் படித்து அறிந்தார். ஆங்கில வாசிப்பு அவருக்கு இல்லை எனினும் ஆங்கில நூல்கள் பலவற்றை விலைக்கு வருவித்துக் கொடுத்து ரங்காச்சாரியாரைப் படிக்கச் சொல்லிக் கேட்டுப் பௌத்தம் தொடர்பான செய்தி களை ஐயர் அறிந்தார். அதன் பின்னரே *மணிமேகலை*யைச் சிறப்பான பதிப்பாக வெளியிட்டார்.

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களே அறிஞர்களாகவும் அவர்கள் எழுதிய நூல்களே தமிழ் நூல்களாகவும் கருதப்பட்ட காலம் அது. சைவர்கள் நூல் இயற்றுவது இயல்பான விஷயம் என்பதாகவும் மற்ற சமயத்தவர்கள் எங்கோ வெளியிலிருந்து வந்து தமிழுக்குச் சில பணி களைச் செய்வதாகவும் அக்காலத்தில் கருதப்பட்டது

படிப்பகம்

www.padippakam.com



**தமிழ்ப் புலமையின் ஊடாக நவீன உலகத்தைப் புரிந்துகொண்டு அவர் காலத்தில் வாழ்ந்த முற்போக்காளர்கள் என்று கருதப்பட்ட பல தமிழ்ப் புலவர்களைவிடவும் பல தளங்களில் மேம்பட்டுத் தம்முடைய துறையில் சிகரத்தைத் தொட முடியும் என நிரூபித்தவர் உ.வே.சாமிநாதையர்.**

அதுவும் சைவத்திற்கு எதிராக மற்ற மதத்தவர்கள் செயல்பட்டார்கள் என்னும் கருத்தும் இருந்தது. சைவர்கள் தமிழர்கள்; தமிழில் எழுதுவது இயல்பு என்னும் கருத்து வலுவாகப் பரப்பப்பட்டிருந்தது. அதனால்தான் சமணர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு, பௌத்தர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு என மற்ற மதத்தவர்களின் செயல்கள் அயலவர்கள் செய்த தொண்டாகக் காட்டப்பட்டன.

இத்தகைய சூழலில் *சிந்தாமணியையும் மணிமேகலையையும்* அந்தந்த மதங்களின் கருத்து விளக்கங்களோடு உ.வே.சா. வெளியிட்டார் என்பது சாதாரணமான விஷயம் அல்ல. மதம் கடந்த தமிழ் என்னும் பொதுப் பார்வை கொண்ட ஒருவரால் மட்டுமே இத்தகைய செயலில் ஈடுபட்டிருக்க முடியும். பல்வேறு எதிர்ப்புகள், கண்டனங்கள் ஆகியவற்றுக்கிடையே *மணிமேகலையை* ஐயர் பதிப்பித்தபோது 'புத்த சரித்தரம், பௌத்த தர்மம், பௌத்த சங்கம்' என்னும் தலைப்பில் விளக்கமாக ஒரு பகுதி எழுதினார். அது பின்னர் தனி நூலாகவும் வெளிவந்தது. பௌத்த மதம் பற்றித் தமிழில் வெளிவந்த இந்த நூலுக்கு முன்னர் வேறெந்த இந்திய மொழிகளிலும் பௌத்தம் குறித்த நூல் வந்ததில்லை. அவ்வகையில் இதுவே முதல் நூலாக விளங்குகிறது.

பதிப்புரை, ஆராய்ச்சியுரை ஆகியவற்றைச் செம்மையாக உருவாக்குவதற்காக நண்பர்கள் மூலம் ஆங்கில நூல்களை உ.வே.சா. நாடிச் சென்றார். அத்தகைய தேடல்கள் நூல் பதிப்பில் மேலை நாடுகள் பெற்றிருந்த வளர்ச்சியை, நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள உதவியிருக்கக் கூடும். அவருடைய நூல்களில் உள்ள விரிவான பதிப்பு முகவுரைகளும் பல்வேறு வகையான அகராதிகளும் பலதரப்பட்ட அடிக்குறிப்புகளும் நவீன உலகத்தைப் புரிந்துகொண்டவராக அவரை நமக்கு இனம் காட்டுகின்றன. இத்தகைய தேடல்கள், குறிப்பிட்ட புலமை மரபிற்குள்தான் சாத்தியமாகும் என்பதினின்றும் விலகி, பொதுமக்கள் மத்தியிலிருந்தும் புலமைப் புரிதல்களுக்கான விளக்கங்களைப் பெற முடியும் என்னும் எண்ணத்தை ஐயரிடம் ஊக்குவித்தன. *சிந்தாமணிப்* பதிப்பில் ஏற்பட்ட சந்தேகங்களாகிய 'சம்வசரணம்' போன்ற சொற்றொடர் வரும் பகுதிகளைச் சமணரான குணபால செட்டியாரிடமும் சமண மதம் தொடர்பான சில விஷயங்களை அவருடைய மனைவியாரிடமும் தெரிந்துகொண்டதை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். அந்த அம்மையார் இவரைப் பார்த்து 'இவர்கள் பவ்யஜீவன் போல இருக்கிறது' என்று கூறுவதைச் '*சிந்தாமணி* ஆராய்ச்சிக்கு நீ தகுதியுடையவன் என்ற யோக்கியதா பத்திரத்தை அந்த ஜைன விதுஷி அளித்ததாகவே நான் எண்ணினேன்' என்று அவர் கூறுகிறார்.

மாபெரும் புலவர்களான மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் போன்றவர்களுடைய புலமை மரபில் வந்து கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த உ.வே.சா., சாதாரணப் பெண்மணி ஒருவர் கூறிய வார்த்தைகளைப் பெரும் பேறாகக் கருதும் மனோபாவம் கொண்டிருந்தது கவனிக்கத் தக்கது. இடையன் எறிந்த மரம் ஊரைச் சுடுமோ என்னும் பாடலை அறிந்தது போன்ற பல விஷயங்களை அவர் இதுபோல் சாதாரண மக்களிடமிருந்தே அறிந்துகொண்டிருக்கிறார். இப்படி அறிய முடியும் என்பதை விளக்கி அவற்றைத் தனிக் கட்டுரைகளாக எழுதும் மனோபாவத்தை அந்தக் காலத்தில் இவரைத் தவிர யாரிடமும் காண முடியவில்லை. குறிப்பிட்ட துறையில் விளக்கம் பெறுவதற்கு அந்தத் துறை சார்ந்த புலமை மட்டும் போதாது என்பதையும் முழுச் சமூகத்தையும் விழித்துப் பார்த்தாலொழியத் தெளிவு பிறக்காது என்பதையும் புலமைக்குச் சமூகம் அயலிடமல்ல என்பதையும் இதிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம்.

தம்முடைய வாசகர்கள் பழம்பெரும் புலவர்கள் மட்டுமல்ல, பாமரப் படிப்பாளிகளும்தான் என்பதை உ.வே.சா. புரிந்துகொண்டிருந்தார். அதன் விளைவாக அவரது உரைநடை, புலமை நடையிலிருந்து பத்திரிகை நடைக்கு மாறியது. *கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்* போன்ற நூல்களை வாசிப்பதற்கு எவ்விதப் புலமையும் தேவையில்லை. கதை கேட்கும் ஆர்வமே போதும். அந்தக் கதைகள், கேட்பவரைத் தமிழ்ப் புலமையின் பரிமாணத்தை உணரும் இடத்திற்குத் தாமே கொண்டு செல்லும். புலமையாளர் ஒருவர் பத்திரிகையாளராக உருவெடுப்பதை இங்கு காண்கின்றோம். "பழையதும் புதியதும்" என்பதைத் தனது மனோபாவமாகக் கொண்ட ஒருவரால் மட்டுமே இத்தகைய செயல்களில் ஈடுபட முடியும்.

சனாதனத்தில் ஊறிய சமூகத்தில் பிறந்து, பிற்போக்குக் கலாச்சாரமாகிய ஆசார அனுஷ்டானங்களையே தன்னுடைய அன்றாட வாழ்வாகக் கொண்ட ஒரு வருணாசிரமவாதி, செம்மையான தமிழ்ப் புலமையின் ஊடாக நவீன உலகத்தைப் புரிந்துகொண்டு அவர் காலத்தில் வாழ்ந்த முற்போக்காளர்கள் என்று கருதப்பட்ட பல தமிழ்ப் புலவர்களைவிடவும் பல தளங்களில் மேம்பட்டுத் தம்முடைய துறையில் சிகரத்தைத் தொட முடியும் என நிரூபித்தவர் உ.வே. சாமிநாதையர். குறிப்பிட்ட ஒரு துறையில் இயல்பான ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் ஈடுபட்டுப் பணியாற்றும் ஒருவர், பிற்போக்குச் சிந்தனைகளை உடையவராக இருப்பினும் தம் செயல்களில் சிறப்போடு விளங்க முடியும் என்பதற்கும் அத்தகைய செயல்பாடுகள் அந்தச் சமூகத்தின் பெருமையை உயர்த்தும் என்பதற்கும் உ.வே.சா.வின் வாழ்க்கை சான்றாக விளங்குகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com


With Best Compliments from

# MACMILLAN INDIA LIMITED

## YOU CAN WIN

SHIV KHERA

INTERNATIONAL BESTSELLER NOW INDIA'S #1

## உங்களால் வெல்ல முடியும்

ஷிவ் கேரா

THE INTERNATIONAL BESTSELLER

"**WINNERS** DON'T DO DIFFERENT THINGS. THEY **DO THINGS DIFFERENTLY.**"™

English Edition: Rs. 325/-
(Revised)

"வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை. அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்". ™

Tamil Edition: Rs.225/-

**A STEP BY STEP TOOL FOR TOP ACHIEVERS**

**Macmillan India Limited**
21, Patullos Road
Chennai 600 002
Phone: 28520646 / 28526335
E-mail: milmds@macmillan.co.in
Visit: www.macmillanindia.com

Advt.


படிப்பகம்

www.padippakam.com

உரைநடை உ.வே.சா.

# உதிராத மலர்கள்

ஆ. இரா. வேங்கடாசலபதி

*(உ.வே. சாமிநாத) அய்யரவர்கள் தமிழ் இலக்கியத்தின் மெய்க்காப்பாளர் மட்டுமல்ல; பழைய சம்பிரதாயங்கள், பழைய மனப்பான்மைகள் இவற்றின் பிரதிநிதி. அரசியல் நிலைமையாலும் மற்றும் இதர சந்தர்ப்ப விசேஷங்களாலும் வேகத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகப் போக்கின் தன்மை பெற்ற தீவிர மனப்பான்மை கொண்டவர்களுக்குப் பொறுமையும் ஸ்ரீ அய்யரவர்களுக்கு அவகாசமும் இணைவது துர்லபம். ஆனால் இச்சிறு கோவைகளான 'நினைவுச் சாளரங்கள்' இவ்விருவர்களிடையிலும் ஒரு தொடர்பை ஏற்படுத்த ஒரு சிறந்த சாதனமாகும்...*

— புதுமைப்பித்தன்



**உ.வே.சா. 150**

*உ.வே.சா.வின் 'நல்லுரைக் கோவை' நூல் மதிப்புரை, தினமணி, 19 ஜூலை 1937. அன்னை இட்ட தீ (பதிப்பு: ஆ.இரா. வேங்கடாசலபதி), காலச்சுவடு பதிப்பகம், 1998, பக். 140.*

## I

1855இல் உ.வே. சாமிநாதையர் பிறந்தபொழுது தமிழகத்தில் இரயில் வண்டிகள் ஓடத் தொடங்கியிருக்கவில்லை. இருப்புப் பாதையிலேயே பெரிதும் பயணம் செய்து தமிழகமெங்கும் பழந்தமிழ் ஏடுகளைத் தேடிய உ.வே.சா., ஜப்பானிய விமானக் குண்டுத் தாக்குதலுக்கு அஞ்சி, சென்னை நகரைப் பலரும் காலி செய்து சென்றபொழுது, திருக்கழுக்குன்றத்திற்குக் குடிபெயர்ந்து 1942இல் மறைந்தார். 'முதல் விடுதலைப் போர்' எனப்படும் 1857ஆம் ஆண்டின் எழுச்சி அவர் பிறந்த இரண்டாண்டுகளுக்குப் பிறகே நிகழ்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் பிறந்த உ.வே.சா. காலமானபொழுது இந்தியர் விடுதலை பெறுவது முடிவாகிவிட்டிருந்தது. இரயிலறியாத காலம் முதல் விமானத் தாக்குதல் சாதாரணப் போர் நடவடிக்கையாக மாறிவிட்ட காலம் வரை ஒரு நெடுங்காலத்தை உ.வே.சா. நேராகப் பார்த்தறிந்தார். பத்தொன்பது, இருபது என இரண்டு நூற்றாண்டுகளின் செம்பாகமும் அவருடைய வாழ்வோடு ஒட்டி அமைந்திருந்தது.

எல்லிஸ் முதல் புதுமைப்பித்தன் வரை தமிழுக்குத் தொண்டுசெய்வோரை விரைவில் கவர்ந்துசென்ற 'அறனில் கூற்ற'த்திடமிருந்து நல்லூழாக உ.வே.சா.வை மட்டும் தமிழன்னை எப்படியோ காத்துவிட்டாள்.

எண்பத்தேழு ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த உ.வே.சா., மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பழமுறைப்படி தமிழ்க் கல்வி கற்று, திருவாவடுதுறை மடத்தில் மாணவராகவும் பின்பு ஆசிரியராகவும் அமர்ந்து, மேற்கத்தியக் கல்விமுறையில் அமைந்த கும்பகோணம் மற்றும் மாநிலக் கல்லூரிகளில் அரசுப் பணியாற்றினார். பழந்தமிழ் நூல்களைத் தேடித்தேடிப் பதிப்பிப்பதையே ஒரே நோக்கமாகக் கொண்டு, வேறு திசை திரும்பாமல் முழுமூச்சாகப் பணியாற்றினார். தமிழ்ப் பதிப்பியலின் முன்னோடியான சி.வை. தாமோதரம் பிள்ளை 1901இல் மறைந்து, 1920களில் வையாபுரிப் பிள்ளை பதிப்பாசிரியராக மலரத் தொடங்கும்வரை இத்துறையில் உ.வே.சா.வுடன் போட்டியிடுவாரில்லை. உ.வே.சா.வின் அரும்பணிக்கு



படிப்பகம்

www.padippakam.com

உரிய அங்கீகாரம் இயல்பாக வாய்த்தது. வடமொழி அறிஞர்களுக்கு மட்டுமே பெரிதும் வழங்கப்பட்ட 'மகாமகோபாத்யாய' (பெரும்பேராசிரியர்) பட்டத்தைத் 'தமிழ்ச் செவ்வியறியாத' ஆங்கிலேயரிடமிருந்து தமிழ் மட்டுமே அறிந்த உ.வே.சா. பெற்றார். (இப்பட்டம் பெற்ற மற்றொரு தமிழறிஞரான பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் வடமொழியிலும் வல்லவர்). இதனால் பாரதியின் வாழ்த்தும் கிடைத்தது (இதன் சிறப்பை அவர் உணர்ந்திருந்தாரா என்பது வேறு). சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு மதிப்புறு டாக்டர் பட்டத்தை 1932இல் வழங்கியது (யாப்பியல் பற்றி ஆய்வேடு எழுதி முதன்முதலில் தமிழில் டாக்டர் பட்டத்தை அ. சிதம்பரநாதன் செட்டியார் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவ்வாறு முதலில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர் மு.வ. படித்துப் பெறும் இப்பட்டங் களெல்லாம் உ.வே.சா.வின் மறைவுக்குப் பிறகே இயல்வ தாயின. மேலும், 1970கள் வரையும்கூடத் தமிழில் பிஎச்.டி. பட்டம் பெறுவதற்கு ஆங்கிலத்தில்தான் ஆய்வேடு அமைய வேண்டியிருந்தது). அரசாங்கப் பட்டங்கள் ஒருபுறமிருக்க, காஞ்சி மடம் இவருக்கு 'தாக்ஷிணாத்ய கலாநிதி' (தென்கலைவாணர்) என்ற பட்டம் வழங்கியது. காந்தியடிகளின் தலைமையில் உரையாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. இரவீந்திரநாத தாகூர் இவரை நேரில் வந்து சந்தித்ததாக வும் சொல்வார்கள். அவருடைய எண்பதாண்டு நிறைவு தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டதோடு, ஓர் அரிய மலரும் வெளியிடப்பட்டது. மறைந்த பின்பு சிலையும் அமைக்கப்பட்டது.

நிறைவாழ்வு வாழ்ந்து, தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய உ.வே.சா.வுக்கு, ஒரு தமிழறிஞர் நினைத்தும் பார்க்க முடியாத அனைத்துப் பெருமை களும் தம் வாழ்நாளிலேயே அடையும் அரிய பேறும் வாய்த்திருந்தது. எவரின் ஆற்றலையும் முழு மலர்ச்சி பெறவிடாத தமிழ்ச் சூழலில் உ.வே.சா என்னும் ஆளுமையின் விகசிப்பு எவ்வளவு அரிதானது என்று சொல்ல வேண்டியதில்லை.

அரிய தமிழ் நூல்களைத் தேடியெடுத்துச் செம்மை யாகப் பதிப்பித்த உ.வே.சா. எழுதிய 'என் சரித்திரம்' நூலுக்கு நவீனத் தமிழில் ஒரு தனி இடம் உண்டு. இந்த நிறைவுபெறாத தன்வரலாறு தவிர, இரண்டா யிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட சுயசரிதைத் தன்மையி லான ஏறத்தாழ நூற்றைம்பது கட்டுரைகளும் ஐந்து வாழ்க்கை வரலாறுகளும் உ.வே.சா. எழுதினார். நவீனத் தமிழ்ச் சமூகத்தின் உருவாக்கத்தைப் புரிந்துகொள்ள உ.வே.சா.வின் இத்தன்மையிலான எழுத்துகள் மிக முக்கியமான சான்றாதாரங்கள் என்பதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. கணிசமான அளவுக்கு இந்த வகையான, சுயசரிதைத் தன்மையிலமைந்த கட்டுரைகள் எழுதுவதற்கு உ.வே.சா.வின் நீண்ட வாழ்நாள் அனுபவங்களும் அவருக்குக் கிடைத்த சமகால அங்கீகாரமும் முக்கியக் காரணிகளாக அமைந்தன.

கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வுபெற்று, பதிப்புப் பணியினையே முழுநேர வேலையாக உ.வே.சா. கைக்கொண்ட காலகட்டத்தில்தான் தமிழகத்தி பத்திரிகைகள் வெகுசனத்தன்மை அடைந்து, விரிவா சுற்றெண் பெற்றுவரலாயின. பத்தாயிரக் கணக்கி தமிழ் இதழ்கள் விற்பனையானது 1920களில்தா இவ்விரிவாக்கத்தோடு, தொழில்நுட்ப வளர்ச்சியா 'ஆப்டோன்' அச்சுக்கட்டைகளும் பரவலாகி, மலிவா பொழுது, இந்தப் பத்திரிகைகள் தீபாவளி, பொங்க மற்றும் ஆண்டு மலர்கள் வெளியிடலாயின. கௌர மான பிரமுகர்களிடம் கட்டுரை பெற்று வெளியி வதும் பெருவழக்கானது. இந்தச் சூழலில் உ.வே.சா.வி கட்டுரை இடம்பெறாத சிறப்பு மலர்களே இல்ல யென்ற நிலை 1920களின் பிற்பகுதியிலிருந்து ஏற்பட் விட்டது. 'ஆனந்த விகடன்', 'தினமணி', 'சுதேசமித்திரன் 'ஜெயபாரதி', 'ஹனுமான்', 'தனவணிகன்' முதலா இதழ்களின் மலர்களில் உ.வே.சா.வின் கட்டுரைக வெளிவந்தன. உ.வே.சா.வின் மாணவர் எனத்தக் பா. தாவூத் ஷா தம்முடைய 'தாருல் இஸ்லாம் மலரில் கட்டுரை பெற்று வெளியிட்டார். 1932இ தொடங்கப்பட்ட 'கலைமகள்' ஒவ்வோர் இதழிலு உ.வேசா.வின் எழுத்தையோ பதிப்பையோ தாங்கிவரு தெனக் கங்கணம் கட்டியிருந்ததாகத் தோன்றுகிறது டி.கே.சி., கல்கி ஆகிய இருவரும் நேரில் சென்று வற்புறுத்தியதாலேயே உ.வே.சா. 1940 முதல் 'ஆனந் விகட'னில் தம் சுய சரிதையை எழுதத் தலைப்பட்டா மேலும் அக்காலத்தில் பாடநூல்களாக அங்கீகரிக்க பட்ட கட்டுரை நூல்களிலும் உ.வே.சா.வின் கட்டுரை கள் மறுபதிப்பிடப்பட்டு வந்தன. 'மீனாட்சிசுந்தர பிள்ளை சரித்திரம்' தவிரப் பிற உரைநடை நூல்கள் அனைத்தும் பத்திரிகைகளிலேயேதான் முதலில் வெ யாயின என்பதையும் மறப்பதற்கில்லை. மரபுவழி பட்ட தமிழ்ப் பெரும் புலவராக விளங்கிய ஒருவ வெகுசனம் நோக்கி எழுதத் தலைப்பட்டதன் பொருண்மைப் பின்னணி இது.

உ.வே.சா.வின் உரைநடையைப் பற்றிப் பேராசிரிய வையாபுரிப் பிள்ளை ஐயப்பட்டிருக்கிறார்.

> இப்பிற்காலத்தில் பல வசன நூல்களும் ஐயரவ களால் வெளியிடப் பெற்றுள்ளன. இவைகள் இவ நெடுங்காலமாகத் திரட்டிவைத்துள்ள குறிப்பு களினின்றும் எழுதப்பட்டவை. இவர் எழுதியது என நாம் நன்கறிந்துள்ள உரைநடைக்கும் இவ்வசன நூல்களிலுள்ள உரைநடைக்கும் பெரிதும் வேறு பாடுள்ளது. ஆங்கில மணமும் இளமை எழுச்சியு கலையுணர்ச்சியும் இவற்றில் பெரிதும் காண படுகின்றன. ஆனால் இவற்றிற் காணும் பொருள் அனைத்தும் ஐயர்க்கே உரியன என்பதில் சிறிது ஐயப்பாடில்லை.
>
> (தமிழ்ச் சுடர் மணிகள், 1995, பக். 188

உ.வே.சா.வின் பிற்கால உரைநடையை அவரது மாணவரான கி.வா. ஜகந்நாதன் செப்பம் செய்தார் என்றும் செவிவழிச் செய்திகள் உண்டு. சூழலின் தாக்கத்தால் உ.வே.சா.வின் மொழிநடை மாற்றம் பெற்றிருக்கக்கூடும் என்பதற்கு இடமே தராத மதிப்பீடு வையாபுரிப்பிள்ளையினுடையது. *மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்* நீங்கலாகப் பிற கட்டுரைகள் எல்லாவற்றின் நீர்மையும் அமைதியும் ஒன்றே என்பது

படிப்பகம்

www.padippakam.com




வெள்ளிடைமலை. பதினைந்தாண்டுக் கால இடைவெளியில் எழுதப்பெற்ற நூற்றுக்கு மேற்பட்ட கட்ரைகளை ஒரே சீராக வேறொருவர் 'மேற்பார்த்து'க் கொடுத்திருக்க இயலும் எனத் தோன்றவில்லை.

## II

உ.வே.சா.வின் உரைநடை நூல்களில் முதலிடம் பெறுபவை அவர் எழுதிய வாழ்க்கை வரலாறுகளே. 1933–34இல் இரு பகுதிகளாக அவர் எழுதி வெளியிட்ட 'ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்' பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியச் சூழல் பற்றிய மிக விரிவான பதிவாகும். மேலைக் கல்வி கால்கொள்வதற்கு முன்பான தமிழ்க் கல்வி, சைவ மடங்களின் நிலை, இலக்கிய உற்பத்திக்கும் புரவலர்களுக்குமான உறவு, மரபுவழிப் புலவர்களின் உருவாக்கமும் செயல்பாடும், இலக்கிய வகைமைகள் முதலானவற்றைப் புரிந்துகொள்வதற்குரிய அரிய ஆவணம் இது.

புலவர்கள் பற்றிய நம்பகமான வரலாறுகள் இல்லை என்பதை உணர்ந்து, அந்த ஓர்மையோடு தம் ஆசிரியரின் வரலாற்றைப் பயபக்தியுடன் உ.வே.சா. எழுதியிருக்கிறார். ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுத் தேடலின் விளைவான நூல் இது. 'நான் அறிந்தனபோக வேறு செய்திகள் கிடைக்கலாமென எண்ணிப் பிள்ளையவர்களோடு பழகிய பலர்பாற் சென்று சென்று விசாரித்தேன்; இவருடைய கடிதங்கள், தனிப்பாடல்கள், நூல்கள் முதலியன கிடைக்குமென்று அறிந்த இடங்களுக்கெல்லாம் சென்று சென்று தேடினேன்...' என்று அவர் கூறியிருப்பதற்கிணங்க, இவ்வரலாற்றில் பல கடிதங்களும் தனிச் செய்யுள்களும் சிறப்புப் பாயிரங்களும் இருப்பதைக் காணலாம். தாம் இத்தகைய வரலாறு ஒன்று எழுத இருப்பதை 1900இலும் 1931இலுமாக இருமுறை 'சுதேசமித்திரன்' நாளிதழில் விளம்பரம் செய்து அவர் தகவல்களை வேண்டியிருக்கிறார். கிடைத்ததைப் பதிவுசெய்ததோடு, கிடைக்காததையும் அவர் பதிவுசெய்திருப்பது முக்கியமானது.

இவர் காலத்தில் படம் எடுக்கும் கருவிகள் இருந்தும் இவரோடு பழகியவர்களுள் ஒருவரேனும் இவருடைய படத்தை எடுத்துவைக்க முயலாதது வருத்தத்தை விளைவிக்கிறது... இக்கவிச் சக்ரவர்த்தியினுடைய பூத உடம்பின் படம் இல்லையே என்னும் வருத்தம் இருந்தாலும் இவருடைய புகழுடம்பின் படமாக நூல்களும் செய்யுட்கள் முதலியனவும் இருக்கின்றனவென்றெண்ணி ஒருவகையாக ஆறுதல் அடைகின்றேன்.

இச்செய்தியை, இவ்வரலாற்றின் இரண்டாம் பாகத்திலும் உ.வே.சா. குறித்திருக்கிறார் (இப்பொழுது உலவும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் படம் எப்படிக் கிடைத்தது என்பது தனியே ஆராய்வதற்குரியது).

நூலாகவே எழுதி வெளியிடப்பட்ட மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரலாறு தவிர, உ.வே.சா.வின் மற்றொரு ஆசிரியர் எனத்தக்க தியாகராச செட்டியாரின் வரலாற்றையும் கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மகா வைத்தியநாதையர் ஆகிய இசை விற்பன்னர்களின் வரலாற்றையும் 'கலைமக'ளில் தொடராக எழுதிப் பின்பு தனி நூல்களாகவும் வெளியிட்டார். இவ்வாறு தனி வாழ்க்கை வரலாற்று நூல்களாக எழுதியதோடு, தமக்குத் தொடர்புடைய சில பெருமக்களின் வரலாற்றையும் கட்டுரை வடிவில் எழுதியுள்ளார். பூண்டி அரங்கநாத முதலியார், வி. கிருஷ்ணசாமி ஐயர், மணி ஐயர், வேங்கடராம பாகவதர், அனந்தராம ஐயர், பெரிய வைத்தியநாதையர் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் இத்தகையவை. மேலும், குமரகுருபரர், சிவஞான முனிவர், முத்துசாமி தீக்ஷிதர் போன்ற அவர் காலத்துக்கு முந்திய பெருமக்களைப் பற்றிய வழக்காறுகளையும் தொகுத்து இவர் எழுதியிருக்கிறார். இன்றைக்கு இரு நூற்றாண்டுக்கும் மேற்பட்டவரான சிவஞான முனிவர் இவர் காலத்திற்கு இரண்டு மூன்று தலைமுறைகளே முன்னவர் என்பதைக் கருதும்போது, செவிவழிச் செய்திகள் கூடுதல் நம்பகத்தன்மை உடையவை எனக் கொள்ள இடமுண்டு. 'எங்கள் பாவம் எங்கள் பாவம் எங்கள் பாவம் ஈசனே' என்னும் பாடல் எழுந்த கதை அக்கால மடங்கள் பற்றிய அரிய பதிவாகும்.

'இசையில் அதிகப் பழக்கம் வைத்துக்கொண்டால் இலக்கண இலக்கியத்தில் தீவிரமாகப் புத்தி செல்லாது' என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளை அறிவுறுத்தியவுடன் கோபாலகிருஷ்ண பாரதியிடம் இசை பயின்றுவந்ததை உ.வே.சா. கைவிட்டாரெனினும், அவர் வாழ்நாள் முழுவதும் இசை ஈடுபாடு அவரை விடவில்லை. அவர் எழுத்து நெடுகவும் இசையின் அதிர்வுகளைக் கேட்கலாம். இசை சார்ந்த உருவகங்கள் அவர் கட்டுரைகளில் இறைந்துகிடக்கின்றன. மொழி அமைதியையும் சுருதி சுத்தத்தையும் இணைத்துக்காட்டும் 'எது தமிழ்?' கட்டுரை இங்கு நினைக்கத்தக்கது. கர்நாடக இசையாகக் கட்டமைக்கப்படுவதற்கு முன்பு தமிழகத்தில் சாஸ்திரிய சங்கீதம் பற்றிய விரிவான பதிவுகளை உ.வே. சாமிநாதையரிடம் அன்றி வேறு யாரிடமும் காணவியலும் என்று சொல்ல முடியாது.

பலப்பல புராணங்களைப் பாடியவரிடம் பாடம் பயின்ற உ.வே.சா. பல்வேறு ஊர்களைப் பற்றி எழுதிய கட்டுரைகளும் சுவையானவை. புராணம் சார்ந்த தலச்சிறப்புகளோடு வேறு பல செய்திகளையும் தொகுத்துச் சொல்வது ஊர்கள் பற்றிய உ.வே.சா. கட்டுரைகளின் பாங்காகும். இந்த வகையில் அரியிலூர், உடையார்பாளையம், திருமலைராயன் பட்டிணம், கும்பகோணம், பெரும்புலியூர் ஆகியவற்றின் பதிவுகள் அமைந்திருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

அடுத்து, கர்ண பரம்பரையாக (செவிவழியாக) வழங்கிவந்த கதைகளையும் உ.வே.சா. சுவைபட விவரிக்கிறார். 'பொன் காத்த கிழவி', 'அன்னம் படைத்த வயல்', 'மல்லரை வென்ற மாங்குடியர்', 'அம்பலப்புளி' போன்றவை இத்தன்மையானவை. சுவையான கதைப் போக்குடையவையாக இருக்கும் இந்த விவரிப்புகளைப் போலவே தம்முடைய வாழ்வில் நிகழ்ந்தவற்றையும் உ.வே.சா. கட்டுரைப்படுத்தியிருக்கிறார். 'அழைத்த காரணம்', 'அப்படிச் சொல்லலாமா?' முதலான கட்டுரைகள் இதற்கு எடுத்துக்காட்டுகள். 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்ற விழுமிய வரிகளைக் கொண்ட 'தமிழ் விடு தூது' நூலின் ஓலைப்பிரதி எப்படிக் கிடைத்தது என்று உ.வே.சா. விவரிக்கும் 'இன்னும் அறியேன்' கட்டுரை இத்தகைய விவரிப்புக்குச் சிறந்த உதாரணம். முற்காலத்துத் தனிப்பாடல்கள் சில எழுந்த சூழலை விவரிக்கும் முகமாகவும் சில கட்டுரைகள் அமைந்துள்ளன.

இந்தக் கட்டுரைகளெல்லாம் அக்கால வெகுசனப் பத்திரிகைகளிலேயே பெரிதும் வெளிவந்துள்ளன. 'வியாசம்', 'வசன காவியம்' என்று பலவாறாகச் சுட்டப்பட்டுவந்த ஓர் இலக்கிய வகைமை, 'கட்டுரை' என்னும் வடிவமெடுத்த காலம் இது. தமிழில் சிறுகதை வடிவம் நிலைபெற்ற காலமும் இதுவே. இலக்கியக் கட்டுரை மற்றும் சிறுகதைக்கு நெருக்கமான ஒரு சொல்முறையினையே உ.வே.சா. தன் கட்டுரைகளில் கையாண்டுள்ளார். கட்டுரைத் தலைப்புகளே ஓர் ஈர்ப்பைத் தருவனவாக, வாசகரைப் பிரதிக்குள் இழுப்பனவாக அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. கட்டுரையின் மையமான ஒரு தொடரையே மேற்கோள் குறிக்குள் கட்டுரைத் தலைப்பாக உ.வே.சா. பல முறை அமைத்திருக்கிறார். இலக்கியச் செழுமையோடு அமையும் தலைப்புகளும் பல உள்ளன. நிலவொளியில் முல்லைப்பாட்டை இனங்கண்டதை விவரிக்கும், முரண் போல் தோன்றும் 'நிலவில் மலர்ந்த முல்லை' என்னும் தலைப்பும் பூக்களை நிரல்படுத்தும் குறிஞ்சிப் பாட்டின் வரிகளைக் கண்டெடுத்ததைப் பற்றிய 'உதிர்ந்த மலர்கள்' என்னும் தலைப்பும் எளிதில் மறக்கத் தக்கனவல்ல. 'கிர்ர்ர்ரனி', 'டிங்கினானே!' என்னும் தலைப்புகளை ஒரு முதுபெரும் அறிஞர் கையாளும்பொழுது வாசகர்கள் உடனே அதில் கவனம் செலுத்தினால் பிழை சொல்ல முடியுமா?

உ.வே.சா.வின் நுவல்முறை நாடகத் தன்மையோடு அமைந்திருப்பதும் அவர் கட்டுரைகளின் வெற்றிக்கு ஒரு காரணம். பொருத்தமும் சுவையும் மிக்க கட்டுரைத் தலைப்பு, பெரும்பாலும் ஆவலைத் தூண்டும் செய்தியுடனோ பின்னணிப் பீடிகையுடனோ கூடிய தொடக்கத்திற்கு வாசகரை இட்டுச் செல்கிறது. மெல்லக் கதையின் முடிச்சவிழ்ந்து, முத்தாய்ப்புடன் முடிகின்றது. கட்டுரையை எங்கே முடிக்க வேண்டும் என்று பெரும்பாலும் தெரிந்தவராகவே உ.வே.சா. இருக்கிறார்.

தமிழ்ப் புலவர்களுக்கு நகைச்சுவை உணர்வு இல்லை என்பவர்கள். உ.வே.சா.விடம் அமர்த்தலான நகைச்சுவை கைவரும் 'பங்கா இழுத்த பாவலர்' ஒரு புகழ்பெற்ற உதாரணம்.

**நவீனத் தமிழ்ச் சமூகத்தி உருவாக்கத்தைப் புரிந்துகொள் உ.வே.சா.வின் இத்தன்மையிலா எழுத்துகள் மிக முக்கியமா சான்றாதாரங்கள். சுயசரிதை தன்மையிலமைந்த கட்டுரைக எழுதுவதற்கு உ.வே.சா.வின் நீண் வாழ்நாள் அனுபவங்களும் அவருக்கு கிடைத்த சமகால அங்கீகாரமும் முக்கிய காரணிகளாக அமைந்தன**

கட்டுரைகளின் ஈர்ப்புக்கு மற்றொரு காரண அவற்றில் உ.வே.சா. 'தான் கலந்து' இருப்ப உ.வே.சா.வின் சாதனைகளை மனத்தில் இருத்தி படிக்கும் வாசகருக்கு, அவருடைய கட்டுரைகள் ப செய்திகளைத் தெளிவுபடுத்துவதோடு, கட்டுை களுக்குச் செறிவையும் ஆழத்தையும் கனத்தையு நம்பகத்தன்மையையும் தருகின்றன. நூலறிவே புலமை என்று கருதப்படும் மரபில் அதனைக் கடந்து கள ஆய்வைச் செய்தவர் உ.வே.சா. அதன் பதிவுகள் சுவையான கட்டுரைகளாகியிருக்கின்றன. 'கும்மாயம 'செண்டலங்காரர்', 'இடையன் எறிந்த மரம்', 'கள்ளனு புலியும்' போன்ற கதைக்கட்டுரைகள் உவேசா. என்னு பெரும் பதிப்பாசிரியர் எழுதியதனாலேயே முழு பொருள் பெறுகின்றன.

செவிவழிச் செய்திகளும் கள ஆய்வுச் செய்திகளு உ.வே.சா.வுக்குத் தற்செயலாக வாய்க்கவில்லை. மிகுந் ஓர்மையுடனும் தன்னுணர்வுடனுமே அவர் இவற்றை தொகுத்துள்ளார்.

> கும்பகோணத்தில் நான் இருந்த காலத்தி ஒரு முறை திருவையாற்றில் நடைபெறும் ஸப் ஸ்தான உத்ஸவத்திற்குப் போக வேண்டுமென் விருப்பம் எனக்கு உண்டாயிற்று... ஸப்தஸ்தான திற்கு முதல்நாள் நான் புறப்பட்டேன். ஐய பேட்டை என்னும் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி காவிரிக்கரை மார்க்கமாகச் சென்றேன். இடையிலே யுள்ள ஸ்தலங்களில் சில நேரம் தங்கி அந் அந்த ஸ்தல சம்பந்தமான விஷயங்களை விசாரித்து நன்கு தெரிந்துகொண்டேன். எந்த ஊருக்கு போனாலும் அவ்வூரில் இருந்த புலவர்கள் பிரபுக்கள முதலியவர்கள் வரலாறுகளையும் சரித்திரம புராணம் என்பவற்றையும் கர்ண பரம்பரை செய்திகளையும் விசாரித்துத் தொகுப்பது வழக்கம இதனால் பல நாளாகத் தெரியாமலிருந்த அரிய விஷயங்கள் மிக எளிதில் விளங்கியதுண்டு.
>
> *(நல்லுரைக் கோவை II*

உ.வே.சா.வின் கட்டுரைகளில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுத் தமிழகச் சமூகமும் அச்சமூகத்தின் மாற்றங்களும் பதிவாகி, முக்கிய வரலாற்று ஆதாரங்களாக விளங்குகின்றன. முதல் பத்தியில் விவரித்ததுபோல் உ.வே.சா.வுக்கு அமைந்த வாழ்வு வளம், காலம், ஆற்றல் ஆகியவை வேறு எவருக்கும


படிப்பகம்

www.padippakam.com

**..வே.சா.வின் நுவல்முறை நாடகத் தன்மையோடு அமைந்திருப்பதும் அவர் கட்டுரைகளின் வெற்றிக்கு ஒரு காரணம். பொருத்தமும் சுவையும் மிக்க கட்டுரைத் தலைப்பு, பெரும்பாலும் ஆவலைத் தூண்டும் செய்தியுடனோ, பின்னணிப் பீடிகையுடனோ கூடிய தொடக்கத்திற்கு வாசகரை இட்டுச் செல்கிறது.**

வாய்க்கவில்லை. உ.வே.சா. தம் சுயசரிதையை எழுதத் தயங்கியபொழுது டி.கே.சி.யும் கல்கியும், 'தங்களுடைய சுயசரித்திரம் என்றால், அது தமிழ்நாட்டின் எண்பது வருஷத்துச் சரித்திரம் அல்லவா இருக்கும்?' என்று வற்புறுத்தி, 'ஆனந்த விகட'னில் எழுதவைத்தது இதனால்தான்.

இந்த நோக்கமே உ.வே.சா.வின் கட்டுரைகளில் ஓர்மையோடும் ஓர்மையில்லாமலும் அடியோட்டமாக அமைந்திருக்கிறது. நவீனத்துவத்தை எதிர்கொண்ட இந்திய/தமிழ் மனம், நாம் எதையோ இழந்துவிட்டோம் இழந்துவருகிறோம் என்னும் கவலையினையும் அச்சத்தையும் கொண்டது. உ.வே.சாவின் பதிவுகள் இவ்வுணர்வுகளைப் பொதிந்துவைத்திருப்பதோடு, அவ்வுணர்வுகளுக்குத் தீனியும் போடுகின்றன. (கட்டுரைகளில் இடம்பெறும் அடிக்குறிப்புகள் வழக்கிழந்துபோன சொற்களையும் தொடர்களையும் ஒழுகலாறுகளையும் விளக்குவனவாக இருப்பதும் இதனால்தான்.). இதன் காரணமாகவே அவருடைய எழுத்துகளிலெல்லாம் 'அந்தக் காலம் X இந்தக் காலம்' என்னும் இருமை தொடர்ந்து தொழிற்படுவதைக் காண முடிகின்றது.

'பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இளம் பருவத்திலேயே கல்யாணம் செய்துவிடும் வழக்கம் அக்காலத்தில் அதிகமாகப் பரவியிருந்தது.' (*என் சரித்திரம், 1990, பக். 113*)

'அக்காலத்தில் நந்தன் சரித்திரம் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது.' (*பக். 116*)

'பதினாறு வயசுடைய ஒருவன் விவாகமாகாமல் பிரமசாரியாக இருந்தால் ஏதோ பெரிய குறையுடையவனைப் போல அக்காலத்தவர் எண்ணினார்கள்.' (*பக். 121*)

'காலையில் காப்பி என்பது அக்காலத்தினர் அறியாதது.' (*பக். 125*)

'கல்யாணப் பெண்ணைக் கல்யாணத்திற்கு முன்பு பிள்ளை பார்ப்பதென்ற வழக்கம் அக்காலத்தில் பெரும்பாலும் இல்லை.' (*பக். 126*)

இப்படிப் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். 'அக்காலமும் இக்காலமும்' வேறுவேறு என்பதில் உ.வே.சாவுக்குச் சிறிதும் ஐயமில்லை. அவருடைய சார்பு எதன் பக்கம் என்றும் சொல்ல வேண்டியதில்லை. இழந்தவை பெரியவை, விழுமியவை, சிறந்தவை. அவற்றைப் பதிவாக்கும் முயற்சியே உ.வே.சா. கட்டுரைகள். இக்காரணம் பற்றியே, தம் மனைவியின் பெயரை (மதுராம்பிகை) ஒரே ஒருமுறை மட்டுமே குறிப்பிடும் (அதனையும் பொருளடைவில் தவிர்த்துவிட்டிருக்கிறார்கள் 'என் சரித்திர'த்தை வெளியிட்டவர்கள்!) உ.வே.சா., தம் திருமண நிகழ்ச்சியை, ஓர் இனவரைவியலாளரே தோற்றுவிடும் அளவுக்கு, ஓர் இயல் முழுவதும் விவரிக்கிறார்.

உ.வே.சா.வின் 'அக்காலம்' ஒரு பொற்காலமாகும். தமது பூர்வீக ஊரான உத்தமதானபுரம் பற்றிய அவரது விவரிப்பு வருமாறு:

> உத்தமதானபுரத்தில் தச்சர், கொல்லர், தட்டார், வலைஞர், நாவிதர், வண்ணார் என்பவர்களுக்கும் மானியங்களுண்டு. அவர்கள் அவற்றை அனுபவித்துக்கொண்டு தத்தம் வேலைகளை ஒழுங்காகப் பார்த்துவந்தார்கள்...
>
> மூப்பச் சாதியார் முதலிய குடியானவர்களிற் பலர் அந்தணர்களுடைய நிலங்களைக் கவனித்துக் கொண்டு அவர்களுடைய மனைக் கட்டுகளில் குடியிருந்துவந்தனர். அவர்கள் அந்த நிலங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்துவந்தார்கள். தம் யஜமானர் வீடுகளில் அவசியமான வேலைகளையும் குறைவின்றிச் செய்துவந்தனர். இவற்றிற்காக அவர்களுக்கு அந்தணர்கள் எல்லா வசதிகளையும் கொடுத்து ஒரு கவலையும் ஏற்படாமல் பார்த்துவந்தார்கள். அதனால் அவர்கள் அடைந்த திருப்தி பெரிதாக இருந்தது. அவர்கள் வஞ்சமின்றிப் பாடுபட்டனர். நிலத்தின் சொந்தக்காரரைவிட அவர்களுக்கே பூமியில் சிரத்தை அதிகமாக இருந்தது. இருசாராரும் மனவொற்றுமையும் அன்பும் உடையவர்களாகி ஒருவருக்கொருவர் இன்றியமையாத நிலையில் வாழ்ந்துவந்தனர்.
>
> (*என் சரித்திரம், ப. 6—7*)

சமூக முரண்பாடுகள் பற்றிய பாலபாடங்களுக்கு முற்றிலும் மாறான இவ்வகைச் சித்திரிப்புகளே உ.வே.சா.வின் 'அக்காலம்' என்பதைக் கட்டமைக்கின்றன. பெரிதும் சமூகத்தின் மேலடுக்குகளையே சார்ந்த தமிழ் வாசக மனத்திற்கு இது மிக உவப்பானதாக இருந்திருக்கின்றது.

தமிழ்ச் சமூக வரலாற்றுக்கு உ.வே.சா.வின் சித்தரிப்புகளை ஆதாரமாகக் கொள்வது பற்றிச் சில விமரிசனங்கள் அண்மையில் எழுந்துள்ளன. உ.வே.சா.வின் சித்தரிப்புகளை மெய்ம்மையின் நேர்ப் பிரதிபலிப்பாகக் கொண்டால் சிக்கல்தான். எந்தவோர் ஆதாரத்தையும் அதன் சூழலில் பொருத்தி, அதன் சொல்லாடலின் இலக்கணங்களுக்கேற்பவே பயன்படுத்த வேண்டும். உ.வே.சா.வின் நோக்கங்களுக்கு மாறாக, பிரதிலோமமாக (*reading against the grain*) வாசித்தால் மிக அதிக வரலாற்றுப் பயன் உண்டு.

தம் மனைவியின் பெயரை ஒரே ஒரு முறை மட்டுமே குறிப்பிடும் உ.வே.சா., தம் தந்தையைப் பலப்பல இடங்களில் குறிப்பிடுகிறார். உ.வே.சா.வின் 'சுயம்' எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்பதை இதன் மூலம் ஆய்வது பயன் தரும். மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரத்தில் அவருடைய மனைவியை

www.padippakam.com

இருமுறை மட்டுமே குறிப்பிடும் அதே உ.வே.சா.தான் வீட்டைவிட்டு வெளியே வராத ஒரு சமண மூதாட்டியிடம், வாயிலிலிருந்தவாறே 'பவ்ய ஜீவன்' என்னும் சமணக் கருத்தாக்கத்தின் தத்துவ விளக்கத்தைப் பெறுவதையும் பதிவுசெய்கிறார்.

'ஹரிதத்தரின் சிவபக்தி' என்னும் கட்டுரையில் ஒரு நிகழ்ச்சியை உ.வே.சா. பதிவுசெய்கிறார் (நினைவு மஞ்சரி II). ஒரு நாள் திருவிடைமருதூர் ஆலயத்திற்குள் நுழையும்பொழுது,

> ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. 'இல்லை; இனிமேல் இல்லை' என்று அவள் சொல்லிச் சொல்லி அழுதாள். . . ஆலய வாசலின் ஒரு பக்கத்தில் அந்த ஆலயத்தைச் சேர்ந்த உருத்திர கணிகையர் சிலரை ஆலய மணியகாரர் தண்டித்துக் கொண்டிருந்தார். முதலில் ஒருத்திக்கு அண்ணாந்தாள் பூட்டி அவள் முதுகில் கல்லை ஏற்றிக் கையில் பிரம்புடன் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார். கணிகையோ தண்டனையைத் தாங்க முடியாமல் கதறினாள்.

விசாரித்ததில், கோயில் கைங்கர்யங்களில் தவறியதற்காகத் தேவரடியாள்களுக்குத் தண்டனை தரப்படுவதை அறிந்தார். அதைக் கேட்டதும் ஹரிதத்தர் விம்பி விம்பி அழத்தொடங்கிவிட்டார். சுற்றியிருந்தோர், அத்தாசிகள் கடமை தவறியதற்கு ஹரிதத்தரே காரணம் என்று நினைத்து, எந்தப் புற்றில் எ[...] பாம்பு இருக்குமோ என்கின்றனர். பிறகுதா[...] 'பரமேசுவரனது கைங்கரியத்தைச் சரியாகச் செய்[...] வில்லை என்று நம்மையும் தண்டித்து ஈசுவர கை[...] கரியத்திலிருந்து மாறாமல் இருக்கும்படி செய்பவர்க[...] இல்லையே என்றுதான் துக்கித்தேன்' என்று அ[...] விளக்குகிறார். ஹரிதத்தரின் சிவபக்திக்குச் சான்ற[...] உ.வே.சா. கட்டுரையில் அக்காலத்தில் கோயி[...] தேவரடியார்கள் நடத்தப்பட்ட முறையும் சித்ரவதை[...] கருவிகளும் தண்டனையும் அதைக் கோயில் பக்தர்க[...] அன்றாட வாடிக்கையாகச் சலனமின்றி எடுத்து[...] கொண்டதையும் பார்க்கலாம்.

இவ்வாறு உ.வே.சா.வின் கட்டுரைகளை மீ[...] நோக்குவது பயன்தரும். அவர் கூறுவதை அப்படியே[...] ஏற்றுக்கொள்ளத் தேவையுமில்லை. முழுநிலவி[...] களங்கம்போல் சி.வை. தாமோதரம் பிள்ளை பற்றி[...] பழிப்புரைகளும் 'என் சரித்திர'த்திலும் வே[...] இரண்டொரு கட்டுரைகளிலும் உண்டு என்பதையு[...] மறந்துவிடுவதற்கில்லை. ஆயினும் தமிழ்ப் பயிற்சியு[...] வரலாற்றுணர்வும் மிகுதிப்படுவதற்கு உ.வே.சா.வி[...] உரைநடை தக்க கருவி என்பதில் இரு கருத்துகளுக்[...] இடமில்லை. உ.வே. சாமிநாதையர் போற்றுதலுக்குரி[...] பதிப்பாசிரியர் என்பதோடு கருத்தில் கொள்ளத்தக்[...] உரைநடையாசிரியரும் ஆவார்.


*With Best Compliments from*

Phone:
25223876
25227169
25227121
9385223876

M/s Dhanalakshmi Papers
(Paper Merchants)

194, Anna Pillai Street
Shop No. 2, Ground Floor
Chennai - 600 001.

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com

# உ.வே.சா.வும் நாட்டார் வழக்காறுகளும்

ஆ. சிவசுப்பிரமணியன்



உ.வே.சா. 150

**ச**ங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் எனப் பல தரப்பட்ட செவ்விலக்கியங்களைப் பதிப்பித்தவர் உ.வே.சா. தாம் பதிப்பிக்கும் நூல்களில் இடம்பெறும் அரிய சொற்களின் பொருளை அறிந்துகொள்ள மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டவர். *சீவக சிந்தாமணியைப்* பதிப்பிக்கும்போது சமண சமயப் பெரியோர்களை அணுகி, சீவக சிந்தாமணியில் இடம் பெறும் சமயம் சார்ந்த கலைச்சொற்களின் பொருளை அறிந்துகொண்ட அனுபவங்களை அவர் குறிப்பிட்டுள்ளார். இது போன்றே செவ்விலக்கியங்களில் இடம்பெறும் செய்யுளடிகளுக்கும் சொற்களுக்கும் நாட்டார் வழக்காறுகளின் துணைகொண்டு தெளிவான பொருளை அவர் உணர்ந்துள்ளார். இவ்வுண்மையைத் தமது உரைநடை நூல்கள் சிலவற்றில் வெளிப்படையாக அவர் பதிவு செய்துள்ளார். இதற்குச் சான்றாக ஒன்றிரண்டு செய்திகள் மட்டும் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

## இடையன் எறிந்த மரம்


தன்னால் முடியாத செயலை முடியும் என்று கூறிவிட்டு இக்கட்டான நிலையில் இருப்பவனைக் குறிக்க "இடையன் எறிந்த மரம்" என்னும் பழமொழியை, *பழமொழி நானூறு* (செய்யுள்: 224) குறிப்பிடுகிறது. பகைவனை வெல்லாமலும் உயிரைவிடாமலும் இருக்கும் தன் நிலையை "இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன்" என்று சீவகன் குறிப்பிடுவதாகச் *சீவக சிந்தாமணி* (செய்யுள்: 19, 14) குறிப்பிடும். திருமாலின் திருவருளைப் பெறவில்லையே என்னும் ஏக்கத்தால் மனம் ஒடிந்தும் திருவருளைப் பெறுவோம் என்னும் நம்பிக்கையில் உயிர் வைத்துக்கொண்டும் இருக்கும் தன் நிலையை "இடையன் எறிந்த மரமே ஒத்திராமே" என்று பெரியாழ்வார் தமது *பெரிய திருமொழியில்* குறிப்பிடுகிறார்.

இடையர் மரம் வெட்டுவதில் ஏதோ ஒரு தொழில் நுட்பம் இருப்பதை இம்மூன்று இலக்கியங்களும் உணர்த்துகின்றன. இவ்விலக்கியச் செய்திகளைக் கற்றறிந்திருந்தாலும் அவை குறிப்பிடுவது குறித்து உ.வே.சா.வால் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. 1937ஆம் ஆண்டில் திருப்பனந்தாள் மடம் சென்றிருந்த உ.வே.சா. அம்மடத்தின் மாடுகளைப் பராமரிக்கும் முதிய இடையர் ஒருவரைத் தற்செயலாகச் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவ்விடையர்,

> ஆடுமாடுகளை நாங்கள் காட்டுப் புறங்களுக்கு ஓட்டிக்கொண்டு போவோம். அங்கே மரங்களின் இலைகளை எங்கள் வாளால் வெட்டுவோம். நாங்கள் வெட்டும்போது கிளை முழுவதும் துண்டித்து விழாமல் முறிந்து தொங்கும். ஆடுகள் அதில் முன்னங்காலை வைத்துக்கொண்டு தழைகளைத் தின்னும். அந்தக் கிளை அடியோடு அறாமலும் மற்றக் கிளைகளைப்போல மரத்தோடு முழுவதும் சேராமலும் இருக்கும்

என்று குறிப்பிட்டார் (உ.வே.சா. 1991; 32).

"அவ்வாறு வெட்டும்போது கிளை அடியோடு விழும்படி வெட்டினால் என்ன?" என்ற உ.வே.சா.வின் கேள்விக்கு, "அப்படி வெட்டிவிட்டால் அந்தக் கிளை பிறகு உபயோகமில்லாமற் போய்விடும். நாங்கள் வெட்டும் கிளையோ மரத்தோடு ஒட்டிக்




மார்க்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருப்பதால் மறுபடியும் தழைக்கும்" என்ற விடை கிடைத்தது.

இடையன் எறிந்த மரம் முழுவதும் அறாமல் அறை குறையாக உயிர் வைத்துக்கொண்டிருக்கும் என்னும் எண்ணத்தை உ.வே.சா.விடம் அவரது விடை ஏற்படுத்தியது. "இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன்" என்னும் *சீவக சிந்தாமணி* அடியும், "உயிருடன் இந்தேனாய்ப் பகையை வென்றேனு மல்லேன், உயிரை நீத்தேனுமல்லேனென்று கருதி மரத்தினேனென்றான்", என்ற நச்சினார்க்கினியரின் விசேட உரையும் நினைவுக்கு வந்தன. இவ்வாறு வெட்டுவது கடினமல்லவா என்ற உ.வே.சா.வின் கேள்விக்கு, இடையர்களின் இவ்வெட்டு முறையை மையமாகக்கொண்டு உருவான "இடையன் வெட்டு அறா வெட்டு" என்னும் பழமொழியை அம்முதியவர் குறிப்பிட்டார். இவ்வுரையாடல் குறித்து,

> "இலக்கியங்களிலே 'இடையன் எறிந்த மரம்' என்பதைப் படித்தவுடனேயே கருத்து விளங்காது. அதற்கு விசேஷ உரை சொல்லி விளக்கினால்தான் தெரியவரும். ஆனால் அவன் கூறிய அந்தப் பழ மொழி இலக்கியத்திற் கண்ட தொடர்மொழி யாகிய பூட்டைத் திறக்கும் திறவுகோலாக விளங்குகிறது".

என்று குறிப்பிட்டுள்ளார்.

## கள்ளா வா, புலியைக் குத்து

யாழ் மீட்டுவதில் தன் ஆற்றலைக் காட்டுவோருக்கு, தன் மகள் காந்தருவதத்தை என்பாளை மணம் புரிந்து தருவதாக அவளது தந்தை ஸ்ரீதத்தன் அறிவித்தி ருந்தான். காப்பியத் தலைவனான சீவகன் திறம்பட யாழிசைத்துப் போட்டியில் வென்றான். ஏற்கனவே சீவகன் மீது பொறாமை கொண்டிருந்த மன்னனான கட்டியங்காரன் மனம் புழுங்கி, சீவகனுடன் போரிட்டு வெல்பவர்களே காந்தருவதத்தையை மணம் புரியத் தக்கவர் என்று யாழிசைப் போட்டிக்கு வந்திருந்த மன்னர்களிடம் அறிவித்தான். அவ்வறிவிப்பைக் கேட்ட மன்னர்கள் ஒன்று திரண்டு சீவகனுடன் போரிட்டனர். அவர்களைப் போரில் வென்று காந்தருவதத்தையையே சீவகன் மணம் புரிந்துகொண்டான்.

பிற மன்னர்களைச் சீவகனுக்கு எதிராகத் தூண்டிய கட்டியங்காரனின் செயலை, "கள்ளரால் புலியை வேறு காணிய காவல் மன்னன்" என்று சிந்தாமணி குறிப்பிடுகிறது. இத்தொடர் இடம்பெறும் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர்,

> 'சீவகன், தத்தையை யாழும் பாட்டும் வென்றான், நல்லனென்று மாந்தர் ஆர்ப்ப அது பொறாதே கட்டியங்காரன் மனம் புழுங்கி அரசரைக் கொண்டு சீவகனைப் போர் காண வேண்டி, அரசர்க் கெல்லாம் சில தீமொழிகளைக் கூறினானென்க'

என்று உரை எழுதியுள்ளார் (உ.வே.சா. 1991 அ. 106).

உரை தெளிவாக இருப்பினும், "கள்ளரால் புலியை வேறு காணிய" என்னும் தொடருக்கு விளக்கம் ஏதும் இல்லை. இத்தொடருக்கு விளக்கம் காண இயலா நிலையில் உ.வே.சா.வின் *சீவக சிந்தாமணி* பதிப் 1887இல் வெளியானது.

தமக்கு வேண்டாத ஒருவர், தமக்கும் மற்றொ வருக்கும் இடையே சண்டை மூட்டிவிட்ட நிகழ்வை கும்பகோணத்தில் வசித்துவந்த உ.வே.சா.விட சாமப்பா என்னும் கிழவர் பின்வருமாறு குறிப்பிட்டா

> "எப்படியாவது நாங்கள் முட்டி மோதிக்கொண் சாகட்டுமே என்பது அவன் அபிப்பிராயம். நாங்க இரண்டு பேரும் அவனுக்கு வேண்டாதவர்கே அதற்குத்தான், கள்ளா வா, புலியைக் குத் என்கிறான். நானா ஏமாந்துபோவேன்".

இதைக் கேட்ட உ.வே.சா. "கள்ளா வா, புலியை குத்து" என்று கிழவர் பயன்படுத்திய பழமொழிக் விளக்கம் கேட்டார். இப்பழமொழி ஒரு கதை உள்ளடக்கியிருந்தது. அக்கதையை உ.வே.சாவிட கிழவர் பின்வருமாறு விளக்கினார்.

> ஒரு மனுஷ்யன் பண மூட்டையோடு சுடுகாட் வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அப்போ ஒரு திருடன் அவனைக் கண்டு துரத்தினா எதிரில் ஒரு புலி உறுமிக்கொண்டு வந்தது. இந் இரண்டு அபாயங்களிலிருந்தும் தப்புவதற்கு அந் வழிப்போக்கன் ஒரு தந்திரம் பண்ணினா திருடனைப் பார்த்து "அதோ பார், அந்தப் புலியை குத்திக் கொன்றுவிடு; நான் உனக்கே பண மூட்டையைத் தந்துவிடுகிறேன்" என்றான். திருட அப்படியே புலியை எதிர்த்தான். புலி அவனை அடித்துத் தின்று பசி தீர்ந்தது. அதற்குள் வழி போக்கன் தப்பிப் பிழைத்து ஓடிப்போய்விட்டான் அவன் தனக்குப் பகையாக வந்த புலியையு கள்ளனையும் முட்டவிட்டுத் தான் தப்பினா (மேலது, 108).

இக்கதையைக் கேட்டதும் உ.வே.சா.விற்கு ஒரே மகிழ்ச்சி "கள்ளரால் வேறு காணிய" என்னும் சீவகசிந்தாமண அடிக்கு, "கள்ளர்களாகிய அரசர்களால் புலியாகி சீவகனை வெற்றி கொள்ளுதலைக் காணும் பொருட்டு என்று பொருள் விளங்கிக்கொண்டார் (மேலது 109 பின்னர் 1907இல் *சீவக சிந்தாமணி*யின் இரண்டா பதிப்பில் மேற்கூறிய செய்யுளின்கீழ் "கள்ளா வா புலியைக் குத்து என்பது பழமொழி" என்னு குறிப்பைச் சேர்த்தார் (மேலது 109).

## கும்மாயம்

*மணிமேகலை* இருபத்தி ஏழாம் காதையி "பயற்றுத் தன்மை கெடாது கும்மாயம் இயற்றி (185-186) என்னும் தொடர் இடம்பெற்றுள்ளது. *மணி மேகலைக்* காப்பியத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த உ.வே.சா.வுக்கு இத்தொடரில் இடம்பெறும் "கும்மாயம்" என்னும் சொல்லின் பொருள் விளங்கவில்லை. பலரிடம் கேட்டும் பயனில்லை இந்நிலையில் கும்பகோணம் சாரங்கப்பெருமாள் கோவிலுக்குப் பட்டாச்சாரி ஒருவரின் அழைப்பின் பேரில் சென்றார். அங்கு அவர் வழங்கிய பிரசாதம் உ.வே.சா. அதுவரை அறியாத ஒன்றாக இருந்தது

படிப்பகம்

www.padippakam.com

புதன் பேர் என்னவென்று கேட்டபோது, “கும்மாயம்” ன்று பட்டாச்சாரியார் விடையளித்தார். கும்மாயம் சய்யும் முறையைப் பட்டாச்சாரியாரிடம் அறிந்து காண்டார். பின்னர் *நீலகேசிக்* காப்பியத்திலும் வறு நூல்களிலும் கும்மாயம் என்ற சொல் பயின்று ந்துள்ளதை அறிந்துகொண்டார். இவையனைத்தையும் ிணைத்துத் தமது *மணிமேகலைப்* பதிப்பில் மேற்கூறிய தாடருக்கான குறிப்புரையில் பின்வருமாறு எழுதினார்.

> கும்மாயம்-புழுக்கிய பச்சைப் பயிற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவதொரு சிற்றுண்டி. இப்பெயரோடு இது விஷ்ணு ஆலயங்களில் இக் காலத்தும் வழங்கிவருகின்றது *(உ. வே. சா. 1991 ஆ. 170).*

இன்றும் நெல்லைச் சீமையில் “கும்மியானம்” என்னும் பெயரில் ஆடி மாத இறுதியில் “கும்மாயம்” தயாரிக்கப் படுகிறது. பாசிப் பருப்புடன் நவதானியங்களையும் சர்த்துக்கொள்கின்றனர்.

**செண்டு**

பாஞ்சாலியைத் துச்சாதனன் இழுத்து வரும் காட்சியை, “கைச் செண்டால் அவன் பைங்குழல் பற்றி” என்று வில்லிப்புத்தூர் ஆழ்வார் குறிப் பிட்டுள்ளார். இங்கு செண்டு என்பதன் பொருள் பூச்செண்டா, பூப்பந்தா என்ற ஐயம் உ.வே.சா.விற்கு ஏற்பட்டது. இவ்விரு பொருள்களும் மேற்கூறிய செய்யுள் குறிப்பிடும் சூழலுக்குப் பொருத்தமற்றன. “செண்டு” என்னும் சொல்லின் பொருளை உ.வே.சா. தற்செயலாக அறிந்துகொள்ள நேரிட்டது.

மையிலாடுதுறைக்கு ஆறு கல் தொலைவிலுள்ள ஆறுபாதி என்னும் கிராமத்திலுள்ள பெருமாள் கோவிலுக் குச் சென்று வணங்கியபோது, பெருமாள் சிலையின் கையில் பிரம்பைப் போல் ஒன்று இருந்ததைக் கண்டார். பிரம்பின் தலைப்பகுதியில் இரண்டு வளைவுகள் இருந்தன. அது குறித்து விசாரித்தபோது செண்டு என்று அதைக் குறிப்பிட்டனர். தலைப்பகுதி வளைந்து பிரம்பு போன்று காட்சியளிக்கும் ஒரு கருவியின் பெயரே செண்டு என்று உ.வே.சா. அறிந்துகொண்டார். இக்கருவியின் துணையாலேயே பாஞ்சாலியின் கூந்தலைத் துச்சாதனன் பற்றி இழுத்துச் சென்றதாகக் குறிப்பிட்டது பொருத்தமானதுதான். அய்யனார் உருவத்தின் கையிலும் செண்டு என்னும் கருவி உண்டென்பதையும் இமயமலையைக் கரிகாலன் செண்டால் அடித்துத் திரிந்தான் என்று நூல்கள் சிலவற்றில் குறிப்பிடப்படுவதும் உ.வே.சா.வுக்கு (1991:30) நினைவுக்கு வந்தன. மக்கள் வழிபடும் தெய்வ உருவத்தின் கையிலுள்ள ஓர் ஆயுதத்தைக் கண்டு அதன் பெயரை அறிந்துகொண்டதன் வாயிலாக இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சொல்லின் தெளிவான பொருளை உ.வே.சா. அறிந்துகொண்டார்.

இவ்வாறு மக்கள் பேச்சு வழக்கில் இடம்பெறும் சொற்கள், பழமொழிகள் ஆகியன உ.வே.சா.வின் பதிப்புப் பணிக்குப் பயன்பட்டுள்ளன. “இழிசனர் வழக்கு” என்று முத்திரையிட்டு அவற்றை அவர் ஒதுக்கிவிடவில்லை.

●

**துணை நூல்கள்:**


1. உ.வே.சா., 1991, நினைவு மஞ்சரி, பாகம் 1.
2. உ.வே.சா., 1991, அ., நினைவு மஞ்சரி, பாகம் 2.
3. உ.வே.சா., 1991, ஆ., நல்லுரைக் கோவை, பாகம் 4.



*With Best Compliments from*

# Mani Offset

Offset Printers, Designers & D.T.P.

112/2, Bells Road
Triplicane, Chennai - 5
Phone: 28555249

163, Bells Road
Triplicane, Chennai - 5
Phone: 28588186

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com


# செந்தமிழ் அந்தணர்
# இரா. இளங்குமரனார் - நூல்கள்

**நூல்களின் மொத்த விலை உரு. 3320.00**

**வெளிநாட்டினருக்கு $ 175 அமெரிக்க டாலர்**

**அஞ்சலில் பெற விரும்புவோர்க்கு உரு. 1650.00**

**'தமிழ்மண் பதிப்பகம் சென்னை என்னும் பெயரில் நூல்களுக்கான தொகையினை வரைவோலையாக / பணவிடையாக அனுப்புமாறு வேண்டுகிறோம்.**

1. கட்டுரைப் பயிற்சி
2. விளையும் பயிர்கள்
3. பழந்தமிழரங்குகள்
4. பொய்யா மொழி புகழ்முகம்
5. பூங்குன்றன்
6. புகழுக்குப் புகழ்
7. ஒப்பில்லா உயர் வீரம்
8. பெரும் புலவர் மூவர்
9. எது? எது? எது?
10. எவன் தொண்டன்?
11. கல்விச் செல்வம்
12. சுவையான சொலவடைகள்
13. அல்லல் இல்லை
14. தமிழின் தனிப் பெரும் சிறப்புகள்
15. இலக்கியச் செல்வர் இருவர்
16. தனிப்பாடல் கனிச்சுவை
17. திருவள்ளுவர் கண்ட சமயப் புரட்சி
18. உலகளாவிய உயர் குறள்
19. அடைநல நாடு
20. தந்தைக்கு விண்ணப்பம்
21. கீழ்நாற்பது மூலமும் உரையும்
22. மேல்நாற்பது மூலமும் உரையும்
23. தாயுமானவர் (குறும்பாவியம்)
24. வாழும் தாயுமானவர் (உரைநடை)
25. தமிழ் உலா
26. வள்ளுவர் வழி
27. உலகளந்தார்
28. வியர்வை
29. கலித்தொகையில் அறநெறி
30. பொதுமக்கள் பேச்சில் பொய்யா மொழி
31. தமிழியக் காவலர் திருவள்ளுவர்
32. பாவாணர் ஆய்வும் அகழ்வு ஆய்வும்
33. கால ஆராய்ச்சியும் வையாபுரியாரும்
34. இக்குறளுக்கு ஏன் இப்பொருள்?
35. மலர்ந்த வாழ்வு (குறுங்கதை)
36. அடிபட்ட கன்னம் (குறுங்கதை)
37. நிறைமனம்
38. தேனருவி
39. உலகை மாற்றுவோம்
40. திருக்குறள் விடுதூது
41. எங்கள் மொழி
42. இயற்கை இன்பம்
43. தமிழர் வாழ்வில் உயிர்ச் சூழல்
44. இருசொல் அழகு
45. திருக்குறளில் ஊழ்
46. ஊருக்கு ஒருவர்
47. மங்கள மனையறம்
48. தமிழ் நூறு மூலமும் உரையும்
49. வெற்றியின் மூலம்
50. தொல்காப்பிய மரபியல் ஆராய்ச்சி
51. திருக்குறள் வாழ்வியல் உரை
52. பெருங்கதை
53. புதுநெறி காட்டிய புகழாளர்கள்
54. பிழையில்லாமல் எழுதுவோம்
55. இனிக்கும் இலக்கணம்
56. நிறுத்தற் குறிகளும் பயிற்சியும்
57. வட்டார வழக்குச் சொல் அகராதி
58. தம்பி கேள்
59. தமிழ்நெறிக் கரணங்கள்
60. தமிழில் அறிவியல்
61. தமிழர் வாழ்வியல் இலக்கணம்
62. மொழிஞாயிறு
63. எளிதாகப் பாடலாம்
64. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு)
65. ஆத்திச்சூடி மூலமும் அகல்விளக்கு உரையும்

**தொகையினை அனுப்ப வேண்டிய முகவரி:**

## தமிழ்மண் பதிப்பகம்

**2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், சென்னை 600 017. தொ.பே.: 55389712**

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com

உ.வே.சாமிநாதையர்

# பன்முக ஆளுமையின் பேருருவம்

கி. நாச்சிமுத்து

"இந்த நூலின் அச்சுப் பிரதியைப் பார்க்கும்போது இதை உ.வே.சா. பதிப்பிக்கவில்லையே என்ற வருத்தம் மேலிடுகிறது." இப்படிப்பட்ட ஒரு கவலையை நூற்றாண்டுவாரியாகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதியுள்ள மு. அருணாசலம் பல இடங்களிலும் ஒரு புலம்பல்போல எழுதிச் செல்வார். இதிலிருந்து உ.வே.சா. அவர்களின் பதிப்பு மேன்மையையும் சிறப்பையும் நாம் உணர்ந்துகொள்ள முடியும்.



உ.வே.சா. 150

தமிழ் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டில் பெரும் வழக்கத்திற்கு வந்த அச்சுக் கலையின் பரவல் ஒரு புதிய தொழில்நுட்பமாக வளர்ந்து நூல் வெளியீட்டு முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. ஒரே சமயத்தில் பல படிகள்; பலரும் எளிய விலை கொடுத்து வாங்க முடிந்தது. அதனால் புத்தகங்கள் பலரையும் போய்ச் சேர்ந்தன. அதுவரை ஓரிரு படிகளாக ஏட்டுச் சுவடி வடிவில் வழங்கி வந்த நூல்கள் தாளில் கையடக்கமாக எளிதில் படிக்கத்தக்கனவாக வெளிவரத் தொடங்கின. இவ்வளர்ச்சியினூடே தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் ...டந்தது. பல பத்திரிகைகள் தோன்றி இதழியல் ...வளர்ந்தது. அதனால் உரைநடை வளர்ச்சியும் ...ற்பட்டது. இப்படி அச்சுக் கலையின் பரவல் பல ...முகங்களைக் கொண்டதாக அமைந்தது. கல்வி வளர்ச்சிக்கு இவற்றின் பங்கை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த வளர்ச்சி முகங்களில் தமிழ் இலக்கிய நூல்களை ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதி அச்சிடுவது ...ன்பது நம் இலக்கியங்களின் மறுபிறவியாக அமைந்தது. இதில் அன்று வழக்கிலிருந்த பல பழைய எழுத்து முறைகள், ஏட்டுச் சுவடி எழுதும் முறைகள் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, புது அச்சுக் கலையைப் பற்றி அறிந்துகொண்டு அச்சிடுவது ஒரு முறை. இது தொழில்நுட்பம் சார்ந்தது. ஏட்டுச் சுவடியில் அரைப்புள்ளி, கால்புள்ளி, முற்றுப்புள்ளி, பத்திப் பிரிப்பு, சந்திப் பிரிப்பு முதலியவை இன்றி, அலுப்பூட்டும் முறையில் கைப்பட எழுதிய நூல்களை, தக்க நிறுத்தக் குறியீடுகள், அச்சு வேறுபாடுகள், தக்க இடைவெளி இவற்றையெல்லாம் பொருந்த அமைத்து நூல் வெளியிடுவது இன்னொரு அம்சம்.

இவற்றுக்கு மேலாக இரண்டு முக்கியப் பதிப்புத் தொழில்நுட்பங்கள் அறிவியல்பூர்வமாக நூலை வெளியிடுவதற்குத் தேவை. அதாவது ஒரு நூல் ஏட்டுச் சுவடியில் கிடைத்ததும் அப்படியே பெயர்த்து எழுதி அச்சிட்டுவிட முடியாது. அதனுடைய பிரதிகளாக இருக்கும் பல ஏட்டுச் சுவடிகளையும் தொகுத்துப் பெயர்த்து எழுதி, நல்ல ஏட்டுச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு பாட வேறுபாடுகளை ஆராய்ந்து, அவற்றைச் சுட்டி அச்சிட வேண்டும். அது செய்யுளாயின் அதன் யாப்பமைப்பிற்கேற்பப் பிரித்துக் காட்டியும் உரைநடையாயின் பத்தி பிரித்து மேற்கோள் போன்றவற்றை வேறுபடுத்திக் காட்டியும் அதை அச்சிட வேண்டும். அத்துடன் அந்நூலின் ஒப்புமைப் பகுதிகள், அரும்பொருள், நூலின் உள்ளே மேற்கோளாக வரும் செய்யுள் முதலியவற்றின் மூல நூல்கள் வருமிடம் போன்றவற்றைச் சுட்ட வேண்டும்.

இவற்றோடு நூல் வெளியீடு முடிவுறுவதில்லை. நூலுக்கு நல்ல ஆராய்ச்சி, முன்னுரை, ஆசிரியர் கால ஆராய்ச்சி, நூல் பேசும் பொருள் பற்றிய ஆராய்ச்சி போன்றவை இடம்பெற வேண்டும். இறுதியில் பாடல் மேற்கோள் அகராதி, அருஞ்சொற்பொருள் அகராதி என்று பலவும் அமைய வேண்டும். இவற்றையெல்லாம்



ஆதிமூலம்

www.padippakam.com

உள்ளடக்கியதுதான் மூலபாடத் திறனாய்வு எனச் சொல்லப்படும் சுவடிப் பதிப்புக் கலை. இது மேலை நாடுகளில் பைபிள் வெளியீடு, ஷேக்ஸ்பியர் நாடக வெளியீடு போன்றவற்றின் மூலம் உருவாகி வளர்ந்த துறை. இந்தத் திறனாய்வின் அறிவியல் நுட்பங்களை ஆங்கிலம் கற்காமல் தாமாகவே தன் பட்டறிவால் உணர்ந்து உருவாக்கியவர் உ.வே.சா. இதுதான் அவரது தனித் தன்மை.

சொல்மடவன்னம்சொல் நடையொவ்வாய்

என்னும் *சிலப்பதிகாரக்* கானல் வரியை மூலபாடம் கண்டு

சேரல் மடவன்னம் சேரல் நடை ஒவ்வாய்

என்று தன் பதிப்புகளில் மாற்றுவதற்கு உ.வே.சா. இடையறாது கற்றுக்கொண்ட அந்தத் திறனாய்வு முறைகள்தான் காரணம்.

நூல்களைப் பதிப்பிக்கும்போது அவர் எழுதும் முன்னுரைகள் ஆராய்ச்சியின் பிழிவாக இருக்கும். அதற்கு அவர் அப்பொருள் பற்றித் தெரிந்த பலரையும் நேரிலும் கடிதம் மூலமும் நாடி, விவரங்கள் சேகரித்திருப்பதை அவர் *என் சரித்திரத்தில்* சொல்லியிருப்பதை இளம் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் படித்துப் பின்பற்ற வேண்டும். சமண மதக் கருத்துகளை அறிய அவர் சமணர்களையும் பௌத்த மதக் கருத்து களை அறிய இலங்கைப் பௌத்த குருமார்களையும் ஏட்டுச் சுவடி பெறப் பாரீசிலுள்ள வின்சன் அவர்களை யும் வடமொழிச் செய்திகளை அறிய வடமொழி அறிஞர்களையும் நாடி விவரம் பெற்ற வரலாறுகள் நல்ல முன்மாதிரிகள். அதுபோலவே, 'இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன்' என வரும் *சிந்தாமணித்* தொடரின் பொருளை 'அவர் இடையன் வெட்டு அறா வெட்டு' என்று மரம் வெட்டி ஒருவர் பேசிய பேச்சிலிருந்து தெரிந்துகொண்டது போன்றவை சுவையான வரலாறுகள். அவை இலக்கியச் சுவையை ஊட்டுபவை.

பழைய இலக்கிய நூல்களை ஏட்டுச் சுவடியிலிருந்து பதிப்பிப்பது மட்டுமல்ல, அவர் தனி இலக்கிய ஆசிரியர் களின் மொத்த நூல்களையும் திரட்டிச் செம்மையாகப் பதிப்பிப்பதற்கும் *குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு* போன்ற நூல்களின் மூலம் பிற்காலத் தலை முறைக்கு வழிகாட்டியிருக்கிறார்.

தமிழ் நூல்களில் பத்திப் பிரிப்பு, நிறுத்தக் குறிகள் போன்றவற்றை ஒரே முறையில் ஆளல் போன்றவற்றைச் சீராகக் கடைப்பிடித்து அதற்குரிய முன்மாதிரியாகவும் வழிகாட்டிபோலவும் அய்யரவர்கள் விளங்கியிருக்கிறார் கள் என்பது பலருக்கும் தெரியாது.

உ.வே.சா. அன்றைய மரபுத் தமிழ்க் கல்வியில் கற்றுக்கொண்டவை தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியே என்பதை அவருக்கு உணர்த்திய சேலம் இராமசாமி முதலியார் சந்திப்பு அவர் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தாலும், சங்க இலக்கியம், சமணக் காப்பியங்கள் போன்றவற்றைப் பற்றி ஒரு புது அறிவாகக் கண்டு அவற்றைத் தேடித் தொகுத்துப் படித்து அவற்றைப் பதிப்பித்து வெளியிட்டது அவருடைய மேதமையின் அடையாளங்கள்.

கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக இருந்த உ.வே.சா. மாணவர்க்குப் பாடம் சொல்லுவதோடு நின்று விடாமல் கோடை விடுமுறைக் காலங்களில் தமிழகத் தின் மூலை முடுக்குகளில் ஏடுகளைத் தேடிச்சென்று, தொகுத்துப் பொறுமையாக ஆராய்ச்சி செய்து வெளியிடுவார். கோடை விடுமுறையில் அவர் கல்லூரிப் பரீட்சகராகப் போகமாட்டாராம்; அது ஆராய்ச்சிக்குக் குந்தகம் என்பாராம். அவர் மாணவர் கி.வா.ஜ. *எனது ஆசிரியபிரான்* என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் இப்படி எழுதுகிறார்: "இன்றையத் தமிழ்ப் பேராசிரியர்கள் கவனிப்பார்களாக!" இதிலும் கூட உ.வே.சா. தனித்து நிற்கிறார். அதனால்தான் 87 வயதில் 100 நூல்களை அவரால் செம்மையாக அச்சிட முடிந்தது. அவையெல்லாம் அவரது உழைப்பின் சின்னங்கள்.

ஏடுகளை அவர் தேடிச்செல்லும்போது *பெருங்கதை* கிடைக்காதா *வளையாபதி, சிலப்பதிகாரம்* நல்ல ஏடு கிடைக்காதா என்னும் தமிழ் ஏக்கம் அவருடைய ஏக்கப் பெருமூச்சாகவும் சிலவேளை ஏமாற்றங்களை எதிர்கொள்ளும்போது தீப்பொறி பறக்கும் மொழிப் பற்றின் வெடிப்பாகவும் வெளிப்படும். கரிவலம் வந்த நல்லூரில் தான் தேடி வந்த வரகுணராம பாண்டியன் ஏடுகளை வெந்நீர் போட்டுக் குளித்துவிட்ட பச்சைத் தமிழர் செயலைக் கண்டு அவர் எழுதியதைப் படிக்கும்போது, பாரதி, பாரதிதாசன் உணர்ச்சிச் சுழிப்பை நாம் உணர்கிறோம். "பழைய ஏடுகளைத் தீயில் போட்டு ஆகுதிசெய்ய வேண்டும் என்று ஆகம சாத்திரம் சொல்லியிருந்தால் அந்த ஆகமத்தை அல்லவா முதலில் ஆகுதிசெய்ய வேண்டும்?" என்று பொங்கும் அவர், "என்ன பேதமை! இனி இந்த நாட்டிற்கு விடிவு உண்டா?" என்று கொட்டித் தீர்க்கிறார். பின் இறைவனிடம் "இந்த அக்கிரமம் இனியாகிலும் நடவாதபடி திருவுள்ளம் இரங்க வேண்டும்" என்று முறையிடுகிறார். தமிழன் அறிவுச் சொத்துகள் பாழாவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் தமிழ் மரபின் மைந்தர்; மரபின் காவலர்.

மரபின் மேலுள்ள பற்று அவருடைய ஆசிரியரான திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மேலுள்ள அளவற்ற மரியாதையாக வெளிப்பட்டது. அவரைப் பற்றி உ.வே.சா. எழுநூறு பக்கங்களில் எழுதியுள்ள *ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்* என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் ஓர் இலக்கியத் திறனாய்வு நூலாகவும் அமைந்து சிறப்புப் பெறுகிறது. இதை பாஸ்வெல் ஆங்கிலத்தில் சாமுவேல் பற்றி எழுதிய நூலோடு ஒப்பிடுவது மிகவும் சரியே. அதில் தம் ஆசிரியர் வாழ்வை மட்டுமல்லாமல், அவர் நூல்கள் இயற்றியதையும் உடனிருந்து கண்டதை மிக விரிவாகப் பதிவுசெய்துள்ளார். இத்தகைய வேறொரு நூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். ஆங்கிலத் திறனாய்வு பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளாமலே தமிழ் முறையில் இதை அற்புதமான இலக்கியத் திறனாய்

www.padippakam.com

வாகவும் எழுதியுள்ளார் உ.வே.சா. எனவே உ.வே.சா. வெறும் பதிப்பாசிரியர், ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல. சிறந்த திறனாய்வாளரும்கூட. இந்தப் புத்தகத்தில் அமைந்துள்ள முறைகளை ஒருவர் கற்றுக்கொண்டாலே போதும், தமிழில் நல்ல இலக்கிய விமரிசனத்தை எழுதிவிட முடியும். அந்த வகையில் உ.வே.சா.வைத் தற்கால இலக்கியத் திறனாய்வின் முன்னோடி என்றும் சொல்ல முடியும். அந்தக் கோணத்தில் அவரை யாரும் கண்டுணர்ந்து அவர் கடைபிடித்த முறைகளை இதுவரை வரையறை செய்யவில்லை. இது ஒரு வருந்தத் தக்க நிலை.

இந்த வாழ்க்கை வரலாற்று நூலிலே தன் ஆசிரியரிடம் அவர் கொண்டிருந்த மரியாதையைக் கண்டு நாம் நெகிழ்ந்துபோகிறோம். எழுநூறு பக்க நூலில் ஓரிடத்தில்கூடத் தம் ஆசிரியர் பெயரை உ.வே.சா. குறிப்பிடவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிறந்தபோது அவர் பெற்றோர்கள் அவருக்குப் பெயரிட்டதைக் குறிப்பிட்டுத்தானே ஆகவேண்டும். அந்த இடத்தில் அவர் எழுதும் அடிக்குறிப்பைப் பாருங்கள்: "பிள்ளையவர்களை இவ்வாறு பெயர் குறித்தெழுதுவதற்கு அஞ்சுகிறேன்".

உ.வே.சா. அவர்களின் *என் சரித்திரம்* இன்னொரு சாதனை. கதை படிப்பதைப் போலப் படிக்கலாம். அத்தனை எளிமை. அத்தனை விவரங்கள் கதைபோலச் சொல்லப்படுகின்றன. நிகழ்ச்சிகள், மனிதர்கள் பற்றி அவருடைய நினைவாற்றல் அயரவைக்கிறது. அவர் களைப் பற்றிய குறிப்புகளை அவர் எப்படி முறையாகத் தொகுத்துவைத்திருந்தார் என்பது அதைவிட வியப்பைத் தருகிறது. இதைப் பற்றிப் பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை அவர்கள், இதில் பிறரைக் குற்றம் சொல்வதே தூக்கலாக இருக்கிறது என்று எங்கோ எழுதியதாக நினைவு. அப்படி இருக்கலாம். செம்மையை எதிர்பார்க்கிற ஒருவர் அப்படித்தான் இருக்க முடியும். *என் சரித்திரம்* ஆங்கிலத்திலும் பல முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் முழுமையான நல்ல ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று – ஜெர்மனியில் வாழும் திரு. சந்திரன் டக்கர் மொழி பெயர்த்தது – இன்னும் அச்சில் வரவேண்டியிருக்கிறது.

அவர் எழுதிய *கனம் கிருஷ்ணையர், வித்துவான் தியாகராசச் செட்டியார்* போன்ற பிற வாழ்க்கை வரலாற்று நூல்களும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய வையே. இவையெல்லாம் இரண்டு நூற்றாண்டுக் கல்வி, பண்பாட்டு வரலாற்றின் ஆவணங்களாகவும் அமைகின்றன. இவ்வாறு வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கு ஐயரவர்கள் பங்கு கணிசமானது; தலைமேல் வைத்துக் கொண்டாடத் தக்கது.

*என் சரித்திரத்தில்* பல நினைவுக் குறிப்புகளை எழுதியுள்ள உ.வே.சா. ஓரிடத்தில்கூடத் தன் மனைவி பற்றிய மனப்பதிவை எழுதவில்லை என்பது வியப்பாக உள்ளது. அவர் தந்தையார் மயிலாடுதுறையிலிருந்து திருவாவடுதுறை வரை அக்காலத்தில் ரயில் வந்த போதும் அதில் ஏறாமல் நடந்துதான் போவாராம். அப்படி ஒரு சனாதனம்.

அவருடன் பணியாற்றிய அருமையான மாணவர் கள் கி.வா.ஜ., கலித்தொகையை அய்யரைப் போலப் பதிப்பித்த இ.வை. அனந்தராமையர் போன்றவர்கள் அவரால் பயிற்சி தரப்பட்டு உயர்ந்தவர்கள்.

உ.வே.சா.வின் *நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி, நான் கண்டதும் கேட்டதும்* போன்ற ரசமான கட்டுரைத் தொகுப்பு நூல்கள் இன்றும் சுவையாகவும் எளிமையாகவும் அமைந்துள்ளன. சராசரித் தமிழன் இன்றும் படித்து இன்புறத்தக்கவை இவை. இதற்குக் காரணம் உ.வே.சா. என்னும் ஆராய்ச்சியாளரிடம் ஒளிந்திருந்த படைப்பாக்கத் திறனே எனத் தோன்று கிறது. செய்திகளைச் சொல்கிற பாங்கில் அவருக்கே உரித்தான ஓர் அடக்கம், பரிவு, ஆரவாரமின்மை, அளவான புனைவு ஆகியவற்றை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. அவருடைய உரைநடை யாராலோ செப்பம் செய்யப்பட்டது என்பது போன்ற ஒரு செவிவழி வதந்தி உண்டு. ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை என்பதைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையே ஏற்றுக்கொள்கிறார். அவர் உரைநடை மாற்றத்திற்குக் காரணம் இலக்கிய ஆராய்ச்சி நடையையும் இலக்கியப் படைப்பாக்க நடையையும் வேறுபடுத்தி எழுதிய அவரது இலக்கியத் திறமையே எனச் சொல்லலாம். உ.வே.சா.வின் ஆராய்ச்சிப் பதிப்புகளில் காணப்படும் நடை, போக்கு, மொழி போன்றவற்றில்கூட இலக்கிய மணம் கமழும். அது அவர் எடுத்துக்கொண்ட பொருளைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக அவர் பதிப்பித்த *நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரைப் பதிப்பு* முன்னுரையில் அவர் அவ்வுரையைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் பாடங் கேட்ட காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை வருணித்துச் சொல்வதைப் படித்துப் பாருங்கள். இலக்கண முன்னுரையில் இலக்கிய மணம். அத்தனை நயமான நடை. தற்காலத் தமிழ் உரைநடையில் என்றும் படித்து இன்புறவும் அறிவுபெறவும் எழுதிய அவரை உரை நடையின் சிறந்த வல்லாளர் என்று சொல்ல வேண்டும்.

தமிழ் கற்ற இந்தியவியல் பேராசிரியர் காலஞ்சென்ற யானர்ட் (ஜெர்மானியர்) தமிழில் தாம் மதிக்கும் ஒரே அறிஞர் உ.வே.சா. மட்டும்தான் என்று அவருடைய அறிவுச் சிறப்புகளை மாய்ந்து மாய்ந்து பேசுவார். அது மட்டுமல்ல, அவர் படத்தையும்கூடத் தன் அறையில் வைத்திருப்பார். அத்தோடு *என் சரித்திரத்தை* ஆங்கிலத்தில் சந்திரன் டக்கரைக் கொண்டு மொழி பெயர்க்கவும் செய்தார். திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்யத்தானே செய்வார்கள். உ.வே.சா. மறைந்து அறுபது ஆண்டுகளில் தமிழில் உ.வே.சா. வைப் போல யாரும் தோன்றாதது ஏன் என்பது தமிழ்ப் புலமை நடாத்தும் பேராசிரியர்கள் தங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி.

அண்மையில் பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்த இந்திய வியல் தமிழ் மூதறிஞர் ஒருவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்த பேச்சைப் பச்சை மொழியில் சொன் னால், இன்றைய தமிழ்ப் புலமை வெற்று வேட்டாக வும் வேடிக்கையாகவும் வேடமாகவும் போய்விட்டது என்பதுதான். தமிழ்ப் பண்டிதர்கள் புதிய இலக்கியம் பக்கமே போவதில்லை என்று சொல்லிக்கொண்டிருந்த காலம் ஒன்று. இன்று அதை விட்டுவைக்கமாட்டார் களா என்னும் கோபமும் அவரிடம் வெளிப்பட்டது.

நல்ல சம்பளம், வாய்ப்புகள், மரியாதை இவையெல்லாம் கூடிய காலத்தில் சமூகம் இவர்களிடம் எதிர்பார்ப்பது நாள்தோறும் தாழ்வுற்றுவரும் தமிழையும் அதன் இலக்கியத்தையும் எடுத்து நிறுத்தும் பணியை. தமிழைக் காக்க வேண்டியது பகைவர்களிடமிருந்து அல்ல; தமிழர்களிடமிருந்து, போலித் தமிழ்ப் புலமை நடத்துகிறவர்களிடமிருந்து. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்து செத்த மொழியாக ஆக்காமல் இருந்தால் சரி என்பது போன்ற அழுகுணிக் குரல் கேட்காமல் இருக்க இன்னும் பல உ.வே.சா.க்கள் தோன்ற வேண்டும்.

உ.வே.சா. பணியாற்றிய காலத்தில் – அந்நிய ஆட்சியில் – தமிழ் வளர்க்க அரசாங்க ஆதரவெல்லாம் கிடையாது. ஜி. யூ. போப்பிற்குச் சென்னை அரசாங்கம் பணத்தை வாரிக் கொடுத்தது. ஆனால் நம் அய்யருக்கு அந்த உதவியெல்லாம் கிடைக்கவில்லை. மடங்களும் நம்மூர்ச் சிற்றரசர்களும் பிரபுக்களும்தான் அவருக்கு உதவியிருக்கிறார்கள். அதையெல்லாம் குறிப்பிட்டுப் பாரதி அவருக்குச் சூட்டியிருக்கும் புகழுரை, தமிழர் மனசாட்சியின் குரலாக ஒலிக்கிறது.

பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே!

பாரதி உ.வே.சா.வைக் கும்பமுனி அகத்தியர் என்று பாராட்டுவதில் அவர் தமிழ் உருவம் மட்டுமல்ல, அவர் குள்ளமானவர் என்னும் உடல் உருவம் பற்றிய குறிப்பும் தொக்கி நிற்கிறது என்று உ.வே.சா.வை நேரில் பார்த்தவர்கள் கூறுவார்கள். ஆனால் அவர் படைப்புகளையும் பணியையும் அறிந்தவர்களோ அவர் பன்முக ஆளுமையின் பேருருவம் என்பதையே உணர்கிறார்கள்.

சரி, தமிழர்கள் அவரைத் தமிழ்த் தாத்தா என்றெல்லாம் சொல்லிப் புகழ்வதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது. என்ன செய்ய வேண்டும்? மூதறிஞர் இராஜாஜி சொன்னபடி செய்ய வேண்டும்:

"மகத்தான ஒரு பெரிய காரியத்தை அவர் ஒருவரே 50, 60 வருஷ காலத்தில் செய்திருக்கிறார். இம்மாதிரி வேலையைப் பல்கலைக்கழகத்திடம் விட்டால் 2 கமிட்டிகள் போடுவார்கள். 10 பேர் ஒரு கமிட்டியில் இருக்க வேண்டும். அதற்காகக் காரியாலயம், சிப்பந்திகள், இதர செலவுகளாகும். அப்போதும் வேலை ஒரு மாதிரியாகத்தான் செய்து முடிக்கப் படும்.

ஆனால், அய்யரவர்களோ தாம் ஒருவராக, காகிதம், வண்டிச் செலவும் இதரர் தராமல், ஏடுகளைத் தாமே தலையில் சுமந்துவந்து வேலையைப் பூர்த்தி செய்துள்ளார். அச்சுப்பிழை அவர் நூலில் கிடையாது. பிரசுரகர்த்தர்களிடம் விடாமல், தாமே பிரசுரித்து நூல்களைத் தம்மிடமே வைத்துக் கொண்டார்.

... பழைய நூல்களை அழியாமல் காப்பாற்றித் தந்தவர் அவர். தமிழ் நூல்களின் உபபிரம்மா எனலாம் அவரை.

புத்தகங்களைத் தேரில் வைத்துச் சென்று விழாக்களைக் கொண்டாடுவது மட்டும் போதாது. அவற்றை உபயோகிக்க வேண்டும். விஷயம் தெரிந்து படிக்க வேண்டும்." – இராஜாஜி

•

கட்டுரையாளர் கேளரப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர். இவரது *உ.வே.சா.வின் இலக்கணப் பதிவுகள்* நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

## உ.வே.சா.வை நினைவுகூரல்

உ.வே.சாவிற்கு யோக ஜாதகமில்லை போலும். தமிழ்த் தாத்தாவிற்கு ஒரு நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று ஆறு ஏழு ஆண்டுகளாக மத்தியில் ஆண்ட காங்கிரஸ் – பா.ஜ.க – காங்கிரஸ் என எல்லா அரசுகளுக்கும் எழுதி எழுதி ஓய்ந்துபோயாகி விட்டது. மிகுந்த முயற்சியெடுத்துப் பல தடவை முயன்று தமிழகத்திற்கு வந்த மத்திய அமைச்சர்கள் சிலரையும் நேரடியாகப் பார்த்து லிகிதம் கொடுத்துப் பார்த்தாகி விட்டது. இப்போது காலச்சுவடு உ.வே.சா.வை நினைவு கொள்வது லேசான உற்சாகத்தைத் தருகிறது.

தலைசிறந்த தமிழறிஞருக்கு உரிய மரியாதையைப் பெற்றுத்தரத் தமிழகத்துத் தமிழறிஞர்கள் எவரும் முன்வரவில்லை. உ.வே.சா. பதிப்பித்த தமிழ் நூல்களை வைத்துக்கொண்டு முனைவர், முதுமுனைவர் என சன்னத்துப் பெற்றுக்கொண்டவர்கள் செய்திருக்க வேண்டும். தமிழ் சார்ந்தவர்களின் தனிப்பட்ட சில குண விசேஷங்களையும் விகாரங்களையும்தான் இந்த அலட்சியம் புலப்படுத்துகிறது. உ.வே.சா. பிறந்த குலம் இதற்கெல்லாம் காரணமானால் தமிழனின் அடையாளம் மேன்மையானதல்ல என்றுதான் சொல்ல வேண்டும். மூப்பனார் குடும்பம் உ.வே.சா.வை ஆதரித்தது. பாதுகாத்தது, போற்றியது என்பதையும் இங்கு கூற வேண்டும்.

ஆனாலும் ஓர் ஆறுதலான செய்தி: தமிழக அரசு உ.வே.சா.வின் பாபநாசம் உத்தமதானபுரம் வீட்டை வாங்கி நினைவாலயமாக ஆக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. இதற்காகத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ம.ராசேந்திரன் முனைப்பாகச் செயல்படுவதையும் பாபநாசம் ஆடிட்டர் ஹரிகரன் அவர்கள் தன்னிடமிருக்கும் உ.வே.சா.வின் வேங்கட விலாசத்தை தமிழக அரசுக்குத் தருவதற்குப் பெருமையோடு முன்வந்திருப்பதையும் சொல்ல வேண்டும். சிதிலமடைந்திருக்கும் வீடு தரைமட்டமாகும்முன் தமிழக அரசு விரைந்து செயல்பட வேண்டும்.

அபரிமிதமான அரசியல் செல்வாக்குள்ள தமிழ் எழுத்தாளர்–கவிஞர் எவரேனும் உ.வே.சா.விற்கு ஒரு நினைவு அஞ்சல் தலை வெளியிட முனைந்தால் நல்லது.

நா. விச்வநாதன்
தஞ்சாவூர்.

www.padippakam.com

தமிழ்ப் பதிப்புத் துறை முன்னோடிகள்

# தாமோதரம் பிள்ளையும் சாமிநாதையரும்

எம்.ஏ.நுஃமான்

**சா**மிநாதையரை நான் முதலில் அறிந்து கொண்டது என் பதினைந்தாம் வயதில். அப்போது நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். எமது தமிழ் இலக்கியப் பாட நூல்களுள் சாமிநாதையரின் *புதியதும் பழையதும்* ஒன்று. மற்ற நூல்களுள் இப்போதும் நினைவில் நிற்பவை கம்ப ராமாயணம் *கும்பகருணன் வதைப் படலம்*, தேசியவிநாயகம் பிள்ளையின் *மலரும் மாலையும்*. கும்பகருணன் வதைப் படலத்தில் உள்ள சுமார் 150 பாடல்களும் அப்போது எனக்கு மனப் பாடம். *மலரும் மாலையும்* கிட்டத்தட்ட அப்படிதான். *புதியதும் பழையதும்* அப்போது எனது புரிதலுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. அந்தப் புத்தகம் 1955ஆம் ஆண்டுப் பதிப்பு என்று நினைக்கிறேன். அதன் அட்டையிலிருந்த பெரிய தலைப் பாகையுடன் கூடிய சாமிநாதையரின் உருவப்படமும் அவரது பெயருக்கு மேலே இருந்த நீண்ட பட்டமும்தான் இன்னும் எனது நினைவில் இருப்பவை. மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் என்னும் நீண்ட பெயர் பொருள் விளங்காத மர்மமாகவும் வினோதமாகவுமே அப்போது எனக்குத் தோன்றியது. அது முழுவதும் அவருடைய சொந்தப் பெயர் என்றுதான் நான் அப்போது நினைத்தேன். அந்தப் பெயர் முழுமையாக என் நினைவில் நின்றமைக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.



உ.வே.சா. 150

பிற்காலத்தில் சாமிநாதையர் பதிப்பித்த நூல்களும் அவரது கட்டுரைகளும் படிக்கக் கிடைத்த போதெல்லாம் அவரது தமிழ்ப் புலமைமீது ஒரு மதிப்பும் மரியாதையுமே மேலோங்கியது. சாமிநாதையர் பதிப்புத் துறைக்கு வந்தது தமிழ் இலக்கியத்துக்குக் கிடைத்த ஒரு கொடை என்றே சொல்ல வேண்டும். தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் உணர்ச்சி, பிற்காலத்தில் எழுச்சியடைந்த தமிழ்த் தேசியவாதம் எல்லாவற்றுடனும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சாமிநாதையாரின் பெயரும் பின்னிப் பிணைந்து விட்டது.

சாமிநாதையருடைய இளமைக்காலம் ஆதீனங்களுடனும் மடங்களுடனுமே கழிந்தது. வையாபுரிப் பிள்ளை (1968:289-90) சொல்வதுபோல "இவ்வாறே இவரது ஆயுள் கழிந்திருக்குமாயின், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் என்ற பதவியை விளக்கமுறச் செய்திருக்கலாம். பாழடைந்த கோயில்களுள்ள பல ஊர்களுக்கு யமகம், திரிபு, சித்திரக் கவிகள் முதலியன செறிந்த புராணங்கள் பல இயற்றியிருக்கலாம். பல சிறந்த பிரபந்தங்கள் பாடியிருக்கலாம். தமது ஆதீனத்தின் சிறப்பைக் குறித்தும் கும்பாபிஷேகம் முதலிய பெரு நிகழ்ச்சிகளைக் குறித்தும் பல பாடல்கள் இயற்றியிருக்கலாம். சைவ சித்தாந்த சாஸ்திரங்களை மிகவும் நன்றாக ஓதி உணர்ந்திருக்கலாம். அருட்பா மருட்பா விவகாரத்தில் தலையிட்டுச் சில கண்டனவுரைகள் எழுதியிருக்கலாம். வேதாந்த சித்தாந்தப் பொருள்கள் பற்றியும் சில சண்டமாருதங்களைக் கிளப்பியிருக்கலாம். இந்நெறிகளிலே சென்று சாதாரண வாழ்வு வாழ்ந்து முடிந்திருக்கலாம்."

ஆனால், 1880இல் அவரது இருபத்தைந்தாம் வயதில் அவரது வாழ்க்கைப் போக்கைத் திசை திருப்பிய இரண்டு முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஒன்று திரு. தியாகராஜ செட்டியார் தான் கற்பித்த கும்பகோணம் அரசினர் கலாசாலையில் தனது இடத்துக்கு ஐயரை நியமித்து, மடத்திலிருந்து அவரைப்



படிப்பகம்

www.padippakam.com

புது உலகுக்குக் கொண்டுவந்தமை. மற்றது, முன்சீப் இராமசாமி முதலியாரை ஐயர் சந்தித்தமை. இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றியும் ஐயர் *என் சரித்திரத்தில்* விரிவாகவே எழுதியிருக்கின்றார். இராமசாமி முதலியாரைச் சந்தித்ததன் மூலம் தான் வாழ்க்கையில் பெற்ற பேறு பற்றிச் சாமிநாதையர் *(1990:528)* பின்வருமாறு எழுதுகின்றார்: "அவரிடம் என் நல்லூழ் என்னைக் கொண்டுபோய் விட்டது. அவருடைய நட்பினால் என் வாழ்க்கையில் ஒரு புதுத் துறை தோன்றியது. தமிழிலக்கியத்தின் விரிவை அரிய முடிந்தது. அந்தாதிக் கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும் புராணங்களிலும் தமிழின்பம் கண்டு மகிழ்வதோடு நில்லாமற் பழமையும் பெருமதிப்புடைய தண்டமிழ் நூல்களிற் பொதிந்து கிடக்கும் இன்றமிழியற்கையின்பத்தை மாந்தி நான் மகிழ்வதோடு, பிறரும் இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது."

ஏ.ஜே. ராமானுஜன் சொல்வதுபோல "பின் இடைக்காலச் சைவ, வைஷ்ணவத் தமிழறிஞர்கள் மதச் சார்பற்ற இலக்கியங்களை ஒரு தீண்டாமை மனப்பாங்குடனேயே நோக்கினர். பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இதில் அடங்கும். சமண, பௌத்த இலக்கியங்களைப் படிப்பதை அவர்கள் அனுமதிக்கவே இல்லை. இத்தகைய ஓர் ஆய்வறிவுத் தீண்டாமைச் சூழலில் சாமிநாதையர் போன்ற ஒரு பேரறிஞர், இடைக்காலத்தில் தோன்றிய இரண்டாந்தரமான சமய, இலக்கண நூல்களைக் கற்பதிலேயே தம் நாள்களைச் செலவிட வேண்டியிருந்தது. உண்மையில் இராமசாமி முதலியாரைச் சந்திக்கும்வரை அவர் இரட்டைக் காப்பியங்களையோ சங்க இலக்கியங்களையோ அறிந்திருக்கவில்லை." (மேற்கோள், கமில் ஸ்வலபில் *1973:268*) *என் சரித்திரம்* 88ஆம் அத்தியாயத்தில் ராமசாமி முதலியாரைச் சந்தித்த விருத்தாந்தத்தை ஐயர் விஸ்தாரமாகச் சொல்கிறார். "அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை. என்னுடைய ஆசிரியரே படித்ததில்லை. புஸ்தகத்தைக்கூட நான் கண்ணால் பார்த்ததில்லை" என்பது ஐயரின் வாக்கு மூலம். இதனாலேயே இராமசாமி முதலியாரை ஐயர் சந்தித்த 21.10.1880ஆம் திகதியைத் தமிழ் இலக்கிய மாணவர்கள் அனைவரும் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்ட திகதியாகக் கருத வேண்டும்" என ஏ.கே. ராமானுஜன் குறிப்பிடுகின்றார் (கமில் ஸ்வலபில் *1973:268*). ஐயருடைய *சீவக சிந்தாமணி* ஆராய்ச்சியும் பிற்காலப் பதிப்பு முயற்சிகளும் அதிலிருந்துதான் ஆரம்பிக்கின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழ்ப் பதிப்புத் துறை வரலாற்றில், தமிழ் மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில் சாமிநாதையரின் இடம் அழிக்கப்பட முடியாதது என்பதில் ஐயமில்லை. *சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), மணிமேகலை (1898), பெருங்கதை (1924), குறுந்தொகை (1937)* முதலிய நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஐயர் எடுத்த முயற்சிகளும் உழைப்பும் நம் மரியாதைக்குரியன.

ஐயருடைய பதிப்பு முயற்சிகளை மதிப்பிடுவதற்குரிய ஆய்வறிவுத் தகைமை எனக்கு இல்லை என்பதை நான் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். பதிப்புத் துறையிலும் பண்டைய, இடைக்காலத் தமிழ் இலக்கியங்களிலும் ஊறித் திளைத்த அறிஞர்கள் பலர் அதைச் செய்திருக்கிறார்கள். ஆயினும், பலரும் நம்புவதுபோல், பழந்தமிழ் நூல்களை மீள்கண்டு பிடிப்புச் செய்ததிலும் அவற்றைத் திருத்தமாகப் பதிப்பித்துத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டதிலும் முழுப் பெருமையும் ஐயருக்கு மட்டும் உரியதல்ல. இத்துறையில் ஐயருக்கு முன்னோடிகள் சிலர் இருந்திருக்கிறார்கள். வையாபுரிப் பிள்ளையின் *(1959:290)* வார்த்தைகளில் சொல்வதானால் "சீவக சிந்தாமணியை இவர் வெளியிடுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர், 1868இல் இக்காவியத்தின் நாமகள் இலம்பகத்தை அழகான முறையிலே, சிறந்த முன்னுரையோடு, ரெவரண்ட் பவர் (Rev. Bower) பதிப்பித்துள்ளார். ஆயினும், சாமிநாதையர் தன்னுடைய பதிப்பில் இந்தத் தகவலைக் குறிப்பிடவே இல்லை". 'இதனைத் தெரிவித்திருந்தால் மிகவும் நலமாயிருக்கும்' என்றும் 'இங்ஙனம் தெரிவித்தல் பதிப்பாசிரியர் கடமை' என்றும் வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார். ஆயினும், பவரின் பிரதி பற்றிய குறிப்பு *என் சரித்திரத்தில்* இடம் பெற்றிருக்கின்றது (பக். 583).

பதிப்புத் துறையில் சாமிநாதையருக்கு முன்னோடியாக இருந்த பிறிதொருவர் சி.வை. தாமோதரம் பிள்ளை *(1832-1901)*. சாமிநாதையரைவிட 23 வயது மூத்தவர். சாமிநாதையரின் மரணத்துக்கு 40 வருடங்கள் முன்னர் மரணித்தவர். சாமிநாதையரின் *சிந்தாமணி* பதிப்பு வெளிவருவதற்கு முன்னரே *வீரசோழியம் (1881), இறையனார் அகப்பொருள் (1883), தணிகைப் புராணம் (1883), தொல்காப்பியப் பொருளதிகாரம் (1885)* முதலிய சில முக்கியமான தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டவர். அவற்றைத் தொடர்ந்து, *கலித்தொகை (1887), இலக்கண விளக்கம் (1889), சூளாமணி (1889), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (1891), தொல்காப்பியம் சொல்லதிகாரம் (1892)* என்பவற்றை வெளியிட்டவர். "தமிழ் நூல்களைப் பதிப்பித்ததில் சாமிநாதையருக்கு நிகரான பெயரும் புகழும் தாமோதரம் பிள்ளைக்கு உண்டு" என்று கமில் ஸ்வலபில் *(1973:269)* குறிப்பிடுகிறார். "உ.வே. சாமிநாதையருக்கு வழிகாட்டியாகவும் சில வழிகளில் அவருக்கு மேம்பட்டவராகவும் விளங்கியவர் தாமோதரம் பிள்ளை" எனக் கைலாசபதி *(1986 : 24)* குறிப்பிடுகிறார்.

சாமிநாதையர் ஆதீனத்தில் இருந்த காலத்திலேயே தாமோதரம் பிள்ளை பற்றி அறிந்திருந்தார். அவர்களுக்கிடையே கடிதத் தொடர்பும் இருந்திருக்கிறது. தாமோதரம் பிள்ளை கும்பகோணத்தில் வாழத் தொடங்கிய பின்னர் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பதிப்புத் துறையில் தன்னை ஒத்த ஓர் ஆளுமையாக அப்போதே தாமோதரம் பிள்ளை சாமிநாதையரை இனங்கண்டுகொண்டார். *கலித்தொகைப்* பதிப்புரையிலேயே அவர் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். பதிப்பாசிரியரின் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த தாமோதரம் பிள்ளையின் கருத்து பின்வருமாறு:

"இலக்கணக் கொத்துடையார், நூலாசிரியர், உரையாசிரியர், போதனாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனாசிரியரென இன்னுமொன்று கூட்டி இவர் தொழில் முன்மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும் அவர் அறிவு முழுவதும் இவருக்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கிறேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச் சுமை? பரிசோதனாசிரியர் படுங் கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அநுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளை அடுக்கிவைத்துக்கொண்டு என் கண்காணச் *சிந்தாமணி* பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரைக் கேட்டால் இந்நால்வகையாசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி" (தாமோதரம், பக். 61).

www.padippakam.com

"அடியேன் இன்னும் சின்னாளிற் கும்பகோணம் வரும்போது தங்கள் சிநேகத்தைச் சம்பாதித்தற்கு யாரிடம் ஒரு கடிதம் பெற்று வருவேனென்று சிந்தித்துக்கொண்டிருக்கத் தேடிய தெய்வம் தானே வந்து கைப்பற்றிய தென்னத் தாங்களே எனக்குக் கடிதமெழுதிய தனை நினைக்க நினைக்கப் பேரானந்தத்தை விளைக்கின்றது. தாங்கள் எழுதியருளிய கடிதம் வந்து மூன்றாம் நாள் ஸ்ரீ பெரிய சந்நிதானம் கட்டளையிட்டருளிய இறையனாரகப் பொருட் பிரதியும் தபால் மார்க்கமாக வந்து சேர்ந்து 59-வது சூத்திர உரையின் கடைசிப் பாகமும் கண்டு மகிழ்வுற்றேன்.

பங்குனி மதியிலுற்பத்தியான தங்கள் சினேகம் பற்குனன்போலச் சீர்பெருகுவதாக.

இங்ஙனம்
தங்கள் ஊழியன்
சி.வை. தாமோதரம் பிள்ளை"

பதிப்புத் துறையில் சாமிநாதையருக்கு முன்னோடி எனினும், அவரது கடின உழைப்புக்குத் தாமோதரம் பிள்ளை சாட்சியம் கூறுவதை நாம் இங்கு காண்கின்றோம்.

தாமோதரம் பிள்ளை இறந்தபோது சாமிநாதையர் எழுதிய ஓர் இரங்கற்பாவில் ஐயருக்குப் பிள்ளை மீதிருந்த அபிமானம் வெளிப்படுகின்றது. அச்செய்யுள் வருமாறு:

தொல்காப் பியமுதலாந் தொன்னூல்
களைப்பதிப்பித்
தொல்காப் புகழ்மேவி யுய்ந்தபண்பி—னல்காத
தாமோதரச் செல்வன் சட்டகநீத் திட்டதுன்பை
யாமோ தரமியம்ப வே!

ஆயினும், தன் இறுதிக் காலத்தில் சாமிநாதையர் எழுதிய சுயசரிதையில் தாமோதரம் பிள்ளையின் பதிப்பு முயற்சிகள் பற்றிய சில தகவல்களைக் குறிப்பிட்டுள்ளாரே அன்றி, அவரது பதிப்புத் துறை மேன்மை, அதன் முக்கியத்துவம் என்பன பற்றி சாதகமாக எதுவுமே குறிப்பிடவில்லை. பதிலாகச் *சிந்தாமணியைப்* பூரணமாக விளங்கிக் கொள்ளும் திறன் அவருக்கு இருக்கவில்லை என்பதும் அதைப் பதிப்பிப்பதற்காகப் பல்லாண்டு காலமாகத் தான் மேற்கொண்ட உழைப்பைத் தானே அதைப் பதிப்பிக்கும் நோக்கில் தாமோதரம் பிள்ளை அபகரித்துக் கொள்ள முயன்றார் என்பதுமே அவரைப் பற்றிச் சாமிநாதையர் (1990:470-76) நமக்குத் தரும் சித்திரமாகும்.

சாமிநாதையர்மீது தாமோதரம் பிள்ளைக்குத் தொடக்கத்திலிருந்தே நல்ல மதிப்பு இருந்ததாகத் தெரிகின்றது. *இறையனார் களவியலுரை* பதிப்புத் தொடர்பாகச் சில விபரங்கள் கேட்டுத் திருவாவடு துறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகருக்குத் தாமோதரம் பிள்ளை எழுதிய கடிதம் தொடர்பாகச் சாமிநாதையர் அவருக்கு எழுதிய முதல் கடிதத்துக்குத் தாமோதரம் பிள்ளை எழுதிய பதில் கடிதத்தின் சில பகுதிகளை ஐயர் *என் சரித்திரத்தில்* (பக்.552-53) தந்துள்ளார். அதன் ஒரு பகுதி வருமாறு:

இக்கடிதம் 25.3.1883இல் எழுதப்பட்டுள்ளது. அப்போது சாமிநாதையருக்கு வயது 28தான். ஐயர் அப்போது வெளியுலகில் அதிகம் அறியப்பட்டவரல்ல. 32 பக்கச் சிறு நூல் ஒன்றையே அவர் பதிப்பித்திருக்கி றார். தாமோதரம் பிள்ளையோ பிரபலஸ்தர். அப்போது அவருக்கு 51 வயது. சென்னையில் பெரிய துரைத்தன உத்தியோகம் பார்த்தவர். ஏற்கனவே *வீரசோழியத்தைப்* பதிப்பித்துவிட்டார். *இறையனார் களவியலுரை* அச்சாகிக்கொண்டிருந்த நேரம். *தொல்காப்பியப்* பதிப்பு முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். வயதிலும் அனுபவத்திலும் இளைஞரான ஐயருக்கு முதிர்ந்தவ ரான தாமோதரம் பிள்ளை எழுதியதாகக் கூறப்படும் இக்கடிதத்தில் காணப்படும் பணிவும் அடக்கமும் வியப்பூட்டுகின்றது. தன்னைவிட ஐயரை ஓர் உயர்ந்த நிலையில் வைத்தே தாமோதரம் பிள்ளை இந்தக் கடிதத்தை எழுதியிருக்கக் கூடும்.

*சிந்தாமணி* பதிப்புத் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளையே சாமிநாதையர் வெளி யிட்டிருக்கின்றார். 1887இல் வெளிவந்த *சீவக சிந்தாமணி* முதற்பதிப்புக்கு ஐயர் எழுதிய முகவுரையில் இருந்து பின்வரும் பகுதியைப் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை *தாமோதரம்* நூலுக்குத் தான் எழுதியுள்ள அணிந்துரையில் தருகிறார்.

"இந்த நூலையும் (சீவக சிந்தாமணி) உரையையும் பின்னும் இரண்டொருமுறை பரிசோதித்தற்கு விருப்புடையனேனும் இவற்றை விரைவிற் பதிப்பித்துப் பிரகடனஞ்செய்யும்படி, யாழ்ப் பாணம் ஸ்ரீ சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பலமுறை தூண்டினமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன்."

*சிந்தாமணியை* விரைவில் பதிப்பித்து வெளியிடும் படி ஐயரைத் தூண்டியது மட்டுமன்றி, தன்னிடமிருந்த இரண்டு *சிந்தாமணிப்* பிரதிகளையும் தாமோதரம் பிள்ளை ஐயருக்குக் கொடுத்து உதவியதாகவும் *சிந்தாமணி* முதற்பதிப்பு முகவுரைமூலம் அறிய முடிகிறது. *சிலப்பதிகாரப்* பதிப்பு முயற்சியிலும்

www.padippakam.com

தாமோதரம் பிள்ளை ஐயருக்குப் பிரதி கொடுத்து உதவியதாகச் *சிலப்பதிகாரப்* பதிப்புரையில் தகவல் உண்டு.

ஆயினும், தாமோதரம் பிள்ளை இறந்து நாற்பது வருடங்களுக்குப் பிறகு ஐயர் எழுதிய *என் சரித்திரத்* தில் இதற்கு முரண்பட்ட செய்திகளே உள்ளன. ஐயர் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு உழைத்துத் தயாரித்த *சிந்தாமணிப்* பிரதியை தாமோதரம் பிள்ளை தானே பதிப்பிக்க விரும்பியதையும் அது தொடர்பாக இருவருக்குமிடையே நடந்த நீண்ட உரையாடல் களையும் அதனால் ஐயர் அடைந்த மன உளைச் சலையும் *என் சரித்திரத்தில்* அவர் விவரித்துள்ளார் (பக். 470—76).

பிறிதோரிடத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்: "*சீவக சிந்தாமணிப்* பிரதியை நான் வாங்கிக் கொண்டதிலிருந்து அவருக்கு (தாமோதரம் பிள்ளைக்கு) மனத்துள் சிறிது வருத்தம் இருந்ததென்று குறிப்பாகத் தெரிந்தது. தாமும் *சிந்தாமணியைப்* பதிப்பிக்கப் போவதாகச் சிலரிடம் அவர் சொல்லிக் கொண்டிருந் தாரென்று தெரிந்தது. யார் என்ன செய்தாலும் சரி, நான் மேற்கொண்ட காரியத்தை இடையில் நிறுத்தப் போவதில்லை என்ற துணிவோடு *சிந்தாமணிப்* பதிப்பை நடத்திவந்தேன். அதில் ஈடுபட ஈடுபடச் சிலரால் நேரும் இடையூறுகளை அறவே மறந்துவிடும் நிலை எனக்கு ஏற்பட்டது" (*என் சரித்திரம்*, பக்.593).

தாமோதரம் பிள்ளையின் குணநலன் பற்றி வையாபுரிப் பிள்ளை (1968 : 236) பின்வருமாறு கூறுகின்றார்:

"பிள்ளையவர்கள் இக்கண்டனவுரை, வசவுரை முதலிய இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்திய வர்களேயல்லர். தமது அறிவொழுக்கங்களுக்கேற்பச் சிறந்த நற்குணமும் உடையவர்கள். அடக்கம் நிரம்பிய வர்கள். எல்லாம் அறிந்த பெரும்புலவர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளவில்லை. தமக்குத் தெரியாத பொருள் களைப் பிறரிடங் கேட்டுணர்வதில் சிறிதும் கூச்ச மற்றவர்கள். அவ்வாறு கேட்பது தமக்குச் சிறுமையா மென்று கருதியவர்களுமல்லர்."

இது தொடர்பாகத் *தொல்காப்பியப்* பொருளதி காரப் பதிப்புரையில் தாமோதரம் பிள்ளை குறிப்பிடு வது அவரது பதிப்பு நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"இலக்கண இலக்கியங்களில் வல்ல பெரியோர் இப்பதிப்பிலுள்ள குற்றங்களை அடியேனுக்குத் தெரிவிக்கும்படி பலமுறையும் பிரார்த்திக்கின்றேன். அன்னோர் அறிவிக்குந் திருத்தங்களைத் திரட்டி, இன்ன இன்ன வழு இன்ன இன்ன வித்துவான்களால் உணர்த்தப்பட்டனவென்று குறிப்பிட்டுத் *தொல் காப்பியப்* பதிப்புத் திருத்தமென்றொன்று உடனே அச்சிட்டு வெளியிடக் காத்திருக்கின்றேன். ஐம்பது புதுத் திருத்தங்களுக்கு ஒரு பிரதி என் நன்றியறி விற்கோர் அடையாளமாக அனுப்புவேன். இந்நூல் பிழையற வழங்கச் செய்தல் ஓர் பெரும் லோகோபகார மென்று உணர்வீராக" (*தாமோதரம்*: பக் 130).

சாமிநாதையர்மீது வையாபுரிப் பிள்ளைக்கிருந்த மதிப்பு எவ்வகையிலும் குறைந்ததல்ல. "தமிழிலக்கியச் சரித்திரத்தின் காலப்பகுப்பில் ஐயரவர்கள் தொண்டு

**சாமிநாதையர் எழுதிய சுயசரிதையில் தாமோதரம் பிள்ளையின் பதிப்பு முயற்சிகள் பற்றிய சில தகவல்களைக் குறிப்பிட்டுள்ளாரே அன்றி, அவரது பதிப்புத் துறை மேன்மை, அதன் முக்கியத்துவம் என்பன பற்றி சாமிநாதையர் சாதகமாக எதுவுமே குறிப்பிடவில்லை.**

புரிந்துவந்த சுமார் 50 ஆண்டுகளையும் சாமிநாதையர் காலம் என்றுதான் பிற்காலத்தில் வரும் சரித்திர ஆசிரியர்கள் கூறுவார்கள்" என்பது வையாபுரிப் பிள்ளையின் (1959:285) கூற்று. ஆயினும், பதிப்புத் துறையில் ஐயரிடம் தான் கண்ட குறைபாடுகளையும் அவர் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தியுள்ளார். *சிந்தாமணி* பதிப்பில் காணப்பட்ட பிழைகளைக் குறிப்பிட்டு வெளிவந்த கண்டனங்களின் அடிப்படை யில் (இவற்றில் சில யாழ்ப்பாணத் தமிழறிஞர்களால் வெளியிடப்பட்டவை) அவற்றில் தமக்குச் சரியெனத் தோன்றியவற்றைத் தமது பிற்பதிப்புகளில் ஐயர் உடன் பட்டு ஏற்றுக்கொண்டதைக் குறிப்பிடும் வையாபுரிப் பிள்ளை (1959:296) "ஐயர் ஓரிடத்திலேனும் இக்கண்டன வுரைகளால் இத்திருத்தமடைந்தது என்று தெரிவிக்கவே யில்லை" என்றும் "தமக்கு முன்பு பிறர் பரிசோதித்து வெளியிட்ட பதிப்புகளைப் பற்றியும் பெரும்பாலும் இவர் குறித்ததே இல்லை" என்றும் கூறுவார்.

ஏடுகளைப் பரிசோதித்தல், பதிப்பித்தல் தொடர்பாக ஐயரிடம் ஒரு தனி உரிமை மனப்பாங்கு இருந்ததாகத் தெரிகின்றது. இதுபற்றித் தன் அனுபவத்துடன் சேர்த்து வையாபுரிப் பிள்ளை (1959:298–99) இவ்வாறு கூறுகின் றார்: "பிரதிகள் தேடிப் பண்டை நூல்களைப் பதிப்பிடு வதில் முயன்றுவரும் அறிஞர்களுக்குப் பிரதிகளை ஈந்து உவக்கும் இன்பமும் எளிதில் கிடைப்பதா? இல்லை. ஐயருக்கு இந்த நல்லூழும் விதிக்கப்பட வில்லை. இதனால் ஒருவருக்கும் இவர் தன்னிடமுள்ள பிரதிகளைக் கொடுத்ததில்லை என்பது என் கருத்தல்ல. எனக்குச் சில பிரதிகள் உதவியிருக்கிறார்கள் என்பதை நன்றியுடன் பாராட்டுகிறேன். நானும் இவர்களுக்குப் பிரதிகள் உதவியுள்ளேன். கேட்போர் தகுதியையும் நோக்கத்தின் தூய்மையையும் மாத்திரம் கருதி இவர் பிரதிகள் உதவுவதில்லை. விலக்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் இவர் உதவுவார். அவ்வாறு தரும் பிரதிகளும் பெரும்பாலும் பயனற்றதாகவே இருக்கும்." தாம் உதவாதது மாத்திரமேயன்றி, பிற பேரறிஞர்களும் நூலைப் பதிப்பிடுவோர்க்கு உதவுதல் கூடாது என்று இவர் கடிந்துரைத்ததை நான் நன்கு அறிவேன். இவ் வகையான மனப்பான்மைகள் ஐயருக்கு இருந்தமை தமிழ் மக்களது துர்ப்பாக்கியமே."

ஆரம்ப காலத்திலிருந்தே ஐயரிடம் இத்தகைய மனப்பான்மை இருந்ததாகத் தெரிகின்றது. இது சுப்பிரமணிய தேசிகரிடமிருந்து இவருக்கு வந்ததாக இருக்கலாம். இது தொடர்பான சம்பவம் ஒன்றை ஐயர், *என் சரித்திரத்தில்* கூறியுள்ளார். ஐயர் அப்போது *சிந்தாமணிப்* பதிப்பிற்கான அச்சுப்படிகளைத் திருத்திக் கொண்டிருந்த காலம். ஒரு சமயம் சுப்பிரமணிய

www.padippakam.com

சுவடி
புத்தகப் பட்டறை
நூல்களை உருவாக்கும் மையம்

□ Books □ Magazines □ Brochures
□ Artworks □ Designing □ Translation □ Editing

❖ நீங்கள் பிரசுரிக்க விரும்பும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள்
❖ நீங்கள் வெளியிட விரும்பும் இதழ்கள்
❖ உங்கள் நிறுவனத்தினைப் பற்றிய அறிமுகக் கையேடுகள் (brochures)
❖ எல்லா விதமான வடிவமைப்புகள் (logo, wrapper designing, etc.)
❖ மொழிபெயர்ப்புகள் (தமிழ் - ஆங்கிலம்; ஆங்கிலம் - தமிழ்)

ஆகியவற்றைச் சிறந்த முறையில் செய்து தருகிறோம்.

❖ சிறந்த எடிட்டர்கள்
❖ சிறந்த மெய்ப்புநோக்காளர்கள்
❖ சிறந்த ஓவியர்கள்

ஆகியோரின் உதவியுடன் நவீன அழகியல் உணர்வுடன் நூல்களை உருவாக்கித் தருகிறோம்.

தயாரிப்பதற்கான அசல் கட்டணங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, எங்கள் கட்டணமாக மொத்தச் செலவில் 15% தனியாகப் பெற்றுக்கொள்ளப்படும்.

அயல்வாழ் தமிழர்களுக்கும் இதே முறைமை பின்பற்றப்படும்.

மின்னஞ்சல் மூலம் துரிதமான தொடர்புகள் பேணப்படும்.

அயலில் இருப்பவர்களுக்கு 'காலச்சுவடு எக்ஸிம்' ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் குறைந்த செலவில் நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 600 005
தொ.பே: 044 28481662, மின்னஞ்சல்: chuvadi@hotmail.com

தேசிகரிடம் *சிந்தாமணி* மெய்ப்புகளைக் காட்டிக் கொண்டிருந்தபோது அங்கு வந்திருந்த புகழ்பெற்ற ஈழத்துத் தமிழறிஞர்களுள் ஒருவரான கோப்பாய் சபாபதி நாவலர் தானும் அந்தப் புஸ்தகத்தின் மெய்ப்பைப் பார்த்துத் திருத்தித் தருவதற்கு அனுமதி கேட்டதாகவும் அதற்குத் தான் ஒன்றும் சொல்லாது மௌனமாக இருந்துவிட்டதாகவும் அவர் போனபின் சுப்பிரமணிய தேசிகர் தன்னை நோக்கி "கண்ட பேரிடம் இதைக் கொடுக்கக் கூடாது. நீங்கள் மிகவும் சிரமப் பட்டுச் செய்த திருத்தங்களையெல்லாம் தாமே செய்த வையாகச் சொல்லிக்கொள்வதற்கு இடமேற்படும். சபாபதிப் பிள்ளை விருப்பத்துக்கு இணங்க வேண்டாம்" என்று சொன்னதாகவும், தான் அவர் கருத்தின்படியே இருந்ததாகவும் கூறுகிறார் (*என் சரித்திரம்*, ப.591). ஈழத்துத் தமிழறிஞர் தொடர்பாக நிலவிய ஒதுக்கல் மனப்பாங்கையும் இச்சம்பவம் காட்டுவதாகக் கொள்ள லாம். *சீவக சிந்தாமணியை* தாமோதரம் பிள்ளை தாமே பதிப்பிக்க விரும்பியது தொடர்பாக ஐயர் எழுதியுள்ளவற்றையும் இதனுடன் சேர்த்து நோக்க முடியும். ஆயினும், சுப்பிரமணிய தேசிகருக்கும் சபாபதி நாவலருக்கும் இடையே நிலவிய நீண்ட உறவைச் சுட்டிக்காட்டும் பூலோகசிங்கம் (2002:137), "சுப்பிரமணிய தேசிகர் 'கண்ட பேர்' வரிசையிலே சபாபதி நாவலரை யும் அடக்கியதாக '*என் சரித்திர*' ஆசிரியர் கூறுவதை நம்ப முடியாமலிருக்கிறது" என்று கூறுவதையும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும்.

இறுதியாகச் சாமிநாதையரையும் தாமோதரம் பிள்ளையையும் பதிப்பியல் நோக்கில் சற்று விரிவாகவே ஒப்புநோக்கியுள்ள கைலாசபதியின் (1986: 23-27) குறிப்புடன் இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

"இன்று தாமோதரம் பிள்ளை பதிப்புகளையும் சாமிநாதையர் பதிப்புகளையும் ஒப்பு நோக்கி ஆராயும் வாய்ப்பு எமக்குண்டு. அவ்வாறு பார்க்கும்போது காலவாராய்ச்சி, சரித்திரவுணர்வு, ஒப்பியல் நோக்கு, திறனாயும் தன்மை, ஆய்வறிவு நேர்மை, முறையியல் நுட்பம் ஆகியன ஐயரிலும் பார்க்கப் பிள்ளையிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு.

"இதை இன்னொரு விதத்திலும் விவரித்தல் கூடும். சாமிநாதையர் அநேக நூல்களைப் பதிப்பித்துள்ளார். எனினும், மூலபாட ஆராய்ச்சியினைக் கோட்பாட்டு அடிப்படையில் மேற்கொண்டார் என்று கூறுவதற் கில்லை. அனுபவத்தால் அறியப்படுகிறவற்றை ஆதார மாய்க் கொண்டே நூல்களைப் பதிப்பித்துவந்தார். மூலபாட ஆராய்ச்சி சம்பந்தமான நெறிகளில் அவருக்கு அக்கறையிருந்ததற்கோ அவற்றில் ஒன்றையோ பலவற்றையோ தமது ஆய்வுகளுக்குத் துணை கொண்டார் என்பதற்கோ அவரது பதிப்புரைகளில் எவ்விதச் சான்றுமில்லை. மூலபாட ஆராய்ச்சி குறித்து அவரது விவரணங்களும் அவதானிப்புகளும் மிகச் சொற்பமே.

"ஆனால் சி.வை. தாமோதரம் பிள்ளை மூலபாடத் திறனாய்வை முழுமையான ஆய்வுத் துறையாகக் கொண்டு செயற்பட்டார். அனுபவ அறிவுக்கு அனுசரணையாக மூலபாடத் திறனாய்வுக் கொள்கைகளைக் கைக்கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அவர் எழுதிய நீண்ட பதிப்புரைகளைப் படிப்போர்க்கு, பதிப்புக் கலையைப் பற்றி எத்துணை நுட்பமாகவும் விரிவாகவும் அவர் சிந்தித்துச் செயலாற்றினார் என்னும் உண்மை தெரியவரும். ஐயருக்கும் பிள்ளையவர்களுக்கும் அணுகுமுறையிலி ருந்த அடிப்படை வேறுபாடே இவ்வாறு வெளிப் பட்டதெனலாம்."

### உசாத்துணை

கைலாசபதி, க. (1986). *ஈழத்து இலக்கிய முன்னோடிகள்*, மக்கள் வெளியீடு, சென்னை.

சாமிநாதையர், உ.வே. (1990). *என் சரித்திரம்* (3ஆம் பதிப்பு), சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

தாமோதரம்பிள்ளை, சி.வை. (1971). *தாமோதரம்* (பதிப்புரைகளின் தொகுப்பு), கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

பூலோகசிங்கம், பொ. (2002). *தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்* (2ஆம் பதிப்பு), குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1968). *தமிழ்ச் சுடர்மணிகள்* (4ஆம் பதிப்பு), பாரி நிலையம், சென்னை.

Zvelebil, Kamil (1973): *The Smile of Murugan On Tamil Literature of South Asia*, E.J. Brill, Leiden.

www.padippakam.com

*With Best Compliments from*

தினமலர்

தேசியத் தமிழ் நாளிதழ்

**DINAMALAR**

National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Vellore ✧ Pondicherry
Erode ✧ Salem ✧ Coimbatore
Tiruchi ✧ Madurai
Tirunelveli ✧ Nagercoil

விளம்பரம்

படிப்பகம்

www.padippakam.com

## உ.வே.சா.வும் பதிப்பு நெறிகளும்

# *சிந்தாமணியே கிடத்தியால்

பெருமாள்முருகன்


உ.வே.சா. 150

உ.வே. சாமிநாதையரின் *சீவக சிந்தாமணிப்* பதிப்பு, அவருடைய வரலாற்றில் மட்டுமன்றித் தமிழ்ப் பதிப்பு வரலாற்றிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. அப்பதிப்பு தொடர்பான செய்திகள் மட்டும் அவரது *என் சரித்திரம்* நூலில் நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்கள் உள்ளன. அந்நூல் பதிப்பில் அவர் ஈடுபடக் காரணம், அதிலேற்பட்ட சிரமங்கள், பதிப்புக்கான உழைப்பு, நூல் வெளியானபின் எதிர்கொண்ட பாராட்டுகள், கண்டனங்கள் என விரியும் அப்பகுதி பலவித உணர்ச்சிகள் கலந்து மயக்கும் சிறப்புடையதாகும். 1887ஆம் ஆண்டு வெளியான *சீவக சிந்தாமணி* ஐந்நூறு பிரதிகள் அச்சிடப்பட்டன. அவற்றுள் நூறு பிரதிகள் அச்சகத்தாரின் கவனக் குறைவால் வீணாகி விட்டன. மீதம் நானூறு பிரதிகள் மட்டும் விநியோகிக்கப்பட்டன. மிகப் பெரும் பதிப்பு நிகழ்வு நானூறு பிரதிகளாகத்தான் தமிழகத்தில் உலவியிருக்கிறது.

ஐயரின் *சீவக சிந்தாமணி* முதல் பதிப்பைப் பார்க்க வேண்டும் என்னும் பெருவிருப்பம் எனக்குள் இருந்துவந்தது. அரிய நூல்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் திரு. நா. ப. ராமசாமி அவர்களது நூலகத்தில் எதேச்சையாகப் பொ. வேல்சாமியும் நானும் அப்பதிப்பைக் கண்டோம். பதிப்பு முறைகளையும் அச்சு நுட்பங்களையும் உ.வே.சா. கற்றுக் கொள்ளக் காரணமாக இருந்த அப்பதிப்பைக் கையில் ஏந்தியபோது நூற்றாண்டு கடந்து சென்று என் மனம் பரவசத்துள் ஆழ்ந்தது. சிற்றிலக்கியங்கள், தல புராணங்கள் ஆகியவற்றுக்குள் மூழ்கிக் கிடந்த ஐயரை மடை மாற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களின் மேல் பார்வையைத் திருப்பச் செய்தவர் சேலம் இராமசுவாமி முதலியார். *சீவக சிந்தாமணியை* ஐயர் பதிப்பிக்கக் காரணமே இராமசுவாமி முதலியார்தான். அவருடனான சந்திப்புப் பற்றி *என் சரித்திரத்தில்* விரிவாக ஐயர் எழுதியுள்ளார். அவரைக் கௌரவிக்கும் விதமாக முதல் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் '**சேலம் ஸ்ரீ இராமசுவாமி முதலியாரவர்கள் விருப்பத்தின்படி**' என்று சேர்த்துள்ளார். பிந்தைய பதிப்புகளில் இது இல்லை.

ஐயரின் வாழ்நாளில் *சீவக சிந்தாமணியின்* மூன்று பதிப்புகள் வந்துள்ளன. 1887, 1907, 1922 ஆகிய ஆண்டுகளில் முறையே இப்பதிப்புகள் வெளியாயின. முதல் பதிப்பைவிட இருநூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்கள் கூடி அடுத்த பதிப்புகள் அமைந்தன. பக்க எண்ணிக்கையின் கூடுதல் அவரது உழைப்புக்குச் சான்றாகும். இம்மூன்று பதிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஐயரின் பதிப்புப் பார்வையில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றை அறியலாம். பதிப்புக்குப் பதிப்பு, பிழையான பாடங்களைக் கண்டறிந்து திருத்தியுள்ளார். தகவல் பிழைகளைச் சரிசெய்துள்ளார். 'திருத்தக்க தேவர் சரித்திரச் சுருக்கம்' என்னும் பகுதியில் 'மதுரைக்குச் சென்று சங்கப் புலவர்களைத் தேவர் கண்டார்' என எழுதியதைப் பின்னர் 'ஜைன சங்கம்' என்று மாற்றியுள்ளார். நச்சினார்க்கினியர் வரலாறு கூறும்போது, 'திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளுக்கும் உரை செய்தருளினார்' என்று எழுதியதை இரண்டாம் பதிப்பில் நீக்கிவிட்டார்.

ஐயருடைய பதிப்புகளில் இடம்பெறும் மிகச் சிறப்பான பகுதியாகிய 'அரும்பத அகராதி' சீவக

* *சீவக சிந்தாமணி, பாடல் எண் 311*


உ.வே.சா. பதிப்பாசிரியராகக் காரணமாக இருந்த சேலம் இராமசுவாமி முதலியார்.

படிப்பகம்


www.padippakam.com



*சிந்தாமணி* முதல் பதிப்பில் இல்லை. இரண்டாம் பதிப்பில் இது விரிவாக இடம்பெற்றுள்ளது. அரும்பதங்கள் அகர வரிசையில் தரப்பட்டு, குறிப்பிட்ட சில சொற்களுக்குப் பொருள்களும் வழங்கப் பட்டுள்ளன. சொற்கள் இடம்பெறும் பக்க எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பதிப்பில் பக்க எண்கள் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகச் செய்யுள் எண்கள் தரப்பட்டுள்ளன. இந்த மாற்றம் போகிற போக்கில் நிகழ்ந்துவிட்ட சாதாரண மாற்றம் அல்ல. பதிப்பிலே ஆழ்ந்து பணியாற்றிய ஐயர், அனுபவத்தி னால் பெற்ற வளர்ச்சி.

அரும்பத அகராதிக்குப் பக்க எண் கொடுக்கப் பட்டால், அதன் அடுத்தடுத்த பதிப்புகளில் அப்படியே பயன்படுத்த இயலாது. பதிப்புக்குப் பதிப்பு சேர்க்கை களும் திருத்தங்களும் இடம்பெறுப் பக்கங்கள் பலவாகக் கூடக் கடுமையாக உழைத்தவர் அவர். பதிப்பாசிரியருக்குத் தேவைப்படும் திருப்தியற்ற மனம் உடையவர் அவர். ஆராய்ச்சிக்குப் பயன்படும் விதமாகத் தம் பதிப்பை உயர்வுபடுத்துவதில் சளைக் காத கவனம் கொண்டவர். ஆகவே பின்வரும் பதிப்பு களில் பக்க எண்ணிக்கை, அமைப்புகள் மாறுதலடை யும் என்பதை உணர்ந்து, அரும்பத அகராதியில் பக்க எண்களை நீக்கிச் செய்யுள் எண்களைத் தந்துள்ளார். செய்யுள் வரிசை மாற்றமடையாதது. செய்யுள் எண்கள் கொடுக்கப்பட்டால் எத்தனை பதிப்புக்கென்றாலும் தொடர்ந்து அப்படியே பயன் படுத்தலாம். இடையிடையே சேர்க்கை, நீக்கம் செய்தாலும் பிரச்சினையில்லை. பொருளடைவு, அரும்பத அகராதி ஆகியன தயாரிக்கும் அயர்ச்சி யூட்டும் வேலையைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இதனால் தவிர்க்கப்படுகிறது. பயன்படுத்தும் வாசகருக்கும் சிரமம் இல்லை. அத்தோடு, பதிப்பாசிரியரின் வாழ்நாளின் பிறகு மீண்டும் பதிப்பிப்போருக்கும் எளிது.

பதிப்பைப் பயன்படும் முறையிலும் நீண்டநாள் நிலைக்கும் வகையிலும் உருவாக்கும் திறன் படைத்தவர் ஐயர். 'சீவக சிந்தாமணி ஆராய்ச்சி விளக்கம்' என்னும் அட்டவணைப் பகுதி இரண்டாம் பதிப்பில் உள்ளது. 41 பக்கங்களிலான இப்பகுதியை மூன்றாம் பதிப்பில் 113 பக்கங்களாக விரிவுபடுத்தியுள்ளார். அதேபோல 'விசேடக் குறிப்பு' என்னும் பகுதியும் இரண்டாம் பதிப்பில் தொடங்கிப் பின்னர் பெருக்கமடைந்தி ருக்கிறது. ஐயரின் இறப்புக்குப் பின் வெளியிடப்பட்ட பதிப்புகளில் இப்பகுதிகள் நீக்கப்பட்டுக் குறிப்புரை யாக்கி அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இது ஐயரின் உடன்பாட்டோடு செய்யப்பட்டதா என்பது தெரியவில்லை. *மணிமேகலைப்* பதிப்பில் பௌத்தத் தத்துவத்தை விளக்கும் 'புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்' என்னும் பகுதியை அவர் எழுதியிருந்தார். பின்னால் அது தனி நூலாக வெளிவந்தது. தனி நூலான பிறகும் *மணிமேகலைப்* பதிப்பில் அப்பகுதியை நீக்காமல் இடம்பெறச் செய்துள்ளார் அவர். அவரது இறப்புக்குப் பின் வந்த பதிப்புகளில் 'தனிநூலாக வந்த ஒன்று திரும்பவும் எதற்கு' எனக் கருதி அப்பகுதி நீக்கப்பட்டுவிட்டது. *மணிமேகலையைப்* பயன்படுத்தும் ஒருவருக்கு அதற்


ஸ்ரீ
திருத்தக்கதேவரியற்றிய
சீவகசிந்தாமணிமூலமும்
மதுரையாசிரியர் - பாரத்துவாசி
நச்சினார்க்கினியருரையும்.

இவை
சேலம் ம-ா-ா-ஸ்ரீ
இராமசுவாமிமுதலியாரவர்கள் விருப்பத்தின்படி
திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
ஸ்ரீ-ல-ஸ்ரீ. சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்
அந் ஆதீனத்துமஹாவித்துவான்
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
ஆகிய இவர்கள் மாணாக்கரும்
கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய
உத்தமதானபுரம்
வே. சாமிநாதையரால்
பரிசோதித்து

சென்னை:
த. கோவிந்தஆசாரியாரது
திராவிடரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.
விலை - ரூபா அ.
1887.
[Copyright Registered.]

உ.வே.சா. பதிப்பித்த *சீவக சிந்தாமணி* முதல் பதிப்பின் முன் அட்டை.

குள்ளேயே போதிய தகவல்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று கருதிய ஐயரின் மனப்பான்மைக்கும் 'வீணாக இத்தனை பக்கங்கள்' என்று அச்சுச் செலவு ஒன்றையே கருத்தாகக் கொண்ட பிறருக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இது.

பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லிலும் பெரும் கவனம் கொண்டவர் ஐயர். *புறநானூற்றைப்* பழைய உரையுடன் அவர் பதிப்பித்தார். அவ்வுரையை எழுதியவர் யாரெனத் தெரியவில்லை. ஆகவே 'புறநானூறு மூலமும் பழைய உரையும்' என்று தலைப் பிட்டார். அவருக்குப் பின் உ.வே.சா. நூலகம் வெளி யிட்ட பதிப்பு, அதனைப் பின்பற்றித் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பதிப்பு ஆகியவற்றில் 'பழைய' என்னும் சொல் நீக்கப்பட்டுப் 'புறநானூறு மூலமும் உரையும்' என்று மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. உரை யாருடையது என்பதைத் தலைப்பிலிருந்து வாசகர் உணர்ந்துகொள்ள முடியாது. உ.வே.சா.வே உரை எழுதியுள்ளார் எனத் தவறாகப் புரிந்து கொள்ளவும் நேரும். 'பழைய' என்னும் ஒரு சொல் அத்தனை முக்கியத்துவம் உடையது.

ஐயரின் பதிப்பு நூல்களை இருவிதமாகக் காண வேண்டும். ஐயரின் வாழ்நாளில் வந்த பதிப்புகள், அவர் மறைவுக்குப் பின் வெளியிடப்பட்ட மறுபதிப்பு கள் என அவை அமையும். ஐயரின் வாழ்நாளில்

படிப்பகம்

www.padippakam.com

வந்த பதிப்புகள், பதிப்புப் பார்வையில் அவரிடம் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் இலக்கியத்தில் அவர் பெற்ற புலமையின் ஆழத்தையும் மதிப்பிட உகந்தவை யாகும். அவரது வாழ்நாளின் பின் உ.வே.சா. நூலகமும் பிறரும் வெளியிட்ட மறுபதிப்புகள் ஐயரின் நோக்கைப் புலப்படுத்துவனவல்ல. பதிப்புத் தொடர்பான நுட்பங்களை அறியாமல் கடனுக்காக வெளியிடப் பட்டவை அவை. ஐயரோடு பதிப்பு முயற்சிகள் முடிந்துபோயின என்னும் நிறைவெண்ணம் ஏற்பட்டு விட்டதால், அடுத்தகட்ட வளர்ச்சி பற்றிய சிந்தனை இல்லாமல் இந்தப் பதிப்புகள் வந்துள்ளன.

ஓலைச் சுவடியிலிருந்து எடுத்து அச்சிடுவதுதான் பதிப்பு என்னும் மேலோட்டமான பார்வை தமிழ்ச் சமூகத்தில் நிலவி வருவதால், ஐயரின் பதிப்புகள் அடுத்த கட்டத்தில் எப்படி அமைய வேண்டும் என்னும் சிந்தனை இங்கு தோன்றவில்லை. ஓலைச் சுவடியிலிருந்து எடுத்தெழுதிய பின் பதிப்புக்கென அவர் செய்திருக்கக்கூடிய வேலைகள்தான் பதிப்பு வரலாற்றில் அவரை நிலைநிறுத்தியிருக்கின்றன. ஆகவே, பதிப்பு அடுத்தடுத்த கட்டங்களில் செழுமை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டியது என்னும் பார்வை இங்கு உருவாக வேண்டும். கல்விப்புலம் சார்ந்தோர் ஆய்வுக்கென இத்தகைய பதிப்புகளையே பெரிதும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும் போதே பதிப்புச் செழுமையின் தேவை உணரப்படும்.

ஐயரின் பதிப்புகளை மறுபதிப்புச் செய்யும் முறை களைப் பற்றிச் சில கருத்துகளை இனிக் காண்போம். அவர் பதிப்பித்த மிக முக்கியமான நூல்கள் அவரது காலத்திலேயே பெரும்பாலும் மூன்று பதிப்புகள்வரை வந்துள்ளன. ஒவ்வொரு பதிப்பும் அவரது உழைப்பினால் மேன்மேலும் செழுமை பெற்றுள்ளது. ஆகவே அவரது வாழ்நாளில் இறுதியாக வந்த பதிப்பையே மறுபதிப்புச் செய்ய வேண்டும் என்பது சரியானது. ஆனால் அந்த இறுதிப் பதிப்பில் எத்தகைய மாற்றத்தையும் செய்யாமல், ஐயர் எப்படி வெளியிட்டிருந்தாரோ அப்படியே அச்சுப் பிசகாமல் வெளியிட வேண்டும். ஏதாவது மாற்றங்கள் செய்யப் பட்டால், அவை ஐயர் செய்தவை அல்ல என்று தெரியும்படி தனித்துக் காட்டப்பட வேண்டும். *சீவக சிந்தாமணியை* மறுபதிப்புச் செய்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் நிழற்படப் பதிப்பாக வெளியிட்டுள் ளது. நிழற்படப் பதிப்புக்கு எடுத்துக்கொண்டிருக்க வேண்டிய பிரதி 1922இல் ஐயர் வெளியிட்ட மூன்றாம் பதிப்புதான். ஆனால் அதற்குப்பின் உ.வே.சா. நூலகம் வெளியிட்ட ஏழாம் பதிப்பே மூலமாகக் கொள்ளப் பட்டுள்ளது. ஏழாம் பதிப்பு முன்னுரையில் 'இப்பதிப்பில், உரையில் வரும் மேற்கோள் நூல்களின்

**பதிப்புக்குப் பதிப்பு சேர்க்கைகளும் திருத்தங்களும் இடம்பெற்றுப் பக்கங்கள் பலவாகக் கூடக் கடுமையாக உழைத்தவர். திருப்தியற்ற மனம் உடையவர். ஆராய்ச்சிக்குப் பயன்படும் விதமாகப் பதிப்பை உயர்வுபடுத்துவதில் சளைக்காத கவனம் கொண்டவர்.**

அகர வரிசையும் மேற்கோள் பாடல்களின் முதற் குறிப்பும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன' என்று குறிப் பிடப்பட்டுள்ளது. சேர்க்கை பற்றிய குறிப்பு மட்டும் உள்ளதே தவிர நீக்கம், மாற்றம் பற்றிய தகவல் எதுவும் தரப்படவில்லை.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட *புறநானூறு* பதிப்புக்கும் ஐயரது காலப் பதிப்பு மூலமாகக் கொள் ளப்படவில்லை. உ.வே.சா. நூலகம் வெளியிட்ட பதிப்பே ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ளது. இம்முறை பதிப்புக்குப் போதுமானதல்ல. வெளியிடுவோர் செய்யும் மாற்றங்கள் பற்றியும் பதிப்பு பற்றிய முழுமையான பார்வை இல்லாமலும் வெளியிடப் பட்ட உ.வே.சா. நூலகப் பதிப்புகளை ஆதாரமாகக் கொள்வது ஐயரின் பதிப்புக்குச் சிறப்புச் சேர்ப்பதாகாது. பார்ப்பனர் என்பதால் ஐயரைப் பதிப்பு வரலாற்றிலி ருந்து ஓரங்கட்ட விழையும் நிகழ்ச்சிகளும் நடந்ததுண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதாரால் அது முடியவில்லை. கவலையை விடுங்கள், நானிருக்கிறேன் என்று களத்தில் குதித்தது ஐயர் பெயரில் இயங்கிவரும் நூல் நிலையம். இத்தகைய வரலாற்று முரண் எல்லாக் காலத்திலும் நடந்துகொண்டுதானிருக்கிறது.

ஐயரின் பதிப்புகளை இன்றைய காலத்திற்கும் தேவைக்கும் ஏற்பச் செழுமைப்படுத்துவது எவ்வாறு? 1887இல் அவர் வெளியிட்ட *சீவக சிந்தாமணிப்* பதிப்பு எப்படி இருந்தது என்று நாம் அறிய வேண்டும். அதே சமயம் அடுத்தடுத்த பதிப்புகளில் அவர் என்னென்ன மாற்றங்கள் செய்தார், எத்தகைய சேர்க்கை களைக் கொடுத்தார் என்பவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். இது வெறுமனே உணர்ச்சி வசப்பட்டு என் மனம் கொள்ளும் ஆசையல்ல. 'தமிழ்த் தாத்தா' என்று பட்டம் கொடுத்துச் சிலை வைத்துவிட்டதால் உ.வே.சா.வைப் போற்றிப் பாராட்டிவிட்டோம் என்பதாகாது. அவரது வரலாற்றோடு உணர்ச்சிகரமான தொடர்புடையது *சீவக சிந்தாமணி* முதல் பதிப்பு. தமிழ்ப் பதிப்பு வரலாற்றிற்கு மிக முக்கியமான ஆதாரமாக விளங்குவதும் அப்பதிப்பாகும். இத்தகைய சிறப்புடைய ஒரு பதிப்பை அடுத்தடுத்த தலை முறைக்குக் கொண்டு சேர்ப்பது அவசியம். 'என் சரித்திரம்' வாசிக்கும் எவருக்கும் *சீவக சிந்தாமணி* முதல் பதிப்பைப் பார்க்கும் ஆவல் நிச்சயம் எழும். அந்த ஆவலைத் தீர்க்கும் வகையில் அப்பதிப்பை அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இரண்டாம், மூன்றாம் பதிப்புகளில் ஐயர் பல மாற்றங்களைச் செய்துள்ளார். '... இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்த பின்பு கிடைத்த சில கையெழுத்துப் பிரதிகளாலும் செய்துவந்த நூல்களின் ஆராய்ச்சி களாலும் இந்நூலும் இவ்வுரை முதலியனவும் சிலசில

விடுபட்ட குறிப்பு

சென்ற இதழில் பி.ஏ. கிருஷ்ணன் எழுதிய 'பதுங்கிப் பாயும் கடல்' என்னும் கட்டுரையைப் படித்து முக்கியமான சில திருத்தங்களைச் செய்து உதவிய டொராண்டோ வெங்கட்ரமணனுக்குக் கட்டுரை ஆசிரியர் நன்றி தெரிவித்திருந்தார். அக்குறிப்பு விடுபட்டுப் போயிருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



திருத்தங்களையும் பொருட்பெருக்கத்தையும் விளக்கத்தையும் இப்போது அடைந்துள்ளன' என எழுதுகிறார். 'சிலசில திருத்தங்கள்' எவை என்பதைக் குறிப்பாகச் சுட்டவில்லை. முதற்பதிப்புக்குப் பின் இவ்வாறு அவர் செய்துள்ள மாற்றங்களைக் காட்டும் வகையில் இப்போதைய மறுபதிப்பு அமைய வேண்டும். முதல் பதிப்பில் அவர் கொண்டுள்ள மூலபாடங்கள் பல, இரண்டாம், மூன்றாம் பதிப்புகளில் திருத்தம் பெற்றுள்ளன. உரையில் மாறிய பாடங்களும் பாடபேதங்களும் பல. இவற்றை ஓரளவு தொகுத்து *டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்* என்னும் நூலில் இரா. காசிராஜன் கொடுத்துள்ளார். இவ்வாறு ஐயர் செய்த மாற்றங்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து முதற் பதிப்பு நூலுக்குள்ளேயே இடம்பெறும் வகையில் இப்போதைய பதிப்பு அமைய வேண்டும். சிறுசிறு திருத்தங்கள் அந்தந்தப் பக்கங்களிலேயே அடிக்குறிப்பாக இடம்பெறலாம். பெரும் மாற்றங்கள், சேர்க்கைகள் ஆகியவை இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு எனப் பிரிக்கப்பட்ட முறையில் பிற்சேர்க்கை யாக அமையலாம்.

அதாவது, இப்போதைய பதிப்பு, ஐயரின் முதல் பதிப்பை மூலபாடமாகக் கொண்டிருக்க வேண்டும். பிந்தைய பதிப்புகளில் நேர்ந்த மாற்றங்களையும் காட்ட வேண்டும். இப்பதிப்பைக் கையில் வைத்திருக்கும் ஒருவர், 'ஒவ்வொரு பதிப்பிலும் புதிது புதிதாக எதையாவது சேர்க்க வேண்டுமென்று விழைந்த ஐயரவர்களின் ஆர்வமும் அதன் காரணமாகப் பதிப்புத் துறையில் அவரடைந்த முதிர்ச்சியும் தெற்றெனப் புலப்படும்' எனக் காசிராஜன் கூறுவதை ஆதார பூர்வமாக உணர வாய்க்கும். ஐயரின் பதிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிடைக்கும் வியப்புகளை இத்தகைய பதிப்பொன்றால் இன்றைய வாசகர் பெற முடியும். இந்தப் பதிப்பு, பதிப்பு வரலாற்று ஆராய்ச்சிக் கும் ஒப்பீட்டு ஆராய்ச்சிக்கும் உதவுவதோடு அவ் வாய்வுகளைச் சுலபமாக்கும். இன்று ஆய்வில் ஈடுபடு வோர் ஆதாரத் தரவுகளைச் சேகரிப்பதிலேயே பெரும்பான்மையான உழைப்பைச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆதாரத் தரவுகளைத் தரும் பதிப்பொன்று வருமானால் ஆராய்ச்சியாளர், பதிப்பாளரின் வேலையில் ஈடுபட வேண்டியிராது.

இத்தகைய ஒரு பதிப்பை மேலும் செம்மை செய்ய வேண்டுமென்றாலும் இயலும். ச. வையாபுரிப் பிள்ளை யின் உதவியால் பதிப்பித்துச் சைவ சித்தாந்த சமாஜம் வெளியிட்ட *சீவக சிந்தாமணி மூலம்* உள்ளது. ஐயர் கொண்ட பாடங்கள் பலவற்றை வையாபுரிப் பிள்ளை அதில் திருத்தம் செய்துள்ளார். அத்தகைய திருத்தங்களையும் இப்போதைய பதிப்பில் குறிப்பிட்டுக் காட்டலாம்.

பதிப்பு என்பது ஒரு கட்டத்தோடு நின்றுவிடும் வேலையல்ல. புதிது புதிதாகச் செய்துகொண்டே யிருக்கக் காலம் நிர்ப்பந்திக்கிறது. காலத்தின் குரலுக்குத் தமிழ்ச் சமூகம் செவி கொடுக்குமா?

---

பயன்பட்ட நூல்கள்


1. சேலம் ஸ்ரீ இராமசுவாமி முதலியாரவர்கள் விருப்பத்தின்படி திருக்கைலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் (மேற்படி) ஆதீனத்து மஹாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆகிய இவர்கள் மாணாக்கரும் கும்பகோணம் கவர்ன் மென்டு காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய உத்தமதான புரம் வே. சாமிநாதையர் (ப. ஆ.), *ஸ்ரீ திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி மூலமும் மதுரையா சிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்,* திராவிட ரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1887.
2. சென்னை, ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம், வே. சாமிநாதையர் (ப. ஆ.), *திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி மூலமும் மதுரையாசிரியர்–பாரத்துவாசி நச்சினார்க் கினியருரையும்,* ப்ரெஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1907.
3. உத்தமதானபுரம் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் வே. சாமிநாதையர் (ப. ஆ.), *திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும்,* தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986.
4. உ.வே. சாமிநாதையர் (ப. ஆ.), *புறநானூறு மூலமும் உரையும்,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.
5. உ.வே. சாமிநாதையர் (ப. ஆ.,) மணிமேகலை, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1981.
6. உ.வே. சாமிநாதையர், *என் சரித்திரம்,* உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1990.
7. இரா. காசிராஜன், *டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.


குறிப்பு: R.A. Fisher எழுதிய 'The Genetical Theory of Natural Selection' என்னும் நூல் முதற்பதிப்பாக 1930இல் வெளிவந்தது. அவரே திருத்தங்களுடன் 1958இல் இரண்டாம் பதிப்பு வெளியிட்டார். முதற்பதிப்பு மூலம், இரண்டாம் பதிப்பு திருத்தம் இரண்டும் ஒருசேர அமையுமாறு Henry Bennett என்பவர் பதிப்பித்த நூல் 1999இல் (Oxford University Press, New York) வெளிவந்தது. 'A Complete Variorum Edition' என்று குறிப்பிடப்பட்டுள்ள அந்நூலை அறிமுகப்படுத்தித் தந்துதவியவர் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) திரு. ந. கந்தசாமி அவர்கள். அந்நூலே உ.வே.சா. நூல் பதிப்புப் பற்றிய சிந்தனையை உருவாக்கியது. ந. கந்தசாமி அவர்களுக்கு நன்றி.

இக்கட்டுரை எழுதத் தூண்டுதலாக இருந்த பொ. வேல்சாமிக்கும் நூல்கள் தந்துதவிய நா.ப. ராமசாமி அவர்களுக்கும் நன்றிகள்.

*22, 28, 46 ஆகிய பக்கங்களில் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் ஆனந்தவிகடனில் 1940—42 காலகட்டத்தில் என் சரித்திரம் தொடராக வெளிவந்தபோது பிரசுரிக்கப்பட்ட படங்களிலி ருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. படங்களை நிழற்படம் எடுக்கவும் உ.வே.சா. சிறப்புப் பகுதியில் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளித்த ஆனந்தவிகடன் நிர்வாகத்தினருக்கு எங்கள் நன்றி.*

*பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கட்டுரை தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்விதழில் இடம்பெறவில்லை. அடுத்த இதழில் வெளியாகும்.*

*— ஆசிரியர் குழு*

படிப்பகம்

www.padippakam.com



# வெளிப்பாடு

அரவிந்தன்


நிசப்தத்தின் மீது செலுத்தப்பட்ட கொடும் வன்முறையென வீட்டினுள்ளெங்கும் வெடித்துச் சிதறியது அழைப்பு மணியின் ஓசை. முறுக்கேறிவந்த இறுக்கத்தின் வீச்சிற்குள் சிறைப்பட்டுத் தன்னிச்சையாய் இயங்கிக்கொண்டிருந்த உடலுடன் இசைவு கொண்ட மனத்தின் தலைமீது இறங்கிய இரும்புத் தடியென விழுந்த அந்த ஓசை மனத்தை உடலிலிருந்தும் உடலை இறுக்கத்திலிருந்தும் பிரித்துப்போட்டது. தளர்ந்து தொய்ந்து விழுந்த கணத்தில் மனம் அரற்றத் தொடங்கியது. இன்னும் எத்தனை நாள்... ஏங்கி, கனவு கண்டு, ஆசைத் தீ பற்றி எரிய, உடலும் மனமும் சூடேறிக் கொதித்து, திட்டமிட்டு, கவனமாகக் காரியத்தில் இறங்கி... எல்லாம் வீணாயின. கடவுள்களும் மனிதர்களும் என்னைக் கைவிட்டுவிட்டார்கள். தவத்தின் வேட்கையைப் பரிகசிக்கும் தோல்விகளைப் பரிசாகத் தந்துவருகிறது காலம். அலட்டிக்கொள்ளாதே, அலட்டிக்கொள்ளாதே என்னும் உனது ஆறுதல் வார்த்தைகள் ஆழ்ந்த வெறுப்பை ஏற்படுத்துகின்றன.

ஓயாத ஓசைகள். நுரைப் புகையைக் கக்கியபடி பூமியைத் துளைத்துவிடும் வேகமும் ஆவேசமும் கொண்டு பாய்ந்து வரும் திறன் படைத்த காட்டருவியின் ஊற்றுக்கண்ணை மூடிவிடும் ஓசைகள். மரங்களைத் துளைத்துச் செல்லும் வீரியத்தைத் தாங்கியபடி சீறக் காத்திருக்கும் அம்பின் பிருஷ்டத்தைத் தாங்கிய கயிற்றை அறுத்துவிடும் ஓசைகள். யானையின் மத்தகத்தை ஒரே அடியில் பிளந்து விடும் பலம் கொண்ட சிங்கத்தின் காலை முறித்துப் பாய்ச்சலை ஒடுக்கும் ஓசைகள். மனித ஓசைகள். மிருக ஓசைகள். இயந்திரங்களின் ஓசைகள். அமைதியின் தனிமையில் அமிழ்ந்து, மோனத் தவம் புரிந்து, இழைந்து இழைந்து துல்லியமாய்ச் சுருதி கூட்டிப் பாடத் தொடங்குகையில் தொண்டையின் நரம்புகளைக் கிழித்துப்போடும் ஓசைகள். அழைப்பு மணிகளின் அலறல், வாகனங்களின் ஆபாசக் கத்தல்கள், எருமைகளின் எக்காளச் சிரிப்பொலிகள், குழாய்களிலிருந்து சீறும் கொடிய பாம்புகளின் சிருங்கார ஓலங்கள், ஆங்கார இருமல்கள், வெறுப்பைக் கக்கும் காறித் துப்பல்கள், வெறித்தனமான கோஷங்கள், களிகூடிய கூச்சல்கள், அச்சத்தின் கூக்குரல்கள், அபலைகளின் கேவல்கள், கலவர பூமியின் மரண ஓலங்கள், இழவு வீடுகளின் பிலாக்கணங்கள்...

உனக்கு ஏன் எப்போதும் எல்லா ஓசைகளும் கேட்டுக்கொண்டே இருக்கின்றன என்ற உன் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. காத்திருந்து காத்திருந்து, தவமிருந்து, திட்டமிட்டு, உடல் தேடி, உடல் அடைந்து, இருள் கூட்டி, உடலின் சுருதி கூட்டி, இசையின் லயமும் நடனத்தின் அசைவொழுங்கும் கூடிய இயக்கத்தின் மத்தியில் பேரிடியாய் ஊடுருவி இயக்கத்தின் ஆதார மையத்தைப் பொசுக்கி வீழ்த்திவிடும் ஓசைகள். மெல்லிய காற்று வீசினாலும் சுருதி கலையும் மென்மையான தம்புராவாகப் பிறந்திருக்கிறேன். பாடல் உருப்பெற மறுக்கும் தோல்வியை வெறுத்துத் தொண்டையைக் கிழித்துக்கொண்டாலும் உள்ளே பொங்கும் இசையின் பிரவாகத்தின் ஆவேசத்தைத் தாங்க முடியவில்லை. ஆயிரம் சொற்கள் முட்டிக்கொண்டு நிற்கையில் உதடுகள் இறுக்கித் தைக்கப்பட்ட வேதனையிலிருந்து விடுபட வழியில்லை. இன்னும் எத்தனை நாள்...

○

வெற்றி பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இன்று செய்தாகிவிட்டது. தோல்வியின் தழும்பேறிய கரங்கள் இனி ஒரு போதும் தவறிழைக்காது. சூழலில் இசைவுகூடியிருந்த நாள்களில் உத்வேகம் உருப்பெறாமல் வீணாய்க் கழிந்துபோன தருணங்களும் முறுக்கேறிய உத்வேகத்தின் ஆவேசம் புறத் தாக்குதல்களால் காயடிக்கப்பட்டு சுனை மூடிக் கொண்ட தோல்வியின் அவமானக் களிம்பேறிய தருணங்களும் என்னைப் பரிகசித்த காலம் முடிந்துவிட்டது. பருவ காலத்தில் பெய்யும் மழையை உள்வாங்கும் பக்குவம் கூடிய நிலத்தின் நிலையில் இன்று இருக்கிறேன். சூல்கொள்ளாமல் சிதறும் மகரந்தத் துகள்களாய் இன்று வீணாகாது என் உயிரின் வேகம். என் சுனையினின்றும் பீறிட்டெழும் அமுதம் உலகிற்கு வளம் கூட்டும். இனி படைப்பின் நுட்பங்களைப் பிரம்மன் என்னிடம் கற்றுக் கொள்வான்.



படிப்பகம்

www.padippakam.com





எல்லாம் கனவுகள். நிஜத்தின் சிறு சுவடுகூடப் படாத கனவுகள். ஒரு சொல். ஒரே ஒரு சொல். முடியுமா? பாறாங்கல்மீது விழுந்த மண்குடமெனத் திட்டம், தயாரிப்பு, கனவு, உத்வேகம் அத்தனையும் அந்தச் சொல்மீது மோதி நொறுங்கி விழுந்தன. பெருங்காட்டைச் சாம்பல் மேடாக்கும் நெருப்பின் ஊற்றுக் கண்ணை அவிக்க ஒரு துளி நீர் போதும். வாழ்க்கையின் இருட் கிடங்கினுள் வீசி எறியப்பட்ட இன்னொரு தோல்வியாக முடிந்தது இன்றைய கனவு. உன்னால் முடியுமா? முடியாது. இந்த ஜென்மத்தில் முடியாது. என்னிடம் எதுவும் கேட்காதே. இலக்கை எட்டப் பாயும் அம்பை விண்ணில் செலுத்த வேண்டிய நேரத்தில் அறுந்து தொங்கும் நாண் கயிறுகளின் உற்பத்திக் கிடங்காகிவிட்டன என் சுனைகள்.

உன் உறக்கம் ஏன் எப்போதும் அகாலத்தில் கலைந்து போகிறது? உன்னால் நிம்மதியாக ஏன் புணர முடிய வில்லை? உன்னால் ஏன் நிம்மதியாகச் சாப்பிடக்கூட முடியவில்லை? ஐந்து முனைகொண்ட நட்சத்திரக் குறியை உன்னால் துல்லியமாக வரைய முடியுமா? ஒழுங்காக ஒரு காதல் கடிதம் எழுத முடியுமா? ஒரு சிறு புல்லைக்கூட உருவாக்கிக் காட்டாதவரை உன் விதையின் வீரியத்தை எப்படி நம்புவது? பதிலற்று அலையும் கேள்விகள். கல்லறையில் அடுக்கப்படும் கற்கள்.

○

எத்தனையாவது முறை என்ற பிரக்ஞை இன்றி மீண்டும் முயற்சியில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது களைப்புறாமல் உருப்பெறும் உள்ளார்ந்த துடிப்பு. எந்த ஆயாசத்தையும் ஊக்கமாக மாற்றும் அந்தத் துடிப்பு மீண்டும் ஒருமுறை தோல்விகளின் வரையறைகளை மாற்றி எழுதிப் புதிய வேகத்தை அளித்தது. மனமும் அறிவும் உடலும் இசைவுகூடிக் கடும் தவத்தில் மூழ்கி, குன்றா வீரியத்தை மீட்டெடுக்க முனைந்தன. ஆழத்தில் கொப்புளிக்கும் ஊற்றைத் தேடித் துழாவின என் கரங்கள். மனத்தில் மெல்ல மெல்ல ஒருமை கூடியது. உடல், மனம், சிந்தனை, சரிவின் இரக்கமற்ற தடங்கள் அனைத்தும் அந்த ஒருமையில் ஒடுங்கிப் புதிய வலிமை உருப்பெற ஆரம்பித்தது. கால்களை உந்தி மேலெழும்பத் துடிக்கையில் கீழே இழுக்கும் புதை சேற்றின் பிடிமானங் களைத் தளரச் செய்யும் திரவம், உருத்திரண்ட அந்த வலிமையிலிருந்து கசிய ஆரம்பித்தது. விடுபட்ட கால்கள் உந்தித் தள்ளிய வெளி என்னை மேற்பரப்பிற்கு எடுத்துவந்தது. நீர் மட்டத்திற்கு மேல் கழுத்தை நீட்டித் தூய காற்றை சுவாசித்தபோது பத்து ஜென்மங்களுக்கான உயிர் சக்தி என்னுள் திரள்வதை உணர்ந்தேன். உடலை விட்டு வெளியேறத் துடிக்கும் உத்வேகம் முழுமையாகத் திரண்டிருந்தபோது அதைப் பக்குவமாக வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்ட நிதானம் உருப் பெற்றிருந்தது. நகரத்துச் சந்தடிகள் எட்டாத தொலைவில் அமைதியின் மடியில் குளிரும் கதகதப்பும் சரிவிகிதத்தில் முயங்கிய சூழலில் வெயிலும் இருளும் கலந்த கால வெளியில் என் உயிர்த் தீயின் வீரியம் தாங்கிய கங்குகள் வெளிப் பட்டு ஒளிரக் காத்திருந்தன. உடலுக்கும் மனதுக்கும் பிடித்த வடிவத்தினூடே வெளிப்பட்டுப் பிறவிப் பயன் பெறக் காத்திருந்தது என் உத்வேகம். நுண்மையை இழக்காமலேயே நாத அலைகளை வெளியெங்கும் பரப்பிடக் காத்திருந்தன வலு கூட்டப்பட்ட தம்புராவின் நரம்புகள். நரம்புகளின் மொழி அறிந்த விரலின் நுனியில் தேங்கியிருக்கும் இசைக் கூறுகள் நரம்பில் உரசி உச்சம் பெறக் காத்திருந்தன.

அந்தத் தருணம் வந்தது. வெளியெங்கும் சுகந்தம் வீசியது. காலம் தன் மாயச் சலனங்களை நிறுத்தித் தோற்ற நிலையில் ஒடுங்கியது. பிறக்கக் காத்திருந்த புதிய பிரபஞ்சங்களின் மூலாதாரக் கூறுகள் சிலிர்த்துக் கொண்டன. தோன்றா நிலையில் ஒடுங்கியிருந்த உயிரின் சுனைகள் சலனம்கொள்ள ஆரம்பித்தன. இரண்டு உடல்களைத் தவிர வேறெதுவும் துலங்காத அந்த வெளியில் மனமும் அறிவும் உடலாகவே மாறி இயங்கத் தொடங்கிய வேளையில் என் அடிவயிற்றி லிருந்து வெடித்துக் கிளம்பியது மாபெரும் ஒக்காளம். குடலை உருவி வெளியே வீசியெறியும் வேகத்துடன் எழுந்த ஒக்காளம் தொண்டையை ஊடுருவி நாவைத் தீய்த்தபடி வெளியே பாய்ந்தது. திசைகள் நடுங்கின. பறவைகள் அலறின. பேய்களென விரைந்த அமரர் ஊர்திகளின் எச்சரிக்கை மணியோசைகள் அந்தப் பிரதேசத்தையே பிணக் கிடங்காக உணரச் செய்தன. உடலும் மனமும் தளர்ந்து, சரிந்து விழுந்தன. இன்னொரு தோல்வியை எண்ணிப் போட்டுக் கொண்டது என் இருட்கிடங்கு. ஒரு துளி சத்தம் எழுப்பாமல் உடல் முழுவதும் குலுங்கி அழ ஆரம்பித்தேன். ஏதோ ஒரு கணத்தில் புறப்பட்ட கேவல் மெல்ல மெல்ல வளர்ந்து உச்சத்தை எட்டியது. கேவல் அழுகையாகி, அழுகை ஓலமாகி, ஓலத்தின் பெரும் குமுறல்கள் திசைகளை அசைத்தன. பல நூற்றாண்டுகளின் தேக்கத்தை உடைத்தபடிப் பெருகியது கண்ணீர் வெள்ளம். உடல் எடையிழந்து மிதக்கத் தொடங்கியது. கன்னத்தில் வழிந்த கண்ணீரின் அடர்த்தியைத் தாங்க முடியாமல் துடைத்தபோது பிசுபிசுப்பை உணர்ந்த கையில் வெள்ளை நிறத் திரவம் மினுமினுத்தது.

●

**ஓவியங்கள்:**
**கு. பாலசுப்பிரமணியன்**

படிப்பகம்

www.padippakam.com




மதிப்புரை

## தேவிபாரதி

காலனியத்திற்குப் பிந்தைய ஆசியச் சமூகத்தின் அரசியல் பண்பாட்டு நெருக்கடிகள் மேற்கத்திய சமூகத்தின் அரசியல் பண்பாட்டு நெருக்கடிகளிலிருந்து முற்றாக வேறுபட்டவை. காலனியத்திற்கு முன்பாகவும் காலனியக் காலத்திலும் தொடர்ந்தும் பரவலாகவும் நடைபெற்ற குடியேற்றங்கள் ஆசியச் சமூகங்களில் தோற்றுவித்திருந்த முரண்பாடுகள் உலகப் போர்களுக்குப் பின்னர் கூர்மையடைந்தன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனியத்திடமிருந்து விடுதலை பெற்ற ஆசிய நாடுகளில் மத, இன, மொழி அடையாளங்களை முன்வைத்து நடைபெற்றுவரும் போராட்டங்களும் மோதல்களும் அவற்றின் அரசியல் பண்பாட்டு விளைவுகளும் அச்சமூகங்களில் தோற்றுவித்திருக்கும் பதற்றங்கள் தீவிரமானவை. காலனியத்தால் பரிந்துரைக்கப்பட்ட அரசியல் அமைப்புகளின் மூலம் தீர்வுகாண முடியாத இச்சிக்கல்கள், காலனியத்திற்குப் பிந்தைய காலகட்டங்களில் புதிய வடிவம்பெற்று, கலவரங்களாகவும் வன்முறை நிரம்பிய போராட்டங்களாகவும் வெடித்து அச்சமூகங்களின் இயல்பு வாழ்வைக் குரூரமாகச் சிதைத்துவருவதை மேற்கத்திய அளவுகோல்களைக் கொண்டு புரிந்துகொள்ள முடியாது. 'இனங்களுக்குள் ஒற்றுமையையும் சக வாழ்வையும்' பரிந்துரைக்கும் 'உயரிய ஜனநாயகப் பண்பு' இச்சமூகங்களில் அமைதியைக் கொணர்வதற்கு எந்த விதத்திலும் துணை புரியவில்லை.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியச் சமூக அமைப்பில் கூர்மையடைந்து வரும் மத, இன, மொழி சார்ந்த மோதல்களை இந்திய அரசியலமைப்பு காலனிய அரசின் கண்ணோட்டத்திலேயே அணுகிவருகிறது. பல்வேறு தேசிய இனங்களும் தமது அரசியல் பொருளாதார நலன்களை முன்வைத்து நடத்திவரும் போராட்டங்களை ஒடுக்குவதற்கு இந்திய அரசு பிரயோகித்து வரும் பயங்கரவாதம் வெளிப்படையானது. 60களின் பிற்பகுதியில் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும் பஞ்சாப், அசாம், காஷ்மீர், மணிப்பூர் போன்ற எல்லைப் புற மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமும் மதம், இனம் சார்ந்த உரிமைக் குரல்களும் இந்திய அரசால் 'பயங்கரவாத'மாகச் சித்தரிக்கப்படுவதற்கு அதன் 'அறியாமை'யை மட்டும் காரணமாகச் சொல்லிவிட முடியாது; அதன் இன, மதச் சார்புகளுக்கு இதில் முக்கியப் பங்குண்டு.



**ம்**

*(நாவல்)*

**ஷோபா சக்தி**

*வெளியீடு:*

**கருப்புப் பிரதிகள்**

45A, இஸ்மாயில் மைதானம்,
லாயிட்ஸ் சாலை,
சென்னை – 600 005.
பக்: 168, விலை ரூ. 80
முதல் பதிப்பு அக்டோபர், 2004

இலங்கையின் இனச்சிக்கல்கள் நாம் இந்திய அரசின் (ஒரு வகையில் காலனிய அரசின்) கண்ணோட்டத்திலேயே புரிந்துகொண்டிருக்கிறோம். எழுபதுகளில் இலங்கையில் தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதக் குழுக்கள் தொடுத்த தாக்குதல்களும் அதைத் தொடர்ந்து உருவான கலவரங்களும் ஈழ விடுதலைப் போராட்டங்களும் இப்படித்தான் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. மேற்குலகின் அறவியல் மதிப்பீடுகளையும் ஜனநாயகப் பார்வையையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கண்ணோட்டம் இலங்கைத் தமிழர்களின் நெருக்கடிகளைப் புரிந்துகொள்வதற்கு ஒரு போதும் துணை புரியக்கூடியதல்ல.

1983இல் தொடங்கி இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கிற இலங்கையின் இனக்கலவரங்களாலும் ஓயாத போர்களாலும் உருக்குலைக்கப்பட்ட தமிழ் வாழ்வின் குரூரத் தோற்றங்களை அதன் வீரியம் குன்றாமல் நாம் புரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் 'ம்' என்ற இந்த நாவலின் வழியே ஆவணப்படுத்தியிருக்கிறார் ஷோபா சக்தி.

முப்பது வருடங்களாகக் கொடிய யுத்தம். ஒரு லட்சம் மனிதர்கள் கொல்லப்பட்டார்கள். ஐம்பதினாயிரம் அங்கவீனர்கள். இருபதாயிரம் விதவைகள். பத்தாயிரம் பேருக்குப் பைத்தியம். பூசா, மகசீன், களுத்துறை போன்ற பாரிய இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள், இயக்கங்கள், மாவீரர்கள், தமிழீழ ஒறுப்புச் சட்டம், தமிழீழச் சிறை, துரோகிகள், பேச்சுவார்த்தை, மானுட ஒன்றுகூடல், பொங்கு தமிழ்க் கதைகளும் பெருங்கதைகளும் சொல்லப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. "எல்லாக் கதைகளையும் கேட்டுக் கேட்டு 'ம்' சொல்லிக்கொண்டேயிருக்கும்" தன் சனங்களுக்கு இந்நாவலைச் சமர்ப்பித்திருக்கும் ஷோபா சக்தி 'பழம்பெருமை' கொண்ட தமிழ் மனத்தின் குரூரச் சிதைவை ஒரு வரலாறாகப் பதிவுசெய்திருக்கிறார்.

இலங்கையின் வட சமுத்திரத்தில் அலைந்துகொண்டிருக்கும் ஏழு சின்னத் தீவுகளில் ஒல்லாந்துக் கடற் கோட்டையிலிருந்து அரைக்கடல் மைல் எட்டத்தில் மிதந்துகொண்டிருக்கும் பனைத் தீவில் பள்ளிக்கூட வாத்தியார் ஏர்னஸ்ட் – சிறிய புஷ்பம் தம்பதியின் புத்திரன், கொழும்புத்துறை கிறித்தவக் கல்லூரியில் பாதிரிக்குப் படித்துக் கொண்டிருந்தவன் – நேசகுமாரனின் கொடுங்கனவாக விழித்தெழுகிறது நாவல். கொடுஞ்சிறை, கலவரங்கள், துப்பாக்கிக் குண்டுகள், தூக்கு மேடை, சித்ரவதைக் கூடங்கள் என ஓயாது துரத்திய மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்து ஐரோப்பாவின் சிறு பச்சைப் பட்டினமொன்றில் அடைக்கலம் பெற்று 'வாழும்' நேசகுமாரன் சொல்லத் தொடங்குவது 'வீரஞ்செறிந்த' ஈழப் போராட்டத்தின் கதையையல்ல; செர்ரி மரக் காட்டிடையே சலனமற்றுக் கிடக்கும் ஒரு ஐரோப்பியச் சிறு நகரத்தின் மையத்திலிருந்த அரசு மருத்துவமனையின் கருக்கலைப்புப் பிரிவில் வரிசையாகக் காத்திருக்கும் ஏழு பெண்களில் ஒருத்தியான பதினான்கு அல்லது பதினைந்து வயதுடைய தனது மகள் நிறமியின் கதையை.

நேசகுமாரன் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழாம் வருடம் ஐரோப்பாவுக்கு அகதியாய் வருகிறான். மறுவருடம் பிரேமினி என்ற அகதியை நகர மண்டபத்தில் பதிவுத் திருமணம் செய்துகொள்கிறான். அடுத்த வருடம் நிறமி பிறக்கிறாள். பிறக்கும்பொழுதே அகதியாகப் பிறந்த நேசகுமாரனின் செல்ல மகள் நிறமி தனது பதினான்கு அல்லது பதினைந்து வயதில் கர்ப்ப முற்று கருக் கலைப்புக்காகக் காத்திருக்கிறாள். கருக்கலைப்பு முடிந்த பிறகு நடு இரவில் நேசகுமாரனும் பிரேமினியும் தங்கள் மகளின் கர்ப்பத்துக்குக் காரணமானவனைக் கண்டு பிடிப்பதற்காகத் தேநீர் அருந்தியவாறே வியூகங்கள் வகுக்கிறார்கள்.

நிறமியின் கர்ப்பத்துக்குக் காரணமானவனைத் தேடும் பயணமாக நாவல் தொடங்குகிறது. பிரேமினியின் அண்ணன் மகன் பிரசன்னாவின் மீது தொடங்கும் சந்தேகம் பிறகு இலங்கையின் பனைத்தீவிற்குப் படர்கிறது. கொடிய வன்முறைகளும் சாகசங்களும் ஒடுக்குமுறைகளும் துரோகங்களும் நிரம்பிய ஒரு ஆறேழு ஆண்டுகள்; பனைத்தீவிலிருந்து ஐரோப்பா வரை; செல்வநாயகத்திலிருந்து பிரசன்னா வரை. கையெறி குண்டுகள், தோட்டாக்கள், துப்பாக்கிகள், சிறைக் கூடங்கள், சித்ரவதை முகாம்கள், கழு மரங்கள் வழியாக ஆயிரக் கணக்கான உடல்களிலிருந்து பெருகி வழியும் குருதியின் பாதையில், வெட்டிச் சிதைக்கப்பட்ட உடலோடும் இற்று விழுந்த இதயத்தோடும் ஐரோப்பாவுக்கு அகதியாக வந்து சேர்ந்த நேசகுமாரன் தனது செல்ல மகளின் கர்ப்பத்துக்குக் காரணமானவனாகத் தன்னையே அடையாளம் காட்டிக் கொண்டு நிற்கும் இக்கதை குறித்துப் பேசுவதற்குத் தமிழ்நாட்டில் வாழும் ஒருவரால் முடியுமா என்று தெரியவில்லை.

'பண்பாட்டின் வேர்'களை மீட்டெடுக்கும் முயற்சியில் தனது வாழ்நாட்களைச் செலவிட்டுக்கொண்டிருக்கும் ஒரு தமிழ் வாசகர் நேசகுமாரனுக்குத் தனது கற்பனையின் சாத்தியங்களுக்கும் அப்பாற்பட்ட தண்டனைகளை அளிக்கக்கூடும். ஆனால் இத்தகைய நமது விமர்சன ஆயுதங்கள் இந்நாவல் முன்வைக்கும் உண்மையின் தீவிரத்திற்கு முன்பு இற்று விழுந்துவிடும். வரலாற்று நாயகனுக்குப் பதிலாகத் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பொய் சொல்லும், மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும், காட்டிக்கொடுக்கும் ஒரு சாதாரண மனிதனின் கதையை நமக்குச் சொல்லியிருக்கிறார் ஷோபா சக்தி.

கள்ளத்தோணியில் அமிர்தலிங்கம் மாத்தையாவின் கூட்டத்துக்குப் போய் போலீசாரிடம் மாட்டிக்கொள்ளும் தருணத்தில் டெம்பர் ராசனின் கன்னத்தில் போலீஸ்காரன் கொடுக்கும் ஒரு அறைக்கு மிரண்டு, 'சேர் நான் செமினரியில் சுவாமிக்குப் படிக்கிறேன்' என்று பணிபவன், தனது விரலை வெட்டி அமிர்தலிங்கத்தின் முன் மண்டையில் ரத்தத்தால் பொட்டு வைப்பவன், தனது சாகசங்களுக்குத் துணையாகத் தன்னைப் பின் தொடர்ந்து வரும் கலைச்செல்வனையும் சிறிகாந்த மலரையும் காட்டிக் கொடுப்பவன், யாழ்ப்பாணம் குருநகர், ஆனையிரவு ராணுவ முகாம்களிலும் வெளிக்கடச் சிறையிலும் அடைக்கப்பட்டு மிருகத்தனமான சித்ரவதைகளுக்குள்ளாகி, உடலும் மனமும் முற்றாகச் சிதைக்கப்பட்டவனாய் விடுதலை பெற்று வெளியில் வருவதற்கு நேசகுமாரன் செய்த துரோகங்கள் நமக்குச் சொல்லப்பட்ட வீர காவியங்களிலிருந்து முற்றாக வேறுபட்டவை

நிறமியின் கர்ப்பத்துக்குக் காரணமானவர்கள் இந்நாவலின் எல்லாப் பக்கங்களுக்குள்ளும் ஒளிந்திருக்கிறார்கள். அமிர்தலிங்கம், டேனியல், ஏர்னஸ்ட், சிறிய புஷ்பம், ஜெயக்குமார், தம்மிக என்ற மிலிட்டரிப் போலீசுக்காரன், விசாரணை அதிகாரி டி. பி. பஸநாயக்க, செவித்துவாரத்துக்குள் பென்சிலை நுழைத்து மரண அடி கொடுக்கும் உடுகம்பொல, மரியா, மார்த்தா, நிசங்க, தொல்கட, நீதிபதிகள் என்று தென்படும் ஒவ்வொருவரையும் காரணமாகக் காட்டுவதற்கு முயல்கிறது நாவல். வரலாற்றை, அதன் குரூரத்தை இரக்கமோ இங்கிதமோ அற்ற உண்மையின் மொழியில் சொல்லும் இந்த நாவல் நிறமியின் கர்ப்பத்திற்குக் காரணமாக நம்மையும் குற்றச்சாட்டக்கூடுமோ என்ற பதற்றத்தைத் தோற்றுவித்து வாசகச் செயல்பாட்டை ஒரு குற்றச்செயலாக்கும் காரியத்தைச் செய்கிறது.

ஒருவகையில் யுத்தத்திற்குப் பிந்தைய ஐரோப்பிய இலக்கியங்களின் சாயலைக் கொண்டுள்ளது ஷோபா சக்தியின் இந்நாவல். கொடிய வன்முறைகளின் விளைவாகச் சிதையும் மனித உடல், மன இயக்கங்களை ஆராய்கிற ஐரோப்பிய இலக்கியம் மனிதனின் இருப்புக்கும் நவீன உலகின் அரசியல் செயல்பாடுகளுக்குமிடையேயான தொடர்புகளை ஆராய்கிறது. காப்பியங்கள் முன்னிறுத்தும் நாயகப் பண்பை முற்றாக மறுத்து மனிதனை அவனுடைய இயல்பான பரிமாணங்களில் கேலிச் சித்திரங்களாக்கி வாசகன் முன்வைக்கிறது நவீன இலக்கியம். அந்த வரிசையில் ஷோபா சக்தியின் இந்நாவல் வாசகனை வெறுமனே மௌனத்தில் ஆழ்த்திவிடாமல், வரலாற்றின் முன் அவன் தன்னையே ஒரு கேலிச் சித்திரமாக உணரவைக்கிறது. இதன் காரணமாகவே தீவிர வாசிப்புக்கும் நுட்பமான ஆய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டிய மிக முக்கியமான நாவல்களில் ஒன்றாக விளங்குகிறது 'ம்'.

# வரப்பெற்றோம்

3 சுவாரசியங்கள் ❖ ம. திருவள்ளுவர் ❖ ரூ.30 ❖ கலங்கரை விளக்கம் பதிப்பகம், திருச்சி 620 005.

ஏக்கங்கள் ❖ ம.திருவள்ளுவர் ❖ ரூ.45 ❖ கலங்கரை விளக்கம் பதிப்பகம்,42–21 முத்து வளாகம், விக்னேஷவரா தோட்டம், காந்தி சாலை, திருவானைக்கோயில், திருச்சி 620 005.

நோய் நீக்கும் நட்சத்திர மூலிகைகள் ❖ டாக்டர். பொ.இரா. இராமசாமி ❖ ரூ.100 ❖ பிரார்த்தனா வெளியீட்டகம், இராசபாளையம்.

மருந்தாகும் இலக்கியத் தாவரங்கள் ❖ டாக்டர். பொ.இரா. இராமசாமி ❖ ரூ.75 ❖ பிரார்த்தனா வெளியீட்டகம், 117,பெத்தையா தெரு, இராசபாளையம்.

இருளும் ஒளியும் ❖ ச. தமிழ்ச்செல்வன் ❖ ரூ.50 ❖ பாரதி புத்தகாலயம், 2, குயவர் வீதி, கிழக்கு ஜோன்ஸ் சாலை, சைதாப் பேட்டை, சென்னை 600 015.

நாங்கள் அவர்களல்ல (கவிதைகள்) ❖ நர்மதா ❖ ரூ.25 ❖ பத்திரிகையாளர் பதிப்பகம், பிளாட் நெ. 91ஏ, டாக்டர் செல்வி ஜெயக்குமார் தெரு, கோலடன் ஜார்ஜ் நகர், பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை 600 107.

மௌனமாய் சில ஓசைகள் (கவிதைகள்) ❖ ஓழவெட்டி பாரதிப்ரியன் ❖ ரூ.40 ❖ மங்களம் பதிப்பகம், ஓழவெட்டி 603 311, காஞ்சிபுரம்.

இராவணேஸ்வரன் பூசை: கோயிலூட்டம்மை வழிபாடு ❖ சு. செல்வகுமாரன் ❖ ரூ.70 ❖ தன்னனானே, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024.

இளைப்பாறுதல் (சிறுகதைகள்) ❖ ஜெயபாரதன் ❖ ரூ.50 ❖ வ.உ.சி நூலகம், ஜி –1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை 600 014.

கடைசி டினோசார் (கவிதைகள்) ❖ தேவதச்சன் ❖ ரூ.85 ❖ உயிர்மை,11 –29, சுப்பிரமணியம் தெரு, அபிராமிபுரம், சென்னை 600 018.

உண்மையின் தரிசனங்கள் (நாவல்) ❖ அவ்வை மு. ரவிக்குமார் ❖ ரூ.125 ❖ கமலம் பதிப்பகம், அவ்வை நகர், அம்மனூர், அம்பேத்கார் வீதி, அரக்கோணம் 631 002.

எதிராக (கவிதைகள்) ❖ அபிமானி ❖ ரூ.35 ❖ காவ்யா, 14, முதல் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், சென்னை 600 024

நம்பிக்கை இழந்து போ (கவிதைகள்) ❖ ராயன் ❖ ரூ.40 ❖ விழுதுகள் பதிப்பகம், சென்னை 600 019

மற்றும் சில திறவாக் கதவுகள் (கவிதைகள்) ❖ ரிஷி ❖ ரூ.40 ❖ விழுதுகள் பதிப்பகம், 18, திருநகர் முதல் தெரு, திருவெற்றியூர், சென்னை 600 019

www.padippakam.com



# பின்கட்டிலிருந்த சொற்கள்

**குவளைக் கண்ணன்**


தமிழில் இப்போதைப் போல வேறெப்போதும் இவ்வளவு பெண்கள் எழுதிக்கொண்டிருந்ததில்லை. வேறெந்த இந்திய மொழியிலும் இவ்வளவு பெண்கள் எழுதிக்கொண்டிருக்கவில்லை எனத் தெரிகிறது. வேட்கை, நிராசை, பசி, குதூகலம், துயரம், வலி இவை இருபாலருக்கும் பொதுவானவை என்றாலும் மனித இனம் தனது ஒருபாதியின் குரலைக் கேட்டதேயில்லை. மனித மனம் தனது தன்மைகளில் சரிபாதியை விழிப்பு நிலையில் உணராது போய்விட்டது. பின்கட்டிலிருந்து வந்த சொற்கள் உதாசினப்படுத்தப்பட்டன; பதிவு செய்யப்படவில்லை.

பெண்களின் கவிதை ஆண்களின் கவிதையிலிருந்து வேறுபட்டதா? வேறுபட்டது என்றால் எதிலெல்லாம் வேறுபட இயலும்? மொழிக்கு முற்பட்ட காலத்திலும் துயரம், வலி, நிராசை போன்ற உணர்வுகள் மனித இனத்துக்கு இருந்திருக்கும். மொழி என்பதே அடிப்படையில் வெளிப்பாட்டிற்கானது என்கிறபோது, கவிதையென்பது மொழியின் நுட்பமான வெளிப்பாடு. எனவேதான் புரியாமை நேர்கிறது. சக கவிஞர்கள்கூட ஒரு கவிதையைத் தவறவிட நேர்கிறது. இதற்கு முன் தமிழில் பெண்கள் எழுதியிருந்தாலும் அநேகமாக அவை பொதுமன வெளிப்பாடே. பொதுமன வெளிப்பாடாக இருந்ததால்தான் "பார்த்தாவுக்கேற்ற பதிவிரதை உண்டாயின் எத்தாலும் கூடியிருக்கலாம், சற்றேனும் ஏறுமாறாயிருப்பின் கூறாமல் சந்நியாசம் கொள்" என்று பெண்ணே எழுதியது.

செய்தித்தாள்களில் உபயோகிக்கப்படுகிற சொற்களைத்தான் கவிதையெழுதுபவரும் உபயோகிக்கிறார். ஆனால் செய்திகள் சென்று சேருமிடமும் கவிதை சென்று சேருமிடமும் ஒரே வாசகரிடம்கூட வெவ்வேறு பரந்த ஒப்புதலோடு தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வருகிற ஒலிக் குறிப்புகளைத்தான் மொழி என்கிறோம். ஒரே சொல்லை ஒரே தருணத்தில் பல அர்த்தங்களில் பலரும், பல தருணங்களில் பல அர்த்தங்களில் ஒருவரேயும் புரிந்துகொள்ள இயலும். பெண்மொழி, பெண் உடல் மொழி போன்ற பிரயோகங்களைச் சில ஆண்டுகளாகக் கேட்கிறோம். அவையும் அநேகமாக ஆண்களால் பிரயோகிக்கப்படுகின்றன. உடல் மொழி என்பது நிறுவன மேலாண்மை, விற்பனையியல் போன்ற துறையினரின் வார்த்தை. கருப்பை, சினைப்பை பெண்களுக்கும் விதைப்பை ஆண்களுக்கும் உள்ளது வித்தியாசம். மற்ற படிக்குப் புலன்களும் மூளை, இதயம், நுரையீரல், கல்லீரல் போன்ற உடல் உறுப்புகளும் அவற்றின் செயல்பாடுகளும் இரு பாலருக்கும் ஒன்றே. பாலுறுப்புகளில் உள்ள வேறுபாடுகள் மறு உற்பத்திக்கானவை. பெண்கள் தங்களுக்கான மொழியைக் கண்டெடுக்க வேண்டும் என்று சொல்வதன் அர்த்தமென்ன? அப்படிக் கண்டெடுக்கப்படுகிற மொழி பெண்களுக்கென்று பொதுவானதாக இருக்குமா? பெண்களுக்கெல்லாம் பொதுவானதாக இருக்குமா? இரண்டு பெண் கவிஞர்களுக்கு இடையில்கூடப் பொதுவான மொழி இருக்க இயலாது. கவிதை எழுதுபவரின் சொற்கள் அவரது பிரத்யேக உலகினை அர்த்தப்படுத்துபவை. கவிதை எழுதுகிற பெண்ணின் பிரத்யேக உலகினுடைய மொழிவழி வெளிப்பாடு பெண்மொழி. சிலபல வருடங்கள் தொடர்ந்து எழுதி, பல தொகுப்புகள் வெளிவந்த பிறகு ஒரு முன்வரைவு தானாக உருவாகிவிடலாம். ஆனால் அப்படியொரு முன்வரைவால் என்ன நன்மைகள் ஏற்படக்கூடுமென்று தெரியவில்லை.

பெண்களின் கவிதைகளிலிருந்து சில வரிகள்:

ஓரேயொரு சிறகுச் சிமிட்டலில்/ மாடிப் பரப்பின் அகலத்தை/ அழித்துப் போகிறது/ அந்தச் சிட்டுக்குருவி * நான் காணாது போனால்கூட/ முதலில் சமையல் சிலிண்டருக்குப் பின்னாலும்/ கிரைண்டருக்குப் பின்னாலும்தான்/ தேடுவார்கள்போல * இழுத்தணைத்து முகர எத்தனிக்கையில்/ என் மார்பகங்களின் ஸ்பரிசத்தில்/ கூசி விலகி நகர்கிறான்/ அது உதிரம் பிரித்து/ உணவூட்டியதென்பதை மறந்து..../ நதியோரக் கோரையாய்க்/ குத்திட்டு நிற்கும் முடி நீவ/ நீளும் என் கைவிலக்கிச் செல்கிறான் சங்கடமின்றி.../ தனது குழந்தைப் பருவத்தைத்/ துடித்துக் கடக்க அவனும்/ கைப்பற்ற நானும்/ போராட்டத்தினூடே/ கரைகிறது பழைய நெருக்கம் * இத்தனை நாளைய/ சுமப்பும் நோவும்/ அர்த்தமிழந்து போக/ வெறும் ஆவலுடனான/ பாதச்




படிப்பகம்

www.padippakam.com



சரசரப்பொன்றே முதன்மையுறும் வகையில்/ உன் தொடைகளின் நடுவே/ இரத்த வெள்ளத்தில்/ ஜனிக்கும் சிசு * புதர் அசைய அசைய/ முள்கீறி நீரில் சிதைந்து கசியும் நிலா/ தாழையோடு நிலவை அறுத்துக் கட்டி/ தாயைக் காவல் வைத்து/ மறைவில் மலம் கழிக்கும் மகள் * கண்களில் வலியுடைய உன்னை/ அந்நியத் தெருக்களில் பார்த்திருக்கிறேன்/ சினேகமற்ற சாம்பல் வானத்தின் கீழ்/ நடந்து கொண்டிருப்பாய்/ கோலாகலமான சூழல்களைக் கடந்துபோகும்/ தனிமையின் கருமை படர்ந்த உன் முகம்/ பெயரற்ற குரலற்ற உன் முகம்/ வலித்த வேளைகளில் காரணமற்று வந்துபோகும்/ தேநீர்க்கடை மேசையில்/ நடுங்கியபடி கிடந்த/ உன் கைகளைப் பற்றி/ உன்னிடம் ஏதாவது பேசியிருக்கலாம் * அரைக்கிணறு தாண்டியதாய்/ நுரைத்துப் பொங்கும் அகம்/ சூழ் அயர்வில் இரையாகா திருக்க/ பழக/ வேண்டும்/ அழுந்தத் தாழிட்ட கோயிற் கதவிற்கிப்பாலும்/ விழிமூடி கடவுளைக் கண்டு/ நடுவீதி நின்று/ தொழுதிருப்பார் திறம் போல்/ பிரிவில் உறவும் * ப்ளாஸ்டிக் பையென/ அலைவுறும் மனம் * தனது பேனாவால் / தாளில் கிறுக்குவதுபோல/ தனது சீப்பால்/ தலையை அழுத்தி வாரிக் கொள்வதைப்போல/ தாடியைச் சீவுகிற சவரக்கத்தியை/ கவனமாகக் கையாள்வதைப் போல/ எல்லாம் முடிந்து/ அமைதியாய்த் தூங்குகிறான் அருகே * மேல் இலையில் தேங்கிய நீர்/ நழுவி விழ/ திடுக்கிட்டு நடுங்கும் கீழ் இலையைப் போல் * அடிவயிற்றுக் கருவின் அசைவை/ அறிவிக்க உன் கை பற்றிப் பதித்தபோது/ அவசரமாய் உதறிப்போனாயே/ அதற்கு வருத்தம் தெரிவி உடனடியாக/ அவிழ்த்து எறியுமுன் / புடவையருக்குள் புதைந்த பூக்களையாவது ரசித்துக் கவனி/ அடுத்தமுறை என்னை நீ/ அழுத்தும் இரவுகளில்/ வெளியிலசையும் தென்னையை ரசிப்பதையாவது/ விசாரி ஏன் என்று எப்போதாவது * தெளிந்த நீரோடைக்குள்/ கனலும் ஒரு மீன் * தொண்டைக்குள் சிக்கியிருக்கும் / அண்ட சராசரங்களுடன் நான்/ இன்னும்/ எத்தனை காலம்? * பெருவெள்ளம் சிறுதுளியாகிவிடும்/ உள்மனக் கொள்கலத்தில் *

ஒரு தொகுப்பில் மனம் பொங்கிப் பொங்கி மொழி வழியே பாய்ந்தோட, இருத்தலியல் பதட்டமெனக் கொள்ளக்கூடியது வேட்கையெனும் அடையாளத்தோடு கசந்து மொழிகிறது. மற்றொரு தொகுப்பில் தான் உபயோகிக்கப்பட்டதான, படுவதான காட்டமான வெளிப் பாடுகளில், ஆண்களுக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வலிமையானவற்றோடு, உரத்த தொனியிலானவையும் அதிகமுள்ளன. எவ்வளவு நுட்பமாகத் தொனிக்கிறதோ அவ்வளவுக்குக் கவிதை உள்ளார்ந்து செல்லக்கூடியது.

இப்போது எழுதுகிறவரின் மனம் முதல் மனித மனத்திலிருந்து இதுவரையிலான அத்தனை மனத்தையும் இப்போது எழுதப்படுகிற கவிதையொன்று இதுவரையிலான அனைத்துக் கவிதைகளின் சாரத்தையும் தன்னுள் கொண்டிருக்கும். இப்போது எழுதும் பெண்களின் கவிதைகள் அவர்களின் தனிப்பட்ட போக்குகளாலும் உணர்வுகளாலும் மட்டுமே ஆனதல்ல. தான் புரிந்துகொள்ளப்படவில்லை என்பதான உணர்வு ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் பொதுவானதென்றாலும், இந்த உணர்வு வெளிப்படுகிற கவிதைகளும் ஒற்றை ஆணுக்கோ அல்லது ஆண்களாலான சமூகத்திற்கோ பதிலளிக்கிற கவிதைகளும் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. இதுவரை சொல்லித்தரப்பட்டவை கேள்விக்குரியவையாகின்றன, தடைகள் தாண்டப்படுகின்றன. ஆனால், தாண்டப்பட்டவற்றின் எண்ணிக்கையைவிடத் தாண்டப்பட வேண்டியவற்றின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. இதற்கு ஒரு கடினமான இடைவழி இருக்கிறது. தன்னைத் தாண்டிவர வேண்டும் தன்னைக் கடந்து நுழைகிற பெருவழியில் சரிகளும் தவறுகளுமில்லை அங்கு எவருடைய, எதனுடைய அதிகார எல்லைக்குள்ளும்


*With Best Compliments from*

# Print Specialities

**Desing Offset**

10 (Old No. 24) Thandavarayan Street
Royapettah
Chennai - 600 014.
Phone : 2835 0393
e-mail: print_speciality@vsnl.net
Cell:94441 26440

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com


யாரும் இருக்க வேண்டாம். ஒவ்வொன்றாய்த் தாண்டு வதில்லை ஓரேயடியான தாண்டுதல் இது. முதல் தொகுப்பைவிட இரண்டாம் தொகுப்பு மேம்பட்டிருப்பது பெண் கவிஞர்களின் தொகுப்புகளில் முக்கியமான அம்சம். ஏனெனில் இதற்கு நேரெதிரானதே அநேக ஆண் கவிஞர் களின் தொகுப்புக்கும் நேர்ந்திருக்கிறது.

பெண்ணியம் பற்றிய, பெண்ணியப் பார்வையிலான கட்டுரைகள் தமிழாக்கப்பட்டும் நேரடித் தமிழிலும் வெளி யாகவும் இதுவரை உலக அளவில் பெண்களால் எழுதப் பட்டுள்ள கவிதைகளும் கதைகளும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாவதற்கும் சிரத்தையான முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். இது கோட்பாட்டு ரீதியிலானவற்றை அவ்வாறாகவே எதிர்கொள்ள ஏதுவாக்குவதோடு பெண் களுடைய எழுத்துகளுக்குப் பரந்த களத்தையும் கூடுதல் ஆழத்தையும் தரும்.

பெண்களின் எழுத்துகள் என்னும்போது ஒரு நாட்டுப் புறப் பாடலின் சில வரிகள் தொடர்ந்து நினைவுக்கு வருகிறது, "மதனி/ மடிமேலே இருக்கும்/ மாதுளங்காய் என்ன விலை" என்று கொழுப்பாகக் கேட்கிறவனுக்கு "பாலகன் பால்குடி மறந்த/ பாழ் முலைடா சண்டாளா" என்று பெண் பதில் சொல்வதாக அமைந்த பாடல் அது. இந்தப் பாடலை ஆண் எழுதியிருக்கக்கூடிய சாத்தியங்கள் மிகக் குறைவு. பெண் கவிஞர்களின் தொகுப்புகளில் ஒரு ஆணால் எழுதியிருக்க இயலாத இது போன்ற வரிகளும் கவிதைகளும் கணிசமாக உள்ளன. இப்படியான வரிகளும் கவிதைகளும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அவற்றிலி ருந்து பெண்களின் கவிதைக்கான புதிய அழகியல் தோன்றக்கூடும். மேலும் பெண்ணோ ஆணோ எதை எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் என்பதை யெல்லாம் மற்றவர் முடிவு செய்துவிட இயலாது. சில பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளைக் கடந்த ஓராண்டில் இரண்டு மூன்று முறை வாசித்தபோது, என் சுயத்தின் பெண் பிம்பத்தின் சாயலைப் பார்க்க வாய்த்ததைத் தனிப்பட்ட முறையில் முக்கியமானதாக நினைக்கிறேன்.

பெண்ணோ ஆணோ புனைவில் ஈடுபடும்போது அவரது தனிமனம் பொதுமனத்தில் எவ்வளவு பங்கு கொள்கிறது – சார்பு நிலை, எதிர்ப்பு நிலை இரண்டுமே பங்குகொள்ளல்தான் – அல்லது விலகிப்போகிறது என்பது தான் கவிதையைத் தீர்மானிக்கிறது. பெண்களைப் பற்றிய பெண்களின் கருதல்கள் (ஆண்களாலான) சமூகத்தின் கருதல்களுக்கு மறுதலையானவையாக உள்ளன. ஒரு குறிப்பிட்ட சம்பவத்தையோ சூழலையோ எழுதுகிறவர் எவ்வாறு உள்வாங்குகிறார், அவரது பார்வை என்ன என்பது நிலைப்பாட்டுச் சாயலின்றி வெளிப்பட வேண்டும். எழுதுபவருடைய புலனுணர்வுக் காட்சிகளின் அத்தனை நிறங்களும் ஒற்றைச் சாயத்தில் தோய்ந்துபடலாகாது. சமூகத்திலும் மனித மன அமைப்பிலும் சம பங்குடைய பெண்மனம் நேரடியாக வெளிப்படும்போது ஏற்படக்கூடிய மாற்றங்கள் மகத்தானதாக இருக்கும். எதுவொன்றும் மலர்ந்து வரும்போது உதிர்ந்துகொண்டிருப்பவற்றின் குரல்கள் உரத்து ஒலித்திருக்கின்றன, ஒலிக்கின்றன. நல்ல படைப்புகள் தற்காலத்தைப் பிரதிபலிப்பவை மட்டுமல்ல, தற்காலத்தைப் பிரதிபலித்து வருங்காலத்திற்கு இட்டுச் செல்லக்கூடியவை; இப்போதே இட்டுச்செல்லக் கூடியவை. ●

---



<u>பாவண்ணன் பார்வையில்</u>

## முகுந்த் நாகராஜன்

# நிராசையின் வலி

அகி என்னும் முதல் தொகுப்பின் மூலம் கவிதை வாசகர்களின் கவனத் தைக் கவர்ந்த இளம்கவிஞர் முகுந்த் நாகராஜன். வாழ்க்கைத் தளத்தில் தினம்தினமும் காணவும் உணரவும் நேரும் சின்னச்சின்ன சித்திரங்களை இயற்கையான நிறங்களுடன் தீட்டிக் காட்டுகின்றன இக்கவிதைகள். பனி ஈரம் நீங்காத புத்தம்புதுப் பூக்கள் போலவும் கருப்பையின் கதகதப்பு நீங்காத பச்சைக் குழந்தையைப் போலவும் இயற்கைக்கு நெருக்கமான தன்மையுடன் உள்ளன. உவமைகள், உருவகங்கள், படிமங்கள் ஆகியவற்றின் பக்கபலம் இல்லாமலேயே எளிமை யான சொற்சேர்க்கைகளுடன் மலர்ந்தி ருக்கின்றன. உடைந்த கண்ணாடித் துண்டில் பிரதிபலிக்கும் அகன்ற வானத்தின் பிம்பத்தைப் போல இந்த எளிய சித்திரங்களே எதார்த்தத்தை விரிந்த அளவில் புரிந்துகொள்ள உதவி யாகவும் உள்ளன.

"குழந்தையின் ஜன்னல்கள்" என்றொரு கவிதை. நான்கு வரிகள் மட்டுமே கொண்டது. நிராசை கொண்ட ஒரு குழந்தையின் முணுமுணுப்பாக அமைந்த வரிகள். ஜன்னல் சீட் கிடைத்ததும் தாவி ஆசையுடன் அமரும் போது வீடு வந்துவிட்டதென இறங்கச் சொல்கிறார் அம்மா. இதெல்லாம் ஒரு காரணமா என்று ஆதங்கத்துடன் கேட்கிறது குழந்தை. நாம் குழந்தைகளாக இருந்தபோது நமக்கும் இப்படி நேர்ந்ததுண்டு. நம் குழந்தைகளை நாமும் இவ்விதமாக வற்புறுத்தி அழைத்து வந்ததுமுண்டு. இக்கவிதையுடன் உருவாகும் நெருக்கத்துக்கு இந்தப் பிள்ளை நினைவே முதல் காரணம். ஏறும்போதே ஜன்னலோர இருக்கை கிடைக்கிற மாதிரியான வாகனத்துக்காகக் காத்திருந்து ஏறியிருக்கலாம். குழந்தையின் மனம் தொடக்கத்திலிருந்தே ஆனந்தத்தில் திளைத்திருக்கக்கூடும். ஆனால் வேளையோடு வீடு போய்ச் சேரும் அவசரமோ அடுத்த வண்டியின் வருகைக்கு உறுதியில்லாத பதற்றமோ நெருக்கடி மிகுந்த வாகனத்திலேயே ஏறவைத்துவிட்டது. நெருக்கத்திலேயே முழுப் பயணமும் அமைந்து புழுக்கத்திலேயே நிறுத்தத்தில் இறங்கிப் போயிருந்தாலும் வருத்தம் இருந்திருக்காது.

பயணம் முழுக்க ஒரு வாய்ப்புக்குக் காத்திருப்பதும் காலத்தால் கனிந்து அவ்வாய்ப்பு அமையும்போது நீடித்திருக்க முடியாத இயலாமையுமாக முரண்பட்ட தருணங்கள் உருவாக்கும் நிராசையின் வலி எழுதித் தீராத ஒன்று. இப்படி யோசிக்கும் சூழலில் இவை எதுவுமே குழந்தை, வாகனம், இருக்கையுடன் மட்டுமே தொடர்புள்ள ஒன்றல்ல என்பதும் வாழ்க்கைக்கும் வாய்ப்புக்கும் இடையிலான உறவுநிலை பற்றிய முரண் சித்திரமென்றும் புரிந்துவிடுகிறது.

மிகக் குறுகிய காலத்தில் எதார்த்தத்துக்கு மிக நெருக்கமானதும் எல்லார் மனத்திலும் உறைந்திருக்கும் நிராசையின் வலியை உணர்த்துவதுமான கவிதைகளை ஆற்றலுடன் புனைய முடிந்திருப்பது முகுந்த் நாகராஜனின் மிகப் பெரிய பலம். நீர்வண்ண ஓவியங்களில் எதிர்பாராத தருணங்களில் வண்ணத்தைவிட நீர்மை அதிக அளவில் படிந்துவிடுவதைப் போலச் சிற்சில கவிதைகளில் வரிகள் மங்கிவிடுவதை பலவீனம் என்று சொல்லலாம். ●

படிப்பகம்


www.padippakam.com



கேரள சாகித்திய அக்காதெமி விருது

# அங்கீகாரத்தின் தொலைவு

சுகுமாரன்



சாகித்திய அக்காதெமி விருது அறிவிப்பிற்குப் பின்னர் எல்லா மொழிகளிலும் போல மலையாளத்திலும் சர்ச்சையை எழுப்புவது வழக்கம். ஒவ்வொரு வருடமும் அறிக்கைகள் மூலம் சிறிது காலத்துக்கு ஒரு விவாதப்படலம் அலைந்துகொண்டிருக்கும். இம்முறை அக்காதெமி விருதுத் தேர்வை எல்லாத் தரப்பினரும் மௌனமாக அங்கீகரித்ததாகவே கருத வேண்டும். தனது சிறுகதைகளின் முழுத் தொகுப்புக்காக விருது பெற்றிருப்பவர்-சக்கரியா.

மலையாளப் புனைகதைக் களத்தில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக இயங்கி வருபவர் சக்கரியா. அவரது முதல் சிறுகதையான 'உண்ணி என்னும் சிறுவன்' 1964இல் வெளியானது. எழுதத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை எழுத்தில் புது நோக்கை விடாமல் தொடர்பவதையே அவரது இலக்கிய முக்கியத்துவமாக எண்ணத் தோன்றுகிறது. சராசரி எழுத்துக்களால் விஸ்தாரமாகத் தெரியும் மலையாளப் புனைகதைத் துறையில் இது கவனத்துக்குரியது.

அறுபதுகளின் பிற்பகுதியில் மலையாளக் கலை இலக்கியப் போக்கில் புதிய உணர்வுநிலைகள் உருவாயின. இந்த நவீனத்துவம் 'ஆதுனிகத' என்று குறிப்பிடப்படுகிறது. எம். முகுந்தன், ஓ.வி. விஜயன், காக்கநாடன், சேது, எம்பி. நாராயண பிள்ளை, புனத்தில் குஞ்ஞப்துல்லா, எம். சுகுமாரன் போன்ற எழுத்தாளர்கள் புனைகதைக்கு வளம் சேர்த்துக்கொண்டிருந்த காலப் பகுதியில் சக்கரியா அறிமுகமானார். நவீனத்துவம் என்பது புதிய உணர்வுநிலையின் பொதுப் பெயராக இருந்ததே தவிர ஒவ்வொரு எழுத்தாளரின் பங்களிப்பும் இயல்பாகவே வெவ்வேறாகவே இருந்தது. சக்கரியா இந்த உணர்வுநிலையை ஒட்டி எழுதத் தொடங்கினாலும் விரைவில் ஒரு பாய்ச்சலை நிகழ்த்தினார். அதனாலேயே நவீனத்துவ காலகட்டம் உச்சம் பெற்றுத் தேய்ந்த பின்னரும் அவரால் தொடர்ந்து முன் நகர முடிந்தது. ஆதுனிகோத்தர - பின்நவீனத்துவ - காலத்திலும் முன்னுதாரணமாகச் சொல்லக் கூடிய சிறுகதைகளை எழுதியிருக்கிறார். நவீனத்துவக் காலகட்டத்தில் எழுதப்பட்ட 'யேசுபுரம் பொது நூலகத்தைப் பற்றி ஒரு புகார்' என்னும் சிறுகதையையும் பின்நவீனத்துவ காலத்தில் எழுதப் பட்ட 'கன்யாகுமாரி'யையும் வாசிக்கும்போது இந்தப் பாய்ச்சல் அழுத்தமாகப் புலப்படும்.

சக்கரியாவின் வலுவான இலக்கிய ஊடகம் சிறுகதைதான். அவர் அதிக எண்ணிக்கையில் எழுதியிருப்பதும் சிறுகதைகள்தாம். நவீனத்துவக் காலப் பகுதியில் அவரது சகபயணிகளாக இருந்த பலரும் நாவல் துறையில் பரிசோதனைகள் மேற்கொண்டு வெற்றி பெற்றபோதும் சக்கரியா சிறுகதைச் சோதனைகளிலேயே தன்னை நிலைநிறுத்திக்கொண்டார். நாவல்கள் என்னும் வடிவில் அவர் எழுதிய படைப்புக்கள்- 'பாஸ்கர பட்டேலரும் என் வாழ்க்கையும்', 'பிரைஸ் தி லார்ட்', 'என்ன சேதி பிலாத்துவே', 'செங்கல்லும் ஆசாரியும்', 'இதுதான் என் பெயர்', 'அய்யப்ப திந்தகத்தோம்' - ஆகியவை நீள்கதைகள் அல்லது குறுநாவல்கள். இவற்றுக்கு நாவல்களின் சுபாவத்தைத் தருவது அவற்றில் எடுத்தாளப்படும் காலத்தின் நீட்சியும் மனவோட்டங்களும்தாம். 'பாஸ்கர பட்டேலர்', 'இதுதான் என் பெயர்' ஆகிய குறுநாவல்கள் விரிவாக எழுதப்படவேண்டிய கருப்பொருள்களைக் கொண்டவை என்னும் ஆற்றாமை அவற்றை வாசிக்கையில் தோன்றும்.

பல்வேறு வடிவங்களைச் சிறுகதையில் முயன்று பார்த்தவர் சக்கரியா. எதார்த்தவாதம், உருவகம், உபதேசக் கதைகள், வெகுசன எழுத்தின் பகடி, பத்திரிகை அறிவிப்பு, கடிதம், துண்டறிக்கை உட்பட மலையாளத்தில் 'கம்பி இலக்கியம்' என்று செல்லமாக அழைக்கப்படும் போர்னோ கதைகளின் பாணியிலும் கதைகளை எழுதியிருக்கிறார். காலத்தின் அதிர்வுடன் ஒத்து இசைந்து உருமாற்றம் பெற்றுக்கொண்டேயி

படிப்பகம்

www.padippakam.com



**வைக்கம் முகம்மது பஷீருக்குப் பின் தமிழ் வாசகர்களிடையே சிலாகித்து வரவேற்கப்பட்ட மலையாள எழுத்தாளர் சக்கரியாதான்.**

ருப்பவை சக்கரியாவின் எழுத்துக்கள். எளிமையான மொழி, நுட்பமான சித்தரிப்பு, எள்ளலான பார்வை, பொதுவாகக் கேரள சிரியன் கிறிஸ்தவப் பின்னணி, பைபிள் தருணங்கள் - இவை சக்கரியாவின் புனை வுலகைக் கட்டமைக்கும் கூறுகள்.

வேடிக்கையானவை, எதிர்வினை காட்டுபவை, ஆன்மீக விசாரம் சார்ந்தவை எனச் சக்கரியாவின் கதைகளைப் பகுக்கலாமெனத் தோன்றுகிறது. வேடிக்கை என்னும் வார்த்தை மூலம் குறிப்பிட விரும்புவது வெற்று நையாண்டியை அல்ல. மாறாக கம்பிமேல் நடக்கும் கழைக்கூத்தாடியின் சரளமும் அதே சமயம் அபாயகரமானதுமான செயலைத்தான். 'பாஸ்கர பட்டேலரும் என் வாழ்க்கையும்' உள்ளிட்ட நாவல்கள் 'கன்யாகுமாரி', 'ஒரு கதாசிரியை அபகரிக்கப்படுகிறாள்', 'ஒரு கிறிஸ்துமஸ் கதை' போன்ற கதைகள் வேடிக்கையானவை. மனித மனத்தின் விசித்திரத்தைப் பேசுபவை. காந்தியின் மரணத்தை முன்னிருத்தி தீவிரவாதத்தின் வேரைத் தேடும் 'இதுதான் என் பெயர்', பாப்ரி மஸ்ஜித் இடிப்பை மையமாக்கி மத அதிகாரத்தின் அரசியலை ஆராயும் 'அய்யப்ப திந்தகத்தோம்' ஆகிய குறுநாவல்கள் சமகால வரலாற்றின் எதிர்வினைகள்.

'கண்ணாடியில் பார்க்கும் வரை', 'யாருக்குத் தெரியும்?', 'மூன்று குழந்தைகள்', 'அன்னம்மா டீச்சர் - ஒரு நினைவுக் குறிப்பு' முதலான கதைகளும் 'என்ன சேதி, பிலாத்துவே?' நீள்கதையும் இம்மை சார்ந்த ஆன்மீகத் தளத்தில் இயங்குபவை. இதில் மறைமுகமாக வும் பகிரங்கமாகவும் தோற்றம் கொள்ளும் கடவுளும் அவரது மைந்தனும் மத பீடங்களில் இறுகிப்போன பாதங்கள் கொண்டவர்களல்லர். மனிதனின் காலடித் தடங்களில் சஞ்சரிப்பவர்கள். வாழ்வின் சுமை தாளாமல் தள்ளாடி விழும் அன்னம்மா டீச்சரை, அவளால் தம்பி என்று அழைக்கப்படும் யேசு, ஓடைக் கரைப் புல்தரைமீது நோகாமல் கிடத்தும் காட்சி நிகரற்றது.

சக்கரியாவின் இன்னொரு முகம் கலாச்சாரச் செயல்பாட்டாளனுடையது. சமகால மலையாளி வாழ்க்கையை அவரைப் போல கடுமையாக விமர்சனத் துக்கு உட்படுத்தியவர்கள் அநேகமாக இல்லை எனலாம். மலையாளியின் கலாச்சாரப் பாசாங்குகள், அரசியல் கபடங்கள், சுயநல அக்கறைகள் இவற்றின் மீதெல்லாம் சக்கரியாவின் சவுக்குத் தொடர்ந்து விழுந்து கொண்டேயிருக்கிறது. பெருவாரியான மலையாளிகளின் சிந்தனையோட்டத்துக்கு எதிர் முனையில் கனன்றுகொண்டிருக்கும் நிஜத்தைப் புலப்படுத்திக் கொண்டிருப்பவர் அவர்.

சமூக வாழ்க்கையின் மாற்று மதிப்பீடுகளுக்கு அவருடைய ஆதரவு எப்போதும் உண்டு. 'ஓர் அறிவுலகவாதியின் பயன்பாடு புதிய கருத்துகளை சமூகத்துக்கு வழங்குவதுதான்' எனத் தனது கட்டுரை யொன்றில் குறிப்பிட்டுமிருக்கிறார். மாமூல் நடைமுறைகளுக்குச் சவால்விடும் அணுகுமுறை களுடன் அவரால் உடனடியாக ஐக்கியப்பட முடிகிறது. அவரால் ஆதிவாசிகளின் உரிமைப் போராட்டப் பந்தலில் குந்தியிருந்து கஞ்சி குடிக்க முடிகிறது; பழங்குடி மக்களின் போராளியான ஜானுவை வைத்து தனது புத்தகத்தை வெளியிட முடிகிறது; பாலியல் தொழிலாளர் கருத்தரங்கில் உரையாற்ற முடிகிறது; இஸ்லாம் மதத்தில் புதிய கருத்துகளைப் பேசியதால் படுகொலை செய்யப்பட்ட சேகன்னூர் மௌலவி பற்றிய நூலுக்கு முன்னுரை எழுத முடிகிறது; இடது வலது அரசியல் முன்னணிகள் கேரளத்தைச் சுரண்டி எலும்புக்கூடாக வீசியெறிந்திருப்பதைக் கூரான மொழியில் விமரிசிக்க முடிகிறது; அமிர்தானந்தமயி, ஸ்ரீஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் போன்ற ஆன்மீக வியாபாரிகளைப் பரிகசிக்க முடிகிறது.

விவாதத்துக்குரிய கருத்துகளை முன்வைக்கும் சக்கரியா சமயங்களில் தானே விவாதப் பொருளாகி விடுகிறார். நதிகளைத் தனியாருக்கு விற்பதற்கு எதிர்ப்புகள் எழுந்த போது நதியின் மடியிலிருந்து மணலைச் சுரண்டி ஆடம்பரமான வீடுகளைக் கட்டிக் கொள்கிற மலையாளிகளின் பேராசையைச் சுட்டிக்காட்டினார் சக்கரியா. கோக்கோகோலா கம்பெனி நிலத்தடி நீரை உறிஞ்சிப் பூமியை மலடாக்கி விட்டது என்று போராட்டக் குரல்கள் முழங்கியபோது தனியார் சாராய ஆலைகளின் நீர்ச் சுரண்டலை அடையாளம் காட்டினார். இந்தச் சந்தர்ப்பங்களி லெல்லாம் விவாதப் பொருளானது பிரச்சினைகளல்ல; சக்கரியாதான். மலையாள அறிவுஜீவிதத்தின் கபடத் தந்திரம் இது என்று புன்னகை செய்தார் சக்கரியா. எனினும் இன்று மலையாளத்தில் அதிகம் வாசிக்கப் படுகிற தீவிர எழுத்தாளர் அவர்தான். அவரது பத்திகளை வெளியிடாத பத்திரிகைகள் குறைவு.

வைக்கம் முகம்மது பஷீருக்குப் பின் தமிழ் வாசகர்களிடையே சிலாகித்து வரவேற்கப்பட்ட மலையாள எழுத்தாளர் சக்கரியாதான். அவரது பிரதானமான நான்கு குறுநாவல்களும் இருபத்தைந் துக்கும் அதிகமான சிறுகதைகளும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழ் எழுத்தாளர் கள் இருவரின் நூல்களுக்கு - அசோகமித்திரன் கதைத் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பு, சாரு நிவேதிதாவின் 'ஸீரோ டிகிரி' நாவலின் மலையாள மொழிபெயர்ப்பு - முன்னுரை எழுதியிருக்கிறார். தமிழ் வாழ்வின் நற்குணங்கள் பற்றி உயர்வான அபிப்பிராயம் கொண்டவராகவும் இருக்கிறார். மலையாளத்தில் அவரது பங்களிப்புக்காக சாகித்திய அக்காதெமி விருது வழங்கப்பட்டிருந்தாலும் அவரைப் பாராட்ட, விசால மனம்கொண்ட தமிழ் வாசகருக்கு மேற் சொன்ன இலக்கியக் காரணங்கள் போதுமானவை. அவரைத் தமிழில் அறிந்துவைத்திருக்கும் வாசகர்கள் எல்லார் சார்பிலும் சக்கரியாவுக்கு ஸ்துதி.

குறிப்பு: கட்டுரையில் சக்கரியாவின் படைப்பு களைப் பற்றிய குறிப்புகள் எம்.எஸ்.,கே.வி.ஜெயஸ்ரீ, சுரா ஆகியோரின் மொழிபெயர்ப்புகளைச் சார்ந்தவை.

படிப்பகம்

www.padippakam.com



பதிவுகள்: அசோகமித்திரன் - 50

# வாழ்விலே முதல் முறை

அ.பாரதி

**'கடவு'** இலக்கிய அமைப்பும் 'கிழக்கு' பதிப்பகமும் இணைந்து நடத்திய 'அசோகமித்திரன் – 50' என்னும் நிகழ்ச்சி குறித்த செய்தியைக் கேள்விப்பட்டதும் அசோகமித்திரனுக்கோ அவரது படைப்புகளுக்கோ முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் இதுவரை எந்தக் கூட்டமும் நடத்தப்பட்டதில்லை என்னும் உண்மை நினைவூட்டப்பட்டு ஆச்சரியமும் வருத்தமும் ஏற்படுவது இயற்கைதான். ஆனால் இது போன்ற பல ஆச்சரியங்களை இயல்பாக எடுத்துக்கொண்டு பழகிப்போன தமிழ்ச் சூழலில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டு வரும் பல சாதகமான மாற்றங்களில் ஒன்றாகவே இந்தக் கூட்டத்தைப் பார்க்க வேண்டும்.

தமிழின் மிக முக்கியமான படைப்பாளிகளில் ஒருவரான அசோகமித்திரனைக் கௌரவிக்கும் இந்த விழாவில் கலந்துகொண்டவர்களின் பெயர்ப் பட்டியலே விழாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும்: சுந்தர ராமசாமி, ஞானக்கூத்தன், எஸ். வைத்தீஸ்வரன், பிரபஞ்சன், ஆ.இரா. வேங்கடாசலபதி, சக்கரியா.

வரவேற்புரையாற்றிய வைத்தீஸ்வரன் தன் நீண்டகால நண்பரின் படைப்புகள் பற்றி அதிகம் பேசாமல் தங்களது நட்பின் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார். தலைமையுரையாற்றிய பிரபஞ்சன், அசோகமித்திரனுக்காக ஒரு கூட்டம் நடத்த வேண்டும் என்னும் எண்ணம் உருவான கதையைக் கூறினார். இக்கூட்டத்தின் அஸ்திவாரமாக விளங்கிய இதழியலாளர்கள் முரளிதரன், கவிதா ஆகியோரது பங்கைப் பாராட்டுணர்வுடன் பதிவு செய்தார். அசோகமித்திரனின் கதையுலகுடனான தனது நெருக்கத்தை ஒரு சில வார்த்தைகளில் சொல்லித் தன் தலைமையுரையைச் சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

நுட்பமான வாசகர்கள், விமர்சகர் ஆகியோரை இல்லாமல் புதிய வாசகர்களை முன்னிட்டுப் பேசவிருப்பதாக முதலிலேயே அறிவித்துவிட்ட சுந்தர ராமசாமியின் உரை மிக விரிவாக அமைந்தது. அசோகமித்திரனின் படைப்புப் பார்வை குறித்தும் அவர் படைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் தனக்கே உரிய அங்கதத்துடனும் அழுத்தங்களுடனும் சு.ரா. பேசினார். அசோகமித்திரனுடைய பாத்திரங்களின் பொதுத்தன்மை, அவரது கதையுலகில் வன் முறை இல்லாதிருக்கும் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டார். அசோகமித்திரனின் கதையுலகில் ஒரு குறிப்பிட்ட தருணம் அல்லது நிகழ்வு குறித்த சித்தரிப்பு, பல்வேறு சாத்தியக்கூறுகளை உள்ளடக்கியதாக விரிந்துகொண்டே செல்லும் பாங்கை ஒரு புனைவாக சு.ரா. நிகழ்த்திக் காட்டியது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

ஒரு கல்வியாளருக்குரிய தொனியுடன் பேசிய ஆ.இரா. வேங்கடாசலபதி, அசோகமித்திரன் கதையுலகின் சில நுட்பங்களை அனாயாசமாகத் தொட்டுக் காட்டினார். அசோகமித்திரனுக்குப் பிறகு எழுத வந்த இரா. முருகன் போன்ற பலர் தங்கள் முதல் தொகுப்புக்கு அசோகமித்திரனின் முன்னுரையைக் கேட்டுப் பெற்றது அவரது முக்கியத்துவத்தை உணர்த்துகிறது எனக் குறிப்பிட்டார்.

அசோகமித்திரனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான ஞானக்கூத்தன் அசோகமித்திரனின் கட்டுரைகள் குறித்து விரிவானதொரு கட்டுரையை எழுதி எடுத்துவந்திருந்தார். நேரமின்மை கருதி அதைப் படிப்பதைத் தவிர்ப்பதாகக் கூறிய அவர் அசோகமித்திரனின் உரைநடையில் இருக்கும் நாகரிகம் யார்மீதும் துவேஷம் பாராட்டாத பண்பு, புண்படுத்தாத விமர்சனம் ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமாகப் பேசினார்.

முக்கியமான மலையாள எழுத்தாளர்களில் ஒருவரான சக்கரியா, எழுதப்பட்ட ஆங்கில உரையை வாசித்தார். அசோகமித்திரனின் எழுத்தில் உள்ள, நவீனத்துவ, பெண்ணியக் கூறுகளைப் பற்றிக் குறிப்பிட்ட அவர், மலையாளப் படைப்புகளின் சராசரித் தரத்தைவிடப் பல மடங்கு மேம்பட்டதாக அ.மி.யின் எழுத்துக்கள் உள்ளன என்றார். தன்னை மிகவும் பாதித்த *தண்ணீர்* நாவலின் ஆங்கிலப் பிரதியிலிருந்து சில வரிகளையும் வாசித்தார்.

அசோகமித்திரனின் ஏற்புரை அவரது ஆளுமையை உணர்த்துவதாக அமைந்தது. நர்மதா போன்ற தனது ஆரம்பகாலப் பதிப்பாளர்கள்முதல் கவிதா, கிழக்கு போன்ற இன்றைய பதிப்பாளர்கள்வரை பலரையும் மறக்காமல் குறிப்பிட்டு நன்றி தெரிவித்தார். தன் படைப்புகள் பற்றி அங்கதச் சுவையுடன் சில விஷயங்களைக் கூறிய அவர், தனது படைப்புகளுக்கு வரம்பாகத் தான் நிர்ணயித்துக்கொண்ட விஷயங்களை விளக்கினார். “ஒரு குழந்தை என் கதைகளைப் படித்தாலும்” அதற்கு மனக் குழப்பம் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் தான் மிகவும் கவனமாக இருந்ததாகக் குறிப்பிட்டபோதும் வன்முறையை எழுத்தில் வடிப்பதில் தனக்கு உடன்பாடே கிடையாது என்று சொன்னபோதும் அவரது குரலில் ஏற்பட்ட நெகிழ்ச்சி பார்வையாளர்களை மிகவும் பாதித்தது.

அசோகமித்திரன் குறித்து அம்ஷன்குமார் இயக்கிய ஒரு விவரணப் படத்துடன் தொடங்கிய நிகழ்ச்சி 'விருட்சம்' அழகிய சிங்கரின் நன்றியுரையுடன் முடிந்தது. விவரணப்படத்திலும் அசோகமித்திரனின் உரையிலும் வெளிப்பட்ட அவரது பார்வையும் ஆளுமையும் நிகழ்ச்சியின் இயல்பான அடையாளங்களாக அமைந்தன. கி. ராஜநாராயணன், நகுலன் போன்ற பலருக்கு இதுபோன்ற கூட்டங்கள் நடத்தப்படவேண்டும் என்னும் எண்ணத்தை இக்கூட்டம் ஏற்படுத்தியதாகப் பார்வையாளர்கள் சிலர் கூறியதைக் கேட்டபோது தமிழ்ச் சூழலில் ஏற்பட்டுவரும் ஆரோக்கியமான சலனங்களை உணர முடிந்தது.



அசோகமித்திரன்



வைத்தீஸ்வரன்



பிரபஞ்சன்



சுந்தர ராமசாமி



ஆ.இரா.வேங்கடாசலபதி



ஞானக்கூத்தன்



சக்கரியா

படிப்பகம்

www.padippakam.com



# புரட்சி உருவாகிறது

சுசி தாரு



மூன்று முக்கியப் புத்தகங்கள் வெளியிடப்படும் இந்த நிகழ்வில் பங்குபெறுவதில் நான் மிகவும் பெருமிதம் அடைகிறேன். இந்த எழுத்தாளர்கள் எல்லோரும் நமக்குப் பரிச்சயமில்லாத உலகங்களைப் பற்றி எழுதுகிறார்கள். இலக்கிய வாசகர்களுக்கு இந்த உலகங்கள் புத்தம் புதியன வாக இருக்கும். இந்த உலகங்கள் முக்கியமானவை. ஏனென்றால் இவை போன்ற எழுதுகோல்களில் உருவாகும் எழுத்திலிருந்துதான் புதிய உலகுக்கான பாதை வகுக்கும் சிந்தனைகள் மனித இனத்திற்குப் பிறக்கும்.

இங்கு வந்து இந்தப் புத்தகங்களை வெளியிடுவது பற்றி ஒரு விதத்தில் எனக்குத் தர்மசங்கடமாக இருக்கிறது. ஆனால் இன்னொரு விதத்தில் அப்படி இல்லை. ஏனென்றால் எனக்குத் தமிழ் படிக்க வராது. ஆனால் சல்மா பேசுவதை நான் கேட்டிருக்கிறேன், அவரது கவிதைகளை மொழிபெயர்ப்பில் படித்திருக்கிறேன். மற்ற இரு கவிஞர்களான சுகிர்தராணி பற்றியும் லதா பற்றியும் தெரிந்துகொண்டேன். இவர்கள் எந்த இயக்கத்தில் இருக்கிறார்களோ அந்த இயக்கத்தில் நானும் ஒரு விதத்தில் ஓர் அங்கம். இந்தப் பெண் எழுத்தாளர்களின் இயக்கத்தில் நானும் ஒரு உறுப்பினர் போல் உணர்கிறேன், அவர்களது அனுபவங்கள், கவலைகள் ஆகியவற்றில் பலவற்றை நானும் பகிர்ந்துகொள்கிறேன். அதுபோல இந்தியா முழுவதும் மட்டுமின்றி, உலகெங்கும் உள்ள பெண்களுடன் அவர்கள் பகிர்ந்துகொள்ளும் ஆசைகளை நானும் பகிர்ந்து கொள்கிறேன்.

பெண் எழுத்தின் வரலாற்றைப் பார்த்தால் பெண்கள் எப்போதுமே புரட்சிகரமான தருணங்களில் எழுதியிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பீர்கள். நாவல் வடிவம் முதன் முதலில் ஒரு முக்கிய இலக்கிய வகையாக உருவாகத் தொடங்கும்போது ஐரோப்பாவில் ஏராளமான பெண் எழுத்தாளர்கள் நாவல் எழுதிக்கொண்டிருந்தார்கள். இதற்குச் சில காரணங்கள் இருந்தன. நாவல் உரைநடையில் எழுதப் பட்டது. உரைநடை, பெண்களின் மொழி. கவிதை, படித்த, கல்வித் துறையில் இருந்த ஆண்களின் மொழி, உரைநடை பெண்களின் மொழி.

தமிழ்நாட்டில் 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளிலும் இந்தியாவின் பிற பகுதிகளில் 16ஆம் நூற்றாண்டு வரையிலும் இருந்த பக்தி இயக்கம் வேறு விதமான ஒரு புரட்சி இயக்கமாகச் செயல்பட்டது. அது சமஸ்கிருதத்திற்கு எதிரானதாக மட்டுமின்றிக் குருமார்களின் அதிகாரத்திற்கும் செல்வாக்கிற்கும் எதிராக இருந்தது. சாதாரண மக்களின் பிரச்சினைகளைக் குறித்துப் பேசியது அந்த இயக்கம். பெண்கள் இப்படியான ஓர் இயக்கத்திலும் மிகப் பெரிய எண்ணிக்கையில் கலந்துகொண்டார்கள்.

ஆக, எனது கருதுகோள் என்னவென்றால் – இதை நீங்கள் மறுக்கலாம் – பெண்களின் முக்கியமான எழுத்துகள் வெளிவரத் தொடங்கும்போதெல்லாம் ஏதோ ஒரு விதமான புரட்சி ஏற்படத் தொடங்குகிறது. இந்தத் தருணத்தில் தமிழில் இதைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. மொழி தொடர்பான ஒரு முக்கியமான புரட்சியாக அது இருக்கலாம்; மனித இனம் அல்லது சுயம் குறித்த புரிதலைப் பற்றிய முக்கியமான புரட்சியாக இருக்கலாம்; மனித உறவுகளை, அதிகாரத்தை நாம் எப்படிப் புரிந்துகொள்கிறோம் என்பது பற்றிய முக்கியமான புரட்சியாக இருக்கலாம் – இந்தப் புரட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது.

வரலாற்றில் மீண்டும் பின்னோக்கிப் பார்த்தால் ஒரு விஷயம் தெரியும் – இந்திய இலக்கிய வரலாற்றுடன் நாம் தொடர்புபடுத்திப் பார்க்கும் வலுவான ஒடுக்குமுறைச் சக்தியானது 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஏற்பட்ட ஒரு மாற்றத்துடன் வந்தது. அப்போது பெண்களின் எழுத்து கடுமையான கட்டுப்பாடுகளுடன் வெளிவரத் தொடங்கியது. சமூகச் சீர்திருத்த இயக்கத்துடன் சேர்ந்து 'ஒழுக்கப் படுத்தல்' என்னும் பெயரில் ஒரு மிகக் கடுமையான சக்தி செயல்பட ஆரம்பித்தது. அதனால் சாதாரண வர்க்கங்களைச் சேர்ந்த ஏராளமான எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், நடனக் கலைஞர்கள் எல்லோரையும் அந்தப் புதிய இலக்கிய இயக்கம் நிராகரித்தது. தெலுங்கில் தஞ்சாவூர்ப் பெண் கவிஞர் முத்துப் பழனியின் படைப்புகள் இந்த விஷயத்தில் மிகவும் புகழ் பெற்றவை. 19ஆம் நூற்றாண்டிலிருந்து நடுத்தர வர்க்க, மேல் ஜாதி, தேசியவாத அல்லது முழுக்கவும் நவீனமான எழுத்து பிரதான எழுத்து வகையாக நிறுவப்படுவதைப் பார்க்கலாம். வேறு பல வகை எழுத்தாளர்களும் பல வகைக் கருப்பொருள்களும் இருட்டடிப்பு செய்யப்பட்டன அல்லது மறைந்தன.

இந்த இருட்டடிப்பு தொடர்பாகப் பல விஷயங்களை விவாதிக்க முடியும். ஆனால் இன்று நாம் விவாதிக்கும் எல்லாப் புத்தகங்களையும் இணைக்கும் ஒரு பிரச்சினையைப் பற்றிச் சிறிது பேச விரும்புகிறேன். சொந்த உலகம் என்பதுதான் அந்தப் பிரச்சினை. பெண் எழுத்தாளர்கள் அதிக அளவில் தங்கள் சொந்த உலகத்தைப் பற்றி எழுதுகிறார்கள். (பொது உலகைப் பற்றியே அதிகம் எழுதும் மகாஸ்வேதா தேவி போன்ற ஒரு சில விதிவிலக்குகள் உண்டு). பெண்கள் தங்கள் சொந்த உலகத்தைப் பற்றி எழுதுவதாலேயே நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது படைப்புகள் எளிமையானவை, அற்பமானவை, குடும்பத்தைப் பற்றி மட்டுமே பேசுபவை; உறவுகளைப் பற்றி மட்டுமே பேசுபவை என்றெல்லாம் கருதப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் 1970களில் பெண்ணியம் பொதுக்களத்தில் தோன்றும்போது, அரசியல் வாழ்க்கையில் சொந்த உலகம் என்பது ஏன் வேண்டுமென்றே ஒட்டுமொத்தமாக மூடி மறைக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளத் தொடங்கும்போது கருத்து ரீதியாக மிக முக்கியமான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பெண்ணியத்தின் தொடக்ககால கோஷங்களில் ஒன்று, 'அந்தரங்க உலகம்–அல்லது சொந்த உலகம்–அரசியல் ரீதியானது; வீடு ஓர் அரசியல் வெளி; குடும்பம் ஓர் அரசியல் வெளி; பாலியல்பு ஓர் அரசியல் பிரச்சினை.' இன்றைய இந்திய வாழ்க்கையில் மிக மிக முக்கியமான பங்கு வகிக்கும் மற்ற இரண்டு பிரச்சினைகளும்கூடச் சொந்தப் பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகள்–ஜாதி (ஆம், மதச் சார்பற்ற விவாதத்தில் ஜாதியை ஒரு சொந்தப் பிரச்சினையாகத்தான் பார்க்கிறார்கள்), இன்னொன்று, மதம் என்னும் மிகப் பெரிய சொந்தப் பிரச்சினை.

இன்று எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் குடும்பம், பாலியல்பு, ஜாதி, மதம் ஆகிய எல்லாப் பிரச்சினைகளையும் நம் காலத்தின் முக்கிய அரசியல் பிரச்சினைகளாகக் கருதி விவாதிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இங்கே என் சொந்த விஷயம் ஒன்றைச் சொல்ல வேண்டும். என்னுடன் ஒப்பிடும்போது என் மகள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறாள் என்பது என்னை மிகவும் பெருமிதம்கொள்ளவைக்கும் ஒரு விஷயம். எனக்கும் என் மகளுக்கும் இடையில் இந்த வித்தியாசம் இருப்பதற்கு ஏதோ ஒரு வகையில் நான்தான் பொறுப்பு என்று நினைக்கிறேன். இந்தியாவில் இயங்கும் பெண்ணிய இயக்கமும் இந்த வித்தியாசம் ஏற்படக் காரணம் என்று நினைக்கிறேன்.

எனது இளமைப் பருவத்தில், நான் பேருந்தில் சென்றுகொண்டிருக்கும் போது என்னை யாராவது கிள்ளிவிட்டால் நான் மிகவும் கூனிக் குறுகிப் போவேன். எந்த அளவிற்கு என்றால் நான் எனக்குள் ஒடுங்கிக் கொள்வேன். நான் கிள்ளப்பட்டது என்னுடைய குற்றம்தான் என்று நினைப்பேன். ஆனால் என் மகளை யாராவது பேருந்தில் தொட்டுவிட்டால் அவள் கத்துவாள்! என்ன தைரியம் இருந்தால் இப்படிச் செய்வாய் என்று கேட்டுவிட்டுப் பேருந்திலிருந்து இறங்கிவிடுவாள். தெருவில் போகும் வழியெல்லாம் கத்திக்கொண்டே போவாள். கத்திக்கொண்டே வீட்டுக்கு வருவாள். எனக்குப் பெருமையாக இருக்கும். அவள் பாலியல் சீண்டலை அவள் சொந்தப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டாள்; அதை ஒரு பொதுப் பிரச்சினையாக்கி விட்டாள். இது பெண்ணாக இருக்கும் நம் எல்லோருக்கும் ஒரு மிகப் பெரிய முன்னேற்றம்.

எல்லா வர்க்கங்களிலும் எல்லா வகுப்புகளிலும் வீட்டில் பெண்களின் மீது ஆண்கள் நடத்தும் வன்முறை பற்றி வெளிப்படையாகப் பேசுவது சமீபகாலம் வரை அசாத்தியமாக இருந்தது. இப்போதுகூட இந்த வன்முறை குறித்துப் பேசுவது கடினமாக இருக்கிறது. சுதந்திரமான இந்தச் சமூகத்தில் ஒருவரை யொருவர் தாக்கக் கூடாது, பிரச்சினை என்றால் போலீசில் புகார் செய்ய வேண்டும், கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்றெல்லாம் விதிகள் இருந்தாலும், பொது வாழ்க்கையில் ஓர் இடத்தில் மட்டும் வன்முறை அனுமதிக் கப்படுகிறது. வீடுதான் அந்த இடம். தன் மனைவியைத் தாக்கக் கூடாது என்னும் சட்ட ரீதியான நிர்ப்பந்தம், சமீபகாலம்வரை, பெண்ணிய இயக்கம் இந்தப் பிரச்சினையை எழுப்பும்வரை, ஆணுக்கு இல்லை.

பெண்களின் பிரச்சினையோடு மிக நெருங்கிய தொடர்புள்ள விஷயங்கள் – உடலின் மீறக் கூடாத தன்மை, சுதந்திரம், தன்மதிப்பு மற்றும் ஏராளமான பிற விஷயங்கள் – குடும்பத்திற்குள், இந்தச் சொந்த இடத்திற்குள் புழங்குவதைப் பார்க்கிறோம். இந்தப் பிரச்சினைகள் பொது இடத்திற்கு வரத் தொடங்கியதும் தான் பெண்களின் பிரச்சினைகளின் பரிமாணங்கள் நமக்குப் புரியத் தொடங்கியிருக்கின்றன.

பேருந்தில் என்னைக் கிள்ளிவிட்டார்கள் என்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாததைப் போலவே, வீட்டில் என் கணவர் என்னை அடிக்கிறார் என்றும் சொல்ல முடியாது. ஏனென்றால் கணவர் நம்மை அடிக்கிறார் என்றால் நம்மிடம்தான் ஏதாவது தவறு இருக்கும் என்றாகிவிடுகிறது. இதை அப்படியே புரட்டிப் போட்டால், பாலியல் சீண்டலைப் பற்றியும் வீட்டில் நடக்கும் வன்முறை பற்றியும் வெளிப்படையாகப் பேசினால் கடுமையான எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றன. இவையெல்லாம் மறைக்க வேண்டிய விஷயங்கள், இச்சை பற்றிப் பேசும்போதும் அதே போன்ற எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன.

நம் நாட்டின் பல்வேறு செவ்விலக்கியங்கள் பெண் இச்சை என்னும் முக்கியமான பிரச்சினையைப் பற்றிப் பேசுவது ஆச்சரியம் தருகிறது. இருந்தும் இன்று பெண்கள் இச்சையைப் பற்றி, பெண்ணுக்கும் இச்சை இருக்கிறது என்பதைப் பற்றி எழுதத் தொடங்கும்போது, அந்த எதிர்மறை விளைவு உடனடியாகக் கிளம்புகிறது – அவர்கள் பீதியூட்டும் விஷயம் ஒன்றைச் சொல்லி விட்டதுபோல. பெண் இச்சை என்பது ஏன் இவ்வளவு பீதியூட்டுகிறது என்று நான் யோசித்துப் பார்க்கிறேன். யார் பீதியடைகிறார்கள், அவர்களுக்கு ஏன் அவ்வளவு பீதி?

ஆகவே நம் எல்லோருடைய வாழ்க்கையின் சொந்த விஷயங்களையும் பெண்களுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்ட இந்தப் பிரச்சினைகளையும் குறித்து இந்த அதிமுக்கியமான கேள்விகளை எழுப்பும் புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கும் இந்தக் கூட்டத்தில் பங்குபெறுவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

அதேபோல ஏதாவது ஒரு வகையில் விளிம்புநிலை வகுப்பினரின் வாழ்க்கையைச் சித்தரிப்பதிலும் எனக்கு விசேஷ ஆர்வம் உண்டு. ஏனென்றால் நம் இலக்கியப் படைப்புகள் அதே மனிதர்களைப் பற்றியே அலுப்பூட்டும் விதத்தில் திரும்பத் திரும்பப் பேசியிருக்கின்றன. எனவே தலித் குழுக்கள், முஸ்லிம் குழுக்கள் போன்றவர்களிடமிருந்து வரும் எழுத்தில் இருக்கக்கூடிய புதுமை பேணப்பட வேண்டியது, போற்றப்பட வேண்டியது.

*தமிழில்:* திவாகர் ரங்கநாதன்

ஜனவரி 10 அன்று சென்னை லேண்ட் மார்க் அரங்கில் காலச்சுவடு - லேண்ட்மார்க் இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு அரங்கில் சல்மா, லதா, சுகிர்தராணி ஆகியோரின் நூல்களை வெளியிட்டு சுசி தாரு ஆற்றிய உரை இது, மார்ச் 8ஆம் தேதியன்று உலகெங்கும் கொண்டாடப்படும் 'பெண்கள் தின'த்தை ஒட்டி இவ்வுரை இந்த இதழில் பிரசுரிக்கப்படுகிறது.

ஆசிரியர் குழு


மருதா வெளியீடு




**சென்னை கானா**

(பாடல்கள்)

தொகுப்பாசிரியர்:

வை. இராமகிருஷ்ணன்

பக்: 200, விலை: ரூ. 100

மருதா

226 (188), பாரதி சாலை,

ராயப்பேட்டை, சென்னை 600 014.

✆ : 09382116466

விளம்பரம்


படிப்பகம்

www.padippakam.com


# மு. அருணாசலம் அவர்கள் எழுதிய

# தமிழ் இலக்கிய வரலாறு

## நூற்றாண்டு முறை – 14 தொகுதிகள்

(ஆசிரியர் 30 ஆண்டுகளுக்குமுன் தாம் வெளியிட்ட ஒவ்வொரு தொகுதியிலும் பக்கத்திற்குப் பக்கம் வெள்ளைத்தாள் இடையிட்டுக் குறித்து வைத்துள்ள திருத்தங்களையும் புதிய கருத்துகளையும் இம்மறுபதிப்பில் திருத்தியும் சேர்த்தும் முறைப்படுத்தியுள்ளோம்.)

## முன்வெளியீட்டுத் திட்டம்

மொத்த விலை : ரூ. 4200/-

சலுகை விலை : ரூ. 2500/-

முதல் தவணைத் தொகை : ரூ. 1500/-

இரண்டாம் தவணைத் தொகை : ரூ. 1000/-

இத்தொகுதி பெறவிழைவோர்
உரிய தொகைக்கான வரைவோலையை (D.D)
**The PARKAR** – Chennai - 14
என்ற பெயரில் பெற்று அனுப்பி வைக்கலாம்.
தங்கள் முகவரிகளை மிகத் தெளிவாக எழுதவும்.
மேலதிக விபரங்களுக்கு

**The PARKAR**

தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்
293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை,
சென்னை – 600 014. அலைபேசி – 98400 51413


படிப்பகம்

www.padippakam.com


## எமது நிறுவனத்தின் புதிய ஆய்வு நூல் வெளியீடுகள்

- பிதிரா - கோணங்கி
- புலமைச் செல்வியர் - முனைவர் ஔவை நடராசன்
- தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம் - முனைவர் ந. முருகேசபாண்டியன்
- தமிழ்த் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள் - முனைவர் ப. பெரியசுவாமி
- சோழர் கல்வெட்டுகளால் அறியலாகும் கலைச் சொற்கள் - முனைவர் கு. அழகேசன்
- மதுரை மாவட்ட ஊர்ப் பெயர்கள் - முனைவர் பா.அ.ம. மணிமாறன்
- தொல்காப்பியக் கலைச்சொற் களஞ்சியம் - எழுத்து - உல. பாலசுப்பிரமணியன்
- திருச்சி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் ஓர் ஆய்வு - முனைவர் சாமி. பிச்சைப்பிள்ளை
- அயல் மாநில தமிழ்ப் படைப்பாளிகளின் புனைகதைகள் - முனைவர் ஜெ. சரோஜினி
- தமிழர் வாழ்வில் இலக்கியத்தின் செயற்பாடுகள் - முனைவர் கோ. ப. சுதந்திரம்
- தொடக்கக் கல்வித் தமிழ்ப்பாட நூல்கள் ஓர் ஆய்வு - முனைவர் சொ. மகாதேவன்
- சுற்றுச் சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம் - முனைவர் மகிழேந்தி
- விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள் - முனைவர் மு. பழனியப்பன்
- கோவை மாவட்ட வழக்குச் சொல் அகராதி - 1 - முனைவர் டி. மகாலட்சுமி
- கோவைத் தமிழ் இலக்கணம் - முனைவர் டி. மகாலட்சுமி
- குன்றக்குடி அடிகளார் பணிகள் - ஓர் ஆய்வு - முனைவர் பா. சுந்தர்
- வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமுதாயம் - முனைவர் ம. இளங்கோவன்
- வள்ளுவரும் வள்ளலாரும் - முனைவர் ம. இளங்கோவன்
- தமிழ் நாவல் வளர்ச்சி - முனைவர் சுப. சேதுப்பிள்ளை
- தொலைக்காட்சித் தமிழ் - முனைவர் வெ. நல்லதம்பி
- பேரா. ச. வையாபுரிப் பிள்ளையின் பதிப்புப்பணி - முனைவர் பு. ஜார்ஜ்
- மெய் பொய்யன்று - திருமூலர் வள்ளலார் - முனைவர் அ. மலர்
- தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை - முனைவர் ச. விஜயலட்சுமி
- தமிழ்ப் புதுக்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் - முனைவர் ஆ. கருணாநிதி
- பொதுச் சடங்குகளில் இலக்கியங்கள் - முனைவர் கோ. ப. சுதந்திரம்
- புதுக்கவிஞர்களின் விடுதலைக் கண்ணோட்டம் - முனைவர் முல்லை வீ. சண்முகம்
- தமிழில் அறிவியல் நூல்கள் - ஓர் ஆய்வு - முனைவர் சு. லதா
- அறிவியல் கலைச்சொற்கள் வரலாற்று அகராதி - முனைவர் சு. லதா
- திலகவதியின் படைப்புகள் - ஓர் ஆய்வு - முனைவர் சு. புவனேசுவரி
- கி. ராஜநாராயணன் புதினங்கள் - ஓர் ஆய்வு - முனைவர் ந. அங்கயற்கண்ணி
- பாரதியார் கவிதைகளில் அணிநலம் - முனைவர் சிவ. மாதவன்
- தமிழில் தலித் இலக்கியம் - முனைவர் ஆ. ஜீவானந்தம்
- மறவர் உறவு முறை - முனைவர் எம். ஏ. சின்னதம்பி
- தமிழ் நிகண்டுகள் - ஆய்வு - முனைவர் மா. சற்குணம்
- தமிழ் நாவல்களில் சாதி - முனைவர் கு. சங்கரன்
- நீலகேசியில் சமயக் கோட்பாடுகள் - முனைவர் பி. மு. மன்சூர்
- புதுக்கவிதைப் பாடுபொருள் - முனைவர் முல்லை வீ. சண்முகம்
- 20ஆம் நூற். கிறித்தவப் புதினங்களில் மனித விடுதலை - முனைவர் அ. குழந்தைசாமி
- கதைப் பாடல்களில் இடைக்காலச் சமூகம் - முனைவர் வே. சுவாமிநாதன்
- பாரதிதாசன் கவிதைகளில் பகுத்தறிவு அழகியல் - முனைவர் நா. வேலுசாமி

# The PARKAR

தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்

**293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,**
**இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை,**
**சென்னை – 600 014. அலைபேசி – 98400 51413**


படிப்பகம்

www.padippakam.com



# ஊசியைத் தேடுங்கள்

வெ. ஸ்ரீராம்

[இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு எழுத்துச் சூழலில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திய சிந்தனையாளர்களில் ஒருவர் ஆலேன் (Alain, 1868-1951). பல எழுத்தாளர்களை உருவாக்கிய இந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர், அதிகாரச் சக்திகளை மறுத்து, ஏற்கனவே நிலவிவந்த கோட்பாடுகளுக்கு முற்றிலும் அடிமையாகாமல் தனித்துச் சிந்திப்பதில் சிறந்து விளங்கினார். "ஒரு படைப்பை உருவாக்குவதன் மூலம் ஒருவிதத்தில் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்வதுதான் மனிதன் தன் வாழ்வில் அடையும் மிக உயர்ந்த சிகரம்" என்றார் இவர். இதழாளராக அரசியல், பொருளாதாரம், அறிவியல், மானுட வாழ்க்கை, இயற்கையின் விந்தை எனப் பல விஷயங்களைப் பற்றி 1907முதல் தினசரி இவர் எழுதிய கட்டுரைகள் 1920க்குப்பின் பல தொகுப்புகளாக வெளியிடப்பட்டுப் பிரபலம் அடைந்தன. 1914இல், தனது நாற்பத்தி ஆறாம் வயதில் அவர் முதல் உலகப் போரில் தீவிரமாக ஈடுபட்டார். ஓர் ஆசிரியரின் கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்வதை ஆலேன் ஒப்புக்கொள்ளவில்லை. முழுமையாகப் படித்தால்தான் ஓர் ஆசிரியரின் எல்லாப் பரிமாணங்களும் தெரியவரும், அவரைச் சரியாகப் புரிந்துகொள்ளவும் முடியும் என்று அவர் கருதினார். இந்தக் கட்டுரை 'வாழ்வின் மகிழ்ச்சி' என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.]

◆

எவ்வளவு சமாதானப்படுத்தியும் கேட்காமல் ஒரு குழந்தை அழுதுகொண்டே இருக்கும்போது அதன் தாதி அக்குழந்தையின் பிறவிக் குணங்களைப் பற்றியும் அதனிடம் தனக்குப் பிடித்த, பிடிக்காத அம்சங்களைப் பற்றியும் புதுசு புதுசாக ஏதாவது மனம்போன போக்கில் சொல்லிக்கொண்டே இருப்பது வழக்கம். இது போதாதென்று அதன் வம்சத்தையும் வம்புக்கு இழுத்து அப்பாவைப் போலவே பிள்ளையும் இருப்பதாகச் சுட்டிக்காட்டுவாள். அழுவதற்கு மூல காரணமான, படுக்கையிலிருந்த ஊசியை அவள் கண்டுபிடிக்கும்வரை இந்த உளவியல் ஆய்வு முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

மாவீரன் அலெக்ஸாந்தருக்கு அவருடைய இளம் வயதில் புகழ்பெற்ற அவருடைய குதிரை ப்யுசெஃபால் (Bucephale) அளிக்கப்பட்டபோது, எந்த ஒரு குதிரை வீரனாலும் அந்த அடங்காப்பிடாரிக் குதிரைமேல் பொருந்தி அமர முடியவில்லை. 'என்ன துர்க்குணம் பிடித்த குதிரை' என்றுதான் சாதாரணமாக எவருக்கும் தோன்றும்படி இருந்தது. ஆனால், அலெக்ஸாந்தர் ஊசியைத் தேடி விரைவில் கண்டுபிடித்தும்விட்டார். ப்யுசெஃபாலுக்குத் தன்னுடைய நிழலைக் கண்டால் குலை நடுக்கம் என்று புரிந்துகொண்டார். அதைத் துள்ளவைத்த பயம் நிழலையும் துள்ளச் செய்ததால், குதிரை மிரண்டுபோய்த் துள்ளுவது நிற்கவேயில்லை. அலெக்ஸாந்தர் ப்யுசெஃபாலின் மூக்கு சூரியனை நோக்கி இருக்கும்படி இழுத்துப் பிடித்தார். அந்த நிலையில் குதிரைக்குப் பயம் தெளிந்து அதைச் சோர்ந்து போகச் செய்தார். ஆகவே, நம்முடைய உணர்ச்சிகளின் உண்மையான காரணங்களைப் புரிந்துகொள்ளா விட்டால் அவை நம் கட்டுப்பாட்டில் இருக்கமாட்டா என்பதை அரிஸ்டாட்டிலின் மாணவர் ஏற்கனவே தெரிந்துவைத்திருந்தார்.

பல மனிதர்கள் பயத்தை மறுத்து விலக்கியிருக் கிறார்கள், நியாயமான காரணங்களுக்காக. ஆனால் பயத்தில் இருக்கும் ஒருவன் நியாயமான வாதங்களுக்குச் செவிமடுப்பதில்லை; இதயத் துடிப்புகளும் ரத்த அலைகளும் மட்டுமே அவனுக்குக் கேட்கும். அபாயம் தான் பயத்திற்குக் காரணம் என்பார் ஏட்டுச் சுரைக்காய்ப் போதகர்; உணர்ச்சிவயப்பட்ட மனிதனோ பயத்தினா லேயே அபாயம் விளைகிறது என்பான். இரு சாராரும் காரணகாரிய ரீதியாக நினைக்க விரும்பினாலும் இருவரின் வாதங்களுமே தவறானவை. ஆனால் ஏட்டுச் சுரைக்காய்ப் போதகர் இரண்டு தவறுகளைச் செய் கிறார் – உண்மையான காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதல்லாமல் மற்றவரின் வாதத்தில் இருக்கும் தவறையும் அவர் புரிந்துகொள்வதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பயத்தில் இருக்கும் ஒரு மனிதன், தனக்கு இருப்பதாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ள பயம் எவ்வளவு உண்மை யானது என்று விளக்கம் அளிப்பதற்காகவே ஓர் அபாயத்தைக் கற்பிக்க முயல்கிறான். எந்தவித அபாயத்தையும் விளைவிக்காத ஒரு திடீர்ச் சம்பவம் கூட பயத்தைத் தோற்றுவிக்கலாம். உதாரணமாக, மிக அருகில் எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு கைத்துப்பாக்கியின் வெடிச் சத்தம் அல்லது ஓரிடத்தில் சற்றும் எதிர்பாராத ஒருவரைச் சந்திப்பது. ஒருமுறை, நெப்போலியனின் பிரதான தளபதிகளில் ஒருவரான மாஸ்ஸேனா (Massena) சற்றே வெளிச்சம் குறைந்த படிக்கட்டுகளில் இருந்த சிலையைப் பார்த்து மிரண்டு போய்த் தலைதெறிக்க ஓடியது ஓர் உண்மைச் சம்பவம்.

சில சமயங்களில் ஒரு மனிதரின் பொறுமை யின்மைக்கும் அவருடைய மனநிலைக்கும் அவர் நீண்ட நேரமாக நின்றுகொண்டே இருப்பது காரண மாக இருக்கும்; அப்பொழுது அவருடைய மனநிலையை விமர்சித்து வாதம் செய்யாமல் அவருக்கு இருக்கையை அளியுங்கள். 'மனித உறவுகளில் சிறந்த பண்பாளராக இருப்பதே தலையாயது' என்று சொன்ன, நெப்போலி யனின் வெளியுறவுத் துறை அமைச்சர் தாலேரான் (Talleyrand) தான் சொல்ல நினைத்ததைவிட நிறையவே சொல்லிவிட்டிருக்கிறார். பிறருக்குத் தொல்லை இருக்கக் கூடாது என்னும் அக்கறையுடன் ஊசியைத் தேடிக் கண்டுபிடித்தும்விட்டிருக்கிறார். இன்றைய வெளி யுறவுத் துறை அதிகாரிகள் அனைவருக்கும் அவர் களுடைய உள்ளாடைக்குள் எங்கேயோ ஓர் ஊசி இசகுபிசகாக மாட்டிக்கொண்டிருக்கிறது; ஐரோப்பியப் பிரச்சினைகளுக்கு அதுதான் காரணம்* கத்திக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை மற்றவர்களைக் கத்த வைக்கிறது என்பதையும் கத்த வேண்டும் என்பதற்கா கவே சிலர் கத்துகிறார்கள் என்பதையும் எல்லோரும் அறிவார்கள். குழந்தைகளைக் கவிழ்ந்து படுக்கச் செய்வது என்பது தாதிகளின் தொழிலின் இயல்பான செய்கை; அதைத் தொடர்ந்து வேறு சில சிறு செயல்களுக்குப் பிறகு வேறு ஓர் ஒழுங்குமுறை ஏற்பட்டுவிடுகிறது. ஆக, மிகப் பெரிய அளவில் எதையும் முயலாமலேயே அமைதியாக வழிக்குக் கொண்டுவரும் கலை ஒன்று இருக்கிறது. 1914ஆம் ஆண்டின் இன்னல் களுக்குக் காரணமே உலகின் சில முக்கியமான புள்ளிகள் சற்றும் எதிர்பாராத வகையில் அதிர்ச்சிக்கு உள்ளாக்கப் பட்டார்கள் என்பது என் அபிப்பிராயம்; அதனால் பயம் அவர்களைப் பற்றிக்கொண்டது. ஒருவன் பயப் படும்போது கோபமும் உடனே வந்துவிடுகிறது; உணர்ச்சி தட்டி எழுப்பப்பட்டவுடன் எரிச்சல் தோன்றுகிறது. நிம்மதியாக ஓய்வில் இருக்கும் ஒருவரைத திடீரென்று உலுக்கி அழைப்பது சாதகமான சூழ்நிலையை உண்டு பண்ணாது; எதிர்பாராத வகையில் திடீரென்று எழுப்பி விடப்பட்ட மனிதனைப் போல. தேவைக்கு மிஞ்சி அவன் எழுந்து செயல்பட ஆரம்பித்துவிடுவான். மனிதர் கள் கெட்டவர்கள் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்; அவர்கள் இன்ன மாதிரியான இயல்புடையவர்கள் என்றும் சொல்லாதீர்கள். ஊசியைத் தேடுங்கள்.

---

* இந்தக் கட்டுரை பிரசுரமானது 1922ஆம் வருடம் டிசம்பர் 8ஆம் தேதியன்று.


இனிய உதயம்
மாதநாவல்
தமிழில் முதல் முயற்சி



ஒவ்வொரு மாதமும் தலைசிறந்த பிறமொழி நாவல்!
மற்றும்
- சூடு பறக்கும் பேட்டி
- கவிதைகள்
- விமர்சனங்கள்

சாருபிரபா பப்ளிகேஷன்ஸ் வெளியீடுகள்...





**சிவப்பு தீபங்கள்**
மாதவிக்குட்டி
**அப்பாவின் காதலி**
பாறப்புரத்து
**மனைவியின் மகன்**
தகழி சிவசங்கரப்பிள்ளை



**இளம் பருவத்துத் தோழி**
வைக்கம் முகம்மது பஷீர்
**ஹரித்துவாரில் மணியோசை**
எம். முகுந்தன்
**லியோ டால்ஸ்டாய் கதைகள்**

**மேலும் உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர்களின் மொழிபெயர்ப்புகள் புத்தகங்களாக...**

விவரங்களுக்கு
சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
தொலைபேசி : 28484242, 28487858


படிப்பகம்

www.padippakam.com



## பசுமைப் புரட்சியின் உண்மையான முகம்

காலச்சுவடு 60ஆம் இதழில் 'வேளாண்மையும் விஞ்ஞானமும்' என்னும் தலைப்பில் திரு. பா. லிங்கம் அவர்கள் எழுதியிருந்த குறிப்பினைக் காண வாய்த்தது (எடுத்த எடுப்பில் அது அரசாங்க விளம்பரமோ என்று தோன்றியது). அது தொடர்பான சில செய்திகளை நினைவூட்டுவது அவசியமாகிறது.

1950–60 காலப்பகுதியில் ஓர் ஏக்கரில் இரசாயன உரங்கள் ஏதும் பயன்படுத்தாமல் 1400–1500 கிலோ நெல் மகசூல் எடுத்தவர்கள் இன்னும் சிலர் உயிரோடு இருக்கிறார்கள்.

ஓர் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய 40 கிலோ தழைச் சத்துத் தேவையென்பதும் அதனை 100 கிலோ யூரியாவைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுவிட முடியும் என்பதும் 'பத்தாம் பசலித்தனமாக' 3600 கிலோ தொழு உரத்தைத் தேடிக்கொண்டிருக்க வேண்டாம் என்பதும் அவருடைய வாதம்.

தொழு உரத்தில் தழைச் சத்து மட்டுமின்றி நெற்பயிருக்குத் தேவையான மணிச் சத்து, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துகளும் அடங்கியுள்ளன. அக்காலத்தில் (60களுக்கு முன்பு) சராசரியாகப் பார்த்தாலும் நான்கு உழவு மாடுகள், ஒரு பசு கொண்டதாகப் பெரும்பாலான விவசாயிகளின் வீடு இருந்தது (நிலம் இல்லாத பலரும் உழவுமாடுகள் வைத்திருந்தனர், கூலி உழவுக்குச் செல்வதற்காக). இவற்றின் வழியாக நாள் ஒன்றுக்குச் சுமார் 60 கிலோ தொழு உரமாக ஆகக்கூடிய மூலப்பொருள்கள் கிடைத்தன. ஆண்டொன்றுக்கு 20,000 கிலோ தொழு உரம் கிடைத்துக்கொண்டிருந்தது ஒரு விவசாயிக்கு. 'ஆட்டுக் கிடை', 'மாட்டுக்கிடை' வைப்பதன் மூலம் நெற்பயிருக்குத் தேவையான சத்துகள் கிடைத்தன.

தழை உரத்திற்காகக் கொழிஞ்சி, சக்கைப்பூண்டு போன்றவை வயல்களில் வளர்ந்து பயன்படுவதும் உண்டு. இத்தழை உரங்கள் நிலத்திற்கு எவ்விதத் தீங்கும் செய்யாமல் 'மறுசுழற்சி' முறையில் சாகுபடிக்கு ஊக்கம் தந்துவந்தன.

> **சிறந்த நூலுக்கான விருது**
>
> பழனியில் உள்ள வாழிய உலக நல நற்பணி மன்றம் ஆண்டுதோறும் சிறந்த நூல் ஒன்றுக்கு 'ஞானவாணி இலக்கிய விருதை வழங்கிவருகிறது. ரூ.15,000 ரொக்கப் பணமும் வெள்ளிப் பதக்கமும் கொண்டது இவ்விருது. 2004 ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியான நூல்களின் மூன்று பிரதிகளை இவ்விருதுக்கான பரிசீலனைக்கு அனுப்பிவைக்கலாம். கடைசித் தேதி மார்ச் 30.
>
> அனுப்ப வேண்டிய முகவரி
>
> இல. ஞானசேகரன்
> 7, மங்களம் தெரு, பழனி

பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய விதை ரகங்கள் நோய் எதிர்ப்புத் திறன் கொண்டதாக இருந்தன. அவற்றால் விளைகிற தானியங்கள் மீண்டும் விதைகளாகப் பயன்படத்தக்க ஆற்றல் கொண்டவை.

உற்பத்தித் திறனும் மொத்தச் சாகுபடி அளவும் குறைவாக இருந்ததற்கு ஒரு முக்கியமான காரணம், அதிகமாக விளைவித்து அதிகமாக இலாபம் பெற வேண்டும் என்கிற இன்றைய மனோபாவம் அன்றைய விவசாயிகளுக்கு இல்லாமலிருந்தது. பணப் புழக்கம் குறைவாக இருந்தது. விலைமதிப்பு மிகக் குறைவு. அப்போது 60 படிகள் கொண்ட (சுமார் 67 கிலோ) மூடை 5 ரூபாய்க்கு விற்றது. 1950களில் ஒரு மூடை 15 ரூபாய்க்கு விற்றது.

'இரசாயன உரம் நிலத்தைக் கெடுத்துவிட்டது எனக் கூறுவதில் உண்மை இல்லை' என்று கூறுகிறார் திரு. லிங்கம். யூரியாவின் பயன்பாடு மனிதர்களின் புற்றுநோய் ஊக்கியாக மாறியுள்ளது என்னும் எளிமையான உண்மை விவசாயிகளுக்கும்கூட உரைப்பதில்லை. உணவுப் பொருள்களின் சாகுபடியில் பயன்படுத்தப்படுகிற பூச்சிக்கொல்லி மருந்துகளின் நச்சுத்தன்மை தாய்ப் பாலிலும் தங்கியிருக்கிறது என்னும் ஆய்வு உண்மைகள் வெறும் கட்டுக்கதைதானோ?

'நவீன வீரிய' வித்துகள் எத்தனை பலவீனமானவை என்பதற்கு, விதை நேர்த்தி செய்யும்போதே ஓர் ஏக்கருக்குத் தேவையான நாற்றுகளுக்குரிய விதை நெல்லோடு (சுமார் 26–30 கிலோ) 'பவிஸ்டின்' என்கிற நச்சுப் பொருளை 70 கிராம் சேர்க்கிறார்கள் என்னும் சிறிய உண்மை போதும். நாற்றங்காலில் 15ஆம் நாள் யூரியா 5 கிலோ, பூச்சிக்கொல்லியாக 'போரேட்' குருணை, அடியுரமாக 15 கிலோ 'டிஏபி'. ஓர் ஏக்கர் நெற்பயிருக்கு அடியுரமாகச் சுமார் 90 கிலோ யூரியா (மூன்று தடவைகளாக) போடப்படுகிறது. டி. ஏ. பி. (di ammonium phospate), 50 கிலோ பொட்டாஷ் (muriate of pottash), 50 கிலோ அம்மோனியம் சல்பேட் (ammonium sulphate) அல்லது அம்மோனியம் குளோரேட் 50 கிலோ இவற்றோடு பூச்சிக்கொல்லியாக 'எக்காலக்ஸ்', 'ஹினோஸான்' (பூஞ்சைக்கொல்லி), 'மாலத்தியான்', 'ஃபியுஜ்', – இன்னும் ஏராளமான நச்சுப் பொருள்கள்.

நெற்பயிருக்கு இன்று ஏற்படுகின்ற நோய்கள் பல வெளியிலிருந்து வந்தவை. 'இலைக் கருக்கல் நோய்', 'இலைப் புள்ளிநோய்' போன்றவை பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வீரிய விதைகளோடு வந்து சேர்ந்தவை.

எல்லாவற்றுக்கும் மேலாக 'நவீன வேளாண்மை' என்பது வெறும் இலாப நஷ்டக் கணக்கு மட்டுமல்ல. நமது விவசாயிகளின் தற்சார்பைத் தொலையச் செய்து பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்திருத்தல் என்னும் இழிநிலையை அது உருவாக்கிவிட்டது. 'வீரியவித்து', 'அதிக உற்பத்தி' என்னும் கருத்தாடல்களினுள்ளே மறைந்து வாழும் தீமை அளவில்லாதது. குறிப்பாகச் சில:

1. கால்நடைகள் பராமரிப்பு தொலைந்து போனது.

2. பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்களால் மனிதர்களுக்குள் உருவாகும் எண்ணிலா நோய்கள் – இவற்றுக்கான மருத்துவத்தில் பயன்படும் 'நவீன மருந்துகள்' – தாங்க முடியாத செலவினங்கள்.

3. மனித உழைப்பு நிராகரிக்கப்பட்டுக் கிராமப்புறங்களில் வறுமை.

4. அரசே பன்னாட்டு நிறுவனங்களின் முகவராக இயங்குவதை, வல்லரசுகளின் சுரண்டலை எதிர்க்க வியலா நிலை.

சுருக்கமாகச் சொன்னால், 'பசுமைப் புரட்சி' என்பது பண்பாட்டு எதிர்ப்புரட்சியே ஆகும். இவ்விடத்தில் இது போதும். அவசியமானால் செயல் நிரூபணங்களுக்குரிய சந்திப்புகளுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

வத்திராயிருப்பு தெ. சுந்தரமகாலிங்கம்
புதுப்பட்டி நடராஜன்
புதுப்பட்டி இராமமூர்த்தி

---

## சிங்கப்பூர்: மறுபக்கம்

மு. ந. மூர்த்தியைப் பற்றி எனக்குள் ஒரு மதிப்பிருக்கிறது. அந்த மதிப்பை அவர் கூறியிருக்கிற எல்லாக் கருத்துகளுக்கும் (இதழ் 60) நீட்டிவிட வாய்ப்பில்லாமல் போனது துரதிருஷ்டம். அவர் சொல்லியிருக்கிற கருத்துகளை ஒரு தனி மனிதரின் கருத்துகளாக ஒதுக்கித்தள்ள முடிய வில்லை. காரணம், காலச்சுவடு போன்ற கவனிப்பிற்குரிய இதழில் வெளியாகி இருக்கிற இந்தக் கருத்துகள், இணையத்தின் வழி உலக நாடுகள் அத்தனைக்கும் போய்ச் சேர்ந்து, சிங்கப்பூர் இலக்கியச் சூழல் பற்றி ஒரு 'லாடம் கட்டிய குதிரைப் பார்வை'யை ஏற்படுத்திவிடக்கூடும் என்ற அச்சம்.

நவீனத் தமிழ் இலக்கியப் போக்கு பற்றிய பரிச்சய வாய்ப்பு இங்குள்ள வெகு பல படைப்பாளர்களுக்கு இல்லை என்பது நிஜம். பல்வேறு புறக்காரணிகள் வாழ்க்கையை இறுக்கிக்கொண்டிருக்கிற சிங்கப்பூர்ச் சூழலில், இலக்கியம் உயிர்ப்புடன் இருக்கிறதா அல்லது மெல்ல மெல்ல இறக்கிறதா என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது. இலக்கியம் மரபுக் கவிதைகளாகவோ, வைரமுத்து பாணியிலான கவிதைகளுடன் உறவுகொண்டவர்களின் படைப்புகளா

படிப்பகம்

www.padippakam.com



கவோ வாழ்ந்துவிட்டுப்போகட்டும் என்பதே இங்குள்ளவர்களின் இலக்கிய ஆதங்கம்.

கனகலதா, இந்திரஜித், போப்பு போன்றவர்கள் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமளவில் பங்களித்திருக்கிறார்கள் என்பது சிங்கப்பூர் சிராங்கூடன் சாலை சீனிவாச பெருமாள் மீது சத்தியமாக உண்மைதான். ஆனால் அவர்கள்தான் சிங்கப்பூரில் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள் என்ற மூர்த்தியின் தொனியை ஒப்புக்கொள்ள மேற்குறிப்பிட்ட மூவருமேகூட 'கொஞ்சம் போலாவது' வெட்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன்.

கனிமொழி 'தமிழ்முரசி'ல் பணியாற்றிய காலத்தில், 'போடர்ஸ்' புத்தகக் கடை விவகாரத்தில் இந்தியைத் தகர்த்துத் தமிழை இடம்பெறச் செய்தபோது ஏற்படுத்திய மொழி சார்ந்த விழிப்புணர்வை, சிங்கப்பூர்ச் சூழலை உள்வாங்கிப் படைத்த தரமான கவிதைகளின் மூலம் பெற்ற கவனத்தை, எந்த எடைத் தட்டில் வைத்திருக்கிறார் மூர்த்தி என்பது தெரியவில்லை.

சகல தளத்தில் இயங்கும் மக்களும் கலந்துகொள்ளும் 'கவிமாலை' என்ற மாதாந்தர நிகழ்வை நடத்தி, தொடர்ந்து கவிதைகளைப் படைத்துவரும் பிச்சினிக்காடு இளங்கோவும் மாதந்தோறும் 'கவிச்சோலை' நிகழ்வை நடத்தும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகமும், இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை என்று அதைப் பார்க்காதவர்கள் அல்லது பங்கேற்காதவர்கள் மட்டுமே கூற முடியும். 'ஆசியான் கவிஞர்' க. து. மு. இக்பாலைவிட, கவித் தளத்திலும் சமூகத் தளத்திலும் பெரிய விழிப்புணர்வை சிங்கப்பூர் இலக்கியச் சூழலில் அமைப்பு சாராத் தனி மனிதர்கள் எவரும் ஏற்படுத்திவிடவில்லை.

கடைசியாக ஒன்று. சிங்கப்பூரில் கடலில் இருந்து மண்ணெடுத்துக் கரையில் கொட்டி, நிலப்பரப்பை நீட்டிக்கொண்டேபோகிறார்கள். சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பாளிகளோ தீவு தீவாகப் பிரிந்து கிடக்கிறார்கள். யாராவது நட்பு மண்ணெடுத்துக் கொட்டி, இந்த இலக்கியத் தீவுகளை இணைத்துவிட்டால், எதிர்காலத்தில் இன்னொரு தலைமுறை சுகமாகச் சுற்றிப் பார்க்க வசதியாக இருக்கும். யார் செய்யப் போகிறார் இந்தக் காரியத்தை?

பாலு மணிமாறன்
சிங்கப்பூர்

## தலையைத் திருகி

இதழ் 59இல் ரவிக்குமார் எழுதிய அருகன்குப்பம் புத்தர் பற்றிய கட்டுரையைப் படித்தேன். அது பற்றி அரியாங்குப்பம் காக்காயந்தோப்பு பெரியவர் திரு. தக்ஷிணாமூர்த்தி அவர்களிடம் கருத்துக் கேட்டேன். தக்ஷிணா மூர்த்தி அவர்கள் காக்காயந்தோப்பு மாரியம்மன் கோயில், வினாயகர் கோயில் இரண்டுக்கும் தர்மகத்தாவாக இருந்தவர். வடகரை சிவானந்த சுவாமிகளிடம் தீட்சை பெற்ற மூவரில் இவர் ஒருவர். அவர் கூறியதாவது:

"இரண்டு வருடங்களுக்கு முன் புத்தர் சிலை பற்றி அதிகமாகப் பேச்சு அடிபட்டபோது பாண்டிச்சேரி நகர ஜைன மத முக்கியஸ்தர்களைக் கண்டு சொன்னேன். ஒரு சமண முனிவருடன் வந்தார்கள். எண்ணெய்ப் பிசுக்கைப் போக்கிச் சிலையைச் சுத்தம் செய்து பார்க்க ஆஸிட் கொண்டுவந்திருந்தார்கள். சிலையைச் சுத்தப்படுத்தி சிற்ப நுட்பங்களைப் பார்த்து தங்களுக்குள் கலந்து பேசிக்கொண்டார்கள். பீடத்திலிருந்த கல்வெட்டைப் படித்தார்கள்.

"இந்த சாமி முப்புரி போட்டிருக்கிறது. அதனால இது நாங்க கும்புடற சாமி இல்லை. இருந்தாலும் சாமி காரியமா வந்தோம். சாமிக்கு ஏதாவது கைங்கர்யம் செய்துவைக்க ஆசைப்படறோம். புதுசா ஒரு பீடம் அமைச்சு நிலையைச் சுற்றிக் கோயில் கட்டித் தருகிறோம்" என்று கூறினார்கள். பின்னர் சிலையில் இருந்த கல்வெட்டை மூடி மறைத்துப் பூசி பீடம் அமைத்தார்கள். சுற்றிலும் ஒரு கல் சுவர் எழுப்பிக் கோயிலுக்கு விட்டதாகச் சொல்லிவிட்டார்கள்.

"இப்போது எனக்கு 76 வயதாகிறது. நான் சிறுவனாக இருந்தபோது புத்தர் சிலை அருகில் ஒரு சமாதியிருந்தது. அதில் ஏறி நாவல் மரக்கிளையைப் பிடித்து ஊஞ்சலாடுவோம். நாளடைவில் அந்த சமாதி மண்மூடி மறைந்துவிட்டது. இப்போது அரிக்கமேடு புத்துயிர்பெற்று வரும் நிகழ்வில் புத்தர் சிலையை அடிக்கடி வந்து கண்டு செல்கின்றனர்."

அரிக்கமேடு வரலாற்றுக்கு முந்திய காலச் சுவடுகள் சிந்து சமவெளி நாகரிகம் போன்றவை. இதுபற்றி எழுதிய புதுதில்லி கிருஷ்ணன் நூற்றாண்டுகளைக் குறிப்பிடுகிறார். "பார்த்ததாக நினைவு", "போல இருக்கலாம்" என்கிறார். நம்ம கையாலயே நம்ம சாமி சிலையை உடைக்க ஒரு சதி நடந்ததே அது அவருக்குத் தெரியுமா? தஞ்சைப் பெரிய கோயில் மேற்கு வாசல் வெளியே ஒரு கல்வெட்டின் பாதி ஒரு புறம் மீதிப் பாதி மறு புறமும் உள்ளதே, அதைச் சேர்த்துப் படித்துப் பொருள் கண்டு சென்று புத்தர் சிலையைக் கண்டிருக்கிறாரா? "தலையைக் கிள்ளி தனத்தை எடுத்து..." என்ற பாடல் அங்கே பொறிக்கப்பட்டுள்ளது. புத்தர் தலையை screw typeஇல் செய்து வைத்துள்ளார்கள். அதை unscrew பண்ணி தலையைக் கழற்றினால் கழுத்திலிருந்து வயிற்றுப் பகுதி குடைந்து காலியாக இருக்கும். உள்ளே புதையல் உள்ளதாகப் பிரச்சாரம். சாமி சிலையைத் தலையைத் திருகி

கங்கு - சிறுவெளியீடு வரிசையில் இரு நூல்கள்







பூர்தியுவும் மார்க்சியமும்
எஸ்.வி. ராஜதுரை
தலித்திய அரசியல்
ராஜ் கௌதமன்
ஒவ்வொரு நூலும் ரூ. 25, பக். 64
வெளியீடு
பரிசல்
1. இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94
e-mail: parisalbooks@hotmail.com
கை பேசி 9382853646
விளம்பரம்

யெடுத்துப் புதையல் எடுக்க முயன்று புத்தர் சிலையை உடைத்த வரலாறுதான் நாம் காணும் தலை உடைந்த புத்தர் சிலைகள். தப்பு செஞ்சிட்டமே என்று வருந்தி மீண்டும் ஒட்டவைத்துப் பொங்கல் வெச்சு சாமி கும்பிட்ட கதைதான் சேலம் தலைவெட்டி முனியப்பன் கோயில் (சேலம் கிளை நூலகத்திற்கு அருகில் உள்ளது). அந்தப் புத்தர் கோயில் தல வரலாற்றிலும் "தலையைத் திருகி தனத்தை எடுத்து..." என்னும் பாடல் இருக்கிறது.

அருளப்பன்
பாண்டிச்சேரி

## பாசிச அறிக்கை

13.11.2004 அன்று மதுரையில் தலித் இதழியல் வரலாற்று அரங்கில் வெளியிடப்பட்ட தலித் எழுத்தாளர்களின் கூட்டறிக்கை *நவீனத் தீண்டாமைக்கு எதிராக* என்னும் தலைப்பில் *காலச் சுவடு* டிச. 2004 இதழில் வந்திருந்தது. அவ்வறிக்கை இரண்டு தளங்களைத் தனது தாக்குதலுக்கு எடுத்துக் கொண்டுள்ளது. அ. மார்க்ஸ் அவர்கள் தாக்குதலின் முதல் இலக்கு எனலாம். ம.க.இ.க. இரண்டாவது இலக்கு. மக்கள் கலை இலக்கியக் கழகம் என்னும் புரட்சிகர அமைப்பானது மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாற்று அரசியல் நிலைப்பாட்டை மக்களிடம் கொண்டுசெல்லவும் *புதிய ஜனநாயகம்* என்னும் அரசியல் இதழ் ஒன்றை நடத்துகிறது. அதில் பிழைப்பு வாதமே தலித்தியமா... ஓட்டுண்ணிகளே தலைவர்களா... என்னும் தொடர் கட்டுரை வந்துள்ளது. இதில் தலித் இயக்கத் தலைவர்களின் செயல்பாடு

padippakam

www.padippakam.com



களை, கருத்தியல்களை விமர்சனம் செய்வதே தாக்குதலுக்கான காரணம்.

"தலித் இதழ்களான *தாய்மண், புதிய கோடாங்கி, உலகத் தமிழர் சக்தி* போன்ற வற்றில் தமிழ் எழுத்தாளர்கள் எழுதக் கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. சமூக மாற்றம் குறித்துப் பேசும் மேற்குறிப்பிட்ட கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் தலித் இதழ்கள் பெரியாரை விமர்சிப்பதாலேயே தீண்டத் தகாதவையாகத் தென்படுகின்றன போலும்" என்கிறது அந்த அறிக்கை. அப்படியானால் தலித் தலைவர்களையும் தலித் இயக்கங்களையும் தலித் இதழ் களையும் தலித் எழுத்தாளர்களையும் விமர்சனம் செய்யும்போது அவர்களை இவர்கள் தீண்டத்தகாதவர்களாய்ப் பார்ப்பது அல்லது உயர்சாதி வெறியர் என்று பட்டம் கட்டுவது எந்த வகையில் பொருந்தும் என்பதை இவர்கள்தான் சொல்ல வேண்டும்.

விடுதலைச் சிறுத்தைகள் இயக் கத்தையும் அதன் பொதுச்செயலாளர் தொல். திருமாவளவனையும் சென்னை யில் நடைபெற்ற கூட்டமொன்றில் பாசிஸ்ட் என விமர்சித்திருக்கிறார் அ. மார்க்ஸ். இந்த விமர்சனம் பற்றிய எந்த விளக்கமும் இல்லாமல் பாசிஸ்ட் என்னும் சொல்லை மட்டும் எடுத்துக் கொண்டு மார்க்ஸைத் தாறுமாறாக விமர்சனம் செய்துள்ளது இவ்வறிக்கை.

"தலித் அரசியலால் விழிப்புணர்வு பெற்றுவிட்ட தலித்துகளை இனிமேலும் ஏமாற்ற முடியாது என்று புரிந்துகொண்டு இப்போது அவதூறுப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்" என்கிறது அவ் வறிக்கை. வரலாற்றியல் ரீதியில், சமூக அரசியல், பொருளாதார ரீதியில் பின் தங்கிய மக்களாக விளங்கும் ஒடுக்கப் பட்ட (தலித்) மக்களுக்குச் சமூகத்தைப் புரிந்துகொள்ள வைத்ததும் அரசியல் கல்வி வழங்கியதும் மா–லெ அமைப்பு கள் என்பது ஒவ்வொரு தலித்தும் அறிந்த உண்மை. இருந்தாலும் தலித் அரசியல் என்னும் கருத்தாக்கம், உருவாக்கிய அவர்களுக்கே இன்னும் பிடிபடாதபோது அந்த விளிம்புநிலை மக்கள் இதனைப் புரிந்துகொண்டு விட்டார்கள் என்பதும் புரிதலின் ஊடாக விழிப்புணர்வு பெற்று விட்டார்கள் என்பதும் ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றும் செயலல்லாமல் வேறெதுவாக இருக்க முடியும்? தலித் இயக்கத்தை விமர்சிப்பது அனைத்துத் தலித் மக்களையும் விமர்சிப்பதாக ஆகாது. தலித் தலைவர்களை விமர்சிப் பதும் தலித் மக்களை விமர்சிப்பதாக ஆகாது.

இவ்வறிக்கை இந்தியச் சேரிகளிலும் மற்ற இடங்களிலும் வாழ்கின்ற ஒடுக்கப் பட்ட மக்களின் பொருளாதார மேம்பாடு பற்றியோ அவர்களின் அறியாமை, கல்வி பற்றியோ வாழ்வில் பின்தங்கிய நிலையை மேம்படுத்துவது பற்றியோ பேசவில்லை. தொல். திருமாவளவன் என்னும் ஒரு தனிநபரை விமர்சனம் செய்த காரணத்துக்காக அ. மார்க்ஸை, ம.க.இ.க. என்று பெயரை வெளியிட்டுக் கூற இயலாத நிலையில் ஒரு மா–லெ இயக்கத்தை, இப்படித் தாக்குகிறார்கள். தலித் மக்களின் ஒப்பற்ற தலைவனாக விளங்கும் திருமாவளவனை விமர்சனம் செய்துவிட்டார்களே என்னும் உணர்வு வெறியின் வெளிப்பாடே இது போன்ற விமர்சன அறிக்கைகள். இவை பாசிசத் தைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

லெனின் சந்துரு
தருமபுரி–1

'நவீனத் தீண்டாமைக்கெதிராகத் தலித் எழுத்தாளர்களின் கூட்டறிக்கை' யில் என் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது குறித்து என் விளக்கத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மதுரையிலிருந்து தோழர் ஸ்டாலின் ராஜாங்கம் அவர்கள் தொலைபேசியின் வழியே, *புதிய காற்று* நவ. 2004 இதழ் செய்தியைச் சுட்டிக்காட்டி, தலித் எழுத் தாளர்கள் *புதிய கோடாங்கி, தாய்மண்* போன்ற இதழ்களிலெல்லாம் எழுதக் கூடாது என்று சிலர் தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறார்கள். இதற்கு எதிராக ஒரு அறிக்கை தயாராகி இருக்கிறது. கையெழுத்திட முடியுமா எனக் கேட்டார். அறிக்கையின் நகலை அனுப்பச் சொல்லிக் கேட்டேன். அவர் மறுபடியும் தொடர்புகொண்டபோது, 'தலித் எழுத் தாளர்களை இன்னின்ன பத்திரிகை களில்தான் எழுத வேண்டும் என்று யாரும் கட்டளை இட முடியாது என்னும் நோக்கில் வேண்டுமானால் இவ் வறிக்கையில் கையெழுத்திடலாம், ஆனால் அறிக்கையோ இரு நபர்களுக் கான சண்டையாக மாற்றப்பட்டுள்ளதே' என்றேன். இவ்வறிக்கையைத் தயாரித் தவர்கள் முறைப்படி என்னுடன் பேசி ஒப்புதலைப் பெறாமலேயே, நட்பு அடிப்படையில் தோழர் ஸ்டாலின் ராஜாங்கத்திடம் பேசியதை அடிப்படை யாகக்கொண்டே என் பெயரைச் சேர்த் திருக்கிறார்கள். (அறிக்கையின் முதல் நகலில் நஞ்சுண்டன், இமையம் அவர் களோடு என் பெயரும் இல்லை. இதழ் களுக்கு அறிக்கை வழங்கப்பட்டபோது சேர்க்கப்பட்டுள்ளது.)

*காலச்சுவடில்* வெளியான அறிக்கை யில் என் பெயரைப் பார்த்துவிட்டுத் தோழர்கள் என்னுடன் தொடர்பு கொண டனர். ஈரோடு பெரியார் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகச் சொன்ன தீர்மானங்களின் நகலையும் பார்த்தேன். அத்தீர்மானத்திலே *தாய்மண், புதிய கோடாங்கி* போன்ற எந்த இதழின் பெயரையும் குறிப்பிடவில்லை. மேலும் தலித் எழுத்தாளர்களை மட்டும் மையப் படுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட வில்லை. அது எல்லாத் தமிழ் எழுத் தாளர்களையுமே விளிக்கிறது. தந்தை பெரியாரைத் தலித்துகளுக்கு எதிராய் நிறுத்துவதிலும் அவரை வசைபாடு வதிலும் எனக்கு உடன்பாடில்லை. நிறைவேற்றப்படாத ஒரு தீர்மானத்துக் கான கண்டன அறிக்கையாக இது இருக் கிறது. இந்த அறிக்கைக்கான பின்னணி என்னிடம் மறைக்கப்பட்டுள்ளது. இவ் வறிக்கை தலித் மற்றும் தலித் ஆதரவு எழுத்தாளர்களிடையே தேவையற்ற ஒரு பிரிவினையை உண்டாக்குகிறது. *காலச் சுவடு* இதழுக்காகவும் *தாய்மண்* வாசகரிடையே கோபத்தைக் கிளறவும் தனிப்பட்ட கருத்து மோதல்களைத் தீர்த் துக்கொள்ளவும் உருவாக்கப்பட்டுள் ளது. ஆகவே என் பெயரை இதில் இணைத்துக்கொள்ள விரும்பவில்லை.

அழகிய பெரியவன்
பேர்ணாம்பட்டு – 635 810


மருதா வெளியீடு



**எனக்கான காற்று**
(கவிதைகள்)
ஏ. இராஜலெட்சுமி
பக்: 80; விலை: ரூ. 40

மருதா
226 (188), பாரதி சாலை,
ராயப்பேட்டை, சென்னை 600 014.
✆ : 09382116466
விளம்பரம்

விரும்பும் எந்த நூலையும் வீட்டிலிருந்தே வாங்க...

* மாதந்தோறும் உங்கள் விருப்பத்துறையின் முக்கியநூல்கள், புதிய வரவுகளை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

* அதிலிருந்து நீங்கள் தேர்வு செய்யும் எந்தவொரு நூலையும் 11% கழிவுடன் அனுப்புகிறோம்.

* தமிழில் நீங்கள் விரும்பும் எந்தவொரு நூலையும் வாங்க உங்களுக்கு நாங்கள் உதவுகிறோம். விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.


தான் பிரசுரம்
15/9, பெரிய சௌராஷ்டிரத் தெரு,
கடை வீதி நிறுத்தம், உறையூர்,
திருச்சி – 620 003.
✆ 98942 60844. புதன் விடுமுறை
விளம்பரம்


www.padippakam.com



இயற்கையியலாளர்
மா. கிருஷ்ணன் கடிதங்கள்

# எப்படியோ எல்லா வைத்தியர்களையும் தப்பிவிட்டேன்





அன்புள்ள முருகேசனுக்கு,

அநேக ஆசீர்வாதங்கள்.

நேற்று மாலை உங்கள் வருடாந்தரக் கடிதம் கைக்கெட்டியது, இப்படி உடனே பதிலெழுதத் தலைபோகிற அவசியம் எதுவுமில்லை, மேலும் இதை முறை என்பதற்குமில்லை, நஷ்டத்தில் நடந்துவரும் தபால்துறைக்கும் அநாவசியமான தொல்லை, கடிதத்தைப் பெறுபவர்க்கும் இடையூறாக இருக்கலாம் என்பதையெல்லாம் நன்கு தெரிந்திருந்தும் இதை இன்றே எழுதுகிறேன். எல்லாம் பழக்கத்தின் வற்புறுத்தல்தான். சிறுவயதிலிருந்து இப்படிப் பழகிவிட்டேன். எட்டில் வளையாதது எண்பத்தொன்றில் வளையுமா!

தமிழிலும் ஆங்கிலத்திலும் நாவலாசிரியராகத் திகழ்ந்த அ. மாதவையாவின் (1872-1925) புதல்வர்களில் ஒருவர்தான் மா. கிருஷ்ணன் (1912-1996).

இயல்பிலேயே அவர் இயற்கையியலில் தீவிரமான ஈடுபாடு கொண்டவர். பத்மஸ்ரீ, ஜவஹர்லால் நேரு விருது முதலிய கௌரவங்களைப் பெற்றவர். எழுத்தாற்றலாலும் புகைப்படக் கலைத் திறனாலும் இயற்கையின் வனப்பையும் விந்தையையும் எடுத்துரைக்கும் வல்லமை பெற்றவர்.

இயற்கையை இயற்கையாகவே பார்க்கும் இவருக்குக் கல்வித்துறை சார்ந்த கருத்தாடல்கள் மீது அக்கறை கிடையாது. எண்ணற்ற விலங்குகளை அவர் இன்றைய விலங்கியல் துறை நிபுணர்கள்போல் அணுகியவரல்லர். காட்டுவாசிகள் மற்றும் சாதாரணக் கிராமவாசிகளுடன் மிகுந்த தோழமையோடு அவர் பழகி, பலதரப்பட்ட உயிரினங்களின் வாழ்வியலை நெருக்கமாகக் கண்டறிந்தவர்.

1950ஆம் ஆண்டிலிருந்து 'ஸ்டேட்ஸ்மேன்' இதழ் (கொல்கத்தா) எம். கிருஷ்ணனின் அனுபவக் குறிப்புகளைத் தொடராக வெளியிட்டது. அவர் மறைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அக்கட்டுரைகளை 'நேச்சர்ஸ் ஸ்போக்ஸ்மேன்' தலைப்பில் ஆக்ஸ்போர்டு வெளியிட்டிருந்தது. (தொகுப்பாசிரியர்: ராமச்சந்திர குஹா). இயற்கையின் குரலாக, இயற்கையின் பிரதிநிதிபோல் அவரது வாழ்வும் எழுத்தும் திகழ்ந்த பாங்கினை உணர்த்தும் தொகுப்பு இது.

மா.கி.யின் சிறுகதைகளை 'ஸங்கம் புக்ஸ்' (ஓரியண்ட் லாங்மேன்; 1977) ஒரு தொகுப்பாக வெளியிட்டது. இயற்கையியல் குறித்து இவர் தமிழில் எழுதிய கட்டுரைகள் 'மழைக்காலமும் குயிலோசையும்' என்னும் தலைப்பில் காலச்சுவடு வெளியீடாக 2002இல் வெளிவந்தன. மா.கி. தனது நண்பர் எழிலமுதன் (எ) முருகேசனுக்கு எழுதிய சில கடிதங்களை இங்கு வெளியிடுகிறோம். இயற்கையின் மீதான அக்கறையை உள்ளடக்கிய அவரது பன்முக ஆளுமையின் சில கீற்றுகளை இதில் காணலாம். கடிதங்களையும் கிருஷ்ணனைப் பற்றிய தகவல்களையும் தந்துதவிய எழிலமுதனுக்கு நன்றி.

ஆசிரியர் குழு.

வியாழன் 14.10.93

அன்புள்ள முருகேசனுக்கு

அநேக ஆசீர்வாதங்கள்.

நேற்று மாலை உங்கள் வருடாந்தரக் கடிதம் கைக்கெட்டியது. இப்படி உடனே பதிலெழுதத் தலைபோகிற அவசியம் எதுவுமில்லை. மேலும், இதை முறை என்பதற்குமில்லை, நஷ்டத்தில் நடந்துவரும் தபால்துறைக்கும் அநாவசியமான தொல்லை, கடிதத்தைப் பெறுபவர்க்கும் இடையூறாக விருக்கலாம் என்பதையெல்லாம் நன்கு தெரிந்திருந்தும் இதை இன்றே எழுதுகிறேன். எல்லாம் பழக்கத்தின் வற்புறுத்தல்தான். சிறுவயதிலிருந்து இப்படிப் பழகிவிட்டேன். எட்டில் வளையாதது எண்பத்தொன்றில் வளையுமா!

இப்போது, இதை எழுதிக்கொண்டிருக்கையில், மழை கொட்டிக்கொண்டிருக்கிறது. சில நாளாகவே சென்னையில் மழை. போகப்போக மேலும் பலக்கும். புயலும் வரக்கூடும். என் வீடு சதுப்பு நிலத்தில் கட்டியிருப்பதால், இலேசாகத் தூறினாலும் சுற்றுமெங்கும் சகதிக்காடாகிவிடும். இப்போது, கேட்கவே வேண்டியதில்லை – சுற்றும் குளம். இருந்தும் என்னதான் 'பம்ப்' அடித்தும் குழாயில் ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடையாது. என் வீட்டில் மட்டுமில்லை – சென்னையில் எங்குமேதான். வாராவாரம் 300 ரூபாய் கொடுத்து 'டாங்கர்' தண்ணீர் வாங்கி அதை மிகச் சிக்கனமாகச் செலவிட்டுவருகிறோம்.

இதை, அதாவது வெளியே அடைமழை கொட்டிக்கொண்டிருப்பதை, நான் எழுதத் தொடங்கியதற்கும் பட்டினத்தின் தண்ணீர்ப் பஞ்சத்திற்கும் ஒரு தகவலுமில்லை. நான் சொல்லவந்தது வேறு. சொல்கிறேன்.

கவிதை, அதிலும் சீர், எதுகை மோனை கொண்ட சமீபகாலக் கவிதை, யதார்த்தத்தின் வலுவை அடிப்படையாகக் கொண்டதில்லை, கற்பனைச் சிறப்பாலும் நடைச் சுவையினாலும் நம்மை வசீகரிக்கிறது, எனலாம். இந்தப் பிற்காலக் கட்டுப்பாடுகளுக்கடங்காத பழந்தமிழின் வன்மையும் ஈர்ப்பும் இயற்கையையும் உண்மையும் ஆதாரமாகக் கொண்டவை எனலாம்.

படிப்பகம்

www.padippakam.com

**தாங்க முடியாத மாரிகாலக் குளிரை நக்கீரனார் ஒரே அடியில் நம் கண்முன்பு காணும்படி விவரிக்கிறார். "குன்று குளிர்த்தன்ன கூதிர்ப்பானாள்" - இதில் "குளிர்த்தன்ன" என்பதை "சிலிர்த்தபடி" என்று கொள்ள வேண்டும்.**

18 நூற்றாண்டுகள் முன்பாக இப்போது கொடைக்கானல் உள்ளதுபோல, மதுரை மாரிகாலத்தில் குளிர்செறிந்து, மரமடர்ந்திருந்தது – சுற்றுமட்டும் கடம்பவனமாகவிருந்ததாம். சத்தி முத்தப் புலவர் பாட்டிலிருந்தும் சுமார் 12–13 நூற்றாண்டுகள் முன்பும் இப்படி இருந்தது எனலாம். இன்று மதுரை வெப்பம் மிகுந்திருப்பதை நேரில் நன்கறிவேன். இந்தத் தாங்க முடியாத மாரிகாலக் குளிரை நக்கீரனார் ஒரே அடியில் நம் கண்முன்பு காணும்படி விவரிக்கிறார். "குன்று குளிர்த்தன்ன கூதிர்ப்பானாள்" – இதில் "குளிர்த்தன்ன" என்பதை "சிலிர்த்தபடி" என்று கொள்ள வேண்டும். பத்துப்பாட்டில் இத்தகைய மிகச் சில வார்த்தைகளில் நமக்கு ஒன்றை வற்புறுத்திப் புலப்படச் செய்யும் அடிகள் மிகவுள்ளன. "சட்டச்சட சட்டச்சட சட்டா என்று தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்" என்றும் "கூ கூவென்று விண்ணைக் குடையுது காற்று" என்றும் பாரதி எழுதியது, கற்பனைச் சிறப்பாலும் சீர்ஒலியின் திறனாலும் நம்மைக் கவர்வது. புயல் இப்படி யாப்பிலக்கணத்துக்கடங்கி இருப்பதில்லை.

ஒருமுறை, தஞ்சாவூர்க் கடலோரமாகவுள்ள கோடிக்கரையில், மார்கழி மாதத்தில், ஒரு கடும்புயலில் சிக்கி, தப்பி வர முடியாமல் 2 மணிநேரம் மணலில் ஒரு குழியில் நான் பதுங்கியிருந்திருக்கிறேன் – செத்தேவிடுவோம் என்றும் நினைத்தேன் – அந்தச் சூறாவளியில் ஒரு அடியும் நகரமுடியவில்லை. மேலும், சுமார் 40 வருடமுன் சென்னையில் பலமுறை பெரும்புயல் வந்திருக்கிறது. அந்த அனுபவமும் எனக்குண்டு. நான் மேற்குறித்தது வெறும் ஏட்டுப் படிப்புக் கொள்கைகளில்லை.

இதெல்லாமிருக்கட்டும், நான் சொன்னதை முற்றிலும் மறந்தேவிட்டீர்களா? பிறர் எழுதியதை எடைபோட்டு எழுதாமல், நீங்களே கதையோ கவிதையோ கட்டுரையோ எழுதவில்லையா?

அதுவும் போகட்டும், நான் வேறொன்று சொன்னேனே, அதையும் மறந்துவிட்டீர்களா? 5 மாதமுன், கோடை வெயில் கொளுத்தும்போது, இதுதான் தகுந்த காலம், வெயில் போட்டு வாட்டுகிறது, தனக்கு நெருங்கிய உறவினர் சென்னையில் இருப்பதாகச் சொன்னாரே, மேலும் இது கல்லூரி விடுமுறைக் காலமாயிற்றே என்றெல்லாம் எதிர்பார்த்திருந்தேன். ஒன்றும் பயனில்லை.

இப்படிக்கு
அன்புடன்
மா. கிருஷ்ணன்

பின்குறிப்பு:

உங்கள் பயங்கரமான வீட்டு விலாசத்துக்கே இதை அனுப்புகிறேன். வெளியே மழை பலத்திருப்பதால், விலாசத்தை நனைத்தாலும் அழியாத மையில் எழுதுகிறேன். ஆனால் வீட்டின் எண் '1984', '198 D', '198 டி' இவற்றில் எது என்பது உறுதியாகத் தெரியவில்லை. '194 டி' என்றே குறிக்கிறேன். படபத்ரகாளி சகிதம் இருக்கையில் தவறாமல் கிடைக்கும்.

•

வியாழன் 2.5.1995

அன்புள்ள முருகேசனுக்கு,

இந்தக் கடிதத்துக்குக் காரணம் கிடையாது. வரும் சனிக்கிழமைக்குள் ஒரு பிரமாண்டமான ஆங்கில வனவிலங்கு ஆராய்ச்சி முறைகள் நூலின் விமர்சனத்தை எழுதிக் கல்கத்தாவுக்கு அனுப்ப வேண்டும்– உத்தேசமாகவில்லை, திராசில் எடை போட்டுப் பார்த்தே சொல்கிறேன். இந்த 400 பக்கப் புத்தகத்தின் எடை 1 3/4 கிலோ. இதை இருமுறை படித்து விமர்சனத்துக்கு வேண்டிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொண்டாய்விட்டது. விமர்சனத்தை எழுத இன்று காலை தொடங்கினேன். பேனாவைக் கையில் எடுத்ததுமே ஒரு தொடர்புமில்லாது, ஏறத்தாழ இரண்டு மாத முன்பாக நீங்கள் எழுதிய கடிதம் நினைவு வந்தது.

நெடுநாளாய் உடல்நிலை சீரழிந்துவிட்டது, ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்து சிகிச்சை பெற்றும் சுகமில்லை என்றெழுதி இருந்தாரே, இப்போது தேவலையா என்று எழுதி விசாரிக்க வேண்டுமென்று நினைத்தோமே, எழுதிக் கேட்கவில்லையே என்று என் மனத்தை உறுத்தியது. உடனே எழுதுகிறேன். இப்போது எல்லாம் குணமாகிவிட்டிருக்கும் என்று நம்புகிறேன். சௌகரியப்பட்டால் பதிலெழுதுங்கள் – இல்லை திருமதி. காந்திமதியை எழுதச் சொல்லுங்கள்.

நானும் சித்திரை நடுமட்டும் ஜூரம் அவ்வப்போது கண்டு படுத்துவிட்டேன். இது ஒரு viral infection என்றும், இதற்கு மருந்து கிடையாதென்றும், ஆயினும் இந்தப் பாதிப்பால் பலஹீனமாய் இருக்கும்போது சளிஜூரம் முதலிய மற்ற பாதிப்புகளும் சகஜமாய் ஏற்படாலாமென்பதால், அதைத் தடுக்க முன் ஜாக்கிரதையாய் மாத்திரைகள் (anti biotics) உட்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள்.

எனக்கேதாவது ஜூரம் வந்தால் என் மருமகள்தான் வைத்தியம் பார்ப்பது. சென்னை பெரிய வைத்தியக் கலாசாலையில் (Madras Medical College) சமீப மட்டும் properson of pathology ஆகவிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு தற்போது ஒரு தனியார் வைத்ய சாலையில் வாரமிருமுறை பணிபுரிந்து வருகிறாள். அவளுக்கு ஏராளமான அனுபவமுண்டு, அனுபவமுள்ள பல பெரிய வைத்தியர்களை வெகுநாளாய்த் தெரியும். எனக்கேதேனும் உடல்கேடு வந்து உடனே குணமாகாவிட்டால் இந்த வைத்தியர் குழு கூடி ஆலோசித்து என்ன சிகிச்சை தர வேண்டுமென்று தீர்மானிப்பார்கள். இவர்களுக்கென்ன திறமையும் அனுபவமுமிருந்தென்ன பயன், viral fever என்பதற்கு மருந்தில்லை, ஒருவன் வயது முதிர்ச்சியால் அடையும் உடல் தளர்ச்சிக்கும் சிகிச்சையில்லை. இப்போது பரவாயில்லை. குணமாகிவிட்டது. எனக்கொரு சித்த வைத்தியனையும் தெரியும். அவனும் வந்து லேகியங்கள், சூரணங்கள், கஷாயங்கள் எல்லாம் கொடுத்தான். ஒன்றுக்கும் என் பாதிப்பு கேட்கவில்லை. எப்படியோ எல்லா வைத்தியர்களையும் தப்பிவிட்டேன்.

இப்படிப் படுத்திருக்கையில் என் துப்பறியும் நவீனத்தை நுட்பமாக மனத்துள் ஆராய்ந்து உருவாக்கிவிட்டேன். 110 பக்கங்கள் (இதுபோன்ற கையெழுத்துப் பக்கங்கள்) எழுதியாய்விட்டது. இன்னும் 20 பக்கங்களுள், 25க்குள் முடிந்துவிடும். அச்சில் சுமார் 75 பக்கங்களதானிருக்கும். முதலில், இது ஒரு நவீனத்துக்குப் போதாது, இன்னும் 60 பக்கங்கள் கூடியிருக்க வேண்டும் என்று நினைத்தேன். பிறகு அப்படி வளர்த்துக்கொண்டு போனால் இப்போதுள்ள இறுக்கிய கட்டுத் தளர்ந்துவிடும். நானே என் கற்பனையை மெச்சுவது நன்றாகவில்லையென்றாலும் இந்த நவீனம் உண்மையாகவே இதுமட்டும் தமிழில் எழுதிய துப்பறியும் புதினங்கள் போலும், பத்துப் பதினைந்து வருடங்களாக ஆங்கிலத்தில் வெளிவரும் துப்பறியும் நவீனங்கள் போலும் இல்லாமல், அநாவசியமாக ஒரு வார்த்தையும் இல்லாமல் ஒரு jigsaw-puzzleபோல அமைந்திருக்கிறது. இந்தப் புதுமையையும் நடைச் சிறப்பையும் வாசகர்கள் பாராட்டுவார்களோ மாட்டாரோ புத்தகம் விற்றுப் பணம் கிடைக்குமோ இல்லையோ, எனக்கிதில் முற்றிலும் திருப்தியே.

இப்படிக்கு, அன்புடன்
மா. கிருஷ்ணன்

படிப்பகம்

www.padippakam.com



# நீரோட்டம்

## லதா

பரபரப்பில்லாத மதிய நேரம். பெங்களூர் விமான நிலையத்தின் வெளிப்பகுதியில், பாதைத் தடுப்புக்காகக் கட்டப்பட்டிருந்த சிமெண்டு குந்தில் உட்கார்ந்திருந்தோம். பேராசிரியர் கஞ்சி பட்டேலுக்கு விமானம் நான்கு மணி நேரம் தாமதம். நான் பல மணி நேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வந்துவிட்டேன். என்ன பேசுவதற்கு இருக்கிறது என்று நினைத்துக்கொண்டே (இருவரும்) அங்கு வந்து அமர்ந்தோம். சும்மா உட்கார்ந்திருப்பது பட்டேலுக்கு என்னவோபோல் இருந்திருக்க வேண்டும். "டீ குடிக்கலாமா?" என்று கேட்டார். எதிரில் இருந்த டீக்கடையில் அவரே டீ வாங்கிக் கொடுத்தார். வழிய வழிய விட்டாலும் அந்தச் சிறிய பிளாஸ்டிக் குவளையில் ஐந்து அவுன்ஸுக்கு மேல் கொள்ளாது. ஒரு வாய் அளவு தேநீரைத் துளித் துளியாகக் குடிப்பது வித்தியாசமாக இருந்தது. இங்கு (சிங்கப்பூரில்) தேநீர், காப்பி எல்லாம் பெரிய குவளைகளில் தான் தருவார்கள். குறைந்தது கால் லிட்டராவது இருக்கும்.

சிறிது நேரம் கழித்து அவர் சொன்னார்; "எழுதுவது – அன்பு செலுத்துவது, உரையாடுவது உட்பட உலகத்தில் அனைத்துக் காரியங்களுமே சடங்குகள்தான். ஆனால் நாளுக்குநாள் சடங்குகளையும் பொட்டலம் கட்டிச் சந்தைப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்."

உண்மைதான்.

குஜாராத்தியரான பட்டேல், ஹிந்தி மொழியிலும் வல்லமை பெற்றவர். குஜராத்தில் பேராசிரியராகப் பணிபுரிகிறார். மூத்த எழுத்தாளர். அவரது சிறுகதைகள், கவிதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன; கதா மற்றும் சாகித்திய அகாதமி தொகுப்புகளில் வெளி வந்துள்ளன.

அப்போது அவரிடம் கர்நாடகத்தில் தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள எதிர்ப்பைப் பற்றிச் சொன்னேன். காவிரிப் பிரச்சினை பற்றி அவர் அறிந்திருந்தாலும், அவருக்கு அது புதிய தகவலாக இருந்தது.

கர்நாடகாவின் சிமோகாவில் உள்ள குவெம்பு பல்கலைக்கழகத்தில் "கவிதையும் சமூகமும்" என்னும் தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கில் திரு. பட்டேலும் நானும் கலந்துகொண்டோம். நிகழ்ச்சி முடிந்து, இரவு விருந்தின்போது ஒரு கன்னடத்துக்கார இளையர், "எனக்குத் தமிழர்களைக் கண்டாலே பிடிக்காது. நான் தமிழையும் தமிழர்களையும் வெறுக்கிறேன்" என்று என் முகத்துக்கு எதிரே சொன்னதைக் குறிப்பிட்டேன்.

எத்தனையோ வேற்றுமைகளுடன் விவரம் அறிந்த நாள் முதல் உறவாடிவந்தாலும், அன்றாடம் உறவாடினாலும், நேருக்கு நேர் ஒருவர் இத்தகைய வெறுப்பை வெளிப் படுத்தியது அதுதான் முதல் முறை.

இலக்கியம் சமூகத்தைச் செழுமைப்படுத்துகிறதா அல்லது சமூகம் இலக்கியத்தை உருவாக்குகிறதா என்பது தான் முதல் நாள் கருத்தரங்கின் முக்கிய விவாதம். சடங்கு கள் வெறும் சம்பிரதாயமாகி, விற்பனைப் பொருளாகிவிட்ட பின் இரண்டுமே சாத்தியமில்லை என்றார் பட்டேல்.

ஆழ்ந்து யோசித்துத் தீவிரமாகப் பேசும் சமயங்களில் அவர் தன்னை அறியாமல் ஹிந்தியில் பேசத் தொடங்கி விடுவார். முதல் நாளும் அப்படித்தான் நிகழ்ந்தது. நாள் முழுக்கப் பேச்சுத்துணையாக இருந்த ஒரு மராத்தி மொழிக் கவிஞர் (பெயர் மறந்துவிட்டது, அவர் கொடுத்த அட்டை யில் எண்கள்கூட அவரது மொழியில் இருக்கின்றன) உணர்ச்சிவசப்பட்டுப் பேசும் பொழுதெல்லாம் ஹிந்திக்கு மாறிவிடுவார்.

இந்தியாவின் பல மாநிலங்களையும் சேர்ந்த மூத்த கவிஞர்கள் அந்தக் கருத் தரங்கில் பங்கேற்றனர். எனக்கு ஒரு வார்த்தைகூட ஹிந்தி தெரியாதது மிக வருத்தமாக இருந்தது. அனைத்து இந்தியர்களும் பேசக்கூடிய மொழியாகத் தமிழ் ஆகப்போவதில்லை. அப்படி இருக்க இந்தியர்கள்(!) அனைவரும் ஹிந்தி பேசக் கற்றுக்கொள்வது நல்லது என்று தோன்றுகிறது. ஆங்கிலத்தில் பேசும்போது ஏற்படாத நெருக்கத்தையும் பிணைப்பையும் ஹிந்தி ஏற்படுத்தும் எனத் தோன்றுகிறது. இதைச் சொன் னால் தமிழ்நாட்டு "மொழிப்பற்றாளர்கள்" சண்டைக்கு வருகிறார்களோ இல்லையோ, சிங்கப்பூரில் உள்ள தமிழர்கள் என்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள்.

வாழ்க்கை பற்றியும் மனிதர்கள் பற்றியும் பட்டேலுடன் பேசிக்கொண்டிருந்தது மிகுந்த ஆறுதலாக இருந்தது.

●

"இலக்கியவாதிகள் பலரைச் சந்தித்தீர்களா? இந்திய இலக்கியம் பற்றித் தெரிந்துகொண்டீர்களா" என்று கேட்ட போது, "ஏராளமான மனிதர்களைச் சந்தித்தோம். வேறு பட்ட வாழ்க்கை முறையைப் பார்த்தோம். அது மிகப் பெரிய அனுபவமாகவும் கிடைக்காத ஒன்றாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருந்தது" என்று சொன்னார்கள் சுவீடன் நாட்டு எழுத்தாளர்கள்.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த இளைய–மூத்த எழுத் தாளர்கள் ஜனவரி மாதத்தில் இந்தியாவில் இலக்கியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அவர்களை






ரூ. 100

பின் நவீனத்துவம் என்றால் என்ன என்பதை அரிச்சுவடியிலிருந்து ஆரம்பித்து எளிய மொழியில் உரையாடும் நூல் என்ற வகையில் தமிழில் இது முதல் முயற்சி. பின் நவீனத்துவம் பற்றிப் படங்களுடன் விவரிக்கும் நூல்கள் தமிழில் வருவதில்லை என்னும் குறையைத் தீர்க்கிறது இந்நூல்.

புதிய முகவரி:
புதுப்புனல்
5/1 (முதல் மாடி)
பழனியாண்டவர் கோயில் தெரு
அயனாவரம் மார்க்கெட் அருகில்
சென்னை 600 023
தொடர்புக்கு: 9884427997

www.padippakam.com






மதுரையில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுக்காக மதுரையில் திரு. தேவேந்திர பூபதி ஏற்பாடு செய்திருந்த இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சிக்கு என்னையும் அழைத்திருந்தார்.

அவர்கள் சந்தித்த சாதாரண மனிதர்கள் பற்றியும் பார்த்த கோயில்கள் பற்றியுமே வியந்து பேசினார்கள். "இங்கே மனச்சோர்வு ஏற்பட்டால், என்ன செய்வார்கள்? மருத்துவம் இருக்கிறதா?" என்று கேட்டார்கள்.

"அப்படி ஒன்று இருப்பதே 99 விழுக்காட்டு இந்திய மக்களுக்குத் தெரியாது. தங்களைப் பற்றிச் சிந்திக்க நேரம் இருப்பவர்களுக்குத்தான் மனச்சோர்வு ஏற்படும். தங்கள் குடும்பத்தை பற்றியும் அடுத்தவர்கள் பற்றியுமே இம்மக்கள் அதிகமும் யோசிக்கிறார்கள்" என்ற பதிலை அவர்களால் நம்பவே முடியவில்லை.

"சுவீடனில் மக்கள் அடிக்கடி மனச்சோர்வு அடைந்து விடுவார்கள். அதுவும் குளிர்காலத்தில் பெரும்பாலோர் மனச்சோர்வுக்காக மருத்துவரை நாடிச் செல்வார்கள்" என்று திரும்பத் திரும்பக் கவலையோடு சொன்னார்கள். "இங்கே பாருங்கள், பீர் குடித்துவிட்டு எத்தனை மகிழ்ச்சியாகப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கு மது அருந்துபவர்கள், அதிகக் கவலை அடைந்துவிடுவார்கள். குடித்துக் குடித்துக் கவலையில் மூழ்கிப் போவார்கள்" என்றார்கள்.

"குடித்துவிட்டு அடிப்பவர்களும் கண்டபடி பேசுபவர்களும் இங்கும் இருக்கிறார்கள். சோகத்தில் மூழ்கிக் குடித்துச் செத்துப்போகும் நாயகர்கள் சினிமாக்களிலும் கதைகளிலும் வருவார்கள்" என்றேன்.

"இங்கே பல எழுத்தாளர்கள், நூல்களைப் பார்த்தோம். ஆனால் குழந்தைகள்–இளையர்கள்–பதின்ம வயதினருக்கான எழுத்துகளையோ எழுத்தாளர் களையோ சந்திக்கவில்லை. ஏன் அத்தகைய எழுத்துகள் இல்லை? இந்திய மக்கள் தொகையில் அதிகமானோர் குழந்தைகள் – இளையர்கள்தானே" என்றார் ஒரு மூத்த எழுத்தாளர்.

எனக்குத் தெரிந்து தமிழில் இருக்கும் மிகப் பெரும் குறை இது; அனைத்துலகத் தமிழர்களின் பெருங்கவலை. தமிழ் வாசிப்பு எதிர்காலத்திலும் தொடர வேண்டும் என்றால், இன்றே குழந்தைகளைத் தமிழ் வாசிக்கச் செய்ய வேண்டும். இன்றைய குழந்தைகளும் இளையர்களும் விரும்பி வாசிக்கத்தக்க நூல்களை எழுத வேண்டும், பதிப்பிக்க வேண்டும். சென்னைப் புத்தகக் கண்காட்சியில் சிறுவருக்கான நூல்கள் இருக்கவே செய்தன. அதன் பதிப்பு முறையும் கருத்துத் தேர்வும் இன்றைய குழந்தைகளுக்கு – குறிப்பாக வெளி நாடுகளில் வளரும் தமிழ்க் குழந்தைகளுக்கு வாசிக்கும் விருப்பத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகம்தான். திருக்குறள் விளக்கக் கதைகள், மாய தந்திரக் கதைகள், குடியானவன் கதைகள் என்று ஒரே மாதிரிக் கதைகளையே திரும்பத் திரும்ப வெளியிட்டுக்கொண்டிருக்கிறோம்.

சிறுவர்களுக்காவது ஏதேனும் வாசிக்கக் கிடைக்கிறது. ஆனால் பதின்வயதினருக்குத் தமிழில் வாசிக்க ஒன்றுமே இல்லை. அவர்கள் விரும்பும் அறிவியல் மற்றும் காதல் கதைகள் தமிழில் அறவே இல்லை. உண்மையான மொழிப் பற்றாளர் ஒருவராவது இதுபற்றி யோசித்தால் பெரும் பேறாக இருக்கும். ●


மீடியா மெசேஜ் இன்க் வழங்கும்

# ஊடகச் சேவைகள்

உங்கள்

□ பத்திரிகை □ வலைத் தளம் □ இணைய இதழ்
□ நிறுவன விளம்பரங்கள் □ அறிமுகக் கையேடுகள் (ப்ரோஷர்)

**போன்றவற்றுக்குத் தரமான உள்ளடக்கம் தயாரித்துத் தருகிறோம்**

## பத்திரிகைகள், இணைய இதழ்கள்

தொழில்முறைத் திறமையும் விரிவான அனுபவமும் வாய்ந்த நிபுணர்கள் அடங்கிய மீடியா மெசேஜ் நிறுவனம், தமிழக - இந்திய - உலக அரசியல், சினிமா, சமூகவியல், அறிவியல், இலக்கியம், நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான கட்டுரை மற்றும் செய்திகளைப் படங்களுடன் வழங்குகிறது. முக்கிய எழுத்தாளர்கள், முன்னணி சினிமா நட்சத்திரங்கள், பிரபல அரசியல்வாதிகளின் நேர்காணல்களை ஏற்பாடு செய்து தருகிறோம். இலக்கியம், சினிமா ஆகியவற்றில் பிரத்தியேகமான செய்திகள், படைப்புகளை வழங்குகிறோம்.

## விளம்பரங்கள்

பரந்த எழுத்தனுபவமும் ஊடகப் பின்னணியும் கொண்ட எங்களது விளம்பர எழுத்தாளர்கள் உங்கள் தேவைகளுக்கேற்ப விளம்பரங்கள், அறிமுகக் கையேடுகளைத் தரமான முறையில் உருவாக்கித் தருவார்கள். ஆங்கில விளம்பரங்களை சுவை குன்றாமல் நல்ல தமிழில் தருகிறோம்.

## வலைத் தளங்கள்

உங்கள் வலைத் தளத்தை முழுவதுமாக நிர்வகிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறோம். வலைத் தள முகவரியைப் பதிவு செய்வது முதல் பக்கங்களை வடிவமைப்பது, உள்ளடக்கத்தை ஏற்பாடு செய்து அப்லோட் செய்வதுவரை எல்லாவற்றையும் செயல்படுத்துகிறோம்.

மிக நியாயமான கட்டணத்தில், குறித்த நேரத்தில், நேர்த்தியான பணியினைச் செய்துதர உறுதியளிக்கிறோம்.

மீடியா மெசேஜ் இன்க்

பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை – 600 005

தொலைபேசி: 044-2848 1662 மின்னஞ்சல்: mediamessage@sify.com

www.padippakam.com



www.padippakam.com

Registered Newspaper
No: TN/KK Dn/12/2004 - 2006
Date of Publication Every month on 26th & 29th
ISSN 0972 - 8260 Kalachuvadu

Regd with the Registrar of Newspaper
for India under No. 42764/88 Kalachuvadu




படிப்பகம்